

திருமணம்

செல்வக் கேசவராய முதலியார், எம். ஏ.

1864 - 1921

உ

சிவமயம்.

தண்டியாசிரியராற்செய்யப்பட்ட

# தண்டியலங்கார

## மூலமும்

சுப்பிரமணியதேசிகராற்செய்யப்பட்ட-உரையும்

திருவாவடுதுறையாதீனவித்வான்,

## தாண்டவராயசுவாமிகள்

இயற்றமிழாசிரியராகிய

திருத்தணிகை,

## விசாகப்பெருமாளைய

ரவர்கள்

இவர்கள்முன்னிலையில்

தில்லையம்பூர்ச்

## சந்திரசேகரகவிராஜ

பண்டிதரால்

பிழையறப்பரிசோதிக்கப்பட்டு

முத்தமிழ்விளக்க அச்சுக்கூடத்தில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

பிங்கள ௵ — வைகாசி ௴

# தண்டியலங்கார சூத்திர அகராதி.


| | |
|---|---|
| அடிமுழுதுமடக்கலு. | அகூ |
| அடையும்பொருளும். | ருரு |
| அதுதான்,ஓரடி. | அக |
| அதுதான்,பொருள்குணத். | ருஎ |
| அதுவே,குணம்பொருள். | ருஉ |
| அதுவே,செம்மொழி. | எய |
| அதுவே,பொருள்குணங்கா | சச |
| அதுவே,பொருள்குணஞ். | யசா |
| அதுவே,மாலே. | சக |
| அதுவே,விரியேதொகையே. | யகூ |
| அபாவந்தானும். | கூய |
| அவற்றுட்பிரிபொருள். | ளஅ |
| அவற்றுண்,முத்தகம். | க |
| அவைதா,மொருதிறப். | ரு |
| அவைதாம்,விரமச்சம். | சாகூ |
| அவையலபிறவி | சாய |
| அறமுதனான்கினும் | ரு |
| அற்புதஞ்சிலேடை. | உசா |
| அன்னபோலெனும். | ருகூ |
| ஆகமமென்பது. | ளயசா |
| ஆதியிடைகடை. | அச |
| ஆரிடத்துள்ளும். | ளயரு |
| ஆர்வமொழி. | சாசா |
| இடமெனப்படுப. | ளயச |
| இரண்டாம்வேற்றுமை. | ளயரு |
| இன்னார்க்கின்ன. | எஅ |
| உண்ணிகழ்தன்மை. | சாசா |
| உதாரமென்ப. | ய |
| உய்த்துணரவரு. | ளயச |
| உரியபொருளின்றி. | யரு |
| உருவகமுவமை. | கூஅ |
| உலகறிகாரண. | ருச |
| உலகெனப்படுவது. | ளயடு |
| உலகொழுக்கிறவா. | யக |
| உவமையும்பொருளு. | கூஉ |
| உவமையேது. | கூசா |
| எவ்வகைப்பொருளு. | யசா |
| எழுத்தின்கூட்டம். | அக |
| என்றமபாவ. | கூய |
| ஏற்றசெய்யுட். | யச |
| ஒப்புமையில்லது. | எகூ |
| ஒருதிறன்முன். | ளயக |
| ஒருபொருடுணிய. | ளய |
| ஒருவகைச்சொற். | எய |
| ஒருவகைநிகழ்வ. | எசா |
| ஒருவினைபலவினை. | எக |
| ஒழுகிசையென்ப. | கூ |
| ஓரடியொழிந்த. | அஉ |
| ஒரொழுத்துமடக்கலு. | கூரு |
| கருதியகுணத்தின். | எச |
| கருதியதுகிளவா. | சாஅ |
| கருதியபொருடொகுத். | ருரு |
| கருதியபொருடொகுத்தா. | எரு |
| கருதியபொருளை. | யக |
| கலையெனப்படுவ. | ளயரு |
| களியினும்மித்தினும். | ளஅ |
| காமமுமச்சமும். | ளகூ |
| காலம்பொழுதொடு. | ளயச |
| குணந்தொழில்சாதி. | சய |
| குணந்தொழின்முதலிய. | எச |
| குளகம்பலபாட்டொரு. | உ |
| குறிப்புவெளிப்படுக்குஞ். | சாச |
| கூறியநெறியின். | ளயசா |
| கூறியவுறுப்பிற். | ரு |
| கூற்றினுங்குறிப்பினு. | ருக |
| கோமூத்திரியே. | கூஎ |
| கௌடமென்பது. | சா |
| சத்திவழுவே. | ளயரு |
| சிறப்பினும்பொருளினுங். | சாகூ |
| செய்யுளந்தாதி. | ரு |
| செய்யுளென்பவை | க |
| செய்யுள்வழுவே. | ளயஉ |
| செறிவெனப்படுவது. | சா |
| செறிவேதெளிவே. | சா |

| | |
|---|---|
| சொல்லினும்பொருளினுஞ். | ௮ |
| சொல்லின்கிழத்தி. | ௧ |
| சொல்வழுவென்பது. | ௱௰௧ |
| தன்மையுவமை. | ௰௫ |
| தான்றற்புகழ்வது. | ௬௭ |
| தாரகாரியமு. | ௬௨ |
| தெரிபுவேறுநிலவாது. | ௬௩ |
| தெளிவெனப்படுவது. | ௭ |
| தொகைநிலைச்செய்யுட். | ௨ |
| தொகையேவிரியே. | ௩௨ |
| நியாயமென்பது. | ௱௰௬ |
| நிரனிறுத்தியற்றுத. | ௯௫ |
| பண்புந்தொழிலும். | ௰௮ |
| பழிப்பதுபோல. | ௭௬ |
| பாவிகமென்பது. | ௮௰ |
| பிரிபொருட். | ௱௭ |
| புகழினும்பழிப்பினும். | ௭௪ |
| புகழ்வதுபோல. | ௬௫ |
| பெயர்பொருள்ல். | ௫௮ |
| பெருங்காப்பியநிலை. | ௯ |
| பெருங்காப்பியமே. | ௮ |
| பொருளினுஞ்சொல். | ௯ |
| பொருள்பரிமாறுதல். | ௭௭ |
| போலுமான. | ௩௧ |
| மனப்படுமொருபொருள். | ௫௬ |
| மாறுபடுசொற்பொருள். | ௭௫ |
| மாறுபடுபொருண்மொழி. | ௱௯ |
| மிகுதலுங்குறைதலுந். | ௩௰ |
| முதல்வனும்பொருளும். | ௫௯ |
| முந்துதான்முயல்வுறாஉ. | ௬௮ |
| முன்வருஞ்சொல்லும். | ௪௯ |
| முன்னத்தின்மறுப்பின. | ௪௯ |
| மூன்றொன்றுதொடங்கி. | ௫௰ |
| முழுவதுஞ்சேறல். | ௫௰ |
| மெய்ப்பெறவிரித்த | ௱௰௮ |
| மெய்ப்பெறுமாயின். | ௫ |
| மேற்கோளேது. | ௭௮ |
| மொழிந்ததுமொழிவே. | ௱௯ |
| மொழியப்பட்ட. | ௭௮ |
| பதிவழுவென்பது. | ௱௰௨ |
| யாதன்றிறத்தினும். | ௫௯ |
| வகையுளியுரை. | ௱௰௨ |
| வலியெனப்படுவது. | ௰௨ |
| வழக்காறுயின். | ௱௰௨ |
| வழுஉப்படலில்வழி. | ௱௰ |
| வன்சொல்வாழ்த்து. | ௪௫ |
| வியத்தகுசெல்வமும். | ௬௮ |
| விரவத்தொடுப்பது. | ௭ |
| விரவினுஞ்சிறப்பினு. | ௱௰ |
| வினைபண்பென. | ௭௭ |
| வேற்றுப்பொருள்சிலேடை | ௪௯ |


முற்றிற்று.

---

இந்நூலுள் உதாரணச்செய்யுள்களுக்கு
முன்காட்டப்பட்ட எழுத்துகள்.

| | |
|---|---|
| ஆ—ஆசிரியப்பாவிற்கு | ம் |
| இ-பா—இன்னிசைவெண்பாவிற்கு | ம் |
| க-சை—கலித்தாழிசைக்கு | ம் |
| க-ம்—கலிவிருத்தத்திற்கு | ம் |
| க-றை—கட்டளைக்கலித்துறைக்கு | ம் |
| சி-பா—சிந்தியல்வெண்பாவிற்கு | ம் |
| வ-ம்—வஞ்சிவிருத்தத்திற்கு | ம் |
| வ-றை—வஞ்சித்துறைக்கு | ம் |
| வி-ம்—விருத்தத்திற்கு | ம் |
| வெ—வெண்பாவிற்கும், காட்டப்பட்ட | ன. |

சிவமயம்.

# தண்டியலங்காரமூலமும்-உரையும்.

## முதலாவது,

## பொதுவணியியல்.

சொல்லின்கிழத்தி மெல்லியலிணையடி, சிந்தைவைத்தியம்புவல் செய்யுட்கணியே.

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின், அணியினதிலக்கண முணர்த்தினமையின் அணியதிகார மென்னும் பெயர்த்து. இவ்வதிகாரத்துள் இவ்வோத் தென்ன பெயர்த்தோவெனின், அணிபெறுஞ் செய்யுட்கும், ஒருசாரணிக்கும், இலக்கண முணர்த்தினமையின், பொதுவியலோத்தென்னும்பெயர்த்து. இவ்வோத்தினுள் இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், கடவுள்வணக்கமும் அதிகாரமு முணர்த்துதனுதலிற்று. (இ-ள்) கலைமடந்தை துணைத்தாளைக் கருத்துள்வைத்து யாப்புக்கலங்காரவிலக்கணஞ் சொல்லுவனென்றவாறு. ❁ அணியென்ப தாகுபெயர். ஏகாரம்: ஈற்றசை. ஒழிந்த அகலம் உரையிற்கொள்க. (க)

(உ) செய்யுளென்பவை தெரிவுறவிரிப்பின், முத்தகங்குளகந் தொகைதொடர்நிலையென, வெத்திறத்தனவு மீரிரண்டாகும்.

(எ-ன்) செய்யுட் கணியிலக்கணமுணர்த்துவலென்றார் அச்செய்யுளாமா றுணர்ந்தே அணியுணரப்படு மாகலான், அவ்வணிபெறுஞ்செய்யுளினது பெயரும், முறையும், தொகையு முணர்-ற்று. (இ-ள்) செய்யுளென்று கூறப்படுவன, விளங்க விரித்துணர்த்துங்கால், எவ்வகைப்பட்டபாவேனும், முத்தகச்செய்யுளும், குளகச்செய்யுளும், தொகைநிலைச்செய்யுளும், தொடர்நிலைச்செய்யுளுமென நான்குவகைப்படும். எ-று. ❁ செய்யுளென்பதைநான்கினோடும், நிலையென்பதைப் பின்னிரண்டினோடுங்கூட்டியுரைக்கப்பட்டன. முத்தகங்குளகமென்பன வடமொழிப்பெயர். ஏனையிரண்டுந் தமிழ்மொழிப்பெயர். (உ)

(ங) அவற்றுள், முத்தகச்செய்யு டனிநின்றுமுடியும்.

(எ-ன்) முத்தகச்செய்யுளாமாறுணர்-ற்று. (இ-ள்) மேற்சொன்ன நான்கனுள்முத்தகச்செய்யுளென்பது தனியேநின்றொருபொருள்பயந்துமுற்றுப்பெறுவது. எ-று. [வரலாறு](வெ) "என்னே

ய்சிலமடவாரெய்தற்கெளியவோ, பொன்னேயனபாயன்பொன்னெடுந்தோள்,முன்னே, தனவேயென்றுணர்ந்துசயமடந்தைதோளாம்,புனவேய்மிடைந்தபொருப்பு,, என்பது—பொன்னையொப்பாய்அடிப்படத்தனக்கேசேமமாகநினைத்துத்துய்க்கின்றகொற்றவையுடைய தோளாகிய செறிந்தவேயினாலே நெருங்கப்பட்டபொருப்பாகிய அனபாயனுடைய அழகினையுடைத்தாகியபெரிதாகிய தோளானது என்னையொக்குந் தன்மையையுடையாராகியபெண்டிர்பலரும்புல்லுதற்கெளிவந்தனவாமோவாகா-எ-று. வேய்மிடைந்த பொருப்பாகியதோளெனக்கூட்டுக. தோளாகிய பொருப்பென்பாருமுளர். என்னென்பதனை யிரக்கத்தின்கட் குறிப்பென்பாருமுளர். என்னையென்புழியிரண்டனுருபுதொக்குநின்றதெனக்கொள்க. சில என்பது-பல. சயமடந்தை- வனதுர்க்கை. அநபாயன்-அபராஜிதன். (௫)

(௬) குளகம்பலபாட் டொருவினைகொள்ளும்.

(எ-ன்) குளகச்செய்யுளாமாறுணர்-ற்று. (இ-ள்) குளகச்செய்யுளென்பதுபலபாட்டாய் ஒருவினைகொண்டுமுடிவது- எ-று. ❋ ஒருவினையென்ற விதப்பான் ஒருபெயர்கொண்டு முற்றுப்பெறுமென்க இதற்கிலக்கியம் வந்துழிக்காண்க. (௬)

(௭) தொகைநிலைச்செய்யுட் டோன்றக்கூறி, னொருவருரைத்தவும் பல்லோர்பகர்ந்தவும், பொருளிடங்காலந் தொழிலெனநான்கினும்,பாட்டினுமளவினுங் கூட்டியவாகும்.

(எ-ன்) தொகைநிலைச்செய்யுளாமாறுணர்-ற்று. (இ-ள்.) தொகைநிலைச்செய்யுளென்பதனை விளங்கச்சொல்லின், ஒருவராலுரைக்கப்பட்டுப் பலபாட்டாய் வருவனவும், பலராலுரைக்கப்பட்டுப் பலபாட்டாய்வருவனவுமாம். அவை- பொருளாற்றொகுத்தபெயர்பெற்றனவும், இடத்தாற்றொகுத்த பெயர்பெற்றனவும், காலத்தாற்றொகுத்த பெயர்பெற்றனவும், தொழிலாற்றொகுத்தபெயர்பெற்றனவும், பாட்டாற்றொகுத்த பெயர்பெற்றனவும், அளவாற்றொகுத்த பெயர்பெற்றனவுமாம். எ- று. அவற்றுள் ஒருவராலுரைக்கப்பட்டது திருவள்ளுவப்பயன். பலராலுரைக்கப்பட்டது நெடுந்தொகை. இவை-எல்லாத்தொகைக்கும்பொதுவிலக்கணம். பொருளாற்றொகுத்தது-புறநானூறு. இடத்தாற்றொகுத்தது-களவழிநாற்பது. காலத்தாற்றொகுத்தது -கார்நாற்பது. தொழிலாற்றொகுத்தது-ஐந்திணை. பாட்டாற்றொகுத்தது-கலித்தொகை. அளவாற்றொகுத்தது - குறுந்தொகை. இவை சிறப்பிலக்கணம் ❋ கூட்டியவென்ற விதப்பான்-இவ்வறுவகையானுமன்றிப்பிறவாற்றாற் பெயர்பெற்றுவருவனவுமுளவேல் அவையுங்கொள்க. (௭)

(௬). பொருளினுஞ்சொல்லினு மிருவகைதொடர்நிலை.

(எ-ன்) தொடர்நிலைச்செய்யுளாமாறுணர்-ற்று. (இ-ள்.) பொருளினாற்றொடர்தலும், சொல்லினாற்றொடர்தலுமென இருவகைப்படுந்தொடர்நிலைச்செய்யுள்-எ-று. ❊ இரண்டென்றது வகையென்றமிகையான், மூன்றுவது பொருளினுஞ், சொல்லினும், தொடர்தலு மூண்டெனக்கொள்க. (௬)

(௭) பெருங்காப்பியமே காப்பியமென்றாங், கிரண்டாயியலும் பொருட்டொடர்நிலையே.

(எ-ன்) இது, பொருட்டொடர்நிலைச் செய்யுளை, வகுத்துணர்-ற்று (இ-ள்) பெருங்காப்பியங் காப்பியமென இரண்டுவகையானடக்கும் பொருட்டொடர்நிலைச்செய்யுள்- எ-று. ❊ பெருங்காப்பியமென் றாசிரியரடைசொற் புணர்த்தமையின், காப்பியமென்பதுதானே கூறப்பட்டது. இஃது- உய்த்துக்கொண்டுணர்தல். இதனைச்சிறுகாப்பியமெனினு மிழுக்காது. அல்லதூஉம் "எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே" என்றார்க்குச்செப்பாமையும் உரித்தென்று கொள்ளப்படுமெனின், ஒன்றே இனமாயக்காற்கோடலும், பலவினமாயக்காற் கொள்ளாமையுமாம். அஃதேல், " இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை, வழக்காறல்ல செய்யுளாறே" என்றதென்னுமோவெனின், அவை செய்யுட்கேயுரியனசிலசொல்லுதல் வகைமையின் இஃதன்னதன்றென்பது. அஃதேல், கவியாற்பாடப் படுவனவெல்லாங்காப்பியமல்லவோ பொருட்டொடர் நிலையைக்காப்பியமென்றதென்னையெனின், சேற்றுட்டோன்றுவனவெல்லாம்பங்கயமெனப்பெயர் பெறுமாயினும், அப்பெயர்தாமரையொன்றன்மேற்றேயாயினவாறுபோல இப்பெயர் பொருட்டொடர்நிலைக்கேயாயிற்று. ஒழிந்தனவும், ஒழிந்தனபோலத் தமக்கேற்ற பெயர்பெற்றனவெனக்கொள்க. இரண்டென்றது இயலுமென்றமிகையால் பத்துவகைப்பட்ட நாடகசாதியும், கோவையும், பொருட்டொடர்நிலைப்பாற் படுமெனக்கொள்க. பத்துவகைப்பட்ட நாடகசாதியாவன-நாடகம், பிரகரணம், பாணம், பிரகசனம், டிமம், வியாயோகம், சமவாகாரம், வீதி, அங்கம், ஹீயாமிருகம், எனவிவை. கோவையென்பன தமிழ்முத்தரையர் கோவைமுதலாயின. அல்லதவ்விலேசானே முற்கூறியமுத்தகமுதன்மூன்றும், பின்னர்க்கூறிய பொருட்டொடர்நிலைச்செய்யுட் குறுப்பாய்வருதலுமுடையவெனக்கொள்க. (௭)

(௮) பெருங்காப்பியநிலை பேசுங்காலை, வாழ்த்துவணக்கம் வருபொருளிவற்றினொன், றேற்புடைத்தாகி முன்வரவியன்று, நா

ற்பொருள்பயக்கு நடைநெறித்தாகித், தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தாய், மலைகடனாடு வளநகர்பருவ மிருசுடர்த்தோற்றமென் றினையனபுனைந்து, நன்மணம்புணர்தல் பொன்முடிகவித்தல் பூம்பொழினுகர்தல் புனல்விளையாட, றேம்பிழிமதுக்களி சிறுவரைப்பெறுதல், புலவியிற்புலத்தல் கலவியிற்களித்தலென், றின்னனபுனைந்த நன்னடைத்தாகி, மந்திரந்தூது செலவிகல்வென்றி, சந்தியிற்றொடர்ந்து சருக்கமிலம்பகம், பரிச்சேதமென்னும் பான்மையின்விளங்கி, நெருங்கியசுவையும் பாவமும்விரும்பக், கற்றோர்புனையும் பெற்றியதென்ப.

(எ-ன்.) பெருங்காப்பியமென்னும் பொருட்டொடர்நிலைச்செய்யுளாமாறுணர்-ற்று. (இ-ள்) பெருங்காப்பியநிலை—வியன்று-எ-து-பெருங்காப்பியத்தி னிலக்கணத்தைச்சொல்லுமிடத்து, வாழ்த்துதல், தெய்வம்வணங்குதல், உரைக்கும்பொரு ளுணர்த்தலென்னு மூன்றனுள் ஒன்று முன்வரநடப்பது-எ-று. வருபொருளென்றதனான் அவற்றுளொன்றேயன்றி, இரண்டுவரினும் மூன்றுவரினுமிழுக்கன்றென்பது. வாழ்த்தென்பதோரலங்காரம் அது முன்னருரைக்கப்படும். நாற்பொருள்—நெறித்தாகி-எ-து. அறம், பொருள், இன்பம், வீடென்னுநான்கும் பயக்குமொழுகலாறுடைத்தாய்-எ-று. தன்னிகரில்லா—யுடைத்தாய்-எ-து-தன்னோடொப்பாருமிக்காரு மில்லாதானை நாயகனாகவுடைத்தாய். எ-று. "பல்பொருட்கேற்பி னல்லதுகோடல்" என்பதனால், தன்னினுயர்ந்தாரில்லாதானென்று கொள்ளப்பட்டதாயிற்று. மலைகடல்—புனைந்து-எ-து-மலைவருணனையும், கடல்வருணனையும், நாட்டுவருணனையும், நகரவருணனையும், இருதுவருணனையும், ஆதித்தோதயவருணனையும், சந்திரோதயவருணனையும், என்றின்னோரன்ன வருணனையுடைத்தாய்-எ-று. நன்மணம்—நன்னடைத்தாகி எ-து இன்னோரன்னசெய்கைச் சிறப்புப்புகழ்ந்து தொடுக்கப்பட்டநல்லொழுக்கமுடைத்தாய்-எ-று. நன்னடைத்தாகி என்றதனாற் பலவருணனைகளையுடைத்தாய்வருவதெனக்கொள்க. மந்திரம்—தொடர்ந்து. எ-து- மந்திரமிருத்தலும், தூதுவிடுத்தலும், மேற்செலவும், செருச்செய்கையும், வென்றியெய்தலும், சந்திபோலத்தொடரப்பட்டு-எ-று- சந்தியென்பது-நாடகத்தேநிலைபெறுதலான் ஈண்டதுபோலவெனக் கூறப்பட்டது அதாவது- வித்தல், விளைத்தல், விளைவுதுய்த்தலென்பது-போல்வது சருக்கம்—விளங்கி-எ-து-சருக்கமென்றுதல், இலம்பகமென்றுதல், பரிச்சேதமென்றுதல், பாகுபட்டு விளங்கி-எ-று. நெருங்கிய--விரும்ப-எ-து-எட்டுவகைப்பட்ட சுவையும், மெய்ப்பாட்டுக்குறிப்பும், இடைவிடாமற்கேட்போர்மதிக்க-எ-று. கற்றோர்—தென்ப-எ-து

இவ்வகைத்தாகப்புலவராற்புனையப்படுந்தன்மையை யுடைத்தெ ன்பராசிரியர்-எ-று. ❋ நாற்பொருள் பயக்குநடை-எ-து- அகமும், அகப்புறமும், புறமும், புறப்புறமும் பயந்த நடையென் றுமாம். (அ)

(கூ) கூறியவுறுப்பிற்சிலகுறைந்தியலினும்,வேறுபாடின்றெ ன விளம்பினர்புலவர்.

(எ-ன்) மேலதற்கோர் புறனடையுணர்-ற்று. (இ-ள்.) அச்சொ ல்லப்பட்ட வுறுப்பிற் சிலகுறைந்துவரினும், பெருங்காப்பியத் திற் பிறிதன்றெனவிளம்பின ரறிவுடையோர்-எ-று. (கூ)

(ய) அறமுதனான்கினுங் குறைபாடுடையது, காப்பியமென் று கருதப்படுமே.

(எ-ன்) காப்பியமுணர்-ற்று. (இ-ள்) அறம், பொருள், இன்ப ம், வீடென்னு நான்கினும் ஒன்றும் பலவுங் குறைந்துவருவது காப்பியமென்று கருதப்படுவது-எ-று. ❋ இதனால், கூறியவுறு ப்பிற் சிலகுறைந்தியலுமென்பதற்கு அறமுதனான்குமொழித்த ல்லாத வுறுப்பிற் சிலகுறைவதேபெருங்காப்பியமென்று கொள் ளப்படும். இஃதுவந்ததுகொண்டுவாராதது முடித்தலென்பது ()

(யக) அவைதாம், ஒருதிறப்பாட்டினும் பலதிறப்பாட்டினு, மூரையும்பாடையும் விரவியும்வருமே.

(எ-ன்) அக்காப்பியங்கட் கெய்தியதோரிலக்கண மூணர்-ற்று. (இ-ள்.) மேற்கூறியபெருங்காப்பியமும்,காப்பியமும், ஒருவகை ச் செய்யுளானும், பலவகைச் செய்யுளானும், உரை விரவியும்,பா டைவிரவியும்,வருதலுடைய-எ-று. ❋ ஈண்டுச்செய்யுளென்பது பாவும் இனமு நோக்கியது. விரவியும்வருமென்ற வும்மையான் விரவாதுசெய்யுளான் வருவதேசிறப்புடைத்தெனக்கொள்க(யக)

(யஉ) செய்யுளந்தாதி சொற்றொடர்நிலையே.

(எ-ன்) சொற்றொடர் நிலைச்செய்யுளுணர்-ற்று. (இ-ள்) ஒரு செய்யுளினிறுதி மற்றொரு செய்யுட் காதியாகத் தொடுப்பது சொற்றொடர்நிலைச் செய்யுளாம்- எ-று. அவை கலம்பகமுதலிய ன. அல்லதூஉம்-ஒருசெய்யுளுள்ளே யோரடியிறுதிமற்றையடி க்குமுதலாகத்தொடுப்பனவுமுள. அவைமுன்ன ருரைக்கப்படும். இவற்றிற்கிலக்கியம் வந்துழிக்காண்க.ஈண்டுரைக்கிற்பெருகும். ()

(யங) மெய்பெறுமரபின் விரித்தசெய்யுட்கு,வைதருப்பம்மே கௌடமென்றுங், கெய்தியநெறிதா மிருவகைப்படுமே.

(எ-ன்) மேற்கூறியசெய்யுநெறிக்கூறுபாடுணர்-ற்று. (இ-ள்) பொருள்பெறு மிலக்கணநெறியான் விரித்தோதப்பட்ட செய்

யுளனைத்திற்கும், வைதருப்பமும், கௌடமுமெனப்பெயருந்திய நெறியிருவகைகப்படும். எ-று. ❊ அஃதேல், மேற்கூறியசெய்யுளனைத்தும், இருவகைநெறிப்படுமென்றமையின் ஒன்றற்கே இருவகைநெறியு முளவென்றுகொள்ளற்க. வைதருப்பநெறியான் வருவனவுமுள. கௌடநெறியான் வருவனவுமுள. மேற்கூறிய செய்யுளனைத்துமெனக்கொள்க. (௧௩)

(௰௪) செறிவேதெளிவே சமனிலையின்ப, மொழுகிசையுதார முய்த்தலில்பொருண்மை, காந்தம்வலியே சமாதியென்றுங், காய்ந்தவீரைங் குணனுமுயிரா, வாய்ந்தவென்ப வைதருப்பம்மே.

(எ-ன்.) வைத்தமுறையானே வைதருப்பநெறியுணர் - த்று.— (இ-ள்.) செறிவுமுதல்-சமாதியீறாகக் கூறப்பட்ட பத்துக்குணனுமுயிராகப்புலப்படுவது வைதருப்பநெறி-எ-று. ❊ வாய்த்தவென்பது வாய்ந்தவெனமெலிந்துநின்றது. உயிராவென்பதனை உயிர்போல இன்றியமையாதவெனவுங்கொள்க. (௧௪)

(௰௫) கௌடமென்பது கருதியபத்தொடுங், கூடாதியலுங் கொள்கைத்தென்ப.

(எ-ன்) கௌடநெறியுணர்-த்று. (இ-ள்) கௌடநெறியென்று சொல்லப்படுவது மேற்குறித் துரைக்கப்பட்ட பத்துக்குணவலங்காரங்களோடுங்கூடாது நடக்குமொழுகலாறுடையது- எ-று. பத்தோடுங்கூடாதென்னு முற்றும்மையை யெச்சவும்மையாக்கிச் சிலவற்றோடுகூடியும் வருமெனக்கொள்க. (௧௫)

(௰௬) செறிவெனப்படுவது நெகிழிசையின்மை.

(எ-ன்) செறிவாமாறுணர்-த்று. (இ-ள்.) செறிவென்று சொல்லப்படுவது நெகிழ்ந்தஇசை யின்றிவரத்தொடுப்பது. எ-று.— [வ-று] வெ. "சிலைவிலக்குநீள்புருவஞ் சென்றொசியநோக்கி, முலைவிலங்கிற்றென்றுமுனிவாள் - மலைவிலங்கு, தார்மாலைமார்பதனிமைபொறுக்குமோ, கார்மாலைகண்கூடும்போது,,—எ-து-புணர்ச்சிக்கண்ணின்னுடையமார்பஞ் செறியமுயங்குங்கால் முலைசிறிதுவிலங்காநிற்ப அதனைநோக்கிப்பொருளாய் விற்போல வளைந்துநீண்ட புருவமானதுநெற்றியிசையேறிவளைய ஊடுந்தன்மையையுடையாள். மாறுபாடிலங்கிய பலவகைப்பட்ட பூவாலாயப்பட்டதாரினையும், மாலையினையுமுடையமார்பினையுடையாய்நீவினைகருதிப்பிரியுங்கால்இவட்குண்டாகிய தனிமையால் வருந்துயராமாற்றுந்தன்மையளோ இருளோடுகூடிய மாலைவந்துசேருமிடத்து எ-று. மலைவிலங்குதார்மாலைமார்பவென்பதற்குத் தாரும், மாலையுங்கிடக்கப்பட்ட பரப்பினையுடைத்தாகிய மலைபோன்ற மார்ப

னெனினுமமையும். எனவரும். இனி நெகிழிசையென்பது வல்லினம்விரவாதுஒரினத்தெழுத்தானெகிழத்தொடுப்பது. [வ-று] வெ. "விரவலராய்வாழ்வாரைவெவ்வாயொழிவா,யிரவுலவாவேலையொலியே - வரவொழிவா, யாயர்வாயேயரிவையாருயிரா வீராவோ, வாயர்வாய்வேயோ வழல்,, எ-து. தமியரா யுயிரோடுகூடிவாழ்வாரை வருத்துவாய் வருத்தா தொழிவாய் இரவின்கண்ணுங்குறையாதே யரவஞ்செய்கின்றகடலொலியே யிவளுடைய ஆருயிரைத் தாயராயுள்ளாருடையவாயிலுண்டாகிய வசையேயறுக்குந்தன்மைத்தாயிருக்க அதன்மேலும் இடைக்குலமாக்கள்வாயிலுண்டாகிய வேய்விளையிசையும் அழலைக்கொடா நின்றது-அதனுலிப்பொழு திவளைக்கருதிவருகின்றவரவையொழிவாயாக-எ-று. எனவரும். இவ்வாறு ஒரினத்தெழுத்தாற் றொடுக்கப்படுவதோர்சுவைநோக்கிக்கௌட-நெறியார்விரும்புவர். இஃதிரண்டுநெறியார்க்குமொக்கும். (கசு)

(கஎ) தெளிவெனப்படுவது பொருள்புலப்பாடே.

(எ-ன்.) தெளிவாமாறுணர் - ற்று. (இ-ள்.) தெளிவென்றுசொல்லப்படுவது- கவியாற் கருதப்பட்டபொருள் கேட்போர்க்குளங்கொண்டு விளங்கத்தோன்றுவது - எ-று. [வ-று] வெ" பிறர்க்கின்னாமுற்பகற்செய்யிற்றமக்கின்னா, பிற்பகற்றாமேவரும்,,எனவரும். இவ்வாறுதொடுத்தாற்கவியருமையும் நோக்குடைப்பொருள்கோளுமின்றித் தோன்றுமென இந்நெறிவிரும்பாதுகௌடர்சொல்லுமாறு. [வ-று] வெ" பொய்யாமை பொய்யாமையாற்றினறம்பிற, செய்யாமைசெய்யாமைநன்று,, எனவரும். (கஎ)

(கஅ) விரவத்தொடுப்பது சமனிலையாகும்.

(எ-ன்.) சமனிலையாமாறுணர்- ற்று. (இ-ள்.) மூவினமுந் தம்முள் விரவத்தொடுப்பது சமனிலையாம்- எ-று. [வ-று.] க-றை- "சோகமெவன்கொலிதழிபொன்றூக்கின சோர்குழலாய், மேகமுழங்க வினைசூழ்தளவங் கொடியெடுப்ப, மாகநெருங்க வண்டானங்களிவண்டுபாட வெங்குந், தோகைநடஞ்செயுமன்பர்திண்டேரினித்தோன்றியதே,, எ-து-நான்றகுழலினையுடையாய்கொன்றைகளானவைபொன்மாலைநாற்ற ஆகாசநெருங்கமேகங்கள்முழவெனமுழங்காநிற்பவினையுடைய மலரோடுகூடியமுல்லைபலவும் கொடியெடாநின்றன அழகியதானத்திலேவண்டுகள்களித்துப்பாட எப்பக்கமும்மயில்களாடாநின்றன.இதனாலே இப்பொழுதே நம்முடையதலைவரோதிய தேர்வந்தவரோடுதோன்றுவதா யிருந்தது அதனாலே நின்னுடையவருத்தமெங்கே போகக்கடவது-எ-று.

சோகமெவன்கொல் என்பதற்கு சோகமென்னென நிறுத்திவினுவாக்குவாருமுளர். எனவரும். இனிக்கௌடநெறி. [வ-று]-க-றை "இடர்த்திறத்தைத்துறபொற்றொடிநீயிடித்துத்தடித்துச், சுடர்க்கொடிதிக்கனைத்திற்றடுமாறத்துளிக்குமைக்கார், மடக்குயிற்கொத்தொளிக்கக்களிக்கப்புக்கதோகைவெற்றிக், கடற்படைக்கொற்றவன்பொற்கொடித் தேரினிக்கண்ணுற்றதே,, எ- து. பொன்னாற் செய்யப்பட்ட தொடியினையுடையாய்-இருண்ட நிறத்தையுடைய மேகமானது முழங்குவதுஞ்செய்து மின்னுகிய வொளியோடுங் கூடியவொழுங்கு டலதிக்கினுந் தோற்றிநடுங்க மழையைத் தராநின்றது. அதுவேயுமன்றி மடப்பத்தையுடைய குயிற்றிரள்கள் ஒளிக்கக்களிக்கத் தொடங்காநின்றன, மயில்களானவை ஆதலாற் கடல்போன்ற பெருமை யுடைத்தாகிய தானையை யுடைய தலைவனேறிய பொற்கொடியையுடைய தேரானது இப்பொழுதேவந்து நம்மைச் சேர்வதாயிருந்தது. நீவருத்தமொழிவாயாக. எ-று. எனவரும். இச்சூத்திரங்கூறுக்கான் மேற்செறிவென்றுகூறியவதனான் நெகிழத் தொடாமையேயன்றி, வற்செனத் தொடுப்பினும், செறிவென்று வைதருப்பருக்குங் கொள்ளக்கிடக்கும். ()

(சக) சொல்லினும்பொருளினுஞ் சுவைபடலின்பம்.

(எ-ன்.) இன்பமா மாறுணர் - ற்று. (இ-ள்.) சொல்லினாற் சுவைபடத்தொடுத்தலும், பொருளினாற்சுவைபடத்தொடுத்தலும், இன்பமாம். எ-று. அவற்றுள், சொற்காரணமாகிய வின்பமாவது வழிமோனை முதலாகவரத்தொடுப்பது. [வ-று.] வி-ம் "முன்னைத்தஞ்சிற்றின் முழங்குகடலோத மூழ்கிப்போக, அன்னைக்குரைப்பனறிவாய்கடலேயென் றலறிப்பேரும், தன்மை மடவார்தளர்ந்து குத்தவெண்முத்தந்தயங்குகானற், புன்னையரும்பேய்ப்பப் போவாரைப்பேதுறுக்கும் புகாரேயெம்மூர்,, -எ-து-முன்புதம்முடைய சிறுவீடானது ஒலிக்கின்றகடல் வெள்ளத்தில் மூழ்கிப் போக அதைக்கண்டு என்னுடைய அன்னைக்குச் சொல்லுவன் கடலேயறிவாயாகவென்று அலறிபோகின்ற தன்மையினையுடைய பெண்கள் கானலின்கண்வருந்தி அறுத்துச்சிதறிய வெண்மையான முத்தம்பிரகாசிக்கின்ற புன்னையரும்பையொப்பாக ஆண்டுப்போவாரை மயங்கச்செய்கின்ற காவிரிப்பூம் பட்டணமேஎம்மூர். -எ-று. எனவரும். இத்துணைச் சுருங்கத் தொடுப்பதின்னாதென்று கௌடர் சொல்லுமாறு. [வ-று] வி-ம்" துனிவருநீர்துடைப்பவராய்த் துவள்கின்றேன் றுணைவிழிசேர் துயிலைநீக்கி, இனவளைபோலின்னலஞ்சோர்ந் திடருழப்பவிறந்தவர்நாட்டில்லைபோலும், தனியவர்கடளர்வெய்தத் தடங்கமலந்தளையவிழ்க்குந் தருணவேனிற், பனிமதுவின் பசுந்தாதுடைப்பொழிலிற்பரப்

யிலரும் பருவத்தென்றல்,, எ-து- துயரமிகுதியாலே என்கண்ணி
னிடத்துவிளைந்து இழிதருநீரை மாற்றினராய் வருந்துமென்னு
டைய இணைவிழியானவை இமைபொருந்துந் தன்மைத் தாகிய
வுறக்கத்தைநீக்கிக் கரத்தின்கணினமாக இடப்பட்ட வளைசோரு
தல்போல இனிய அழகு குறைந்து யான் துயருறும்வண்ணம் பி
ரிந்துபோனவருடைய நாட்டின்கண் பிரிந்திருந்தோர் நடுக்கமெ
ய்தப் பெரிதாகிய பொய்கையினுண்டாகிய தாமரையின்கட்டை
விடுவிக்கும்- இளவேனிலும், அக்காலத்தி லுண்டாகிய குளிர்ந்த
தேனையும்,பசிய தாதுக்களையும், பசுமையான சோலையின்கண்ப
ரப்பிவருகின்ற இளந்தென்றலும், இல்லையோ சொல்லுவாயாக
தோழீ-எ-று. எனவரும். இனிப்பொருள்காரணமாகிய வின்பமா
வதக்கவி கேட்போர்க்கு, மதுகாரணமாக மதுகரங்கட்குவருமகி
ழ்ச்சிபோல வருமின்பமாம். [வ-று] ஆ-"மானேர்நோக்கின் வ
ளைக்கையாய்ச்சியர், கானமுல்லைசூடார்கதுப்பிற், பூவைப்புதும
லர் சூடித்தாந்த, மடங்காப்பணைமுலையிழைவளர்முற்றத்துச், சி
ணங்கின் செவ்விமறைப்பினுமலர்ந்த, பூவைப்புதுமலர் பரப்பு
வர்பூவயி, னானிரை வருத்தம் விடமலையெடுத்து,மாரிகாத்தகாளை,
நீலமேனி நிகர்க்குமாலெனவே,, எ-ம்- ஆ-"முற்றிழைமகளிர்மு
லைமுகடுழக்கவும், பொற்றொடிப்புதல்வ ரோடியாடவும், செஞ்
சாந்துசிதைந்த மார்பினொண் பூ,ணரியாவன்ன வணங்குடைத்து
ப்பிற், றிருமால்வளவன் றெவ்வர்க்கோச்சிய, வேலினும்வெய்யக
ண்ணவன்,கோவினுந்திண்ணிய தடமென்றோளே,, எ-ம்- வரும்.
இப்பொருள்காரணமாகிய இன்பம் இரண்டுநெறியார்க்குமொக்
கும். இவ்வாறுதொடுக்குங்காற் கிராமியச்சொல்லும்பொருளும்,
இடக்கர்ச்சொல்லும்பொருளுந்தீண்டாமற்பாடுவது. (௰௯)

(௨௰) ஒழுகிசையென்பது வெறுத்திசையின்மை.

(எ-ன்) ஒழுகிசையாமாறுணர்-ற்று. (இ-ள்) ஒழுகிசையென்று
சொல்லப்படுவது வெறுக்கத்தகு மின்னாவிசையின்றி வரத்தொ
டுப்பது. எ-று. [வ-று.] வெ"இமையவர்கண்மௌலியிணைமலர்
த்தாள்சூடச், சமையந்தொறுநின்றதையல் - சிமைய,மலைமடந்
தைவாசமலர்மடந்தை வெண்ணெண், கலைமடந்தைநாவலோர்க
ண்,,எ-து- துணையாகியமலர்போன்ற சீர்பாதத்தைத்தேவர்களெ
ல்லாம் தங்கண்முடிமேலே சூடும்வண்ணம் பலவகைப்பட்டசம
யங்கடோறும் புக்குநின்றமடவாள் சிகரங்களையுடைய மலைபரய
ன்மகளுமாய் நறுநாற்றத்தையுடைத்தாகிய தாமரைமலர்மீதிரு
ந்தசீதேவியுமாய்ப் பலவகைப்பட்டகலைகளுக்கு இறைவியுமாய்
நின்றசரசுவதி. அவள்நாவினல்வலியோர்க்குக் கண்ணாயிருப்பவ

ள்.எ-று. எனவரும். மலைமடந்தை-பார்வதி. இனிஇன்னுவிச்சையெ ன்பதுமென்னடையொழுக்கத்துவல்லொற்றடுத்து மிக்கதுபோ லவும், அந்நடையொழுக்கத் துயிரொழுத்தடுத்துப் பொய்ந்நலம் பட்டறுத்திசைப்பதுபோலவும்வரும். [வ-று.] வெ-“ ஆக்கம்பு கழ்பெற்றதாவியிவள்பெற்றாள், பூக்கட்குழற்கார்பொறைபெற் ற- மாக்கடல்சூழ், மண்பெற்றவொற்றைக்குடையாய் வரப்பெ ற்றெங், கண்பெற்றவின்றுகளி,, எ-து- பெரியகடல்சூழ்ந்த உல கத்துள்ளார் தங்கள்தவப்பலனைப்பெற்ற ஒப்பற்ற குடையையு டையதலைவனே நீயெங்களைநினைத்துவந்தவிதனானே இன்று நின் னுடையபுகழானது பெருக்கம்பெற்றது. தலைமகளாகிய இவளு யிர்பெற்றாள். இவளுடைய கார்போன்ற குழலானது மதுவினை யுடைத்தாகிய பூக்களின்பாரத்தைப்பெற்றது எங்களுடையகண் களும் செருக்குப்பெற்றன. எ-று.எனவரும்.இவ்வாறுவேண்டார் இரண்டுநெறியாரும். (உ௰)

(உக) உதாரமென்பதோதியசெய்யுளிற், குறிப்பினொருபொ ருணெறிப்படத்தோன்றல்.

(எ-ன்) உதாரமாமாறுணர்-ற்று. (இ-ள்) உதாரமென்று சொ ல்லப்படுவது சொல்லப்பட்டசெய்யுளுள் சொற்படுபொருளின் றி, அதன்குறிப்பினன் ஒருபொருள்நெறிப்படத்தோன்றுவது. எ-று. [வ-று] வெ- “செருமானவேற்சென்னிதென்னுறைந்தை யார்தம், பெருமான்முகம்பார்த்தபின்னர் - ஒருநாளும், பூதலத் தோர்தம்மைப் பொருணசையாற்பாராவாம், காதலித்துத்தாழ் ந்திரப்போர்கண்,, எ-து - பொருண்மேல்வைத்த அவாவினாலே தாழ்வுவைத்திரப்போர் கண்களானவைபோரின்கண்வலியுடைத் தாகியவேலையும், சென்னியென்னும் பெயரையு முடையனாகிய தெற்கின்கணுண்டாகிய உறைந்தைப்பதியார்க்குத் தலைவனாகிய சோழனுடைய முகத்தைப்பார்த்தபின் பூமண்டலத்துள்ளார்மு கங்களைப் பொருள் விருப்பினாற் பாரா. எ-று. இவ்வாறு கூறவே அவன் இரப்போர்வறுமைதீரக்கொடுப்பானென்னும் பொருள் குறிப்பினாற்கொள்ளக்கிடந்தவாறுகண்டுகொள்க. எ-ம். வெ“ அ விழ்ந்த துணியிசைக்குமம்பலமுஞ்சிக்கும், மகிழ்ந்திடுவார் முன் னர்மலரும்-கவிழ்ந்து, நிழறுழாம் யானைநெடுந்தேரிரவிக், கழ றொழாமன்னவர்தங்கை,, எ-து. தன்னுடைய நிழலைக் கவிழ்ந்து சிலதக்கும் யானையினையும், நெடிய தேரினையுமுடைய இரவி குலத் துள்ளானுடைய பாதங்களைப்பணியாத அரசர்களுடைய கைகளானவை உடுக்கவேண்டினவிழ்ந்த துணிகளைப் பின்புமு டியாநிற்கும்.கிடக்கவேண்டின் ஊர்ப்புறத்துண்டாகிய அம்பல

யைகளைத்துடையாநிற்கும். உணவுவேண்டின் இடுவார் முன்னர்ச் சென்று நின்றுள்ளத்துவகையோடும் விரியா நிற்கும். எ-று. இடுவார்முன்னருவகையோடு விரியாநிற்குமென்றதனல் இடாதார் முன்னருவகையின்றி விரியுமெனக்கொள்க. எனவும்வரும், இவை யிரண்டு நெறியார்க்குமொக்கும். (உக)

(உஉ) கருதியபொருளைத் தெரிவுறவிரித்தற், குரியசொல்லுடைய துய்த்தலில்பொருண்மை.

(எ-ன்) உய்த்தலில்பொருண்மையாமாறுணர்-ற்று. (இ-ள்.) உய்த்தலில்பொருண்மையென்பது கவிதன்னுற்கருதப்பட்டபொருளைவிளங்கவிரிக்குஞ்சொல்லைச், செய்யுளுள்ளேயுடைத்தாய், பிறிதுமொழிகூட்டி யுரைக்கும் பெற்றி யின்றிவரத்தொடுப்பது. எ-று. [வ-று] வெ,, இன்றுமையாண்மாசிலா வாண்முகங்கண்டேக் கற்றேரு, அன்றிவிடவரவையஞ்சியோ-கொன்றை, யுளராவாரேடுமொளிர்சடையீர்சென்னி, வளராவாறென்னேமதி,, எ-து. உமையாளுடைய குற்றமற்றவொளியினையுடைத்தாகிய முகமண்டலத்தைக் கண்டதனுடையநலனை ஆசைப்படுதலானே அஃதன்றியே நீர்ஆபரணமாகஅணிந்த விடத்தையுடைத்தாகியபாம்பினைக்கண்டஞ்சுதலானே கொன்றையின்மலர்களையீர்த்துக்கொண்டுகங்கையாறுவிரைந்து திரியுமொளியோடுகூடியசடையினையுடையீர் இன்றுஉம்முடைய்திருமுடி மேலுண்டாகிய பிறையானது வளராதிருந்தகாரணம்யாதுசொல்லுவீர்- எ-று. எனவரும். இனி உய்த்துணர்தல்வருமாறு. [வ-று] வெ,,இன்றுமையாண்மாசிலா வாண்முகங்கண்டேக்கறுமால், அன்றிவிடவரவு மங்குறையும் -கொன்றை,உளராவாரேடு மொளிர்சடையீர்சென்னி, வளராவாறென்னேமதி,,என்பதனுள் யாதனலோவென்னுஞ் சொற்கூட்டியுரைக்கப்படும்.எனவரும். இவ்வாறுவேண்டுவாரிரண்டுநெறியாரும்.()

(உரு) உலகொழுக்கிறவா துயர்புகழ்காந்தம்.

(எ-ன்) காந்தமாமாறுணர்-ற்று. (இ-ள்) காந்தமென்பது-ஒன்றினையுயர்த்துப்புகழுங்கால் உலகநடையிறவாமலுயர்த்துப்புகழ்வது-எ-று. [வ-று] வெ-,,ஒருபேருணர்வுடனே யொண்ணிறையுந்தேய,வருமேதுறவென்பால்வைத்த-ஒருபேதை,போதளவுவாசப்புரிகுழல்சூழ்வாண்முகத்துக்,காதளவுநீண்டிலவுங்கண்,, எ-து. யான்வருத்தத்தையுறும் வகையாகப் பேதைத்தன்மையையுடையாளொருத்தி என்னுள்ளத்திடத்துவைத்த பூவொடுகலந்த நறுநாற்றத்தையுடைத்தாகிய சுருண்டகுழலினையுடைத்தாய்ஒளியோடுகூடிய முகத்தின்கணுண்டாகியகாதினெல்லையளவுஞ்சென்றுமீ

ண்டுதிரியுங் கண்களானவை இக்காலத்தென்னொரு தன்மையாயி ருக்கப்பட்ட அறிவுடனே யொள்ளிதாகிய வொழுக்கமுங்கெட வந்து தோன்றுநின்றன- எ-று. ஒருபேதையென்னுள்ளத்துவைத்த கண்ணென்றுகூட்டுக. எனவரும்-இனிக்கௌடநெறிவருமாறு [வ-று] வெ,, ஐயோவகலல்குல்சூழ்வருதற்காழித்தேர், வெய்யோற்கநேகநாள் வேண்டுமால் - கையபரந்து, வண்டிசைக்குங்கூந்தன் மதர்விழிகள் சென்றுலவ, எண்டிசைக்கும் போதாதிடம்,, எ-து திரளாகப்பரந்து வண்டுகள்பாடப்பட்ட கூந்தலினையுடையாளுடைய அகன்றவல்குற்பரப்பைச்சூழ்வருதற்கு ஐயோ ஆகாயப்பரப்பெல்லாமொருபொழுதிற்கடக்கும்ஒருகாற்றேரையுடைய பகலோனுக்குப்பன்னெடுநாள் வேண்டுவதாயிருந்தது. அதுவேயன்றியவளுடையகளிப்பையுடைத்தாகியகண்கள்சென்றுஉலாவுவதற்குஎண்வகைப்பட்டதிக்குகளிலுண்டாகியஇடப்பரப்பும்போதாததாயிருந்தது -எ-று. ஐயோவென்பதிரக்கத்தின்கட்குறிப்பு இவ்விரக்கம் ஆதித்தன்மேலற்றுக. எ-ம், வெ“அங்கண்மாஞாலத்தகல்விசும்பை முன்படைத்த, பங்கயத்தோனந்நாளிப் பைந்தொடிதன்-கொங்கைத்,தடம்பெருகவோங்குமெனத்தானினையாவாறே, இடம்பெருகச்செய்பாவியல்பு. எ-து- அழகினையுடைத்தாகிய இடத்தையுடைத்தாய்ப் பெரிதாகிய வுலகத்தின்மீதுண்டாகிய அகன்றவிசும்பைப்படைத்த நான்முகன் அந்நாளி விவ்வாகாயத்தை இடப்பரப்புண்டாகப் படையாதகாரணம் பசும்பொன்னாற்செய்த தொடியினையுடையாளுடைய முலைகள் புடைபரக்கவளர்ந்துமீதுயர்ந்தோங்குமென நினையாதவாறே சொல்லுவீர்-எ-று. இவ்வாறு உலகநடையிறப்பப்புணர்ப்பதே, சுவையுடையவென வேண்டுவர்கௌடர். (உரு)

(உச) வலியெனப்படுவது தொகைமிகவருதல்.

(எ-ன்) வலியென்னுமலங்காரமுணர்-த்-று. (இ-ள்) வலியென்றுசொல்லப்படுவது, தொகைச்சொற்றொடர்புண்டாகத்தொடுப்பது-எ-று. மிகவென்றது சிறப்புடையவாகவெனக்கொள்க. [வ-று.] வெ- “கானிமிர்த்தாற் கண்பரிபவல்லியோ புல்லாதார், மானனையார்மங்கலநாணல்லவோ-தான,மழைத்தடக்கைவார்கழற்கான்மானவேற்கிள்ளிப், புழைத்தடக்கை நால்வாய்ப்பொருப்பு,, எ- து- காலம்வரையாது உபகரிக்கின்ற மேகம்போன்ற கையினையும், நீண்டிருக்கின்ற கழலோடுகூடிய காலினையும், வலிதாகிய வேலினையுமுடையனாகிய சோழனுடைய துளையையுடைத்தாகிய பெரிதாகிய கையினையும், நான்றவாயினையுமுடையமலையாகியவாரணம் தன்னுடைய தாளைவலித்தால் அறுந்தன்மையை

புடைபன நிகள்த்தின்கண்ணேயோ பகைத்தவேந்தருடைய உரி
மைச்சுற்றத்து மான்போன்ற விழியினையுடையார்கழுத்தி னல்ல
நாளிற்பூட்டியவலியையுடைத்தாகிய மங்கலக்கயிறல்லவோ-எ-று
எனவரும். இத்துணைச் சுருங்கத்தொடுத்த லின்றென்று கௌ
டர்சொல்லுமாறு. [வ-று] வெ-"செங்கலசக்கொங்கைச்செறிகு
றங்கிற்சீறடிப்பேர், பொங்கரவவல்குற்பொருகயற்கட்-செங்க
னிவாய்க், காருருவக்கூந்தற்கதிர்வளைக்கைக்காரிகைத்தா, மோரு
ருவென்னுள்ளத்தேயுண்டு.,, எ-து- செவ்வையாகிய கலசம்போ
ன்ற முலையினையும், செறிந்தகுறங்கினையும், சிறிதாகியஅடியினை
யும், பெரிதாகிய பாம்புப்படம்போன்ற அல்குலினையும், பகைத்
தெதிர்ந்த கயலையொத்த கண்ணினையும், செம்மையாகிய கொவ்
வைக்கனிபோன்றவாயினையும், கருமையாகிய நிறத்தினையுடைய
கூந்தலினையும், ஒளியோடுகூடிய வளைகளையுடைத்தாகிய கையி
னையும், அழகினையுமுடைத்தா யிருப்பதோர்வடிவம் என்னுளம்
விட்டகலாது. எ-று.எனவரும். (௨௪)

(௨௫) உரியபொருளின்றி யொப்புடைப்பொருண்மேற்,றரு
ம்வினைபுணர்ப்பது சமாதியாகும்.

(எ-ன்.) சமாதியென்னு மலங்காரமுணர்-ற்று (இ-ள்) முக்கி
யப்பொருளின்வினையை, ஒப்புடைப்பொருண்மேற்றந்துபுண
ர்த்துரைப்பது சமாதியென்னு மலங்காரமாம்.எ-று. ❁ சமாதி
யென்று தாகுமென்றதனாற் பெயரும் அவ்வாறுரைக்கப்படும்.--
[வ-று.] "ஆ -அகலிருவிசும்பிற் பாயிருள்பருகிப்,பகல்கான்றெ
ழுதரும்பல்கதிர்ப்பரிதி.,, எ-ம். "விழித்தகுவளைக்கழிப்போது
வாக்கிய, கள்ளுண்டுகளித்தவண்டினம்.,, எ-ம். கன்னியெயில் கு
மரிஞாயில்.எ-ம். வெ-"கடுங்கைவயலுழவர்காலைத்தடிய,மடங்கி
யரியுண்டநீலம்-தடஞ்சேர்ந்து, நீளரிமேற்கண்படுக்கு நீணீரவ
ந்தியார், கோளரியேறிங்கிருந்தகோ,, எ-ம். வரும். இஃதிரண்டு
நெறியார்க்குமொக்கும்.— இதனைக்குணவலங்காரமென்றுங் கூ
றுப. அஃதேல் இன்னவிலக்கண முன்னையோர் மொழிந்தது ந
டைபலபயின்றவடமொழிக்கன்றேசெந்தமிழ்மொழியின்வந்த
வாறென்னையெனின், இதன்முதனூல்செய்த ஆசிரியர்உலகத்து
ச்சொல்லெல்லாம், சமஸ்கிருதம், பிராகிருதம், அபப்பிரஞ்சம்,
எனமூன்றுவகைப்படுத்தினர். அவற்றுள்- சமஸ்கிருதம் புத்தே
ளிர் மொழியெனவும்,அபப்பிரஞ்சம் இதரசாதிகளாகிய இழிச
னர்மொழியெனவுங்கூறினர். அதனாற்பிராகிருதம் எல்லாநாட்டு
மொழியெனவும்படும். அல்லதூஉம்,பிரகிருதி-என்பதியல்பாக
லான் பிராகிருதம் இயல்பு-அப்பிராகிருதத்தைத்தற்பவம், தற்ச

மம்,தேசியமென மூன்றாக்கினார். அவற்றுள்- தற்பவமென்பன ஆரியமொழிதிரிந்தாவன. அவை-பாபம்-பாவம். எ-ம். "தசநாதன்கெப்திய பணிமருதோன்றுளெனவும், வரும். தற்சமமென்பன, ஆரியச்சொல்லும், தமிழ்ச்சொல்லும்,பொதுவாய்வருவன. அவை-குங்குமம்-மூலம்- மலயமாருதம்-என்பன. தேசியமென்பன அவ்வவநாட்டார் ஆட்சிச்சொல்லாய்ப் பிறபாடைநோக்காதன. அவை-நிலம்-நீர்-தீ-சோறு-என்பன. இவற்றையே செய்யுட்சொல்லெனத் தமிழ்நூலாரும்வேண்டினாராகலின் இவ்வாற்றான் தமிழ்ச்சொல்லெல்லாம் பிராகிருதமெனப்படும்.அச்சொற்களாலியற்றப்படு மெல்லாக்கவிக்கும்,அவ்வலங்காரமனைத்துமுரியவாகலின் ஈண்டுமொழிபெயர்த் துரைக்கப்பட்டன. (உரு)

(உசு) எற்றசெய்யுட் கியன்றவணியெலாம், முற்றவுணர்த்தும் பெற்றியதருமையிற்,காட்டியநடைநெறிகடைப்பிடித்திவற்றொடு,கூட்டியுணர்த லான்றோர்கடனே.

(எ-ன்.) இச்சொல்லப்பட்ட அலங்காரங்கட்கெல்லாம் புறனடையுணர்-ற்று. (இ-ள்.) உலகத்துநிலைபேறுடைய செய்யுளனைத்திற்கும், பொருந்திய அணிவேறுபாடெல்லாம் ஒழிவின்றி யுணர்த்தும் பெற்றியரிதாகலான்- காட்டப்பட்ட ஒழுக்கநெறியைபற்றுக்கோடாக, இவற்றோடுங் கூட்டிக்கொண்டுணர்தல் முற்றக்கற்றோர்கடனும்- எ-று. ❋ மாங்கனியும்,தீம்பாலும்,வருக்கைச்சுளையும், சருக்கரையும், தம்முள்வேறுபட்டசுவையெனினும்,கூறுவதுமதுரமொன்றன்றே, அதுபோல,எழுத்துச்செறிவும், சொற்செறிவும்,பொருட்செறிவும்,செறிவென்றே செப்புவதல்லது, பிறிதொருவகைபேசிற் பெருகி அகலவுடைத்தாமெனக்கொள்க. ஒழிந்தனவுமன்ன. (உசு)

முதலாவது,பொதுவணியியன்

முற்றிற்று.

ஆ சூத்திரம்- உசு.

உ

கணபதி துணை.

இரண்டாவது

# பொருளணியியல்.

என்னையுடையாள்கலைமடந்தையெவ்வுயிர்க்கும் *
அன்னையுடையவடித்தளிர்கள் - இன்னளிசூழ் *
மென்மலர்க்கேகன்றுமெனவுரைப்பர்மெய்யிலா *
வன்மனத்தேதங்குமோவந்து. *

(இ-ள்.) மிகவுமிழிவான என்னை யடிமையாகவுடையாள் கலைமடந்தை எல்லாவுயிருக்குந் தாயாயுள்ளவளது தளிராகிய அடியிணைகளானவை யினிதாகியபண்முரலும்வண்டுகள்சூழுகின்றமிருதுவாகிய மலரின்மீது மிதிப்பினுங் கன்றுமென்று சொல்லாநிற்பர் இத்தன்மையாகிய தளிரடிகள் உண்மையற்றகடினமாகிய என்மனதின்கண்வந்து நிலையாகநிற்கும்-எ-று. ஓகாரம்-அசை. கலைமடந்தைஎன்பதற்குக்கலையையூரும்வனதுர்க்கைஎன்பாருமுளர்

(உஎ) தன்மையுவமை யுருவகந்தீவகம், பின்வருநிலையே முன்னவிலக்கே, வேற்றுப்பொருள்வைப்பே வேற்றுமைவிபாவனை, யொட்டேயதிசயந் தற்குறிப்பேற்ற, மேதுநுட்ப மிலேசநிரனிறை, யார்வமொழிசுவை தன்மேம்பாட்டுரை, பரியாயம்மே சமாயிதமுதாத்த, மரிதுணரவநுதி சிலேடைவிசேட, மொப்புமைக்கூட்ட மெய்ப்படுவிரோத,மாறுபடுபுகழ் நிலைபுகழாப்புகழ்ச்சி, நிதரிசனம்புணர்நிலை பரிவருத்தனையே, வாழ்த்தொடுசங்கீரணம்பாவிகமிவை, யேற்றசெய்யுட் கணியேழைந்தே.

(எ-ன்) இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின், பொருளானுமணிகள தியல்புணர்த்தினமையாற், பொருளணியோத்தென்னும்பெயர்த்து. அஃதேல்,சொல்லானுணர்த்தப்படும் அணியீண்டுணர்த்திலரோவெனின், மிகுதி பொருண்மேலதாகலான் மிக்கதனாற்பெயர் கொடுக்கப்பட்டது. இவ்வோத்தினு ளிச்சூத்திரமென்னுதலிற்றோவெனின்,அலங்காரங்களதுபெயருமுறையுந்தொகையுமுணர்-ற்று. (இ-ள்.) தன்மைமுதல்- பாவிகமீறுகச்சொல்லப்பட்டமுப்பத்தைந்தும் மேற்கூறியசெய்யுட் கலங்காரமென்றுசொல்லப்படும்-எ-று. ☼ இவையெல்லாம் உம்மைதொகுத்து எண்ணேகாரமிடையிட் டெண்ணப்பட்டவற்றை உம்மை விரித்துரைக்கப்பட்டது.தன்மையும் உவமையுமென விரித்துக்கொள்க. அஃதேல் இதுமுறையானவா றென்னையோவெனின், இயல்புவிகாரமென விரண்டல்லதுவேறில்லை, அவற்றுட்டன்மை யியல்பாகலான் முற்கூறப்பட்ட முறைமைத்தாய்த்தன்மையென்றுஞ்

சொன்னடையென்றுஞ்சொல்லப்படும். உவமைவிகாரமாய் மிக்கவரவிற்றாய்ப் பின்வருகின்ற பலவலங்காரங்கட் குபகாரமுடைத்தாகலாற் றன்மையின்பின்வைக்கப்பட்டது. ஒழிந்தனவும்வைத்தவாறுய்த்துணர்ந்துகொள்க. ஈண்டுரைப்பிற்பெருகும் அல்லதூஉம். தொல்லாசிரியர்சொல்லியநெறியெனினுமமையும். இனியேற்றவென்றதனாற் சிலசெய்யுட்கேற்றுச் சிலசெய்யுட் கேலாதனவுமுளவொருதிறத்தணியெனக்கொள்க. அரிதுணரவருதியென்று சிறப்பித்தவதனாற் சிறப்புமுதலானவற்றுண்மை மறுக்குங்கால் அம்மறையானே, ஒருபுகழ்தோன்றவைக்கப்படுமென்பது. அஃததனிலக்கணங் கூறும்வழியே யுணர்ந்துகொள்க. மெய்ப்படுவிரோதமென்பதற்கு மெய்யென அடைகொடுத்தது தமிழாசிரியர் முரண்டொடையென்றுதொடைப்பாற்படுத்துச்செய்யுட் குறுப்பாக்கினர் இவ்வாசிரியரதனை யலங்காரத்தின்பாற் படுத்தினாராகலினவ்வேறுபாடறிவித்தற் கெனக்கொள்க. இவையெலலாம் மேற்சூத்திரச்சுருக்கநோக்கி ஈண்டுரைக்கப்பட்டன. ஒழிந்தவகலமுரையிற்கொள்க (௧)

(௨அ) எவ்வகைப்பொருளுமெய்வகைவிளக்குஞ், சொன்முறை தொடுப்பது தன்மையாகும்.

(எ-ன்.) நிறுத்தமுறையானே தன்மையென்னு மலங்காரத்துப்பொதுவிலக்கணமுணர்-ற்று- (இ-ள்.) எவ்வகைப்பட்டபொருளும். மெய்ம்மைக் கூறுபாட்டான்விளக்குஞ் சொன்முறையாற் பாடப்படுவது தன்மையென்னும் அலங்காரமாம். எ-று. (௨)

(௨௯) அதுவே, பொருள்குணஞ் சாதிதொழிலொடுபுலனும்.

(எ-ன்.) தன்மையது பகுதியாமாறுணர்-ற்று. (இ-ள்.) அத்தன்மை- பொருளும், குணமும், சாதியும், தொழிலு மென்னும் இவைபற்றித்தோன்றும். எ-று.

இவற்றுள்— முதலாவது, பொருட்டன்மைவருமாறு. வெ

“நீலமணிமிடற்றனீண்டசடைமுடியன், நூலணிந்தமார்பனுதல்விழியன்-தோலுடையன், கைம்மான்மறியன்கனன்மழுவன்கச்சாலை, எம்மானிமையோர்க்கிறை„ — என்ட்டு. கருங்குவளைபோன்ற அழகியமிடற்றினையும், முடியின்கண்ணேநீண்டிருக்கப்பட்டசடையினையும், மார்பினிடத்தேயணியப்பட்டநூலினையும், நெற்றியின்கட் சேர்ந்தவிழியினையும், உடையாகவசைத்ததோலினையும், கரதலத்தேந்தியமானினையும், கனல்போன்றமழுவினையும், திருக்கச்சாலையென்னுந் திருப்பதியினையுமுடையனாய் எம்மையாண்டுகொண்டபெரியோன் இமையவர்க்குத்தலைவன்-எ-று. அன்சாரிகை-நீலமணிபோன்றமிடற்றினனெனவுமமையும். மிடற்

றன்- சடையன்- மார்பன்-விழியன்-எனச்செவ் வெண்ணுக்கினு மமையும். கனமழுவன்எனப்பாடமோதிப் பெரியமழுவினனென்பாருமுளர். கனலையும் மழுவையுமுடையனென்ருகினும்அமையும். கச்சாலை அம்மானென்றது-கச்சாலையிலேயுறையும்பெரியோனெனினுமமையும். எனவரும்.

உ-வது-குணத்தன்மைவருமாறு. வெ-"உள்ளங்குளிரவுரோமஞ்சிலிர்த்துரையும், தள்ளவிழிநீரரும்பத் தன்மறந்தாள்-புள்ளலைக்கும், தேந்தாமரைவயல்சூழ் தில்லைத்திருநடஞ்செய், பூந்தாமரைதொழுதபொன்,, எ-து. நெஞ்சமானதுகுளிர மெய்ம்மயிரரும்பி மாற்றமுந்தளரக் கண்ணிலேபுனல்தோன்றத்தன்னுருவத்தையுமறந்தாள். புட்குலம் அலைக்காநின்ற மதுநிறைந்ததாமரையையுடைய பழனஞ்சூழ்ந்த தில்லைப்பொதுவின்கண்ணே அழகுடைத்தாகிய கூத்தையாடுகின்ற சபாபதியின் பொலிவினையுடைய திருவடித்தாமரையை வணங்கினபொன்னையொப்பாள். எ-று. எனவரும். உரையுந்தள்ள என்னுமும்மையால்- நாணம்-மடம்-அச்சம்-பயிர்ப்புந்தளர வெனக்கொள்க.

ங-வது-சாதித்தன்மைவருமாறு. வெ-"பத்தித்தகட்டகறைமிடற்றபைவிரியும், துத்திக்கவைநாத்துளையெயிற்ற-மெய்த்தவத்தோர், ஆகத்தானம்பலத்தானாரமுதணங்கின், பாகத்தான்சாத்தும்பணி,, எ-து. பத்தியாகியவரைகள்பொருந்தியவயிற்றினையுடையனவாய்க்கருமையாகிய மிடற்றினையுடையனவாய்ப்படத்தின்கண்பொறிநிறத்தையும், இரண்டுபிரிவானநாவையும்,புரையையுடைய பல்லினையுமுடையனவாயிருப்பன. மெய்யாகிய தவத்தினையுடையோர் அகத்தின்கண்ணுள்ளான். அம்பலத்திலே நிற்பான். பருகாத அமுதமன்ன உமாதேவியின் பாகத்தையுடையான். சாத்தும் பணிகள். எ-று. எனவரும். பத்தித்த- அகட்ட-என்பது பத்தித்தகட்டவென விகாரமாயிற்று. அகத்தானென்பது ஆகத்தானெனமுதனீண்டது.

ச-வது-தொழிற்றன்மை வருமாறு. வெ-,, சூழ்ந்துமுரன்றணவிவாசந்துதைந்தாடித், தாழ்ந்துமதுநுகர்ந்துதாதருந்தும்-வீழ்ந்தபெரும், பாசத்தார்நீங்காப்பரஞ்சுடரின்பைங்கொன்றைவாசத்தார்நீங்காதவண்டு,, எ-து. பாசநீங்கிய முத்தர்களைவிட்டுநீங்காத பரஞ்சோதியின் வாசனையையுடைய பசுமையாகிய கொன்றைமாலையைப்பிரியாதவண்டு சூழ்ந்து பண்ணைமுரன்று சேரச்சென்று மணத்தைச்செறிந்து மீதேபறந்து விரும்பி மதுவையுண்டு தாதைக்கோதாநிற்கும் எ-று. எனவரும். ஆ,, மான்றேர்ந்தள்ளிமகவொடுமுடங்கி, ஈன்பிணவொழியப்போகிநோன்காழ், இரும்புதலையார்த்ததிருந்துகணைவிழுக்கோ, லுளிவாய்ச்சுரையின்மி

ளிரமண்டி, விடுநிலக்காம்பைப்படுநீருடி, நுண்புல்லடக்கியவெ ண்பல்லெயிற்றியர்,பசிர்வையார்த்தபறைதாழ்விளவின்,நீழன்மு ன்றினிலவுரற்பெய்து.,, என்பதுமது. இஃதிலக்கியத்திற்சிறுபா ன்மை இலக்கணத்துள்ளே பயின்றுவருவதெனக்கொள்க. (௫)

(௩௰ பண்பந்தொழிலும் பயனுமென்றிவற்றி, னொன்றும்ப லவும் பொருளொடுபொருள்புணர்த், தொப்புமைதோன்றச் செ ப்புவதுவமை.

(எ-ன்.) உவமையென்னும் அலங்காரத்தின் பொதுவிலக்கண முணர்-ற்று. (இ-ள்) பண்பு-தொழில்-பயனென்பனகாரணமாக, ஒன்றாகியும்,பலவாகியும்,வரும்பொருளோடுபொருளினைய வை த்து ஒப்புமைபுலப்படப்பாடுவ துவமையென்னுமலங்காரமாம். எ-று. ❈ ஒன்றும் பலவும் பொருளோடு பொருள்புணர்த்தலாவ து ஒருபொருளோ டொருபொருளும், ஒருபொருளோடு பல பொருளும், பலபொருளோடு பலபொருளும், பலபொருளோ டொருபொருளும். இவையப்புணர்த்தல்.

க-வது-பண்புவமை வருமாறு. ஆ - "பவளத்தன்னமேனி,, எ-ம்.வேய்புரைபணைத்தோள். எ-ம். "தெம்முனையிடத்திற்சேய் கொ,லம்மாவரிவையவர்சென்றநாடே,, எனவும்வரும்.

உ-வது-தொழிலுவமை-ஆ- "அரிமாவன்னவணங்குடைத்து ப்பிற்,றிருமால்வளவன்,, எ-ம். களிற்றினைதெரீஇப்பார்வலொதுக் கின், ஒளித்தியங்குமரபின் வயப்புலிபோல,, எனவும்வரும்.

௩-வது-பயனுவமை-ஆ-"மாரியன்ன வண்கைத்,தேர்வேளா ண்மைகாணியசென்மே,, எ-ம். "செறுநர்த்தேய்த்த செல்லுறழ்த டக்கை,,-எனவும்வரும். அஃதேல், வேய்புரைபணைத்தோளென்ப து, வடிவுவமை-எ-ம். தெம்முனையிடத்துச் சேய்கொலென்பது எல்லையுவமை-எ-ம்.சொல்லுபவாலெனின்-கூ-"வண்ணத்தின்வடி வினளவிற்சுவையினென்,றன்னபிறவுமதன்குணநுதலி,யின்னதி துவெனவருஉமியற்கை,யென்னகிளவியும்பண்பின்றொகையே,, என்பழி-வடிவும்பண்பெனக்கூறினர் ஆசிரியர்தொல்காப்பியனா ர். சேய்மைபணிமையென்பனவும், அளவாகலாற் பண்பெனப்ப டும். இனி-ஒருபொருளோ டொருபொருள். "செவ்வானன்னமே னி,,எ-ம். ஒருபொருளோடுபலபொருள் "அவ்வானிலங்குபிறை யன்னவிளங்குவாலெயிற்று,,. எ-ம். பலபொருளோடுபலபொரு ள். "களிறெறிகுறவினத்தன்ன வாளோர்மொய்ப்ப, மரீஇயோர றியாது மைந்துபட்டன்றே,, எ-ம். பலபொருளோ டொருபொ ருள் - "பெரும்பெயர்க்கரிகாலன் முன்னிலைச்செல்லார், மடின் மன்னர்போல, வோடுவைமன்றல்வாடைநீயெமக்கே,, எ-ம். வரு ம். அஃதேலுவமையும் பொருளும் ஒத்தபண்பு மாவனயாவை

பெனின், பவளம்போலுஞ்செவ்வாயென்புழிப் பவளம் உவமை
யெனவும், உவமானமெனவும் படும். வாய் பொருளெனவும், உவ
மேயமெனவும்படும். செம்மை, இரண்டற்கும் பொதுவாகிய கு
ணமெனப்படும். போலுமென்பது உவமையுருபிடைச்சொல்.
இஃது பண்புகாரணமாகவந்தவுவமையெனப்படும். இதனை உவ
மையென்ற தென்னையெனின், பவளவாயென்பதனைத்தொகையு
வமையென்றும், பவளச்செவ்வாயென்பதனை விரியுவமையென்
றுங்கூறுபவாகலின். அல்லதூஉம், பவளம்போலச்செய்யவாயெ
ன்பதனை முற்றுவமையென்றுங் கூறுபவாகலின். ஈண்டுவமைய
லங்காரமென்பது அத்தொடர்ச்சொன் முழுவதுமெனக்கொள்
க. மற்றும்-பண்பியும், பண்பும், தொழிலும், பயனுமெனக் கூ
றப்படுவன நான்கு. அவற்றுள் - பண்பியென்பன காட்சிப்பொ
ருளுங் கருத்துப்பொருளுமாகிய இயங்குதிணையுநிலைத்திணையுமா
ம். பண்பென்பன, அவற்றின் குணமாய்த்தோன்றித் தமக்கு வே
றுகுணமின்றிநிகழ்வன. தொழிலென்பன, அவற்றின் புடைபெ
யர்ச்சியாய்க் காலம்புணர்ந்து நிற்பன. பயனென்பன, அவை
காரணமாகப் புலப்படுங்காரியம். பண்பியாகிய ஒரு பொருட்
கு, ஒருபொருளுவமையாங்கால், இரண்டற்கும் பொதுவாகிய
தோர் குணமேது வாகலானும், தொழிலேது வாகலானும், பய
னேதுவாகலானும், ஒப்பித்துரைக்கப்படும். என்றிவற்றின் என்
பதனான், பண்பு - தொழில் - பயனென்பன, ஒரோவொன்றேய
ன்றிப் பலவுங் காரணமாகவரும். அவை "கானயானை கைவிடுபசு
ங்கழை, மீனெறிதூண்டிலினிவக்குங், கானநாடன்,, எ-து தொ
ழிலும், பண்பும். "காந்தளணிமலர்நறுந்தாதூதுந், தும்பிகையா
டு வட்டிற்றோன்றும்,, எ-து. பண்பும், தொழிலும். அல்லதூஉம்,
அவ்விலேசானே பண்பு தொழில் பயனென்பனவேயன்றிச்,
சொற்பொதுமை காரணமாகவும், பிறகாரணமாகவும், வரும் உ
வமையலங்காரமென்பது. அவை முன்னருரைக்கப்படும். ஒப்பு
மைதோன்றவென்றதனால், அவ்வுவமை கேட்போருளங்கொண்டு
விளங்கத்தோன்றுவதேயாதல் வேண்டும் யாதானுமொரு முகத்
தாற் கூறற்கவென்பது. (௮)

(௧௧) அதுவே,விரியேதொகையே யிதரவிதர, முறைபெறுசு
முச்சயமுண்மைமறுபொருள்,புகழ்தனிந்தைநியமமநியம,மை
யந்தெரிதருதேற்றமின்சொ, லெய்தியவிபரீத மியம்புதல்வேட்
கை, பலபொருள்விகார மோகமபூதம், பலவயிற்போலி யொரு
வயிற்போலி, கூடாவுவமை பொதுநீங்குவமை, மாலையென்னும்
பாலதாகும்.

(எ-ன்.) இது அவ்வுவமையை விரித்துணர்-ற்று. (இ-ள்.) அச்
சொல்லப்பட்ட வுவமையலங்காரம், விரியுவமை முதல்—மாலையு
வமையீறாகச்சொல்லிய விருபத்து நான்கு பாகுபாடுடையதாம்
-எ-று. ❋ இவையெல்லாஞ் சொல்லின் முடியு மிலக்கணத்தவாக
லாற் பெரும் பான்மையும் தம்பொருளே யிலக்கணம் புலப்படு
த்தும், அல்ல துனாயினுங்கொள்க.

அவற்றுள், க-வது - விரியுவமையென்பது, பண்புமுதலிய
னவிரிந்துநிற்பது. [வ-று.] வெ - "பால்போலுமின்சொற்பவள
ம்போற்செந்துவர்வாய்,சேல்போற்பிறழுந்திருநெடுங்கண்-மே
லாம், புயல்போற்கொடைக்கைப்புனனாடன்கொல்லி, அயல்போ
லும்வாழ்வதவர்.,, எ-து. பாலையொத்தினிதாகிய சொல்லினையும்,
பவளத்தை யொத்துச் சிவந்துவிளங்கியவாயினையும்,சேலையொத்
துப்பிறழ்தலால்விளங்கிய அழகினையுடைத்தாகிய நெடியகண்ணி
னையுமுடைய அவர்வாழுமிடம் மின்னும் முழக்கமும், காலவரை
வுமின்றிச் சான்றோராலே புகழப்பட் டுயர்ந்தநெறியே யொழுகிய
மழைபோன்று கொடுத்தலால் விளங்கிய கையை யுடையனாகிய
சோழனுடைய கொல்லிமலைப் பக்கம்போலும். எ-று.எனவரும்.

உ-வது- தொகையுவமை யென்பது, பண்புமுதலியனதொ
க்குநிற்பது. [வ-று] வெ - "தாமரைவாண்முகத்துத் தண்டரளம்
போன்முறுவல், காமருவேய்புரைதோட்காரிகையீர்-தேமருவும்
பூங்குழலின்வாசப் பொறைசுமந்து நேர்ந்ததோ, பாங்குழலுந்
தென்றற்பரிசு.,, எ-து. தாமரைபோன்ற ஒளியையுடைய முகத்
தினையும், குளிர்ந்த முத்துப்போன்ற நகையினையும், அழகுமரு
வியவேய்போன்ற தோளினையுமுடையமாதரீர் உம்முடைய பக்
கத்திலேயுலாவுகின்றதென்றலின்றன்மைஉம்முடையதேன்பொ
ருந்திய பூவினையுடைத்தாகிய குழலின்கண்ணுண்டாகிய நறுநா
ற்றப்பாரத்தைத் தாங்கிக்கொண்டுவருகின்றவருத்தந்தானோ மெ
ல்லியவுருவுடைத்தானது சொல்லுவீராக-எ-று. எனவரும்.

ரு-வது - இதரவிதர வுவமையென்பது, பொருளொருகா
லுவமையாயும்,உவமையொருகாற் பொருளாயும், ஒருதொடர்ச்
சிக்கண்ணேவருவது. [வ-று.] வெ-" களிக்குங்கயல்போலு நுங்க
ணுங்கண்போற், களிக்குங்கயலுங்கனிவாய்த் - தளிர்க்கொடியீர்,
தாமரைபோன்மலரு நும்முகநும்முகம்போற், றாமரையுஞ்செ
வ்விதரும்,, எ-து. கொவ்வைக்கனிபோன்றவாயினையுடைத்தாய்த்
தளிரோடுகூடிய கொடிபோன்றமடவீர், செருக்கினைஉடைத்தா
கிய கயல்போன்ற தன்மையையுடைத்தாயிருந்தன நும்முடைய
நாட்டங்களானவை. இத்தன்மைத்தாகியவும்முடைய நாட்டங்களி
ற்குவமையாகின்றன கயற்குலமானவை, இஃதன்றியேயும்முடை

முகமண்டலமானது தாமரைபோன்மலராநின்றது அத்தன்மை த்தாகிய தாமரை யும்முடைய முகமண்டலம்போலச் செவ்வியி னையுடைத்தாகின்றது. எ-று. எ-ம். வெ - "தளிபெற்றுவைகியத ண்சுனைநீலம், அளிபெற்றார்கண்போலலரும் - அளிபெற்ற, நல் லார்திருமுகத்தாற்றநளிபெற்ற, கல்லாரம்போன்மலருங்கண்.,, எ-து. மழையையேற்றுக்கோடலிற் றட்பத்தையுடைத்தாகிய சு னையின்கண் ணிருக்கின்ற நீலப்பூவானது தலைவரானலம்பாராட் டப்பெற்ற மடவார்கண்ணேபோல மலராநின்றது. அத்தன்மை த்தாக அளிபெற்ற மடவாருடைய அழகிய முகமண்டலத்து மி கக்குளிர்ச்சியையுடைத்தாகிய கண்களும் நீலம்போலமலராநின் றன. எ-று. எ-ம், வரும்.

ச-வது. சமுச்சய வுவமையென்பது, இதனையொப்பதித னுனேயன்றி யிதனுனு மொக்குமென்பது. [வ-று.] வெ-" அள வே வடிவொப்ப தன்றியே பச்சை, இளவேய் நிறத்தானு மே ய்க்கும் - துளவேய், கலைக்குமரிபோர்துளக்குங் காரவுணர்வீரந், தொலைக்குமரியேறுகைப்பாடோள்.,, எ-து. துழாய் மாலையைச் சூடிய கலைமடந்தையாகியகன்னி போரிடத்துப்பகைவரைநடுக் கஞ்செய்யும் கருமையான நிறத்தையுடைய அசுரரின் ஆண்மை யைக்கெடுக்கும் சிங்கப்போத்தை வாகனமாகவுடையாள் தோள்க ளைப்பசிய இளவேயானது அளவினுனும் வடிவினுனு மொப்பத ன்றிப்பசுமைநிறத்தானுமொக்கும். எ-று. எனவரும்.

டு-வது. உண்மையுவமையென்பது, உவமையைக்கூறிமறு த்துப் பொருளினையேகூறி முடிப்பது. [வ-று.] வெ-" தாமரை யன்றுமுகமேயீதிங்கிவையுங், காமருவண்டல்லகருநெடுங்கண்- தேமருவு, வல்லியினல்ல ளிவளென்மனங்கவரும், அல்லிமலர்க் கோதையாள்.,, எ-து. இதுதாமரைமலரல்லமுகமே. இவையும் அ ழகு மருவியவண்டல்லக்கறுத்துநீண்டகண்களே. தேன்மருவப்ப ட்டகொடியல்லள் இவண்மடந்தையே. இத்தன்மையாகிய அவய வங்களையுடைய விவள் என்னுள்ளங்கவரும்அகவிதழ்களையுடைய பூவாற்செய்யப்பட்ட மாலையினையுடையாள். எ-று. எனவரும். இன்-சாரியை.

சு-வது. மறுபொருளுவமையென்பது, முன்னர்வைத்த பொருட்கு நிகராவதோர் பொருட்பின்னர் வைப்பது. [வ-று.] வெ- "அன்னைபோலெவ்வுயிருந் தாங்குமனபாயா, நின்னையா ரொப்பார்நிலவேந்தர் - அன்னதே, வாரிபுடைசூழ்ந்த வையகத் திற்கில்லையாற், சூரியனேபோலுஞ்சுடர்.,, எ-து. தாயினையொப் பாக எவ்வகைப்பட்ட வுயிர்களையுந்தாங்கு மனபாயனே நிலத்தி லுண்டாகிய வேந்தரில உன்னையொப்பாருமில்லை அதுபோலக்

கடல்சூழ்ந்த வையகத்திற்குச் சூரியனை யொக்குஞ் சுடருமில்லை. எ-று. எனவரும்.

௭-வது. புகழுவமையென்பது, உவமையைப் புகழ்ந்துவமிப்பது. [வ-று.] வெ-"இறையோன்சடைமுடிமேலெந்நாளுந்தங்கும், பிறையேர்திருநுதலும்பெற்ற-தறைகடல்சூழ், பூவலயந்தாங்கு மரவின்படம்புரையும், பாவைநின்னல்குற் பரப்பு," எ-து. ஒலிக்கின்றகடலாற்சூழப்பட்ட நிலப்பரப்பைத் தாங்குகின்ற சேடனுடைய படப்பரப்பை ஒக்குகின்றது உனதல்குல். அதுவேயன்றி முக்கட்கடவுள் முடியினைப்பிரியாது எந்நாளுந் தங்கும் பிறையினுடைய அழகினை நின்னுடைய அழகிய நுதலும்பெற்றது ஆதலாற் பாவாய் நின்னுருவத்தன்மை யிருந்தபடி. எ-று. எனவரும்.

௮-வது. நிந்தையுவமையென்பது, உவமையைப்பழித்துவமிப்பது [வ-று.] வெ-"மறுப்பயின்றவாண்மதியுமம்மதிக்குத்தோற்கு,நிறத்தலருநேரொக்குமேனும்-சிறப்புடைத்துத், தில்லைப்பெருமானருள்போற்றிருமேனி, முல்லைப்பூங்கோதைமுகம்," எ-து. தில்லைக்கட்கூத்தாடுகின்ற பெரியோன் அருளையொத்த அழகியமேனியினையுடைய முல்லைப்பூவாற் செய்யப்பட்ட கோதையினை யுடையாள்முகமானது மறுப்பிரியாத ஒளியினையுடைத்தாகியமதியமும். அம்மதியத்திற்குக் கருகுகின்ற தாமரைமலரும். உவமிக்கப்பொருந்துமெனினுஞ் சிறப்புடையது. எ-று. எனவரும்.

௯-வது. நியமவுவமையென்பது, இன்னதற்கின்னதே யுவமையாமெனத் தேற்றேகாரம் புணர்த்துத் துணிந்து சொல்லுவது. [வ-று.] வெ-"தாதொன்றுதாமரையே நின்முகமொப்பது மற்,றியாதொன்றுமொவ்வாதிளங்கொடியே-மீதுயர்ந்த, சேலேபணியப்புலியுயர்த்தசெம்பியர்கோன், வேலேவிழிக்குநிகர்," எ-து இளங்கொடியை ஒப்பாய் எல்லாருடையகொடிக்குமேலாகி யுயர்ந்தபாண்டியனுடைய சேற்கொடிதாழத்தனது புலிக்கொடியுயர்த்த சோழனுடையவேலே விழிக்குநிகராவது. தாதுக்கள்பொருந்தியிருக்கப்பட்ட தாமரைமலரே நின்முகத்தை யொப்பது. இஃதல்லது உன்விழியினையு முகத்தினையு முலகத்துண்டாகியயாவும் ஒவ்வா எ-று. எனவரும். ஏகாரம்-அசை.

௰-வது. அநியமவுவமையென்பது, நியமித்தவுவமையைவிலக்கிப் பிறிதுமிப்பெற்றியனவாமென்பது. [வ-று.] வெ-"கௌவைவிரிதிரைநீர்க்காவிரிசூழ்நன்னாட்டு, மௌவல்கமழுங்குழன்மடவாய்-செவ்வி, மதுவார்கவிரோ நின்வாய்போல்வதன்றி, அதுபோல்வதுண்டெனினுமாம்," எ-து. ஆரவாரத்தையும் பரந்த திரை

ளையுமுடைத்தாகிய காவிரிசூழ் நன்னாட்டின்கண் மௌவற்பூவா
ற்செய்த மாலையானது நாறப்பட்டகுழலினையுடையமடவாய்செ
வ்வியும் தேனுநிறைந்தமுருக்கிதழே நின்வாயையொப்பது. அ
துவன்றி அப்பூப்போல்வது உலகத்துண்டாயினும் நின்வாயை
யொக்கும். எ-று. எனவரும்.

௰௧-வது. ஐயவுவமையென்பது, உவமையையும், பொருளை
யும், ஐயுற்றுரைப்பது. [வ-று.] வெ-"தாதளவிவண்டுதடுமாறுந்
தாமரைகொல், மாதர்விழியுலவுவாண்முகங்கொல்- யாதென், றிரு
பாற்கவருற்றிடை யூசலாடி, யொருபாற்படாதென்னுளம்.,,—
எ-து. தாதைக்கலந்து வண்டுகள் சூழப்பட்ட தாமரைமலரோகா
தலைச்செய்யப்பட்ட விழியுலவுகின்ற ஒளியினையுடையமுகமண்
டலமோ என்னென்று என்மனமானது ஊசலைப்போலாடி இரு
தலைப்பட்டு ஒன்றன்கட்டுணிகின்றதில்லை. எ-று. எனவரும்.

௰௨-வது. தெரிதருதேற்றவுவமையென்பது, ஐயுற்றதனைத்
தெரிந்து துணிவது. [வ-று] வெ-"தாமரைநாண்மலருந்தண்ம
தியால்வீறழியுங், காமர்மதியுங்கறைவிரவும்- ஆமிதனாற், பொன்
னைமயக்கும்புனைசுணங்கினார்முகமே, யென்னைமயக்குமிது.,,—
எ-து. காலைமலருந் தாமரையும் குளிர்ந்தமதியினாலே அழகுகெ
டும். அழகியமதியும் களங்கத்தோடு கூடியிருக்கு மாதலால் என்
னைமயக்கஞ்செய்த இதுபொன்னையொப்பாக அலங்கரிக்கப்பட்
டசுணங்கினையுடையாளுடைய முகமே. எ-று. எனவரும்.

௰௩-வது. இன்சொலுவமையென்பது, பொருளினுமுவ
மைக்கோர் மிகுதிதோன்றக் கூறியுவமித்து இன்னமிகுதியை யு
டைத்தேனும் ஒப்பதன்றிச் சிறந்ததன்றென்பது. [வ-று.] வெ-
"மான்விழிதாங்குமடக்கொடியேநின்வதனம், மான்முழுதுந்தா
ங்கிவருமதியம்-ஆனாலும், முற்றிழைநல்லாய் முகமொப்பதன்
றியே, மற்றுபர்ச்சியுண்டோமதிக்கு. எ-து. நிறைந்த அணிகளை
யுடையநல்லாய்மடக்கொடியே நின்னுடைய முகமானது மானி
ன்விழியொன்றனையே தாங்காநின்றது ஆகாயத்தின்கண்வருகின்
ற மதியமானது மானின் அவயவமுழுதுந்தாங்காநின்றது. இப்
படி முழுவதுந் தாங்கினும் நின்முகத்தை யொப்பதன்றியேவி
சேடமுடைத்தாகவற்றே அம்மதியம். எ-று. எனவரும்.

௰௪-வது. விபரீதவுவமையென்பது, மேற்சொன்னவுவமை
யாய் வருவதனைப் பொருளாக்கிப், பொருளாய்வருவதனை யுவ
மையாக்கி யுரைப்பது. [வ-று.] வெ - "திருமுகம்போன் மலரு
ஞ்செய்யகமலம், கருநெடுங்கண்போலுங்கயல்கள்-அரிவை, இய
ல்போலுமஞ்ஞையிடைபோலுங்கொம்பர், மயல்போலும்யாம்
போம்வழி ,, எ-து. அரிவையுடைய திருமுகத்தையொக்க மலரு

ம்சிவந்தகமலம். கறுத்து நெடிதாகியகண்கள்போலும் கயல்கள் சாயல்போலுமயில். மருக்குல்போலும் கொம்பு ஆதலால் - இவ்வழியில் யாம்போகின்ற போக்கு மயல்போலும். எ-று. எனவரும். மயல்-ஆசை-எ-ம், ஆ - "ஓவத்தன்ன வொண்டுறைமருங்கிற், கோவத்தன்ன கொங்குசேர்புறைதலின், வருமுலையன்ன வாண்முகையுடைந்து, திருமுகமவிழ்ந்ததெய்வத்தாமரை,, எ-ம்-வ-ம்.

௰௫-வது. இயம்புதல்வேட்கை யுவமையென்பது, பொருளை இன்னது போலுமென்று சொல்ல வேட்கின்றதென்னுள்ளமென்பது. வெ-"நன்றுதீதென்றுணராதென்னுடைய நன்னெஞ்சம், பொன்றுதைந்தபொற்சுணங்கிற்பூங்கொடியே -மன்றல், மடுத்ததைந்ததாமரை நின்வாண்முகத்திற்கொப்பென், றெடுத்தியம்பவேண்டுகின்றதின்று.,, எ-து. பொன்றுதைந்தபோலு மழகிய சுணங்கினையும் பொலிவினையுமுடைத்தாய்க்கொடியையொப்பாய். நன்றுதீதென்பதனை ஒன்றுந்தெளியாது நறுநாற்றத்தையுடைத்தாய் மடுவிடத்துநின்று தயங்காநின்ற தாமரை நின்னொளியினையுடைத்தாகிய முகத்திற்கொப்பாமென்று எடுத்துரைக்கவேண்டுகின்றது இன்று என்னெஞ்சம். எ-று. எனவரும்.

௰௬-வது. பலபொருளுவமையென்பது, ஒருபொருட்குப்பலவுவமைகாட்டுவது. [வ-று] வெ- "வேலுங்கருவிளையுமென்மானுங்காவியும், சேலும்வடுவகிருஞ்செஞ்சரமும் போலுமால், தேமருவியுண்டு சிறைவண்டறைகூந்தற், காமருவு பூங்கோதைகண்.,, எ-து. மதுவைவிரும்பியுண்டு சிறைவண்டுமுரல்கின்ற கூந்தலையும் அழகியமாலையையுமுடையாருடையகண்களானவைவேலையும், கருவிளமலரையும், மிருதுவாகிய நோக்கத்தையுடைய மானையும், காவிமலரையும், சேலையும், மாவடுவையும், செவ்வியசரத்தினையும், போலும். எ-று. எனவரும். ஆல்-அசை.

௰௭-வது. விகாரவுவமையென்பது, ஒருவமையை விகாரம்படுத்தி யுவமிப்பது. [வ-று.] வெ - "சீதமதியினொளியுஞ்செழுங்கமலப், போதின்புதுமலர்ச்சியுங்கொண்டு - வேதாதன், கைம்மலரானன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான், மொய்ம்மலர்ப்பூங்கோதைமுகம்.,, எ-து. செறிந்தமலர்களாற் பொலிவுபெற்றகூந்தலினையுடையாண் முகத்தினைப் பிரமன் குளிர்ந்த மதியின்கணுண்டாகிய ஒளியினையும், செழித்தகமலப்போதிலுண்டாகியபுதிய மலர்ச்சியையுங்கொண்டு தன்கைத்தாமரையினானன்றித் தன்னுள்ளக் கருத்தானமைத்தான்.,, எ-று. எ-ம், ஆ - "முத்துக்கூர்த்தன்ன முளையிளங்கூரெயிற்று, மணிதொடுத்தன்ன வைம்பான்மறுத்துடைத்து, மதியம்வைத்தன்ன வாண்முகத்தொருத்தி,,'எனவும்வரும்.

௰அ-வது. மோகவுவமையென்பது, ஒருபொருண்மேலெழுந்தவேட்கையான்வந்த உள்ளமயக்கந்தோன்ற உரைப்பது.— [வ-று] வெ-"கயல்போலுமென்று நின்கண்பழிப்பல்கண்ணின், செயல்போற்பிறழுந்திறத்தாற்-கயல்புகழ்வல், ஆரத்தானேர்மருங்குலந்தரளவாண்முறுவல், ஈரத்தாலுள்வெதும்புமியான்,, எ-து. முத்தினாற்செய்யப்பட்டபூணால்வருந்தாநின்ற மருங்குலினையும், அழகியமுத்தினுடைய ஒளிபோன்றமுறுவலினையுமுடையாய் உன்னுடையகுறிப்பினால் மனமழியும் யான் கயல்போலுமென்று நின்கண்ணினைப்பழிப்பன். நின்கண்போற்பிறழுந்திறப்பாட்டாற்கயலைப்புகழ்வன்-எ-று. எனவரும்.

௰கூ-வது. அபூதவுவமையென்பது, முன்பில்லதனை யுவமையாக்கியுரைப்பது. [வ-று.] வெ-"எல்லாக்கமலத்தெழிலுந்திரண்டொன்றின், வில்லேர்புருவத்துவேனெடுங்கண் - நல்லீர், முகம்போலுமென்னமுறுவலித்தார்வாழும், அகம்போலுமெங்களகம்,, எ-து. வில்லினையொத்த புருவத்தினையும், வேல்போன்றநெடிய கண்ணினையுமுடையநல்லீர், உம்முடையமுகத்தினையொக்குமெங்குமுள்ளகமலப்பூக்களின்செவ்வியும்செறிந்தொன்றுமாயினென்ன முறுவலைச்செய்தார் மருவிவாழு மிடம்போலும் எங்களுள்ளம். எ-று. எனவரும். ❀ அஃதேல் விகாரவுவமையோடிதனிடைவேற்றுமையென்னையெனின், விகாரவுவமை, பிறரான் விகாரப்பட்டதாகக்கொண்டு அஃதொன்றற்குவமையாக்கியுரைப்பது. இஃதன்னதன்றெனக.

உ௰-வது. பலவயிற்போலி யுவமையென்பது, ஒருதொடர்மொழிக்கட் பலவுவமைவந்தால் வந்தவுவமைதோறும் உவமைச்சொற்றோன்றப்புணர்ப்பது. [வ-று] வெ - "மலர்வாவிபோல்வரான்மாதர்கமல, மலர்போலுமாதர்வதனம்-மலர்சூழ், அளிக்குலங்கள்போலுமளகமதனுட், களிக்குங்கயல்போலுங்கண்,, எ-து. கமலமலர்த்தவாவிபோல்வார்மாதர். கமலமலர்போலுமாதர்வதனம். மலர்சூழளிக்குலங்கள்போலும் அளகம். அதனுட் களிக்காநின்றகயல்போலுங்கண்கள். எ-று. எனவரும்.

உக-வது. ஒருவயிற்போலி யுவமையென்பது, ஒருதொடர்மொழிக்கட் பலவுவமைவந்தால், வந்தவுவமைதோறும் உவமைச்சொற்புணராது ஒருவமைச்சொற்புணர்ப்பது. [வ-று] வெ-"நிழற்கோபமல்கநிறைமலர்ப்பூங்காயா, சுழற்கலவமல்விரித்ததோகை-தழற்குலவு, தீம்புகையூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார், யாம்பிரிந்தோர்க்கென்னுமினி.,, எ-து. காயாமலரினிழலின்கண் இந்திரகோபஞ்செறிய அப்பொலிவினையுடையகாயாவின்நிறைந்தமலரின்சூழலிலேதன்கலாவத்தைவிரித்தமயிலானதுதழலின்க

ட்டோன்றிய நறும்புகையினையூட்டும் செறிந்தகுழலினையுடைய
மடவாரைப்போலுந் தார்காலம் யாம்பிரிந்துபோகப்பட்டாருக்
கு என்றுமினி. எ-று. எனவரும்.

௨௨-வது. கூடாவுவமையென்பது, ஒருபொருட்குக் கூடா
தவதனைக் கூடுவதாகக்கொண்டு அதனையொன்றற்குவமையாக்கியு
ரைப்பது. [வ-று.] வெ - "சந்தனத்திற் செந்தழலுந்தண்மதியி
ல்வெவ்விடமும், வந்தனவேபோலுமாறும்மாற்றம் - பைந்தொ
டியீர், வாவிக்கமலமதிமுகங்கண்டேக்கறுவார், ஆவிக்கிவையோவ
ரண்,,எ-து பைந்தொடியீர்சந்தனத்தின்கட் செந்தழலும்,குளி
ர்ந்தமதியினிடத்து வெவ்விய விடமும் பிறந்தாற்போலும் நும்
முடையவார்த்தைகள், ஆனாற்குளிர்ந்தவாவியிடத்துக் கமலமலரு
ம்மதியமும்போலும் முகங்கண்டேக்கறுவார் ஆவிக்கிவையோ
காவல். எ-று. எனவரும்.

௨௩-வது. பொதுநீங்குவமையென்பது, உவமையைக்கூறி
மறுத்துப்பொருடன்னையேயுவமையாகவுரைப்பது. [வ-று] வெ.
"திருமருவுதண்மதிக்குஞ் செந்தாமரையின், விரைமலர்க்குமே
லாந்தகையால்-கருநெடுங்கண், மானே யிருளளகஞ் சூழ்ந்தநின்
வாண்முகம், தானேயுவமைதனக்கு.,, எ-து. கரிய நெடிய கண்க
ளையுடையமானே- குளிர்ந்தமதிக்கும், திருமருவப்பட்ட சிவந்த
தாமரையினது நறுநாற்றத்தையுடையமலருக்கும்மேலாகியதன்
மையை யுடைத்தாகலான் இருளாகிய அளகஞ்சூழ்ந்த நின்னொ
ளியினையுடைய முகந்தானேதனக்குவமையாம். எ-று. எனவரும்
திரு-கண்டாரால் விரும்பப்படுந்தன்மைநோக்கம்.

௨௪-வது. மாலையுவமையென்பது, ஒருபொருட்குப்பலவு
வமைவந்தால் அவை யொன்றினொன் றிடைவிடாதுதொடர்ச்சி.
யுடையவாகப்புணர்த்துக் கடைக்கட்பொருள்கூட்டிமுடிப்பது
[வ-று.] வெ - "மலயத்துமாதவனே போன்றுமவன்பால், அலைக
டலேபோன்றுமதனுட் - குலவு, நிலவலயமேபோன்று நேரிய
ன்பானிற்கும், சிலைகெழுதோள்வேந்தர்திரு.,, எ-து. பொதியம
லையிடத்து அகத்தியனைப்போன்றும், அவனுண்ணப்பட்ட அலை
யையுடையகடல்போன்றும், அதனுளுண்டாகியநிலவட்டம்போ
ன்றும், சோழனுடைய இடத்தே போகாதேநிற்கும்விற்பயின்ற
தோள்களையுடைய வேந்தர்செல்வம். எ-று. எனவரும். (ரு)

(௩௨) அற்புதஞ்சிலேடை யதிசயம்விரோத,மொப்புமைக்
கூட்டந் தற்குறிப்பேற்றம், விலக்கேயேதுவென வேண்டவும்ப
டுமே.

(எ-ன்) இவ்வுவமையலங்காரம்பிறவலங்காரங்களோடுங்கூடி.
வருமாறுணர்-த்து. (இ-ள்.) அற்புதவுவமைமுதல் - ஏதுவுவமை

லீறாகச் சொல்லப்பட்ட எட்டலங்காரங்களோடு கூடியும்வரும். அவ்வுவமையலங்காரம். எ-று.

அவற்றுள், க-வது. அற்புதவுவமை. [வ-று] வெ- "குழைய ருகுதாழக்குனிபுருவந்தாங்கி, உழையருயிர்பருகிநீண்ட- விழியு டைத்தாய், வண்டேறிருளளகஞ்சூழவருமதியொன், றுண்டேலி வண்முகத்திற்கொப்பு," எ-து. குழைதாழ்ந்தமுகத்தினையுடைத்தா ய், வளைந்தபுருவத்தினையுடைத்தாய்ப், பக்கத்தினின்றுங்கண்டாரு டையவுயிரையுண்டுவளர்ந்த கண்களையுடைத்தாய்ச், சுரும்புகளா லேமேவப்பட்டிருக்குங்குழலைச்சூழக்கொண்டுவருவதொருமதி யமுண்டாயின் இவளுடையமுகத்திற்கொப்பாம். எ-று. எனவரும்

உ-வது. சிலேடையுவமை. அஃது இருவகைப்படும், செம் மொழிச்சிலேடையுவமையும், பிரிமொழிசசிலேடையுவமையுமெ ன. அவற்றுள்-செம்மொழிச்சிலேடையுவமை. [வ-று] வெ- "செ ந்திருவுந்திங்களும்பூவுந்தலைசிறப்பச், சந்தத்தொடையோடணித ழுவிச்-செந்தமிழ்நூல், கற்றார்புனையுங் கவிபோன்மனங்கவரும், முற்றாமுலையாண்முகம்," எ-து. திருவென்றும், திங்களென்றும், பூவென்றுஞ் சொல்லப்பட்ட விவற்றதுபெயரை முதற்கண்ணே யுடைத்தாயோசையோடுகூடிச், சொற்கோவையோடு அலங்காரம் புணர்ந்துபயின்றாருள்ளங்கவருந் தன்மையுடைத்தாய்ச், செந்த மிழ்நூல்கற்றோரால் சொல்லப்பட்ட கவிபோலத்திருவினுருவத் தையுந்திங்களி னுருவத்தையும் பூவையும் உச்சிமீதி லுடைத்தாய் நிறத்தோடுங்கூடியிருந்துள்ள பூமாலையோடும் அழகுதழுவிப்ப யின்றாருள்ளங்களைக் கவருமுகம். எ-று. இனிக்கவிமேற்செல்லுங் கால்-சந்தம்-ஓசை. தொடை-சொற்கோவை. அணி- அலங்காரம். எ-ம், முகமேற்செல்லுங்கால்-சந்தம்-திறம். தொடை-மாலை. அணி- அழகு. எ-ம், வரும். பிரிமொழிச்சிலேடையுவமை. [வ-று] வெ- "நளிதடத்தவல்லியின்கண்ணெகிழஞாலத், தளவினிறைகடாஞ்சி ந்திக்-களிறிகலும், கந்தமலையாநிலவுங்கவடசைய, வந்தமலையா நில ம்," எ-து. செறிவினையும், பெருமையினையுமுடைய காவிலே, செ றிந்திருக்கின்றவிலங்கின்கண்ணறத்தரைமீதுநிறைந்தகடாம்பொ ழியத்தறியைச்சிதிப்புரைசைக்கயிறு அசையவரும் யானைபோன் று தென்றல் பெரியபொய்கைப்பூவல்லித்தேன்சோரவுலகத்தார் நிறைகளையழித்து விரைகமழ நெருங்கியபணைகளையசைத்துவரு கின்றது. எ-று. யானையின்மேற் செல்லுங்கால்—நளி-செறிவு. த டம்- பெருமை. வல்லி-விலங்கு. கண்-மூட்டுவாய். நெகிழ்தல்-கழ லுதல். ஞாலம்-பூமி. நிறைகடாம்-பெரியமதம். சிந்தி-பொழிய. கந்து-தறி. மலையா-சீறா. நிலவுதல்-பொருந்துதல். கவடு-புரசைக் கயிறு. அசைய-ஆட. வந்த-வரும். எ-ம், தென்றன்மேற்செல்லுங்

கால்—நளி- பெருமை. தடம்-பொய்கை. அல்லி-பூ. கள்-தேன். நெகிழ்தல்-சோர்தல். ஞாலம்-உலகம். நிறை-ஒழுக்கம். சிந்தி-அழித்து. கந்தம்-வினா. அலைதல்-நாறுதல். நிலவுதல்-பொருந்தல். கவடு-மரக்கொம்பு. அசைதல்-அலைதல். எ-ம். வரும். ❋ இதனைச்சந்தான உவமை என்பாருமுளர். சந்தானமென்பது இரண்டு பொருளுக்குபகாரமாயிருக்குஞ்சொற்களாலே பாடப்படுவது. இதனை யிவ்வகைவேறுபடுத்துக்காட்டிய தென்னையெனின்,மேற் பண்பு முதலியனவே யன்றிச் சொற்பொதுமை காரணமாகவும் உவமைபுணர்க்கப்படுமென்றார் அதுகாட்டற்கென்க.

௯-வது. அதிசயவுவமை. [வ-று] வெ-"நின்னுழையேநின் முகங்காண்டுநெடுந்தடம்,தன்னுழையேதன்னையுங்காண்குவம்-என்னும்,இதுவொன்றுமேயன்றி வேற்றுமையுண்டோ, மதுவொன்றுசெந்தாமரைக்கு,, எ-து. நல்லாய் நின்னிடத்திலே நின் முகத்தினைக்காணுநின்றேம் பெரிதாகிய பொய்கையிலே தாமரையையுங்காணுநின்றேமென்கிறவித்தன்மையேயன்றிவேறுபாடுகண்டிலேம் மதுவினையுடைத்தாகிய தாமரைக்கும்நின்முகத்தினுக்கும். எ-று. எ-ம், வெ-"பாலினிடைநீலமணிநிறஞ்சேர்பான்மைபோல்,ஞாலம்பரந்தநகைநிலவும்-மாவிருளாம், வைம்மருவுமூவிலை வேல்வன்கட்டமருகக்கைச், செம்மல்கருமாமைசேர்ந்து,, எ-து. நீலமணியானது பாலைச்சேர்ந்து தன்னொளியைப் பாலுக்குக் கொடுத்தாற்போலக் கூர்மைமருவிய மூன்றுதலையையுடையசூலத்தையும், வலிபகண்ணையுடைய தமருகத்தையுமுடையகையனாகிய பரமசிவன் மிடற்றிலுண்டாகிய கறுத்த நிறத்தைச்சேர்ந்து உலகத்திற்பரந்தவெண்மையுடையநிலவும்பெரியவிருணிறம்பெற்றது. எ-று. எ-ம்,வரும்.

௰-வது. விரோதவுவமை. [வ-று] வெ-"செம்மைமரைமலருந்திங்களுநும்முகமும், தம்மிற்பகைவிளைக்குந் தன்மையவே-எம்முடைய,வைப்பாகுஞ்சென்னிவளம்புகார்போலினியீர், ஒப்பாகுமென்பாருளர்,, எ-து. நமதுதனமாகிய சோழனதுவளவியபுகார்போன்ற இனிமையையுடையீர், சிவந்த தாமரைமலரும் மதியமும் நமதுமுகமும் தம்முள்ளேபகைபெருக்குந்தன்மையாயிருக்க இவற்றை யுவமைக்குப்பொருந்து மென்பாருமுளர் இதற்குக்காரணஞ்சொல்லுவீராமின். எ-று. எனவரும்.

௰௧-வது. ஒப்புமைக்கூட்டவுவமை. [வ-று] வெ-"விண்ணின் மேற்காவல்புரிந் துறங்கான் விண்ணவர்கோன், மண்ணின்மேலன்னவயவேந்தே-தண்ணளியில், சேராவவுணர்குலங்களையுந்தேவர்கோன்,தோரார்மேலத்தகையைநீ,, எ-து விண்ணின்மேலுண்டாகிய உலகத்தைக்காக்குந்தொழிலின் மிக்குறங்காதுயினுன்றேவர்க

ட்குத்தலைவனாகிய இந்திரன். மண்ணின்மேலுண்டாகியவுயிர்களைக்காக்கவேண்டி வலியையுடைய வேந்தனே நீயும் உறங்காவாயினாய். உள்ளங்குளிர்ந்து பிறரைக்காக்குந்தன்மையிற்சேராத அசுரர்குலங்களைக்களையாநிற்கும் இந்திரன் சத்துருக்களிடத்திலே நீயும்அத்தன்மையை. எ-று. எனவரும்.

௬-வது. தற்குறிப்பேற்றவுவமை [வ-று] வெ-"உண்ணீர்மைதாங்கியுயர்ந்தநெறியொழுகி, வெண்ணீர்மைநீங்கிவிளங்குமால்- தண்ணீர்த்,தாம்போலுமென்னத்தருகடம்பைமாறன், கரம்போற்கொடைபொழிவான்கார்,, எ-து. முதுவேனிற்காலத்தில் தடத்திலுண்டாகிய குளிர்ந்தநீர்போலச்சேர்ந்தோர்யாவருக்கும்வருத்தநீங்கக் கொடுக்கவல்ல கடம்பையென்னும் பதியிலுண்டாகிய மாறனென்னும் இயற்பெயரையுடையவனது கரம்போலக்கொடுப்பானினைந்து மேகமானதும், உள்ளே நீரையுடைத்தாயுயர்ந்தவானெறியேநடந்து வெளுத்ததன்மையைநீங்கிவிளங்காநின்றது எ-று. எனவரும். இவன்கையும், பிறர்க்குநீர்பெய்துகொடுக்குந்தொழிலானே நீர்புலராது உலகத்தார் கைகளுக்குமேலாகப்பயின்று சிவந்ததன்மையையுடைத்தாய் விளங்குதல் கண்டுகொள்க. தண்ணீர்த் தாம்போலு மென்னத் தருங்கரமெனக்கூட்டுக. இத்தொழில் கைக்கேற்றமென்க.

௭-வது. விலக்குவமை. [வ-று] வெ- "குழைபொருதுநீண்டுகுமிழ்மேன்மறியா, உழைபொருதென்னுள்ளங்கவ்ரா - மழைபோல், தருநெடுங்கைச்சென்னி தமிழ்நாடனையார், கருநெடுங்கண்போலுங்கயல்,, எ-து. மழையைப்போலக்கொடுக்கவல்லபெரியகையினையுடைய சென்னியுடைய தமிழ்நாட்டையொப்பாருடைய கரிய நெடிய கண்போலும்,கயலும் சங்கொடு பொருதுவளர்ந்து நீர்க்குமிழி மேலேமறிந்து தன்னிடத்திலே பொருந்துமென்னுள்ளத்தைக் கவரமாட்டாவென்றவிதனானேகண்ணுப்,காதிலுண்டாகிய குழையோடுசேர்ந்து குமிழுக்குமீதே தாவுவதுபோன்று மானின் விழியோடுபகைத்து என் னுள்ளத்தைக் கவருமென நின்றவாறுகாண்க. கயன்மேற் செல்லுங்கால்—குமிழ்-நீர்க்குமிழி. குழை-சங்கு. உழை- பக்கம். கவர்தல்-கொள்ளுதல். கண்ணின்மேற்செல்லுங்கால்—குழை-மகரக்குழை. நீள்தல்- வார்தல். குமிழ்-மூக்கு. மறிதல்-தாவுதல். உழை-மான். பொருதல்-பகைத்தல். சென்னி-சோழன். தமிழ்நாடு-சோணாடு. எனவரும்.

௮-வது. ஏது உவமை[வ-று]வெ-"வாளரவின்செம்மணியும்வன்னியிளம்பாசிலையும், நாளிளையதிங்கணகைநிலவும் -நீளொளியால், தேனுலவுபூங்கொன்றைத்தேவர்கோன்செஞ்சடைமேல், வானுலவுவிற்போல்வரும்,,எ-து. ஒளியினையுடையஅரவின் சூட்

டினுண்டாகிய மணியானது சிவந்தவொளியை மிகுத்தலானும், வன்னியாகியமரத்தினிளையவிலை தன்னுடைய பசுமையைமிகுத்தலானும், குழவித்திங்களானது தன்னுடைய வெண்மையைமிகுத்தலானும், தேனுலவப்பட்ட பொலிவையுடைய கொன்றையினது பூ தன்கண்ணுண்டாகிய பொற்கென்ற நிறத்தைமிகுத்தலானும், தேவர்கட்குத்தலைவனாகிய முக்கட்கடவுளுடையசிவந்தசடையானது வான்மீதுண்டாகிய வில்லுப்போலத் தோன்றுகின்றது.— எ-று. எனவரும். ❁ அஃதேல், உவமையைவிரித்தசூத்திரங்களெல்லாம் ஒன்றாக்கியுரையாது இரண்டாக்கியுரைத்த தென்னையெனின், மேலைச்சூத்திரத்திற் சொல்லப்பட்டன, சொல்லின் முடிவினப்பொருண் முடித்தலென்னுந் தந்திரவுத்தியான், இவை எதிரதுநோக்கலென்னுந் தந்திரவுத்தியாகலான் இரண்டாகவைத்தாரென்பது. (௯)

(௫௫) மிகுதலுங்குறைதலுந் தாழ்தலுமுயர்தலும், பான்மாறுபடுதலும் பாகுபாடுடைய.

(எ-ன்.) இதுவும் அவ்வுவமைக்கெய்தியதோர்வேறுபாடுணர்-ற்று (இ-ள்.) உவமேய அடைக்கு உவமான அடை மிகப்புணர்தலும், உவமேய அடைக்கு உவமான அடை குறையப் புணர்தலும், இழிந்தவுவமையோடு உயர்ந்தபொருளுவமையாகலும், உயர்ந்தஉவமையோடு இழிந்தபொருளுவமையாகலும், ஆண்பாற்குப்பெண்பாலுவமையாகலும், பெண்பாற்கு ஆண்பாலுவமையாகலும், ஒருமைப்பாற்குப் பன்மைப்பாலுவமையாகலும், பன்மைப்பாற்கொருமைப்பாலுவமையாகலுமாகிய் வேறுபாடுடைய. எ-று ❁ வேறுபாடென்பது, புன்புலவர்புணர்க்குங்கால் நன்புலவரால்வேறுபடுத்துச்சிறப்பின்மையிற் குற்றமெனக்கூறப்படுவதூஉம், அல்லதூஉம்நன்புலவராற் சிறப்புடையவென்றுகொள்ளப்புணர்க்கப்படுவதூஉமாமென்க. அவற்றுட்சிலவருமாறு. வெ- "நீலப்புருவங்குனியவிழிமதர்ப்ப, மாலைக்குழல்சூழ்ந்தநின்வதனம்-போலும், கயல்பாயவாசங்கவருங்களிவண், டயல்பாயவம்போருகம்,, எ-தி. நீலநிறத்தையுடையபுருவமானதுமுரியக், கண்மதர்ப்பப், பூமாலையையுடையகுழலாற்சூழப்பட்ட நின்னுடையமுகம்போன்றது, கயல்மிளிர, மதுவையுண்ணப்பட்டகளித்த சுரும்பு பக்கத்திலேபரவ, மலர்ந்ததாமரை. எ-று. எ-ம். இதனுள் உவமையாகிய முகத்திற் புருவமுரிவிற்கொப்பதொன்று, பொருளாகிய தாமரைக்கட்புணராமையின், உவமேய அடைக்குஉவமானஅடைமிக்குவழுவாயிற்று. வெ - "நாட்டந்தடுமாறச்செவ்வாய்நலந்திகழத், தீட்டரியபாவைதிருமுகங்-காட்டுமால், கெண்டைமீதாடத

துஞ்சேயிதழ்கிளர, வண்டூழ்செந்தாமரை,, எ-து. மீதேகண்ட
மோதியுலாவச்,சிவந்தவாய் அழகெறிப்ப, எழுதத்தரியவுருவையு
டைய பாவைபோன்றாள் திருமுகத்தையொவ்வாநின்றது. மீதே
கெண்டையுலாவ,நறுநாற்றத்தை யுடைத்தாய்ச்சிவந்த இதழ்விள
ங்க,வண்டாற் சூழப்பட்டசிவந்ததாமரை. எ-று. எ-ம். தீட்டரிய
பாவை -கொல்லியம்பாவை. இதனுள் -உவமையாகிய முகத்துக்
கட்பொருளாகிய தாமரைக்கண்வண்டொழுக்கிற்கேற்பவோருவ
மைதோன்றப் புணர்த்தலில்லாமையின்,உவமேய அடைக்கு உவ
மான அடை குறைந்துகுற்றமாயிற்று. வெ - "மன்னவர்க்குநாய்
போல்வனப்புடையவாள்வயவர், மின்மினியும்வெஞ்சுடரோன்
போல்விளங்கும்-அன்னப், பெடைபோலுஞ்சந்திரன் பைந்தட
ங்கள்போலு, மிடைமாசொன்றில்லாவிசும்பு.,, எ - து. வேந்தரி
டை நாயிடத் துண்டாகிய நற்செய்தியைச்செய்தலால் வாளினையு
டைய வலியோர் நாயையொப்பர். மின்மினியும்வெய்ய சுடரோ
னைப்போலவிளங்கும். அன்னப்பெடையையொக்குமதியம்.பசி
யதடங்கள்போலும் செறிந்திருக்கப்பட்ட மாசில்லாத ஆகாயம்.
எ-று. எ-ம்.இதனுள்-மன்னவர்க்குநாய்போல் வனப்புடையர் வா
ள்வயவர் என்புழி, இறப்பவிழித்து இன்னாதாகப்புணர்க்கப்பட்
டது-உவமை. மின்மினிவெஞ்சுடரோன்போல ,விளங்குமென்பு
ழி,மின்மினிக்குநிகராக்கலாகாத வெஞ்சுடரையுவமிக்க உவமைவ
ழுவாயிற்று. அன்னப்பெடைபோலுஞ்சந்திரனென்புழி, ஆண்
பாற்குப்பெண்பா லுவமையாய்க்குற்றமாயிற்று. பைந்தடங்கள்
போலுமிடைமாசொன்றில்லாவிசும்பு-என்புழி, ஒருமைப்பாலு
க்குப்பன்மைப்பாலை உவமைகாட்டவழுவாயிற்று. பிறவுமன்ன.
இனி வழுவின்றிவருஞ்செய்யுளை வந்துழிக்காண்க. மிகுதல்- கு
றைதல்-தாழ்தல்- உயர்தல்- பான்மாறுபடுதல் முதலியன குற்ற
மேனும், குணமிக்குழிக்கொள்க. (எ)

(௩௪) போலமானப்புரையப்பொருவ,நேரக்கடுப்ப நிகரநி
கர்ப்ப, வேரவேய மலையவியைய, வொப்பவெள்ள வுறழவேற்
ப,வன்னவனைய வமரவாங்க, வென்னவிகல விழையவெதிரத், து
ணைதாக்காண்டாங்கு மிகுதகைவீழ, வினைசிவண்கேழற்றுச்செத்
தொடுபிறவு, நவைதீர்பான்மை யுவமைச்சொல்லே.

(௭-ன்) இடைநிற்குமுவமைச்சொற்களையுணர்-ற்று.(இ-ள்)
போலமுதல்—செத்தீறாகச் சொல்லப்பட்ட முப்பத்தைந்தும்,
இவைபோல்வனபிறவும், குற்றமற்ற பாகுபாடுடைய உவமைச்
சொல்லாம். எ-று. ❁ பாகுபாடுடையவென்றதனால், போலவெ
ன்பது, புலிபோலமறவன் எனப்பெயரெச்சமாயும், புலிபோல
வந்தானென வினையெச்சமாயும்வரும். பிறவுமன்ன. பிறவுமென்

றதனால், நாட, நக, நடுங்க, நந்த, கள்ள, கருத, காட்ட, மிளிர, ஏய்ப்ப, மருள, என்பனமுதலியனவுங்கொள்க. அவற்றுள் தொக்கும் விரிந்தும்தொகாதே விரிந்துநிற்பனவெல்லாங்கண்டுகொள்க.

(௩௫) உவமையும்பொருளும் வேற்றுமையொழிவித், தொன்றெனமாட்டினஃதுருவகமாகும்.

(எ-ன்) நிறுத்தமுறையானே உருவகமென்னும் அலங்காரத்தின் பொதுவிலக்கணமுணர்-ற்று. (இ-ள்) உவமையாம்பொருளையும், உவமிக்கப்படும்பொருளையும், வேறுபாடொழிவித்து ஒன்றென்பதோருள்ளுணர்வுதோன்ற வொற்றுமைகொளுத்தின் அஃது உருவகமென்னும் அலங்காரமாம். எ-று. (௧)

(௩௬) தொகையேவிரியே தொகைவிரியெனாஅ, வியைபேயியைபிலி வியனிலையெனாஅச், சிறப்பேவிரூபகஞ்சமாதானமெனாஅ, வுருவகமேகமநேகாங்கமெனாஅ, முற்றேயவயவமவயவியெனாஅச், சொற்றவைம்மூன்று மற்றதன்விரியே.

(எ-ன்) அவ்வுருவகமென்னும் அலங்காரத்தைவிரித்துணர்த்-ற்று. (இ-ள்) அச்சொல்லப்பட்ட உருவகஅலங்காரந்தொகையுருவகமுதல்—அவயவி யுருவகமீறாகச்சொல்லிய பதினைந்து பாகுபாடுடையதாகும். எ-று. ❊ அவற்றிற்கு உருவகமென்னுஞ்சொல்லும், ஏகமென்பதனோடு அங்கமென்னுஞ் சொல்லுங் கூட்டியுணர்க்க. இவையெல்லாஞ் சொல்லின்முடியுமிலக்கணத்தன.

அவற்றுள், ௧-வது. தொகையுருவகமென்பது, ஆகியவென்னுமாட்டேற்றுச்சொற்றொகுத்துக்கூறுவது [வ-று] வெ-"அங்கைமலருமடித்தளிருங்கண்வண்டும், கொங்கைமுகிழுங்குழற்காரும்-தங்கியதோர், மாதர்க்கொடியுளதானண்பாவதற்கெழுந்த, காதற்குளதோகரை," எ-து. அழகியகையாகியமலரினையும்அடியாகிய தளிரினையும், கண்ணாகியவண்டினையும், கொங்கையாகிய அரும்பினையும், குழலாகிய மேகத்தினையுமுடைத்தாய்ப்பிறர்க்குக்காதல் செய்யவற்றாயிருப்பதொரு கொடியுளதுநானொருநற் கண்டது நண்பனே யக்கொடிமேலெழுந்த காதலுக் கெல்லை யுலகத்துண்டோவெனிலில்லையாயிருந்தது. எ-று. எனவரும்.

௨-வது. விரியுருவகமென்பது, அச்சொல் விரிந்துநிற்பது [வ-று] வெ-"கொங்கைமுகையாகமென்மருங்குல்கொம்பாக, அங்கைமலராவடிதளிராத்-திங்கள், அளிநின்றமூரலணங்காமெனக்கு, வெளிநின்றவேனிற்றிரு." எ-து. கொங்கை அரும்பாக, நுண்ணிடை வஞ்சிக்கொம்பாக, அழகிய கையேமலராக, அடி தளிராக, நிலவுபோல வெள்ளிய வொளியினையுடைத்தாய், என்மேல்வைத்த தண்ணளியுடைத்தாகிய நகையினையுடைத்தாய் நெருநற்றோ

ணீரிய அணங்குபோன்றிருந்தாளிப்பொழுது எனக்கிளவேனிற்
காலத்தைக்கொண்டு வெளிப்பட்ட திருவையொப்பாள். எ-று.—
எனவரும். ❁ இவையிரண்டும் எல்லாவற்றிற்கும் பொதுவிலக்க
ணம். இதனுட்டொகையை முற்கூறியது உவமைவிரித்த சூத்திர
நோக்கி முந்துமொழிந்தத தலைதடுமாற்ற மென்னுந் தந்திரவு
த்தியான். •

௩-வது. தொகைவிரியுருவகமென்பது, அச்சொற்றொக்கு
ம்விரிந்தும்நிற்பது. [வ-று] வெ-"வையந்தகழியாவார்கடலேநெ
ய்யாக, வெய்யகதிரோன்விளக்காகச் - செய்ய, சுடராழியானடிக்
கேசூட்டுவன்சொன்மாலை, இடராழிநீங்கவேயென்று,,எ-து. உல
கமேதகழியாகவும், நெடியகடலேநெய்யாகவும், வெம்மையையு
டைய பகலவனை விளக்காகவும், சிவந்தநிறத்தையுடைத்தாகிய சு
க்கரத்தையுடையானடிக்கே சேர்த்துவேன் சொல்லினற்றொடுத்
தமாலையை யென்னுடைய துக்கமாகியகடல் வறப்பதாக. எ-று.
எனவரும்.

௪-வது. இயைபுருவகமென்பது, பலபொருளை உருவகஞ்
செய்யுங்கால் தம்முள் இயைபுடையவாகவைத்து உருவகஞ்செய்
வது. [வ-று.] வெ-"செவ்வாய்த்தளிருநகைமுகிழுங்கண்மலரும்,
மைவாரளகமதுகரமும்- செவ்வி, உடைத்தாந்திருமுகமென்னு
ள்ளத்துவைத்தார், துடைத்தாரோயன்றேதுயர்.,, எ-து. சிவந்த
வாயாகிய தளிரினையும்,நகையாகிய அரும்பினையும், கண்ணாகியம
லரினையும், கரியநீண்ட அளகமாகியவண்டினையும், செவ்வியினை
யுமுடைய கண்டாரால் விரும்புந்தன்மையுடைத்தாகியமுகத்தை
யென்னுள்ளத்திலேவைத்தார் இதனாலே என்னுடைய உள்ளத்தி
லுண்டாகிய துயரத்தை நீக்குவாரன்றோ சொல்லுவீராக.எ-று.
எனவரும். இதனுள்-தளிரும், முகிழும், மலரும்,மதுகரமும், த
ம்முளியையுடைமையின் அப்பெயர்த்தாயிற்று.

௫-வது. இயைபிலுருவகமென்பது, பல்பொருளுந் தம்மு
ளியையாமைவைத் துருவகஞ்செய்வது. [வ-று] வெ - "தேனக்க
லர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே, கூனற்பவளக்கொடி
யாகத்-தான, மழையாகக்கோடுமதியாகத்தோன்றும், புழையார்
தடக்கைப்பொருப்பு.,, எ-து. மதுவைக்காலப்பட்ட கொன்றை
மலர் பொன்னாகவும்,சிவந்தசடைவளைந்து நன்மையுடைத்தாகிய
பவளக்கொடியாகவும், மதம் மழையாகவும், மருப்பு மதியாகவு
ம், தோன்றுநின்றது துளையையுடைத்தாகியபெரியகையையுடை
ய யானையாகியமலை. எ-று. எனவரும். தடக்கைப்பொருப்பென்
றது,விநாயகனை.

௬-வது. விபனிலையுருவகமென்பது, ஒன்றனங்கம் பலவற்றினுள்ளுஞ் சிலவற்றை உருவகஞ்செய்தும், சிலவற்றை உருவகஞ்செய்யாதும் உரைப்பது. [வ-று.] வெ-"செவ்வாய்நகையரும்பச்செங்கைத்தளிர்விளங்க, மைவாணெடுங்கண்மதர்த்துலவச்-செவ்வி, நறவலருஞ்சோலைவாய்நின்றதே நண்பா, குறவர்மடமகளாங்கொம்பு,, எ-து. சிவந்தவாய் எயிற்றையரும்பச், செங்கரங்கள்தளிரைவிளக்க, வருத்தஞ்செய்யும் வாளாகியகண்கள் சிவந்த அரியோடுலாவப், புதிதாகியதேனையுடைத்தாயலருஞ்சோலையின்கண்ணே தோன்றிற்று. நண்பனே குறவர்க்கு மடப்பத்துடனே கூடியமகளாந்தன்மையுடைத்தாயிருப்பதொருவஞ்சிக்கொம்பு. எ-று எ-ம்.

௭-வது. சிறப்புருவகமென்பது, ஒருபொருளை யெடுத்து, அதற்குச்சிறந்த அடைகளை உருவகஞ்செய்து அவற்றானேயுருவகமாக்கியுரைப்பது. [வ-று] வெ-"விரிகடல்சூழ்மேதினி நான்முகன்மீகாமனாச், சுரநதிபாயுச்சிதொடுத்த - அரிதிருத்தாள், கூம்பாகவெப்பொருளுங்கொண்டபெருநாவாய், ஆம்பொலிவிற்றாயினதாலின்று.,, எ-து. பரந்தகடல்சூழ்ந்த உலகமானது, நான்முகத்தோன்மீகாமனாகவும், தேவகங்கை பாயாகவும், அப்பாயையுச்சியிலேயுடைத்தாகிய திருமால்மேனோக்கியெடுத்தசீர்பாதம் கூம்பாகவும், பலவகைப்பட்டபொருள்களையுமுடைத்தாய்ப்பெரிதாகிய அழகோடுகூடிய நாவாயானது. எ-று. எனவரும். இதனுள்-நான்முகன் மீகாமனாகவும், சுரநதிபாயாகவும், அரிதிருத்தாள் கூம்பாகவும், உருவகஞ்செய்ய புவி நாவாயாயினமையின், அப்பெயர்த்தாயிற்று.

௮-வது. விரூபகவுருவகமென்பது, ஒருபொருட்குக்கூடாததன்மைபலவுங்கூட்டி உருவகஞ்செய்வது. [வ-று.] வெ- "தண்மதிக்குத்தோலாது தாழ்தடத்துவைகாது, முண்மருவுந்தாண்மேன்முகிழாது-நண்ணி, இருபொழுதுஞ்செவ்வியியல்பாய்மலரும், அரிவைவதநாம்புயம்.,, எ-து. தட்பத்தினையுடைய மதியின்றோற்றிற்குக்கெடாது. ஆழ்ந்தகயத்திற்றங்காது. முள்ளையுடைத்தாகிய தாளின்மீது மொட்டியாது. காலையுமாலையுஞ்சேர்ந்து செவ்வியையுடைத்தாய் மலர்ந்துநிற்கும். என்காதலியுடைய முகமாகிய தாமரை. எ-று. எனவரும்.

௯-வது. சமாதானவுருவகமென்பது, ஒருபொருளை நன்றாக உருவகஞ்செய்து, அதனையே தீங்குதருவதாகக்கூறி அத்தீங்கும் அதனானேவருகின்றதன்றென்பதற்குப்பிறிதோர் காரணங்கூறுவது. [வ-று ] வெ-"கைகாந்தள்வாய்குமுதங்கண்ணெய்தல்காரிகையீர், மெய்வார்தளிர்கொங்கைமென்கோங்கம்- இவ்வனைத்தும், வன்மைசேர்ந்தாவிவருத்துவதுமாதவமொன், றின்மையேயன்றோ

வெமக்கு,, எ-து. அழகினையுடையீர் உம்முடைய காந்தண்மலராகிய கையும், குமுதமாகிய வாயும், நெய்தன்மலராகிய கண்ணும், நீண்ட தளிராகிய மெய்யும், மென்மையுடைய கோங்கரும்பாகிய கொங்கையுமென்று சொல்லப்பட்டன நம்முடைய அவயவமாகிலும் அவையனைத்துந் தன்மைதிரிந்து வன்கண்மையைச்சேர்ந்து என்னுடைய வுயிரைவருத்தஞ்செய்யும் இது முற்காலத்தில்யாஞ்செய்த தீவினைப்பயன் இக்காலத்தெமக்குப்பயத்தலாலன்றே வும்மே ற்றவறுண்டோ. எ-று. எனவரும். கொங்கைக்கு அடையாகியமென்மையைத்திவகமாக்கிக் காந்தளுள்விட்ட வுறுப்புகளனைத்தினுங்கொள்க.

௰-வது. உருவகவுருவகமென்பது, ஒன்றனையுருவகஞ்செய்து அதனைப்பெயர்த்தும் பிறிதொன்றாகவுருவகஞ்செய்வது. [வ-று] வெ-"சன்னிதன்கொங்கைக் குவடாங்கடாக்களிற்றைப், பொன்னெடுந்தோட்குன்றேபுனைகந்தா-மன்னவநின், ஆகத்தடஞ்சேவகமாகயானணைப்பல், சோகித்தருளேற்றுவண்டு,, எ-து. தலைவனே நீகாதலித்தகன்னியுடையமுலை யென்னும் மலையாகிய மதக்களிற்றை, நின்பொற்கலனணிந்த பெரியதோளாகிய குன்றமே கந்தாகவும், மார்பாகிய பரந்தஇடமே கூடமாகவும், யான்சேர்த்துவன். நீஅழுகழிந்து வருந்தாதொழிக. எ-று. எனவரும். இதனுள்-கொங்கையைக் குவடாக வுருவகஞ்செய்து அதனைமீண்டுங்களிறாக உருவகஞ்செய்தவாறுகாண்க.

௰௧-வது. ஏகாங்கவுருவகமென்பது, ஒருபொருளினது அங்கம் பலவற்றுள்ளும் ஓரங்கமேயுருவகஞ்செய்து ஒழிந்த அங்கங்களைவாளாவேகூறுவது. [வ-று] வெ-"காதலனைத்தாவென்றலவுங் கருநெடுங்கண், ஏதிலனல்யாதென்னு மின்மொழித்தேன்-மாதர், மருண்டமனமகிழ்ச்சி வாண்முகத்துவந்த, இரண்டினுக்குமென்செய்கோயான்.,, எ-து. நெஞ்சமே யெமக்கொரு கணவனைத்தருவாயாகவென்பது போன்றிருந்தது, காதளவுமுலவுகின்ற கரிய நெடிய கண்கள். அயலானுற் பயனிலையென்பது போன்றிருந்தது இனியதேனாகியமொழி. மாதருடைய கண்டார்க்கு மயக்கத்தோடுகூடியவுள்ளக்களிப்பைக் கொடுக்கின்ற வொளியையுடைய முகத்திலே தோற்றிய இவ்விரண்டனுக்கும் யான் என்னசெய்யக்கடவேன். எ-று. எனவரும்.

௰௨-வது. அநேகாங்க வுருவகமென்பது, ஒன்றனங்கம் பலவற்றையும் உருவகஞ்செய்துரைப்பது. [வ-று.] வெ-" கைத்தளிராற்கொங்கைமுகிழ்தாங்கிக்கண்ணென்னு, மைத்தடஞ்சேன்மைந்தர்மனங்கலங்க-வைத்ததோர், மின்னுளதான்மேகமிசையுளதான்மற்றதுவும், என்னுளதாநன்பாவினி,, எ-து. கையாகியதளிரினு

லேமுலையாகிய அரும்பினைத் தாங்குகின்ற தன்மையையுடைத்தாகவும், கண்ணெனப்பட்ட கரிதாய்க்குளிர்ந்த சேல்களாலே ஆடவருள்ளங்களையழிக்குந் தன்மையை யுடைத்தாகவும், கறுத்த மேகத்தைச்சுமந்துகொண்டு நிற்பதாகவும், ஒருமின்தோன்றிப்பூமிக்கண்ணே நின்றமைதல் அதுதண்பணை யென்னுள்ளத் ததுவேயாம் எ-று. எனவரும்.

௩௫-வது. முற்றுருவகமென்பது, அவயவ வவயவிகளையேற்றவிடத்தோடும், பிறவற்றோடும் முற்றவுருவகஞ்செய்துரைப்பது [வ-று] வெ-"விழிமபகளிவண்டு மென்னகையேதாது, மொழியேமுருகுலாந்தேறல் - பொழிகின்ற, தேமருவுகோதைத் தெரிவைதிருமுகமே, தாமரையென்னுள்ளத்தடத்து,, எ-து. தேன்மருவிப் கூந்தலையுடைய தெரிவைதிருமுகமேதாமரை. விழிகளேகளிக்கப்படாநின்றவண்டு. மெல்லியவாகிய நகையேதாது. வார்த்தையேநறுநாற்ற முலாவுகின்றமது. என்னுள்ளமாகிய தடத்து. எ-று. எனவரும்.

௩௬-வது. அவயவவுருவகமென்பது, அவயவத்தை உருவகஞ்செய்து, அவயவியைவாளாவேகூறுவது. [வ-று.] வெ "புருவச்சிலைகுனித்துக்கண்ணம்பெனுள்ளம், உருவத்துரந்தாரொருவர்-அருவி, பொருங்கற்சிலம்பிற் புனையல்குற்றேர்மேல், மருங்குற்கொடி நுடங்கவந்து,, எ-து. அலங்கரிக்கப்பட்ட அல்குலாகியதேரின்மேலேறி, மருங்குற்கொடி யசையவந்து அருவியலைக்கப்பட்ட மலைச்சிலம்பிலேதோற்றித் தம்முடைய புருவமாகிய வில்லைவளைத்துக்கண்ணாகிய அம்பினாலேஎன்னுள்ளத்திலே உருவிப்போகவொருவர் எய்தார் இதற்குச்செய்யக்கடவதென்சொல்லுவாயாக.எ-று. எனவரும்.

௩௭-வது. அவயவியுருவகமென்பது, அவயவியையுருவகஞ்செய்து, அவயவங்களை வாளாவேகூறுவது. [வ-று.] வெ "வார்புருவங்கூத்தாட வாய்மழலைசோர்ந்தசைய, வேரரும்பச்சேந்துவிழிமதர்ப்ப-மூரல், அளிக்குந்தெரிவை வதநாம்புயத்தால், களிக்குந்தவமுடையேன்கண். எ-து. நல்லாருடைய, புருவமசைய வாயின்வார்த்தையானது உருத்தெரியாது அழிந்துதளரக், குறுவியர்ப்பையுடைத்தாக விழியானதுசிவந்துமதர்ப்ப, முருவலிப்பதொருதாமரையாகிய முகத்தினாலே களிக்குந் தன்மையைப் பெற்றது. முற்காலத்தில் யான்செய்த நல்வினைப்பயத்தினாலே எனதுகண். எ-று எனவரும்.

(௩௭) உவமைபோது வேற்றுமைவிலக்கே, யவநுதிசிலேடை யென்றவற்றொடும்வருமே.

(எ-ன்) இது அவ்வுருவக அலங்காரம்பிற அலங்காரங்களோ டுங்கூடிவருமாறுணர்- ற்று. (இ-ள்.) உவமைமுதல்—சிலேடையீ றாகச்சொல்லப்பட்ட ஆறலங்காரங்களோடு கூடியும்வரும். அவ் வுருவக அலங்காரம். எ-று.

அவற்றுள்-க-வது, உவமவுருவகம். [வ-று] வெ-“மதுமகிழந் தமாதர்வதனமதியம், உதயமதியமேயொக்கும்- மதிதளர்வேன், வெம்மைதணியமதராகமேமிகுக்கும், செம்மையொளியாற்றிக ழ்ந்து,, எ-து. மதுவுண்டுகளித்தமடவாருடைய முகமதியம்உத யஞ்செய்யப்பட்ட நிறைந்தமதியம்போன்றது. அறிவழியுந்தன் மையையுடையேனுடைய ஆற்றலழியக்களிப்போடுகூடிய காத லைப்பெரிதும் புலப்படுத்தித் தோற்றுகின்ற சிவந்த நிறத்தாலே யழகுபெற்று. எ-று. எனவரும். இதனுள் - முக்கியப்பொருளை யும், குணப்பொருளையும் ஒப்புமை காட்டினமையான் உவமவுரு வகமாயிற்று.

உ-வது. ஏதுவுருவகம்- [வ-று] வெ-“மாற்றத்தாற்கிள்ளைந டையான்மடவன்னம், தோற்றத்தாற்றண்ணென் சுடர்விளக்கம்- போற்றும், இயலான்மயிலெம்மையித்தீர்மையாக்கும், மயலார்ம தர்நெடுங்கண்மான்,, எ-து. நண்பனே, எம்மை இப்படித்தாழ்வுப ண்ணியநெடிதாய்ச்சிவந்து காதலைக்கொடுக்கின்றகண்களையுடை மையான் மான்போன்றாள், மொழியினாற்கிள்ளையாயினாள், நடை யினால் மடவிய அன்னமாயினாள், மேனியாற் குளிர்ந்த வுருவத் தையுடைய விளக்கினிறமாயினாள், யாவரும் பரவப்படுஞ் சாய லால்மயிலாயினாள். எ-று. எனவரும்.

ஈ-வது. வேற்றுமையுருவகம். [வ-று] வெ-“வையம்புரக்கு மான்மன்னவநின்கைக்காரும், பொய்யின்றிவானிற்பொழிகாரும்- கையாம், இருகார்க்குமில்லைப் பருவமிடிக்கும், ஒருகார் பருவ முடைத்து,, எ-து. அரசனே, உன்னுடைய கையாகியமேகமும், காலம்பிறழாது ஆகாயத்தின்கண்ணின்றுபொழிகின்றமேகமும், உலகத்தைப்புரக்குந் தன்மையி னொக்குமாயினும், கையென்கிற இரண்டுமேகங்களுக்கும்பருவமில்லை. இடியையுடைய ஒருமேகத் திற்குப் பருவமுண்டு. எ-று. எனவரும். இதனுள்-குணப்பொரு ளையும், முக்கியப்பொருளையும், வையம்புரக்குமென்றொப்புமை காட்டிக்கைக்காருக்குப்பருவமில்லை. மேனைக்காருக்குப் பருவமு டைத்தென வேற்றுமை செய்தமையின் அப்பெயர்த்தாயிற்று ஆல்-அசை.

ச-வது. விலக்குருவகம். [வ-று] வெ-“வல்லிவதனமதிக்கு மதித்தன்மை, இல்லையுளதேலிரவன்றி-எல்லை, விளக்குமொளிவ ளர்த்துவெம்மையாலெம்மைத், துளக்கு மியல்புளதோசொல்.,,

எ-து. வல்லியாயினள் முகமாகிய மதியத்திற்கு; மதியினுடைய தன்மையில்லைபோலும் உண்டாயின், பகற்பொழுது தன்னிடத் திலேயொளியைமிகுத்து நம்மைவருத்தி அறிவை யழிக்கும் இய ல்புடைத்தாமோ, நண்பனே சொல்லுவாயாக. எ-று. எனவரும்.

ரு-வது. அவஹ்நுதியுருவகம். [வ-று.] வெ - "பொங்களகமல் லபுயலேயிவையிவையும், கொங்கையிணையல்லகோங்கரும்பே-மங்கைநின், மையரிக்கணல்லமதர்வண்டிவையிவையும், கையல்லகாந்தண்மலர்,, எ-து. மங்கைப்பருவத்தையுடையவளே, உன்னுடைய மிக்ககருமையையுடைய கூந்தலல்ல மேகப்பரப்பே. இரண்டாகிய தனங்களல்ல இவை கோங்கரும்புகளே. மையணிந்தசெவ்வரிபரந்த கண்களல்ல இவை செருக்கினையுடைய வண்டுகளே. கையல்ல இவை காந்தண்மலர்களே. எ-று. எனவரும். இதனுள் உண்மைப்பொருளை மறுத்து ஒப்புமைப்பொருளை யுடன்பட்டமையான் அப்பெயர்த்தாயிற்று.

சு-வது சிலேடையுருவகம். [வ-று] வெ-"உண்ணெகிழ்ந்த செவ்வித்தாய்ப்பொற்றேட்டொளிவளரத், தண்ணளிசூழ்ந்தின்பந்தாமலர்ந்து-கண்ணெகிழ்ந்து, காதல்கனையிறப்பவாவிகடவாது, மாதர்வதநாம்புயம்,, எ - து. உள்ளேவிரியாநின்ற பொலிவினையுடைத்தாய் அழகியவிதழ்களினொளி மிகக்குளிர்ந்திருக்கின்ற வண்டுக்களாற் சூழப்பட்டுக்கண்டார்க்கினிமைதோன்ற இதழ்விரிந்து மதுப்பொசிந்து கண்டார்க்காசைமிகுப்பப் பொய்கையிடத்து நீங்காது தோன்றிய தாமரையென்றும், உள்ளக்கசிவான்மலர்ந்த புதுமையுடைத்தாய்ப், பொன்னணியன்ற தோடுகளினொளிதழைப்பக் குளிர்ந்தவிருப்பத்தைமேவிக், கண்டார்க்காசையளிக்குந்தோற்றரவினையுடைத்தாய்க், கண்ணினையு முடைத்தாய், ஆசைப்பாட்டெல்லைகடப்ப, உள்ளங்கடவாது இவளுடைய வதனமாகிய தாமரையென்றும் வந்தவாறுகாண்க. எ-று. எனவரும்.— இதுதாமரைக்கும், முகத்திற்குஞ்சிலேடை. (யக)

(ருஅ) உருவகமுவமை யெனவிருதிறத்தவு, நிரம்பவுணர்த்தும் வரம்புதமக்கின்மையிற், கூறியநெறியின் வேறுபடவருபவை, தேறினர்கோட றெள்ளியோர்கடனே.

(எ-ன்) மேற்சொல்லிய உருவகம் உவமையென்னும்இரண்டுதிறத்தலங்காரங்களுக்கும் புறனடையுணர்-ற்று. (இ-ள்) உருவகமும், உவமையுமென்னுமிரண்டுதிறத்தலங்காரங்களும், ஒழிவின்றியுணர்த்தும் வரையறையுடையவல்ல வாகலாற் சொல்லப்பட்ட நெறியின்வேறுபட்ட வருமவையறிந்து, அவற்றின்பாற் சார்த்திக்கோட லறிவுடையோர்கடன். எ-று. ✲ ஈண்டுருவக முற்கூறியததிகார மிடையறுமலெங்க. அவற்றுட் சிலவுருவகம்வருமாறு, ஏ

றுவுருவகம். [வ-று] வெ-"வில்லேருழவர்பகைகொளினுங்கொள்ளற்க, சொல்லேருழவர்பகை,, எ-ம் இயைபுருவகம். [வ-று] வெ "எரியிரண்டுஞ்சிறகாவெயில்வயிருக், கீருடையபிலிகடிகாவா- நீர்வண்ணன், அத்தியூர்வாயாவணிமயிலேபோன்றமே, பொற்றேரான்கச்சிப்பொலிவு,, எ-ம். விலக்குருவகம். வெ-"மலையிற்பயிலா மடமஞ்ஞைவாரி, அலையிற்பிறவாவமுதம்-விலையிட், டளவாதநித்திலமாராதமேசறல், வளவாண்மதர்நெடுங்கண்மான்,, எ-ம் சிறப்புருவகம். வெ- "மழலைவாய்நவ்விமதர்நெடுங்கண்மஞ்ஞை, குழலின்பொறைமெலிந்தகொம்பர் - சுழல்கலவம், தாங்கியவன்னந்தடங்கொங்கையாரமுதம், தேங்கொள்கமலத்திரு,, எ-ம். அற்புதவுருவகம். வெ-"மன்றற்குழலாருயிர்மேன்மதன்கடவும், தென்றற்கரிதடக்குந்திண்கணையம்-மன்றலைக், கங்குற்கடவிற்கரையேற்றுநீள்புணையாம், பொங்குநீர்நாடன்புயம்,, எ-ம். வருவனவற்றையுருவகத்தின்பாற்சார்த்தியுணர்க. கணையம், யானைவாராமற்றடுக்குமரம்.

உவமைவருமாறு. தெரிதருதேற்றவுவமை. [வ-று] வெ-"நல்லார்கட்பட்டவறுமையினின்னாதே, கல்லார்கட்பட்டதிரு,, எ-ம். பலவயிற்போலியுவமை. வெ-"அடிநோக்கினாழ்கடல்வண்ணனவன்றன், படிநோக்கிற்பைங்கொன்றைத்தாரான் - முடிநோக்கித், தேர்வளவனாகத்தெளிந்தேன்றன்சென்னிமேல், ஆரலங்கலேறுன்றியதுகண்டு,, எ-ம். பண்புவமை. ஆ-"கருங்கால்வேங்கைவீயுறுதுறுகல், இரும்புலிக்குருளையிற்றோன்றுங்காட்டிடை, யெல்லிவருநற்களவிற்கு, நல்லையல்லை நெடுவெண்ணிலவே,, எ-ம். ஒப்புமையுவமை. வெ-"முத்துக்கோத்தன்னமுறுவன்முறுவலே, யொத்தரும்புமுல்லைக்கொடிமருங்குல்-மற்றதன்மேன், மின்னளிக்குங்கார்போல்விளக்கூந்தன்மெல்லியலாள், தண்ணளிக்குமுண்டோதரம்.,, எ-ம். சந்தானவுவமை. ஆ- "ஈர்ந்துநிலந்தோயுமிரும்பிடித்தடக்கை, சேர்ந்துடன்செறிந்தகுறங்குகுறங்கென, மால்வரையொழுகியவாழைவாழைப், பூவெனப்பொலிந்தவோதியோதியி, னுளிச்சினைவேங்கைநாண்மலர்நாண்மலர், களிச்சுரும்பரற்றுஞ்சுணங்குசுணங்குபிதிர்ந், தியாணர்க்கோங்கின் விளைமுகைமுகையெனப்பூணகத்தொடுங்கியவெம்முலைமுலையென, வண்டோட்டுப்பெண்ணை, வளர்த்தநுங்கின் செறிதருமெயிற்றின,, எ-ம். இதனைமாலையுவமையெனினுமமையும். விலக்குவமை. ஆ-"பாரிபாரியென்றுபலவேத்தி, யொருவர்ப்புகழ்வர் செந்நாப்புலவர், பாரியொருவனுமல்லன், மாரியுமுண்டீண்டுலகுபுரப்பதுவே.,, எ-ம். வருவனவற்றையுவமையின்பாற் சார்த்தியுணர்க. உருவகமும் உவமையும் ஓரினமாக்கிப்புணர்த்தமையால் உருவகத்திற்கோதிய விலக்கணம் உவமைக்காதலும், உவமைக்கோதிய விலக்கணம் உருவகத்திற்காதலுமுள அவைவருமாறறிந்துகொள்க. (௰௨)

(௫௯) குணந்தொழில்சாதிபொருள்குறித்தொருசொல்,லொருவயினின்றும் பலவயிற்பொருடரிற், றீவகச்செய்யுண் மூவிடத்தியலும்.

(எ-ன்) நிறுத்தமுறையானே தீவகமென்னும் அலங்காரமுணர்-ற்று.(இ-ள்)குணத்தானும்,தொழிலானும்,சாதியானும்,பொருளானும், குறித்து ஒருசொல் லோரிடத்துநின்று, செய்யுட்பலவிடத்துநின்ற சொற்களோடுபொருந்திப் பொருள்விளைப்பது தீவகமென்னும் அலங்காரமாம். அது முதனிலைத்தீவகம், இடைநிலைத்தீவகம்,கடைநிலைத்தீவகமென மூன்றாகிநடக்கும்.எ-று.எனவே, இம்மூன்றையும், குணம், தொழில், சாதி, பொருள், என்பவனவற்றொடுகூட்டியுறழப்பன்னிரண்டாமெனக்கொள்க.

அவற்றுள், ௧-வது. முதனிலைக்குணத்தீவகம். [வ-று] வெ-“சேந்தனவேந்தன் றிருநெடுங்கண் டெவ்வேந்தர், ஏந்துதடந்தோளிழிகுருதி-பாய்ந்த,திசையனைத்தும்வீரச்சிலைபொழிந்தவம்பும், மிசையனைத்தும்புட்குலமும்வீழ்ந்து,, எனவரும். இதனுள்-புட்குலங்களும், அம்பும், வேந்தர்தோள்களும்,திசைகளும், சிவந்தனவென்க.

௨-வது. முதனிலைத்தொழிற்றீவகம். [வ-று] வெ -“சரியும் புனைசங்குந்தண்டளிர்போன்மேனி, வரியுந்தனதடஞ்சூழ்வம்பும்-திருமான, ஆரந்தழுவுந்தடந்தோளகளங்கன், கோரந்தொழுதகொடிக்கு,, எனவரும். இதனுள்-வளையும், அழகும்,கச்சும்,சரியுமென்க.

௩-வது. முதனிலைச்சாதித்தீவகம். [வ-று] வெ-“தென்றலணங்கன்றுணையாஞ்சிலகொம்பர்,மன்றற்றலைமகனும்வான்பொருண்மேற்-சென்றவர்க்குச், சாற்றவிடுந்தூதாகும் தங்கும்பெரும்புலவி,மாற்றவருவிருந்துமாம்,, எனவரும். இதனுள் - தென்றல், துணையாதலும், தூதாதலும், விருந்தாதலும், கண்டுகொள்க.

௪-வது. முதனிலைப்பொருட்டீவகம். [வ-று] வெ“முருகவேள்சூர்மாமுதறடிந்தான்வள்ளி,புரிகுழன்மென்மாலைபுனைந்தான்-சரணளித்து, மேலாயவானோர்வியன்சேனைதாங்கினான்,வேலாலிடைகிழித்தான்வெற்பு,,எனவரும்.இதனுள்முருகவேள்,பொருள்

௫-வது. இடைநிலைக்குணத்தீவகம். [வ-று] வெ-“எடுத்தநிறைகொணாவென்றனுமேவென்றி, வடித்திலங்குவைவாளைவாங்கத்- துடித்தனவே,தண்ணாரமார்புந்தடந்தோளும்வேல்விழியு,மெண்ணாதமன்னர்க்கிடம்.,, எனவரும். இதனுள்-துடித்தல்-பண்பு.

௬-வது. இடைநிலைத்தொழிற்றீவகம். [வ-று.] வெ- “எடுக்குஞ்சிலைநின்றெதிர்ந்தவருங்கேளும், வடுக்கொண்டுரந்துணியவா

ளி-தொடுக்கும்; கொடையுந்திருவருளுங் கோடாதசெங்கோல், நடையும்பெரும்புலவர்நா,, எனவரும் இதனுள் தொடுத்தல், தொழில்.

எ-வது. இடைநிலைச்சாதித்தீவகம். [வ-று] வெ-"காமருவு பொற்றொடியாங்கா லிற்கழலாம், பொருவில்புயவலயமாகும்-அரவனைமேல், நாணுமாற்குநகைமணிசேர்தாழ்குழையாம், பூணும்புனைமாலையாம்,, எனவரும். இதனுள்-அரவு, சாதி.

அ-வது. இடைநிலைப்பொருட்டீவகம். [வ-று] வெ-"மானமருங்கண்ணுமைமணிவயிற்றில்வந்துதித்தான், தானவனையென்றுந்தலையழித்தான்-யானைமுகன், ஓட்டினன் வெங்கலியை யுள்ளத்தினிதமர்ந்து, வீட்டினனம்மேலவினை ,, எனவரும். இதனுள்-யானைமுகன், பொருள்.

௯-வது. கடைநிலைத்தொழிற்றீவகம். [வ-று] வெ-"துறவுளவாசான்றோரிளிவரவுந்தூய, பிறவுளவாலூன்றுறவாலூனும்-பறைகறங்கக், கொண்டானிருப்பக் கொடுங்குழையா டெய்வமுமொன், றுண்டாகவைக்கற்பாற்றன்று,, எனவரும். இதனுள்-வைக்கற்பாற்றன்று, தொழில்.

௰-வது. கடைநிலைப்பொருட்டீவகம் [வ-று] வெ-"புறத்தனவூரனநீரனமாவின், றிறத்தனகொற்சேரியம்வ- யறத்தின், மகனைமுறைசெய்தான்மாவஞ்சியாட்டி, முகனைமுறைசெய்தகண்.,, எனவரும். இதனுள்-கண், பொருள். புறத்தன-மான். ஊரன-அம்பு. நீரன-தாமரை. மாவின்றிறத்தன - மாவடு. கொற்சேரிய-வாள். மற்றவைக்குதாரணம்வந்துழிக்காண்க. அஃதேற், குணமென்றுசொல்லப்பட்டனவும், தொழிலாய்க்காலம்புணர்ந்து நின்றனவாலெனின் அவ்வாறே குணமுந்தொழிலுங் காலம்புணர்ந்தல்லதுதோன்றாது. தொழிலென்பது அப்பொருளது புடைபெயர்ச்சி. குணமென்பதப் பொருட்குப் பண்பாய்த்தனக்கு வேறுபொருளின்றிப் பொருளைநீங்காது நிற்பது. அது முன்னருணர்த்தப்பட்டது. (௰௫)

(சஎ) அதுவே, மாலைவிருத்திமொருபொருள்சிலேடையெ
ன, நால்வகையானு நடைபெறுமென்ப.

(எ-ன்) அத்தீவகாலங்காரம் பிற அலங்காரங்களோடுங்கூடிவருமாறுணர்-ற்று. (இ-ள்) மாலைமுதல்—சிலேடையீறாகச்சொல்லப்பட்ட நான்கலங்காரங்களோடு கூடியும்வரும் அத்தீவகாலங்காரமென்றுசொல்லுவர்புலவர். எ-று.

அவற்றுள்-க,வது. மாலாதீவகம். [வ-று] வெ-"மனைக்குவிளக்கமடவார்மடவார், தமக்குத்தகைசாலபுதல்வர் - மனக்கினியகாதற்புதல்வர்க்குக்கல்வியேகல்விக்கு, வோதிற்புகழ்சாலுணர்வு,, எ-அ. இல்லறத்திற்கு விளக்கம் பெண்டிருண்டாதல், அப்பெண்

ளுக்குவிளக்கம் அழகு சான்ற புதல்வரைப்பெறுதல், அப்புதல்வருக்குவிளக்கம் இனிமையானகல்வி, அக்கல்விக்கு விளக்கம் மறவாமை. எ-று. எனவரும். இதனுள் - விளக்கமென்பதனை யெவ்விடத்துங்கூட்டுக.

உ-வது. விருத்தாதீவகம். [வ-று] வெ-"வரிவண்டுநாணுமது மலரம்பாப், பொருவெஞ்சிலைக்குப்பொலிவும்- பிரிவின், விளர்க்குநிறமுடையார்தம்மேன்மெலிவும், வளர்க்கு மலயாநிலம்.,,— எ-து. பொறிவண்டுநாணாக, மதுமலரே கணையாகக், காமன் தனியிருந்தாரைப்பொருகின்ற விருப்பத்தையுடைய சிலைக்குப்பொலிவினையும்,பிரிவிற்பசலையுற்றார் தம்மேன்மெலிவினையும்,வளர்க்கும்தென்றற்காற்று. எ-று எனவரும். இதனுள்- ஒருபொருளே, பொலிவும்,மெலிவுமாகிய இரண்டுகுணஞ் செய்தலின்விருத்தம்.

ங-வது. ஒருபொருட்டீவகம். [வ-று] வெ-"வியன்ஞாலஞ் சூழ்திசைகளெல்லாம்விழுங்கும், அயலாத்துணை நீத்தகன்றார் - உயிர்பருகும், விண்கவரும்வேரிப் பொழில்புதைக்குமென் மயில்கள்,கண்கவருமீதெழுந்தகார்,, எ-து. அகன்றவுலகத்தைச்சூழ்ந்த திக்குகளெல்லாவற்றையும் தன்னிடத்தடக்கும். துணையைப்பிரிந்து அயலவர்போலப்போயினார் உயிரையுண்ணும். ஆகாயத்தைமறைக்கும். நறுநாற்றத்தையுடைய பொழிலைமூடும். மென்மையையுடையமயில்களின்கண்களை வவ்விக்கொள்ளும். உயரவெழுந்தமேகம். எ-று. எனவரும்.

ச-வது. சிலேடாதீவகம். [வ-று] வெ-"மான்மருவிவாளரிகள்சேர்ந்துமருண்டுள்ளம், தான்மறுகநீண்டதகைமையவாம்- கானம்,வழியுமொருதனிநாம்வைத்தகலுமாதர்,விழியுந்தருமான்மெலிவு,,எ-து.மான்கள்மருவி,ஒளியையுடையசிங்கங்கள்சேர்ந்து,மயங்கிக்கண்டாருள்ளம் வெருவும்படி நீண்டதன்மையை யுடைத்தாயகாட்டுநெறியும், மயக்கமருவி ஒளியினையுடைய அரிகள் பரந்து உள்ளமானது மயங்கித் தடுமாறும்படிபெரிதாய நான் தனியிருத்திப்போந்த கிழத்தியுடைய கண்களும், நமக்கு வருத்தத்தைத்தாநின்றது. எ-று. எனவரும் இது வழிக்கும், விழிக்குஞ் சிலேடை. நால்வகையானுமென்ற முற்றும்மையை எச்சவும்மையாக்கிப் பிறவகையால் வருவனவுமுளவெனக்கொள்க. அவைவருமாறு, உவமாதீவகம் [வ-று] வெ-"முன்னங்குடைபோன் முடிநாயகமணிபோன், மன்னுந்திலகம்போல்வாளிரவி-பொன்னகலம்,தங்குகவுத்துவம்போலுந்தித்தடமலர்போல், அங்கணுலகளந்தார்க்காம்,, எனவிரும். உருவகதீவகம். வெ - "தானற்கயலாம்வயிற்கமலமாம், ஏனற் கருவிளையா மின்புறவில் மானும், கடத்துமேல்வேடர்கடுஞ்சரமா நீங்கிற், கடத்தும்மெல்லியலாள்கண்.,,

னவரும். கானல்-நெய்தல். வயல்-மருதம். வனல்- குறிஞ்சி.புறவு-முல்லை. கடம்-பாலை. (௰௪)

(௪௧) முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற், பின்வருமென்னிற் பின்வருநிலையே.

(எ-ன்) நிறுத்தமுறையானே, பின்வருநிலையென்னுமலங்காரமுணர்-ற்று. (இ-ள்.) ஒருசெய்யுளுள், முன்வருஞ் சொல்லாவது பொருளாவது பின்னர்ப்பலவிடத்துவருமாயின் அதுபின்வருநிலையென்னுமலங்காரமாம். எ-று.

அவற்றுள்- க-வது. சொற்பின்வருநிலை. [வ-று.] வெ-"மால்கரிகாத்தளித்தமாலுடையமாலைசூழ், மால்வரைத்தோளாதரித்தமாலையார்-மாலிருள்சூழ், மாலையின்மால்கட லார்ப்ப மதன்றொடுக்கு, மாலையின்வாளிமலர்." எ-து. மதத்தால்மயங்கிய யானையிடர்தீர்த்தளித்த அரியுடைய தொடையல் சூழப்பட்ட பெரியமலையையொத்த தோள்களை விரும்பிய இயல்புடையார்மேல்,மயங்கிருள்சூழ்ந்த அந்திப்பொழுதில்கருங்கடலார்ப்பக்காமனிடையறுது மலராகியகணைகளைத்தொடுக்கும். எ-று.எனவரும்.இதனுள்முன்வந்தசொல்லே பின்னும் பலவிடத்து வந்தமையின் சொற்பின்வருநிலை.

உ-வது. பொருட்பின்வருநிலை. [வ-று] வெ -"அவிழ்ந்தனதோன்றியலர்ந்தனகாயா, நெகிழ்ந்தனநேர்முகைமுல்லை - மகிழ்ந்திதழ்,விண்டனகொன்றைவிரிந்தகருவிளை,கொண்டனகாந்தள்குலை." எனவரும். இதனுள்- அவிழ்தலும், அலர்தலும், நெகிழ்தலும்,விள்ளலும், குலைதலும்,விரிதலென்னுமொருபொருண்மேனின்றனவாதலின் அப்பெயர்த்தாயிற்று. ✽ வருவதென்றது,வருமெனினென்றதனுன்,முன்னர்வந்தசொலும்பொருளும்பின்னர்ப்பலவிடத்தும் வருவது, சொற்பொருட்பின்வருநிலையெனக்கொள்க. [வ-று] வெ-"வைகலும்வைகல்வரக்கண்டுமஃதுணரார், வைகலும் வைகலைவைகுமென் றின்புறுவர், வைகலும்வைகற்றம்வாழ்நாண்மேல்வைகுதல்,வைகலைவைத்துணராதார்."எனவரும்.இன்னும் அவ்விலேசானே, பிறவலங்காரங்களோடுகூடிவருவனவுங்கொள்க. [வ-று] வெ -"செங்கமலநாட்டஞ்செழுந்தாமரைவதனம்,பங்கயஞ்செவ்வாய்பதுமம்போற்-செங்கரங்கள், அம்போருகந்தாளரவிந்தமாரமுூர், தம்போருகந்தாடனம்." எ-து. உவமைப்பொருட்பின்வருநிலை. பிறவும்வந்தவழிக்கண்டுகொள்க.

(௪உ) முன்னத்தின்மறுப்பினது முன்னவிலக்கே, மூவகைக்காலமு மேவியதாகும்.

(எ-ன்) நிறுத்தமுறையானே முன்னவிலக்கென்னுமலங்காரமுணர்-ற்று. (இ-ள்) ஒருபொருளைக் குறிப்பினுன் விலக்கினது

முன்னவிலக்கென்னும் அலங்காரமாம்அஃது இறப்பெதிர்வுநிகழ்வென்னும் மூவகைப்பட்ட காலங்களோடுங்கூடியதாம் எ-று. மறுப்பதென்றது மறுப்பினென்றதனாற்,கூற்றினான்மறுப்பினும் அவ்வலங்காரமாம். குறிப்பினான்மறுப்பது பொருட்பொலிவுஞ்செய்யுட் சிறப்புநோக்கி யெடுத்தோதினார் எனைய. தன்னதன்மையினிலேசானுடன்பட்டாரென்பது. இறப்பு,எதிர்வு,நிகழ்வு, என்பனவற்றைக்கூற்றொடுங்குறிப்பொடுங்கூட்ட அறுவகையாம்.

அவற்றுள்-௧-வது. இறந்தவினைவிலக்கு. [வ-று] வெ-"பாலன்றனதுருவாயேழுலகுண்டாலிலையின்,மேலன்றுகண்டுயின்றாய் மெய்யென்பர்-ஆலன்று,வேலைநீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ,சோலைசூழ்குன்றெடுத்தாய்சொல்" எ-து. சோலைசூழ்ந்தகுன்றமெடுத்த மாயவனே நீ உலகம் ஏழையுமுண்டு பாலனுருவத்தைக்கொண்டு ஆலிலையிலேயுறங்காநின்றாயென்பது உலகத்துள்ளோர் மெய்யென்றுசொல்லுவர் நீ உலகத்தையுண்டுறங்கிய ஆலானது அன்று கடலுள்ளே நின்றதோ, மண்ணின்மேல நின்றதோ, ஆகாயத்தேநின்றதோ, சொல்லுவாயாக. எ-று. எனவரும்.

௨-வது. எதிர்வினைவிலக்கு. [வ-று] வெ-"முல்லைக்கொடிநடுங்கமொய்காந்தள்கைகுலைப்ப, எல்லையினவண்டெழுந்திரங்க-மெல்லியன்மேற்,றீவாய்நெடுவாடைவந்தாற்செயலறியேன்,போவாயொழிவாய்பொருட்கு" எ-து. தலைவனே முல்லைக்கொடியானது நடுங்க,நெருங்கியகாந்தண்மலரானது விரிய,ஒளியினையுடையவண்டின் கூட்டங்களெழுந்தொலிக்கத், தீயையுடைய நெடியவாடையானது மெல்லிய நடையையுடைய இவண்மேல்வந்தால் பின்வினையுஞ்செய்தி யறியமாட்டேன், ஆதலின் பொருளீட்டுதற்குப்போவாயொழிவாய் எ-று. எனவரும்.

௩-வது. நிகழ்வினைவிலக்கு. [வ-று] வெ-"மாதர் நுழைமருங்குநோவமணிக்குழைசேர், காதின்மிசைநீலங்கைபுனைவீர்-மீதுலவு,நீணீலவாட்கணெடுங்கடையேசெய்யாவோ,நாணீலஞ்செய்யுநலம்" எ-து. காதலைச்செய்யு நுண்ணிடைவருந்த,மணிக்குழையையுடைய உமது காதின்மீதே மிசையாக நீலப்பூவைச் சாத்துகின்றவரோ,காதின்மீதே யுலாவுகின்ற நீண்ட நீலமாகிய நிறத்தையுடையகண்களி னெடியகடையே செய்யாவோ நீவிர்நன்றாகச்சூடிய நீலப்பூச்செய்யுநலத்தை. எ-று. எனவரும். பிறவும்வந்தவழிக்கண்டுகொள்க.

(௪௩) அதுவே, பொருள்குணங்காரணங் காரியம்புணரும்.

(எ-ன்) அவ்வலங்காரத்துச் சிலவேறுபாடுணர்-ற்று. (இ-ள்) அவ்விலக்கு பொருள் விலக்கும், குணவிலக்கும், காரணவிலக்கும், காரியவிலக்கும், என நான்குவகையானும்வரும். எ-று.

அவற்றுள்- க-வது. பொருள்விலக்கு. [வ-று] வெ-"கண்ணு மனமுங்கவர்ந்தவளாடிடமென், றண்ணலருளுமடையாளம்-தண் ணிழலின், சுற்றெல்லைகொண்டுலவுஞ் சோதித்திரளல்லால், மற்றி ல்லைகாணும்வடிவு,, எ-து. நம்முடைய தலைவன்தன்னுடைய கண் களையும்,மனத்தையுங்கவர்ந்துகொண்ட மடவாள் விளையாடுமிட மென்று நமக்கருளிச்செய்த சோலையின்கணுண்டாகிய குளிர்ந் தநிழலைச்சேர்ந்த சூழவிடத்தைக் கைக்கொண்டு உலாவித்திரிவ தொருசோதியுருவமல்லது, அச்சோதியுருவின்அவயவங்களைக்கா ண்டற்கரிதாயிருந்தது. இஃதோருருவத்தன்மை இருந்தபடி.— எ-று. எனவரும்.

உ-வது. குணவிலக்கு. [வ-று] வெ-"மாதர்துவரிதழ்வாய்வ ந்தென்னுயிர்கவரும், சீதமுறுவலறிவழிக்கும்- மீதுலவி, நீண்டம தர்விழியென்னெஞ்சங்கிழித்துலவும்,யாண்டையதோமென்மை யிவர்க்கு,, எ-து. இவருடைய அழகியபவளம்போன்ற வாயான து என்னுடையவுயிரைவந்து கவராநின்றது. குளிர்ந்த நகையா னது அறிவையழிக்காநின்றது. காதின்மீதுலாவிமதர்த்துநீண்ட விழியானது என்னுடையநெஞ்சத்தைக்கிழித்து உலவாநின்றது. ஆதலால் இவர்க்குமென்மை எங்குள்ளதோ சொல்லுவாயாக.— எ-று. எனவரும்.

ங-வது. காரணவிலக்கு. [வ-று] வெ-"மதரரிக்கண்சிவப்ப வார்புருவங்கோட, அதரந்துடிப்ப வணிசேர்நுதல்வியர்ப்ப, நி ன்பாணிகழ்வனகண்டஞ்சாதாலென்னெஞ்சம், என்பாற்றவறின் மையால்.,, எ-து. மடவாய்செவ்வரிபரந்து மதர்த்தகண் சிவப்ப, நீண்டபுருவம்வளைய, அதரந்துடிக்க, அழகுசேர்ந்த நெற்றியா னது வியர்ப்ப, உன்னிடத்தில் நிகழ்வனவற்றைக்கண்டு என்னு டையநெஞ்சம்பயப்படமாட்டாது, என்னிடத்திற் குற்றமில்லா மையால். எ-று. எனவரும்.

ச-வது. காரியவிலக்கு. [வ-று] வெ-"மன்னவர்சேயாமயி லகவியாடலும், பொன்னலருங்கொன்றையும்பூந்தளவின்-மென் மலரும்,மின்னுயிரா நீண்முகிலுமெய்யென்றுகொள்வதேல்,என் னுயிரோவின்னுமுளது.,, எ-து. நங்காதலர் வினைகருதிச் சேய்த் தாகிய நாட்டுளதாக,மயிலினங்கள்கூவியாடுதலும்,கொன்றைகள் பொன்போன்மலர்தலும்,அழகியமுல்லையின்மிருதுவாகியமலரு ம்,மின்னலைக்கொடுக்கின்ற நெடியமேகமுமாகிய இவைமெய்யெ ன்றுகொள்வோமாயின் என்னுயிரோஇன்னும்உடலோடுபொரு ந்திநின்றது. எ-று. எனவரும். இதனுட் காரியமுயிரில்லாதாதல்.

(சச) வன்சொல்வாழ்த்து தலைமையிகழ்ச்சி, துணைசெயன்

முயற்சி பரவசமுபாயங், கையறவுடன்படல் வெகுளியிரங்க, லை யமென்றுங் கறிந்தனர்கொளலே.

(எ-ன்) இதுவும் அவ்விலக்கென்னும் அலங்காரத்தை விரித்துணர்-ற்று. (இ-ள்.) வன்சொல்விலக்குமுதல் — ஐயவிலக்கீறாகச் சொல்லியபதின்மூன்றுபாகுபாட்டை யுடையதென்று அறிந்துகோடலையுடைத்தவ்விலக்கலங்காரம். எ-று.

அவற்றுள்-க-வது. வன்சொல் விலக்கென்பது, வன்சொற்சொல்லிவிலக்குவது. [வ-று] வெ-"மெய்யேபொருண்மேற்பிரிதியேல்வேறொரு, தையலைநாடத்தகுநினக்கு-நெய்யில்வேல், வள்ளல்பிரிவற்றம் பார்த்தெங்கள்வாழ்நாளைக், கொள்ளவுழலுமாங்கூற்று,, எ-து. ஒருதலையாய்ப்பொருண்மேலாசையாற்பிரிதியேல், இப்பொழுதே யுனக்கொருமனையாளைத்தேடத்தகுவதாயிருந்தது. நெய்யையுடைத்தாகிய வேலையுடையவள்ளலே நீ பிரிந்தவவகாசத்தைப்பார்த்து, அப்பொழுதே யெங்கள் வாழ்நாளைக் கொள்வதாக நினைத்துத்திரியாநின்றது கூற்றம். எ-று. எனவரும்.

உ-வது. வாழ்த்துவிலக்கென்பது, வாழ்த்திவைத்துவிலக்குவது. [வ-று] வெ-"செல்லுநெறியனைத்துஞ்சேமநெறியாக, மல்கதிதியம்வளஞ்சிறக்க-வெல்லும், அடற்றேர்விடலைபகன்றுறைவதாங்கோர், இடத்தேபிறக்கவியாம்,, எ-து. வென்றியினையும், வலியினையுமுடைய தேரினையுடைய வீரனே நீ எம்மைப்பிரிந்துபோகக்கருதிப்போகும், வழியனைத்தும் உனக்குக்காவலாகியபரிகாரஞ்செய்வதாக. பொருள் வருவாயும் பெருகுவதாக செல்வம்பெருக. நீநிலையாகநிற்பதெவ்விடமவ்விடத்தைச்சொல்லவேண்டும் நாங்களவ்விடத்தே யறிந்துபிறப்போமாக. எ-று எனவரும். இறக்குங்காலத் துண்டாயநினைவு இறந்தபின்னர்வந்துட்டுமென்பதனுலறிக.

௩-வது. தலைமைவிலக்கென்பது, தன்பாற்றலைமைதோன்றக்கூறிவிலக்குவது. [வ-று] வெ-"பொய்ம்மைநெறிதீர் பொருளுமிகப்பயக்கும், எம்முயிர்க்குமேதமிடரில்லை-வெம்மைதீர்ந், தகவினியநெறிபணியவென்றுலும், போகலொழிவாய்பொருட்கு,, எ-து. பொய்யாகியவழியினைத் தப்புவிக்கின்றபொருளும்பெரிதுண்டாகும். எங்களுயிர்க்கு மோரிடருண்டாகமாட்டாது. அவ்வழிநடையும் வருத்தமின்றி இன்பமுமுண்டாக்கும். அவ்வழிதானுஞ்சிறிகித்தோன்றுமென்று சொன்னேமேயாயினும் பொருள்வருதிப்போகின்றபோக்கை நீயொழிவாயாக. எ-று. எனவரும்.

௪-வது. இகழ்ச்சிவிலக்கென்பது, விலக்குதற்கேதுவையிகழ்ந்துவிலக்குவது. [வ-று] வெ-"ஆசைபெரிதுடையேமாருயிர்மேலப்பொருண்மேல், ஆசைசிறிதுமடைவிலமால் -தேசு, வழு

வாறெற்றியின்வருபொருண்மேலண்ணல்,எழுவாயொழிவாயினி,,
எ-து. நல்வழிக்கண்ணேயொழுகுகின்றபொருள்கருதிப்பிரிகின்
றபெரியோனே எங்கள்பெரிதாகியவுயிரின்மேல்மிக ஆசையுடை
யேம்நீநினைத்துப்பிரிகின்றபொருண்மேலாசையுண்டாதற்குக்கா
ரணஞ்சிறிதுமிலேயாதலால்,நீபொருண்மேலேகுவாய் அன்றிய
தனைத்தவிர்ப்பாய் எங்கள்தன்மையிதுவே. எ-று. எனவரும்.

௫-வது. துணைசெயல்விலக்கென்பது, துணைசெய்வாரைப்
போலக்கூறிவிலக்குவது. [வ-று] வெ-“விளைபொருண்மேலண்
ணல்விரும்பினையேலீண்டெங், கிளையழுகை கேட்பதற்கு முன்
னே-விளைதேன்,புடையூறுபூந்தார்புனைகழலாய்போக்குக்,கிடை
யூறுவாராமலேகு,, எ-து மிகுதியாகிய தேனூறுகின்ற பூமாலையி
னையும், அலங்கரிக்கப்பட்ட கழலினையுமுடைய தலைவனே, நன்
மைபயக்கும் பொருண்மேலே போதல்விரும்பினையாயின் எங்க
ள் சுற்றத்தாரழுவதுகேட்பதற்குமுன்னேயிப்பொழுதேஉன்னு
டையபோக்கிற்கு விலக்குவாராவண்ணம்போவாய். எ-று.எ-ம்,

௬-வது. முயற்சிவிலக்கென்பது, முயற்சிதோன்றக்கூறிவி
லக்குவது. [வ-று] வெ - “மல்லணிந்ததோளாயிதென்கொலோ
வான்பொருண்மேற், செல்கவினைத்தென்றுளந்தெளிந்து-செல்
லுதற்கே, யென்றுமுபல்வலியானேகனியென்றிடையே, தோன்
றுகின்றதென்வாயிற்சொல்.,, எ-து. வளப்பத்தினையுடைய தோ
ளினையுடையாய் நீ நன்மைபயக்கும் பொருளின் றிறத்தேகடுகிப்
போவாயாகவென்றென்னுள்ளமானது கலக்கமறச்சொல்லுவதா
கநினைத்துத் தொழிற்படாநின்றது. அச்சொல்லுள்ளே யொரு
சொற்போகா தொழிவாயாகவென்று சொல்லுவதாகத் தோன்று
நின்றது இதென்னுகுமோ சொல்லுவாயாக. எ-று. எனவரும்.

௭-வது. பரவசவிலக்கென்பது, தன்வசமல்லாமை கூறிவி
லக்குவது. [வ-று] வெ-“செல்கைதிருவுளமேல்யானறியேன்றே
ங்கமழ்தார்,மல்லகலந்தங்குமதர்விழியின்-மெல்லிமைகள்,நோக்
குவிலக்குமேனுவாளிவள்காதல், போக்கியகல்வாய் பொருட்
கு,, எ-து. இவளைப்பிரிவதே காரியமாகத் திருவுள்ளத்தடைத்து
ப்பொருட்குப் பிரிவாயானால் அதன்மே லடுக்குங்காரிய மென்
னாலறியப்படா தாகலான் நறுநாற்றத்தையுடைத்தாகிய தாரினையு
ம்வளப்பத்தினையுமுடைத்தாகிய நின்னுடைய மார்பின்கண்ணே
பிரியாது தங்கப்பட்ட விழியினிடத் துண்டாகிய மெல்லியதாகி
யவிமையானதுவே எம்முடையதலைவன்மார்பினைப் பார்க்கின்ற
பார்வையினை விலக்காநின்ற தென்றதற்கு வருந்துந்தன்மையை
யுடையயிவள் நின்மேல்வைத்த ஆசையினைப்போக்கிப்போவாயா
க. எ-று.எனவரும்

அ-வது. உபாயவிலக்கென்பது, விலக்குவதனையோருபாயங்காரணமாகவிலக்குவது. [வ-று] வெ-"இன்னுயிர்காத்தளிப்பாய்நீயேயிளவேனில், மன்னவனுங்கூற்றவனும்வந்தணைந்தால்-அன்னோர், தமக்கெம்மைத்தோன்றாத்தகைமையதோர்விஞ்சை,எமக்கின்றருள்புரிந்தேயேகு,, எ-து எங்களுடைய இனியவுயிரைக்காக்குந்தன்மையை யுடையையாகிய நீபிரியக்கருதினையாயின் எங்களிடத்துஇளவேனிற்காலத்துக்குத்தலைவனாகிய காமனும்,கூற்றுவனும்வந்துசேர்ந்தாலவர்கண்ணுக்கு நாங்கள்தோற்றாதேயிருப்பதொருவிஞ்சையெங்களுக்குத்தந்துபோவாயாக எ-று.எனவரும்

கூ-வது.கையறல்விலக்கென்பது,தத்தமக்குவேண்டியபொருண்மேன்முயலுமொழுக்கமின்மைதோன்றக்கூறுவது [வ-று] வெ-"வாய்த்தபொருள்விளைத்தொன்றில்லைமாதவமே, யார்த்தவதிவில்லையம்பலத்திக்-கூத்துடையான், சீலஞ்சிறிதேயுஞ்சிந்தியேன்சென்றொழிந்தேன்,காலம்வறிதேகழித்து,, எ-து.நற்பொருளைவிளைத்தற்குக்காரணமாகிய யாதொருமுயற்சியுஞ்செய்யவில்லை. பெரியதவத்தைத்தேடிக்கொள்ளத்தக்க அறிவுமில்லை.சிதாகாசத்தில் ஆனந்ததாண்டவஞ் செய்கின்ற நடேசனுடைய மான்மியத்தைச் சிறிதேனும் நினைக்கவில்லை. ஆதலால் என்வாணாளை வீணாக்கிவிட்டேன். எ-று. எனவரும்.

ய-வது. உடன்படல்விலக்கென்பது, உடன்பட்டார்போலவிலக்குவது. [வ-று] வெ-"அப்போதடுப்பதறியேனருள்செய்த,இப்போதிவளுமியைகின்றாள்-தப்பில், பொருளோபுகழோதரப்போவீர்மாலை, இருளோநிலவோவெழும்,, எ-து. குற்றமற்ற பொருளென்ன புகழென்ன இவற்றையுண்டாக்குதற்குப் பிரிந்துபோவீர் நீர்பிரிந்த அப்பொழுதே இவளுக்கு அடுப்பதொன்றும் என்னாலறியப்படாது. நீரருளிச்செய்த பிரிவுக்கு இப்போது இவளும் உடன்படாநின்றாள்,இதுகிடக்க மாலைக்காலம் வந்தபொழுதே அதனோடு இருளோ மதியமோ வருதல்செய்யும் இதனை நீரறிவீர். எ-று.எனவரும்.

யக-வது. வெகுளிவிலக்கென்பது, வெகுளிதோன்றக்கூறிவிலக்குவது. [வ-று] வெ-"வண்ணங்கருகவளைசரியவாய்புலர,வெண்ணந்தளர்வ மெதிர்நின்று - கண்ணின்றிப், போதல்புரிந்துபொருட்காதல்செய்வீரால், யாதும்பயமிலேம்யாம்,, எ-து. இவளுடையநிறங்கருகி வேறுபடவும்,கையில்வளையானது சிந்தவும், வாயானதுநீரற்றுலரவும், நன்மையெய்துவதாகநாங்களெண்ணிய வெண்ணமெல்லாம்பழுதாகவும் எங்களை தீரோகண்ணோட்டமின்றிப்பிரிதல்விரும்பி எங்களைவெறுத்துப் பொருளையாசைப்படுவீரானால் எங்களுக்கொருபயமில்லை. எ-று. எனவரும்.

௰௨-வது. இரங்கல்விலக்கென்பது, இரங்கல் தோன்றக்கூறி விலக்குவது. [வ-று] வெ-"ஊசறொழிவிழக்கு மொட்புமயிலிழக்கும்,வாசஞ்சுனையிழக்கும்வள்ளலே-மீதசு,பொழிலிழக்குநாளை யெப்பூங்குழலிநீங்க, எழிலிழக்குமந்தோவிவண்,, எ-து. எம்முடையபூவினாலலங்கரிக்கப்பட்ட குழலினையுடைய விவளுயிரிழப்பதேயன்றி நாளையாடுகின்ற ஊசல்களும் விளையாடற்றொழிலையிழக்கும்,மயிலுமுவமையையிழக்கும்,சுனைகளுநறுநாற்றத்தையிழக்கும்,பொழிலும் ஒளியையிழக்கும்,இவ்விடமுமழகையிழக்கும்,தலைவனே இனி யடுத்தவாறுசெய். எ-று. எனவரும்.

௰௩-வது. ஐயவிலக்கென்பது, ஐயுற்றதனை விலக்குவது.— [வ-று] வெ-"மின்னோபொழிலின்விளையாடுமிவ்வுருவம்,பொன்னோவெனுஞ்சுணங்கிற்பூங்கொடியோ - என்னே, திசையுலவுங்கண்ணுந்திரண்முலையுந்தோளு, மிசையிருளுந்தாங்குமோமின்.,, எ-து. இப்பொழிலின்கண்ணே விளையாடுகின்ற இவ்வுருவம்,மின்னதுருவமோ,அன்றியேபொன்னோவென்றையுறுநிறத்தையுடைய சுணங்கையுடைத்தா யிருப்பதொரு உருவத்தை யுடைத்தாகிய கொடியோ,யாதோவென்றையுறுகின்ற நெஞ்சமே, திக்கனைத்தும்பரந்துலாவித் திரிகின்ற கண்ணிணையும், திரண்ட முலையிணையும்,இரண்டுதோளிணையும், தன்மீதேயிருளிணையுந் தாங்கியிருப்பதுஒருமின்னுமுண்டோ சொல்லுவாயாக. எ-று. எனவரும். ()

(௪௫) வேற்றுப்பொருள்சிலேடையேதுவென்றின்னவை, மேற்கூறியற்கையின் விளங்கித்தோன்றும்.

(எ-ன்) இதுவும் இவ்வலங்காரம் பிறவலங்காரங்களோடுகூடி வருமாறுணர்-ற்று.(இ-ள்)வேற்றுப்பொருள்வைப்பும்,சிலேடையும், ஏதுவுமென்று சொல்லப்பட்டவைகளோடு இவ்விலக்கென்னுமலங்காரம்கூடி மேற்சொல்லப்பட்ட அலங்காரங்கள் போல வரும். எ-று.

அவற்றுள்- ௧-வது. வேற்றுப்பொருள் வைப்பு விலக்கு.— [வ-று.] வெ-"தண்கவிகையாலுலகந்தாங்குமநபாயன்,வெண்கவிகைக்குள்ளடங்காவேந்தில்லை- எங்கும், மதியத்துடனிரவிவந்துலவுவானிற், பொதியப்படாதபொருள்.,,எ-து. உள்ளங்குளிர்ந்து கொடுக்கும் கொடையையுடைய அநபாயச்சோழனுடைய வெண்கொற்றக் குடைக்கீழடங்காத வேந்தர் எங்குமில்லை. மதியும், இரவியும் தவழுகின்ற ஆகாயத்தில் அடங்காதபொருளும்,எங்குமில்லை. எ-று. எனவரும்.

௨-வது. சிலேடைவிலக்கு. [வ-று] வெ -."அம்போருகஞ்செற்றமுதமயமாகி, வம்பார்முறுவலொளிவளர்க்க-இம்பர், முகைமதுவார்கோதைமுகமுண்டுலகின், மிகைமதியும்வேண்டுமோ

வேறு,,எ-து. தாமரையினது அழகையழித்து, அமிர்தத்தன்மைத்தாய்ப் புதுமையோடுகூடி விரியாநின்ற ஒளியையுடைத்தாதற்கு முல்லை முகைகளையுடைய கோதையாளுடைய முகமல்லது, தாமரையைக்கருகுவித்து அமிர்தகலைகளாலியன்ற வடிவுடைத்தாய்ச்செவ் விதாராநின்ற வொளிநிலாவிரிமதி உலகத்திற்குமிலை எ-று. எனவரும். இஃது முகத்திற்கும் மதிக்குஞ்சிலேடை.

ரு-வது. எதுவிலக்கு. [வ-று.] வெ - "பூதலத்து ளெல்லாப் பொருளும்வறியராய்ச், காதலித்தார்தாமேகவர்தலால்-நீதி, யடுத்துயர்ந்தசீர்த்தியநபாயயார்க்கும், கொடுத்தியெனக் கொள்கின் றிலேம்,, எ-து.பூமண்டலத்துள்ளேவறிஞராய்ஆசைப்பட்டார்யாவரும், தாமாசைப்பட்ட பொருள்களைத் தடையின்றித் தாமேயெடுத்துக் கொள்ளுகின்றாராதலால் நீயுலகத்து வறியோர்க்குக் கொடுக்கின்றாயாகநினைக்கின்றிலோம் நீதியடுத்து உயர்ந்தகீர்த்தியையுடைய அநபாயனே. எ-று. எனவரும். (சரு)

(சசு) முன்னொன்றுதொடங்கி மற்றது முடித்தற்குப்,பின்னொருபொருளி னுலகறிபெற்றி, யேற்றிவைத்துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே.

(எ-ன்) நிறுத்தமுறையானே வேற்றுப்பொருள் வைப்பென்னு மலங்காரமுணர் - ற்று. (இ-ள்.) முன்னொருபொருட்டிறந்தொடங்கிப்பின்னரதுமுடித்தற்குவலியுடையபிறிதொருபொருளை உலகறிபெற்றியான்வைத்துமொழிவதுவேற்றுப்பொருள்வைப்பென்னு மலங்காரமாம். எ-று. இதனகல முரையிற் கொள்க.()

(சஎ) முழுவதுஞ்சேற லொருவழிச்சேறன்,முரணித்தோன்றல் சிலேடையின்முடித்தல், கூடாவியற்கை கூடுமியற்கை,யிருமையியற்கை விபரீதப்படுத்தலென்,றின்னவையெட்டுமெதனதியல்பே.

(எ-ன்) இது அவ்வலங்காரத்தை விரித்துணர் - ற்று. (இ-ள்.) முழுவதுஞ் சேறன்முதல்—விபரீதப்படுத்த லீறாகச்சொல்லிய வெண்வகையான்வரும் அவ்வலங்காரம். எ-று.

அவற்றுள்-க-வது. முழுவதுஞ் சேறலென்பது, ஒருதிறமுரைத்தா லத்திறமெல்லாவற்றின்மேலுமுற்றச்செல்லவுரைப்பது. [வ-று] வெ-"புறந்தந்திருளிரியப்பொன்னேமியுய்த்துச்,சிறந்தவொளிவளர்க்குந்தேரோன்- மறைந்தாற்,புறவாழிசூழ்ந்தபுவனத்தேதோன்றி, இறவாதுவாழ்கின்றார்யார், எனவரும்.

உ-வது. ஒருவழிச்சேறலென்பது, ஒருதிறமுரைத்தா லத்திறமெல்லாவற்றின்மேலு முற்றச்செல்லாது, சிலவற்றின்மேலே சென்றொழிவது. [வ-று] வெ-"எண்ணும்பயன்றாக்கா தியார்க்கு

ம்வரையாது, மண்ணுலகில்வாமனருள்வளர்க்கும்-மின்னுறுந்தே ன், பூத்தளிக்குந்தாராய் புகழாளர்க்கெவ்வுயிரும்,காத்தளிக்கைய ன்றேகடன்,, எனவரும்.

௩-வது. முரணித்தோன்றலென்பது, தம்முண் மாறுபட்டி ருக்கும் இயல்புடைத்தாயபொருள்வைப்பது.[வ-று] வெ-"வெ ய்யகுரற்றேன்றிவெஞ்சினவேறுட்கொளினும், பெய்யுமுகிறன் னைப்பேணுவரால்-வையத், திருள்பொழியுங்குற்றம் பலவரினும் யார்க்கும், பொருள்பொழிவார்மேற்றேபுகழ்,, எனவரும்.

௪-வது. சிலேடையின் முடித்தலென்பது, முன்னர்வைத் தபொருளையும், பின்னர்வைத்தபொருளையும், ஒருசொற்றொட ர்பாற்சொல்லுவது. [வ-று] வெ-"எற்றேகொடிமுல்லைதன்னைவ ளர்த்தெடுத்த, முற்றிழையாள்வாடமுறுவலிக்கும்-முற்று, முடி யாப்பரவைமுழங்குலகத்தென்றும், கொடியார்க்குமுண்டோகு ணம்,, எனவரும். இதனுள் - கொடுமையுடையார்க்கும் கொடிக் குஞ்சிலேடை வந்தவாறுகாண்க.

ரு-வது. கூடாவியற்கையென்பது, கூடாததனைக் கூடுவதா க்கிக்கூறுவது. [வ-று] வெ-"ஆரவடமுமதிசிதசந்தனமும்;ஈரநி லவுமெரிவிரியும்- பாரிற், றிவகையான்மேம்பட்டதுப்புரவுந் தத்தம்,விதிவகையான்வேறுபடும்,, எனவரும்.

௬-வது. கூடுமியற்கையென்பது, கூடுவதனைக்கூடுவதாகக் கூறுவது. [வ-று] வெ - "பொய்புனையாநண்பாபுனைதேர்நெறி நோக்கிக், கைவளைசோர்ந்தாவிகரைந்துகுவார் - மெய்வெதும்ப ப்,பூத்தகையுஞ்செங்காந்தள் பொங்கொலிநீர்ஞாலத்துத், தீத்த கையார்க்கீதோசெயல்,, எனவரும்.

௭-வது. இருமையியற்கையென்பது, கூடாததனையும் கூடு வதனையும் ஒருங்குகூறுவது. [வ-று] வெ-"கோவலர்வாய்வேய்ங் குழலேயன்றிக் குரைகடலும்,கூவித்தமியோரைக்கொல்லுமாற்- பாவாய், பெரியோரும்பேணுதுசெய்வரோபோலுஞ், சிறியோர் பிறர்க்கியற்றுந்தீங்கு,, எனவரும்.

அ-வது. விபரீதமென்பது, விபரீதப்படச் சொல்லுவது. [வ-று] வெ-"தலையிழந்தானெவ்வுயிருந்தந்தான்பிதாவைக்,கொ லைபுரிந்தான்குற்றங்கடிந்தான் - உலகிற், றனிமுதன்மைபூண்டுய ர்ந்தோர்வேண்டுவரேற்றப்பாம், வினையும்விபரீதமாம்.,, எனவரு ம். இதனுள்- நல்வினைப்பயன் றீதாகவும், தீவினைப்பய னன்மை யாகவும்வந்து விபரீதமானதுகாண்க. (உக)

(௨௮) கூற்றினுங்குறிப்பினு மொப்புடை யிருபொருள் வேற்றுமைப்படவரின் வேற்றுமையதுவே.

(எ-ன்) நிறுத்தமுறையானே வேற்றுமையென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்) கூற்றினானுதல்,குறிப்பினானுதல், ஒப்புடைய இருபொருளை ஒருபொருளாகவைத்து அவற்றைத்தம்முள்வேற்றுமைப்படச் சொல்லுவது வேற்றுமையென்னு மலங்காரமாம். எ-று. ✽ வேற்றுமையென்னுது அதுவேயென்றமையால்,அவையொருபொருளான் வேற்றுமைசெய்தலும், இருபொருளான்வெற்றுமைசெய்தலும் உடையது. அல்லதூஉம், அவ்விலேசானே, வேற்றுமைப்படக்கூறுதலுமன்றி, ஒன்றினென்று மிகுதிப்படக்கூறவும்படும்.

க-வது. ஒருபொருள் வேற்றுமைச்சமம். [வ-று.] வெ-"அனைத்துலகுஞ்சூழ்போ யரும்பொருள் கைக்கொண்டு,இனைத்தளவைத்தென்றற்கரிதாம் - பனிக்கடல், மன்னவநின்சேனைபோன் மற்றது நீர்வடிவிற், றென்னுமிதுவொன்றேவேறு,, எனவரும்.

உ-வது. இருபொருள்வேற்றுமைச்சமம். [வ-று] வெ-"சென்றுசெவியளக்குஞ்செம்மையவாய்ச்சிந்தையுள்ளே, நின்றளவிலின்பநிறைப்பவற்றுள்-ஒன்று, மலரிவருங்கூந்தலார்மாதர்நோக்கொன்று, மலரிவருங்கூத்தன்றன்வாக்கு.,, எனவரும். இதனுள்- ஒன்று கண்ணாகவும், மற்றொன்று கவியாகவும் நின்றவாறு கண்டுகொள்க. மலரியென்பது-ஒரூர்.

ரு-வது. உயர்ச்சி. [வ-று] வெ- "மலிதேரான்கச்சியுமாகடலுந்தம்முள், ஒலியும்பெருமையுமொக்கும்-மலிதேரான்,கச்சிபடுவகடல்படாக்கச்சி, கடல்படுவவெல்லாம்படும்,, எனவரும். இவைகூற்று.

ரு-வது. இருபொருள்வேற்றுமைச்சமம். [வ-று] வெ-"கார்க்குலமும்பாய்திரையுங்காட்டுங்கடல்படையும், போர்க்களிறும்பாய்மாவும்பொங்குமால்- ஏற்ற, கலமுடைத்துமுந்நீர்கதிராழித்திண்டேர்,பலவுடைத்துவேந்தன்படை,, எனவரும்.

சு-வது. உயர்ச்சி. [வ-று] வெ-"பதுமங்களிக்குமளியுடைத்துபாவை, வதனமதர்நோக்குடைத்து - புதையிருள்சூழ், அப்போதியல்பழியுமம்போருகவதனம், எப்போதுநீங்காதியல்பு.,, எனவரும். இவைகுறிப்பு.பிறவும்வந்தவழிக்கண்டுகொள்க. (உஉ)

(சக) அதுவே,குணம்பொருள்சாதி தொழிலொடும்புணரும்.

(எ-ன்) இது அவ்வலங்காரத்தைவிரித்துணர் - ற்று. (இ-ள்.) அவ்வேற்றுமையென்னுமலங்காரம்,குணமுதல்—தொழிலீறுகச்சொல்லப்பட்ட நான்கனோடு கூடியும்வரும். எ-று.

அவற்றுள்-க-வது. குணவேற்றுமை. [வ-று] வெ - "சுற்றுவிற்காமனுஞ் சோழர்பெருமானும், கொற்றப்போர்க் கிள்ளியுஞ்

கேழொர்வ்வார்-,பொற்றொடியாய், ஆழியுடையான் மகன்மாயன் செய்யனே,கோழியுடையான்மகன்,, எ-து. காமனும், சோழனும் தம்மில் திறமொவ்வார். பொன்னாற்செய்த வளையலை யுடையவளே சக்கரத்தை யுடையனாகிய மாயனுடைய மகனாகிய காமன்கறுத்திருப்பான். கோழியென்னும் ஊரையுடையவனாகிய சோழனுடையமகன் சிவந்திருப்பான். எ-று. எனவரும்.

௨-வது. பொருள்வேற்றுமை. [வ-று] வெ- "ஓங்கலிடைவந்துயர்ந்தோர்தொழவிளங்கி, ஏங்கொலிநீர்ஞாலத்திருளகற்றும்- ஆங்கவற்றுள், மின்னேர்தனியாழி வெங்கதிரொன்றேனையது, தன்னேரிலாததமிழ்,, எ-து. உதயமலையிற்றோன்றிமேன்மக்கடொழுதேத்தவிளங்கி யிரைந்தொலிக்குங் கடல்சூழ்ந்த உலகத்திருளகற்றுவதாயும், பொதியமலையிற்றோன்றி அறிவுடையார் தொழுதேத்தவிளங்கி யிரைந்தொலிக்கும் கடல்சூழுலகத்தில் மக்களுள்ளத்துள்ளமயக்கந் தீர்க்கப்பட்டதாயு மிருக்கின்றவற்றுள்,ஒன்று ஒளியும்,அழகும் தனிக்காற்றேரும், விரும்பும் வெயிலுமுடைய ஆதித்தன். ஏனையது தனக்கொப்பற்றதமிழ். எ-று. எனவரும்.

௩-வது. சாதிவேற்றுமை. [வ-று]வெ-"வெங்கதிர்க்குஞ்செந்தீவிரிசுடர்க்குநீங்காது,பொங்குமதியொளிக்கும்போகாது-தங்கும்,வளமையான்வந்தமதிமருட்சிமாந்தர்க்,கிளமையான்வந்தவிருள்,, எ-து. சூரியனுக்கும், விளக்குக்கும் நீங்காது மதியொளிக்கும், போகாதேநிற்கும், இளமைப்பருவத்தில் செல்வக்களிப்பான்வந்த அறியாமையாகிய இருள். எ-று. எனவரும்.

௪-வது. தொழில்வேற்றுமை. [வ-று] வெ-"புனனாடர்கோமானும்பூந்துழாய்மாலும், வினைவகையான்வேறுபடுவர்-புனனாடன்,எற்றெறிந்து மாற்றலர்பா லெய்தியபார்மாயவன், ஏற்றிரந்துகொண்டமையினால்,,எ-து. நீர்நாடர்கோமானாகியசோழனும், பொலிவினையுடைய துளசிமாலையையணிந்தமாயனும்,தொழிலான்வேறுபட்டிருப்பர். சோழன் பகைஞரொறிந்தவேலைத்தன்மீது ஏற்றும் தனதுவேலைப்பகைஞர்மேலெறிந்துங்கைக்கொண்டவுலகை மால் நீரோற்றும் இரந்துங்கொண்டமையின். எ-று. எனவரும். ❁ அஃதேன் மேற்காட்டி யவற்றுள், இந்நான்கு மொழித்துக்காட்டிய வுளவோவெனின்,இல்லை மற்றிச்சூத்திரம்வேண்டாகூறிற்று வேண்டியதுமுடித்தற்கு. மற்றும்வேண்டிய தியாதோவெனின், இவ்வலங்காரம்பிறவலங்காரங்களோடுகூடிவருவனகோடற்கென்றது.என்னை,"விலக்கியல்சிலேடையின்மேவவும்பெறுமே,, என்றலின். அவைவருமாறு.

விலக்கியல்வேற்றுமை. [வ-று] வெ - "தீம்மாற்பயன்றாக்காதியாவனாயுந்தாங்கினும், கைம்மாறுங்காலமுடைத்தன்றே-வ

ம்மாவி, அன்னவனையாழி யநபாயனைமலராள், மன்னவனைமானுமோவான்,, எ-து. உலகத்தாராற் பயனைவிரும்பாது யாவரையுந் தாங்கினும், கைமாறுதலும், காலவரைவுமுடைத்து ஆதலால்கைம்மாறுதலும் காலவரைவுமின்றிக் கொடுக்கின்ற எம்முடைய உயிரை ஒத்தவனை-அநபாயனை- திருமகளுக்கு நாயகனைமேகம் ஒக்குமோ. எ-று. எனவரும்.

சிலேடைவேற்றுமை. [வ-று] வெ- "ஏறடர்த்துவின்முருக்கியெவ்வுலகுங்கைக்கொண்டு, மாறடர்த்தவாழிவலவனைக் - காறொரூதற், கெஞ்சினரில்லெனினுமாயனிகனெடுமால், வஞ்சியானீர்நாட்டார்மன்,, எ-து. விடைதழுவி, வில்லிறுத்து, மூன்றுலகுமளந்து கைக்கொண்டு பகைஞரைத்தொலைத்த சக்கரத்தையுடைய மாலை, உலகத்துள்ளார் யாவரும்வணங்குவாரெனினும்மாயனென்று சொல்லப்படுவன். பாண்டியனுடைய சுறவேற்றுக்கொடியையழித்துச்சேரனுடையவிற்கொடியைச்சிதைத்து எல்லாநாட்டையுங்கைக்கொண்டு தன்னோடொப்பார் உலகத்திலில்லையெனச் சக்கரஞ்செலுத்தியசோழனைத்தொழுதற்குஒழிந்தாரில்லையெனமாயனோடொப்பித்துச் சொல்லினும், சோழன்வஞ்சியான். எ-று. எனவரும். ஏறென்பது தலைக்குறை. ஏற்றுக்கொடியென்றதற்குக் காடவர்கோன், கொடியென்று பொருள்கூறுவாருமுளர். (௨௫)

(௩௰) உலகறிகாரண மொழித்தொன் றுரைப்புழி, வேறொருகாரண மியல்புகுறிப்பின், வெளிப்படவுரைப்பது விபாவனையாகும்.

(எ-ன்) நிறுத்தமுறையானே விபாவனையென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்) ஒன்றன்வினை யுரைக்குங்காற் பலருமறியவுருங்காரணமொழித்துப், பிறிதோர்காரண மியல்பாகக்குறிப்பாக வெளிப்படவுரைப்பதுவிபாவனையென்னும்அலங்காரமாம். எ-று

அவற்றுள்-௧-வது. இயல்புகாரணவிபாவனை. [வ-று] வெ- "தீயின்றிவேந்தமியோர் சிந்தைசெழுந்தேறல், வாயின்றி மஞ்ஞருமகிழ்தூங்கும்-வாயிலார், இன்றிச்சிலருடறீர்ந்தாரமின்றிக், கன்றிச்சிலைவளைக்குங்கார்,, எனவரும்.

௨-வது. குறிப்புக்காரணவிபாவனை. [வ-று] வெ - "கடையாமேகூர்த்தகருநெடுங்கண்டேடிப், படையாமேயேய்த்ததனம்பாவாய்-சடைநெருமியக், கோட்டாமேகோடும்புருவங்குலிகச்சேரூட்டாமேசேந்தவடி,,; எனவரும். ✱ விபாவனையென்றது ஆகுமென்றதனால், வினையெதிர்மறுத்துப்பொருள்புலப்படுப்பினும்பொதுவகையாற் காரணம்விலக்கிக் காரியம்புலப்படுப்பினும் அவ்வலங்காரமாமென்க.

அவற்றுள், வினையெதிர்மறுத்துப் பொருள்புலப்படுப்பது
[வ-று] வெ -"பூட்டாதவிற்குனித்துப்பொங்குமுகிலெங்கும்,தீ
ட்டாதவம்புசிதறுமால்-ஈட்டமாய்க்,காணாதகண்பரப்புந்தோகை
கடும்பழிக்கு,நாணாதயர்த்தார்நமர்,,எனவரும்.

பொதுவகையாற் காரணம் விலக்கிக்காரியம் புலப்படுத்து
வது. [வ-று] வெ-"காரணமின்றிமலயாநிலங்கனலும், ஈரமதிவெ
தும்பற்கெண்ணிமித்தம்-காரிகையார்க், கியாமேதளரவியல்பாகநீ
ண்டனகண்,தாமேதிரண்டதனம்,,எ-ம். வெ- "பாயாதவேங்கைம
லரப்படுமேதமாய், பூவாதபுண்டரிகமென்றஞ்சி - மேவும், பிடித
ழுவிமாறதிருங்கானிற்பிழையாம்,வடிதழுவுவேலோய்வரவு,,எ-ம்.
வரும் இவைகுறிப்புவிபாவனையின்வேறுபாடு. (௨௪)

(௫௧) கருதியபொருடொகுத் ததுபுலப்படுத்தற், கொத்த
தொன்றுரைப்பினஃ தொட்டெனமொழிப.

(எ-ன்) நிறுத்தமுறையானே,ஒட்டென்னும் அலங்காரமுண
ர்-த்-று. (இ-ள்) கவிதன்னாற்கருதப்பட்ட பொருளைமறைத்து அத
னைவெளிப்படுத்தற்குத்தக்க, பிறிதொன்றினைச் சொல்லின் அஃ
தொட்டென்னும் அலங்காரமாம். எ-று.

(௫௨) அடையும்பொருளுமயல்படமொழிதலு,மடைபொ
துவாக்கி யாங்கனமொழிதலும்,விரவத்தொடுத்தலும்விபரீதப்ப
டுத்தலு,மெனநால்வகையினுமியலுமென்ப.

(எ-ன்) இது அவ்வலங்காரத்தை விரித்துணர்-த்-று. (இ-ள்)கூறு
கின்றபொருளும் அதனதடையும் வேறுபடத்தொடுப்பதும், அ
டைபொதுவாக்கிப்பொருள் வேறுபடத்தொடுப்பதும், அடை
விரவிப்பொருள்வேறுபட மொழிதலும், அடையைவிபரீதப்ப
டுத்துப்பொருள்வேறுபட மொழிதலும். என நான்குவகையினை
யுடைத்தவ்வொட்டென்னும் அலங்காரம். எ-று.

அவற்றுள், க-வது. அடையும்பொருளுமயல்படமொழிதல்.
[வ-று]வெ - "வெறிகொளினச்சுரும்புமேய்ந்ததோர்காவிக், கு
றைபடுதேன்வேட்டுங்குறுகும்- நிறைமதுச்சேர்ந், துண்டாடுந்தி
ன்முகத்தேசெவ்வியுடையதோர், வண்டாமரைபிரிந்தவண்டு,,—
எ-து.தன்னிடத்துச்செவ்வியையும், வளப்பத்தையு முடைய தா
மரைக்கட்குறைவற்ற நிறைமதுவைச்சேர்ந்து உண்டு களித்துவி
ளையாடுகின்றவண்டும்,களித்தபலவண்டுகள்சேர்ந்து உண்டுவெறு
த்துவிட்டகுறைபடுகாவியின்மதுவை ஆசைப்பட்டுச்சேரும்.—
எ-று எனவரும். இதனுள், தாமரையென்றது-தலைமகளை.காவிஎன்
றது-பரத்தையை. வண்டென்றது-தலைமகனை. இது பரத்தையிற்
பிரிந்துவந்ததலைமகற்குவாயினேர்ந்ததோழிசொல்லியது.

உ-வது. அடைபொதுவாய்ப் பொருள்வேறுபடுதல். [வ-று] வெ - "உண்ணிலவுநீர்மைத்தாயோவாப்பயன்சுரந்து, தண்ணளி தாங்குமலர்முகத்துக்-கண்ணெகிழ்ந்து, நீங்கவரியநிழலுடைத்தா ய்நின்றெமக்கே,ஓங்கியதோர்சோலையுளது,,எ-து. மனத்துள்ளே யுண்டாகிய குணமுடைத்தாய்ப்,பலர்க்குமேற உபகரித்துத்தண் ணளியுடைத்தாகிய விரிந்தமுகத்தையும், கண்ணோட்டத்தையுமு டைத்தாய்ப் பிரிதற்கரிய சாயலோடு கூடிநிற்பதென ஒருவள்ள ல்மேலும், நடுவுண்டாகிய நீரையுடைத்தாய் மறுத்தும் மருதும் பலவளங்களைக்கொடுத்துத் தட்பமுடைய வண்டுகளைத்தாங்கியம லர்களைத் தோற்றத்திலே யுடைத்தாய் மதுச்சோர்ந்து விட்டுப் போதற்கரிய நிழலுடைத்தாய் ஓங்கிநிற்பதென்று சோலைமேலு ஞ்செலுத்துக. எ-று. எனவரும்.

௩-வது. அடைவிரவிப்பொருள்வேறுபடுதல். [வ-று] வெ-"த ண்ணளிசேர்ந்தின்சொன்மருவுந்தகைமைத்தாய், எண்ணியவெப் பொருளுமெந்நாளும்-மண்ணுலகில்,வந்துநமக்களித்துவாழுமு கிலொன்று, தந்ததான்முன்னைத்தவம்.,, எ-து. குளிர்ந்த செய்தி யையும், இன்சொல்லையுமுடைத்தாய்,எல்லாருமாசைப்பட்டஎல் லாப்பொருளையும் காலம்வரையாது மண்ணுலகிலே பிறந்து எம் போல்வார்க் களித்துவாழும் என்று ஓர்வள்ளல்மேலும்,உலகத்தா ர்க்குக் குளிர்ச்சியோடுகூடக் கொடுக்கின்ற கொடைசேர்ந்துநன் றுய்ப்புகழ்மருவி, எண்ணப்பட்ட எல்லாப்பொருளையும்,எக்கால மும் உலகிற்குச்சேர்ந்துகொடுத்துவாழுமென,மேகத்தின்மேலு ஞ்செலுத்துக. எ-று. எனவரும். உலகிற்றோன்றும்பொருள்களுக் குமுதற்காரண மாதலால்காரணத்தைமேகங்கொடுப்ப அதன்கா ரியமாகிய பொருளெல்லாம்புலப்படும்.

ச- வது. பொருள்வேறுபட்டும் அடை விபரீதப்படுவது.— [வ-று.] வெ - "கடைகொலுலகியற்கைகாலத்தின்றீங்கால், அடை வதரிதாயிற்றன்றே - அடைவோர்க், கருமையுடைத்தன்றியந்தே ன்சுவைத்தாய்க், கருமைவிரவாக்கடல்.,, எ-து. மிகவுந்தாழ்வுடை த்துப்போலும் உயர்ந்தோர்செய்தி காலவியற்கையாலே மிடியா ய்ச்சென்றிரப்பவும்,வறுமையுற்றது. சேர்வோர்க்குஅருமையின் றித்தேன்போலுங் கிளவியுமுடைத்தாய், வெகுளி யில்லாக்கடல். எ-று. வறுமையுற்றான் ஓர்வள்ளல். சேர்வோர்க்கருமையும், இனி மையில்லாமையும், கருமையும் கடற்குண்டென்க. எனவரும். வ கையினுமென்ற மிகையான் இது பிற அலங்காரங்களோடுகூடிவ ருவனவுங்கொள்க.

(உகூ)

(௫௩)மனப்படுமொருபொருள்வனப்புவந்துரைப்புழி,யுலகுவர ம்பிறவாநிலைமைத்தாகி,யான்றோர்வியப்பத்தோன்றுவததிசயம்.

(எ-ன்) நிறுத்தமுறையானே, அதிசயமென்னும் அலங்காரமுணர்-ற்று. (இ-ள்) கவியாற்கருதியபொருளினதுவனப்பையுவந்துசொல்லுங்கால், உலகநடையிறவாததன்மைத்தாகிஉயர்ந்தோர் வியப்புறச்சொல்லுவது அதிசயமென்னும்அலங்காரமாம். எ-று.

(௫௪). அதுதான், பொருள்குணந்தொழிலையந்துணிவேதிரிபெனத், தெருளுறத்தோன்று நிலைமையதென்ப.

(எ-ன்) அவ்வலங்காரத்தைவிரித்துணர்-ற்று. (இ-ள்.) மேற்சொல்லப்பட்ட அவ்வலங்காரம் - பொருள்முதல் — திரிபீறுகச் சொல்லப்பட்ட ஆறுவகையான்தெளிவுறத்தோன்றுநிலைமையையுடைத்து. எ-று.

அவற்றுள், க-வது. பொருளதிசயம், [வ-று.] வெ - "பண்டுபுரமெரித்ததீமேற்படர்ந்தின்றும், அண்டமுகடுநெருப்பறு-தொண்டளிர்க்கை, வல்லிதழுவக்குழைந்தவடமேரு, வில்லிநுதன்மேல்விழி ,, எ-து. ஒளியையுடைய தளிர்க்கைக்கொடியாகியமலைமகள், தழுவக்குழைந்த வடமேருவாகியவில்லினையும், மேனோக்கிய நெற்றிக்கண்ணினையுமுடைய பரமசிவன் திரிபுரத்தை நகைத்தெரித்ததீயானது விரைந்தோடுதலால், இக்காலத்தும் அண்டத்துச்சியில் நெருப்பறுது. எ-று. எனவரும். நெருப்பு-இடி.

உ-வது. குணவதிசயம். [வ-று.] வெ-"மாலைநிலவொளிப்ப மாதரிழைபுனைந்த, நீலமணிகணிழலுமிழ - மேல்விரும்பிச், செல்லுமிவள்குறித்த செல்வன்பாற்சேர்தற்கு வல்லிருளாகின்றமறுகு ,, எ-து. மாலைக்காலத்திற்றோன்றிய நிலவானது ஒளிப்ப, ஆசையினாற்புனைந்த அணிகளிலுள்ள நீலமணிகள் ஒளியையுமிழ, இவள்காதலோடு இச்சித்துச்செல்லும்படி குறித்ததலைவனிடத்திற் போதற்கு தெருக்கள்செறிந்தஇருளாகின்றன. எ-று. எனவரும்.

௩-வது. தொழிலதிசயம். [வ-று.] வெ - "ஆளுங்கரியும்பரியுஞ்சொரிகுருதி, தோளுந்தலையுஞ்சுழித்தெறிந்து-நீள்குடையும், வள்வார்முரசு மறிதிரைமேற்கொண்டொழுக, வெள்வாளுறைகழித்தான்வேந்து.,, எ-து. மள்ளர்களும், யானைகளும், பரிகளும், சொரிகின்ற குருதிவெள்ளமானது, தோள்களையும் தலைகளையும் சுழித்துவீசி, நீண்டகுடைகளையும் வாரிறுக்கியபேரிகைகளையும் மடங்குகின்ற அலைகளையுடைய கடலின்மேல் அடித்துக்கொண்டோடும்படி, அரசன் வெண்மையாகிய வாளை உறையினின்று நீக்கினான். எ-று. எனவரும்.

௪-வது. ஐயவதிசயம். [வ-று.] வெ-" உள்ளம்புகுந்தேயுலாவுமொருகாலென், உள்ளமுழுதுமுடன்பருகும் - ஒள்ளிழைநின், கள்ளம்பெருகும்விழிபெரியவோகவல்வேன், உள்ளம்பெரிதோவுரை,, எ-து. ஒள்ளிழாய் நினதுகள்ளமிக்கவிழிகளானவை எனது

உள்ளத்துப்புகுந்து உலாவுதலாற் சிறிதாய்த் தோன்றின. அவை புகுந்தென்னுள்ளமுழுதும் தமதுள்ளடக்கினமையின் அவ்வுள் ளஞ்சிறிதாய்த்தோன்றிற்று. இவற்றுள் விழிபெரியவோ, உள்ளம் பெரிதோசொல்லுவாயாக. எ-று. எனவரும்.

ரு-வது. துணிவதிசயம். [வ-று] வெ-"பொங்கிச்செறிந்து புடைதிரண்டுமீதிரண்டு, செங்கலசக்கொங்கை திகழுமால், எங் கோன், தில்லையையன்னவரிவாவல்குற்றேரின்மேல், இல்லையோவுண் டோவிடை.,, எ-து. வளர்ந்துநெருங்கி அடிபருந்து திரண்டுமே லே இரண்டுசிவந்த கலசம்போன்ற கொங்கை விளங்காநின்றன. ஆதலால் எமது தலைவனாகிய பரமசிவனுடைய தில்லைப்பதியை ஒத்த இவருடைய அல்குலாகிய தேரின்மேல், இடை இல்லையோ உண்டு. எ-று. எனவரும். ஓகாரம்-இரண்டனுள் முன்னது எதிர்ம றை பின்னது அசைநிலை.

சு-வது. திரிபதிசயம். [வ-று.] வெ-" திங்கள்சொரிநிலவு சேர்வெள்ளிவள்ளத்துப், பைங்கிள்ளைபாலென்று வாய்மடுப்ப- அங்கயலே, காந்தர்முயக்கொழிந்தார்கைவறிதேநீட்டுவரால், எந் திழையார்பூந்துகிலாமென்று,, எ-து. நிலாமுற்றத்திருந்தவெள் ளிக்கிண்ணத்துள்ள நிலவைப்பசுங்கிளிகள்,பாலென்றுகருதிவாய் மடுக்கும். அதுவேயுமன்றி அங்கோர்புறத்துத்தங்கொழுநரைப் புணர்ந்துநீங்கினராகிய எத்திழையார் தாமொழித்த துகிலெனக் கருதி அந்நிலவிலே கையைநீட்டுவார். எ-று. எனவரும்.பிறவாற் றான்வருவனவுங் கண்டுகொள்க. (உஎ)

(ருரு) பெயர்பொருளல்பொரு ளெனவிருபொருளினு,மி யல்பின்விளைதிற னன்றியபலொன்று, தான்குறித்தேற்றுவ தற்கு றிப்பேற்றம்.

(எ-ன்) நிறுத்தமுறையானே தற்குறிப்பேற்றமென்னு மல ங்காரமுணர்-ற்று. (இ-ள்) பெயரும் பொருளும்,பெயராதபொ ருளுமென்னும் இருபொருட் கண்ணும் இயல்பாக நிகழுந்தன் மையொழியக்கவிகருதிய வேறொன்றனை அவற்றின்கண்ணேற்றி ச்சொல்வது தற்குறிப்பேற்றமென்னு மலங்காரமாம். எ-று.

அவற்றுள்-க-வது. பெயர்பொருட் டற்குறிப்பேற்றம்.— [வ-று] வெ-"மண்படுதோட்கிள்ளிமதயானைமாற்றரசர், வெண் குடையைத்தேய்த்தவெகுளியால்-விண்படர்ந்து,பாயுங்கொலெ ன்றுபனிமதியம்போல்வதூஉம், தேயுந்தெளி விசும்பினின்று ,, எ-து. மண்ணைத்தாங்கிய சோழனுடைய மதயானையானது மாறு பட்ட அரசர்களுடைய வெண்கொற்றக் குடையைச்சிதைத் தகோபத்தாலே நம்மேலும் வந்துபாயுமோவென்று குளிர்ந்தநி

றைமதிய மெனப்படுவதூஉந் தேயாநிற்கும்தெளிந்தவிசும்பின்கணின்று. எ-று. எனவரும்.

உ-வது. பெயராதபொருட்டற்குறிப்பேற்றம். [வ-று] — வெ-"வேனில்வெயிற்குலர்ந்தமெய்வறுமைகண்டிரங்கி, வானின் வளஞ்சுரந்தவன்புயற்குத்- தாழுடைய, தாதுமேதக்கமதுவுந்தடஞ்சினையாற், போதுமீதேந்தும்பொழில்,, எ-து. முதுவேனிற்காலத்து ஆதித்தன் வெம்மைக்காற்றுது உலர்ந்ததமதுமெய்வறுமைகண்டு இரங்கி,வானின்கணின்று மழைவளத்தைப்பொழிந்து தமதுவாட்ட நீக்கின முகிலுக்குத், தங்கணுண்டாகிய மேதக்கதாதோடுகூடிய மலர்களையும்,மதுவினையும்,தமதுபெரிய கிளைகளாகிய கைகளாலே மேனோக்கித்தாங்காநிற்கும். எ-று.எனவரும்.

(௫௬) அன்னபோலெனு மவைமுதலாகிய, சொன்னிலைவிளக்குந் தோற்றமுடைத்தே.

(எ-ன்) அவ்வலங்காரத்திற்குரியதோரிலக்கணமுணர் - ற்று. (இ-ள்) அன்னபோலவென்பன முதலாகிய உவமைச்சொற்புணர்ந்துவிளங்குந் தன்மையுமுடைத்து, அத்தற்குறிப்பேற்றமென்னுமலங்காரம். எ-று. [வ-று] வெ -"காமருதேர்வெய்யவனெங்குங்கரம்பரப்பித், தேமருவுசோலை மலர்திறக்கும் - தாமரையின், தொக்கவிதழ்விரித்துப்பார்க்குந் தொலைந்திருள்போய்ப், புக்கபுழைதிளைப்பான்போல்,, எனவரும். புழைதிளைத்தல்-ஆராய்தல். ()

(௫௭) யாதன்திறத்தினு மிதனினிது விளைந்தென், றேதுவிதந்துரைப்பதேதுவதுதான், காரகஞாபகமெனவிருதிறப்படும்.

(எ-ன்) நிறுத்தமுறையானேயேதுவென்னுமலங்காரமுணர்-ற்று. (இ-ள்) யாதானு மொருபொருட்டிறமிதனி னிதுநிகழ்ந்ததென்றுகாரணம்விதந்துசொல்வது ஏதுவென்னுமலங்காரமாம். அதுகாரகவேது வென்றும், ஞாபகவேதுவென்றும்,இரண்டுகூறுபடும். எ-று. (௫௰)

(௫௮) முதல்வனும்பொருளுங் கருமமுங்கருவியு, மேற்பதுநீக்கமு மெனவிவைகாரகம்.

(எ-ன்) காரகவேதுவாமாறுணர்- ற்று. (இ-ள்) கருத்தாமுதல்—நீக்கநிலையீறாகச் சொல்லப்பட்ட இவையாறுங் காரணமாகத்தோன்றுவது காரகவேதுவாம். எ-று.

அவற்றுள்-க-வது. கருத்தாகாரகவேது. [வ-று.] வெ -"எல்லைநீர்வையகத் தெண்ணிறந்த வெவ்வுயிர்க்கும், சொல்லரியபேரின்பந்தோற்றியதால்-முல்லைசேர்,தாதலைத்துவண்டுகொன்றைத்தாரலைத்துவண்டார்க்கப்,பூதலத்துவீழ்ந்தபுயல்,,எனவரும்.இஃது ஆக்கம்.

உ-வது. பொருட்காரகவேது.[வ-று] வெ-"கினிகொள்பெர் ழிலருவிகைகலந்துசந்தின், பனிவிரவிப் பாற்கதிர்க டோய்ந்து-தனியிருந்தோர், சிந்தையுடனேயுயிருணக்குந் தென்மலயந்,தந் தமிழ்மாருதம்.,, எனவரும். இஃது அழிவு.

௩-வது. கருமகாரகவேது. [வ-று] வெ-"மலையினலைகடலி ன்வாளரவின்வெய்ய, தலையிற்பயின்றதவத்தால் - தலைமைசேர், அம்மாதர்புல்லுமபயன் புயம்புணர, எம்மாதவம்புரிந்தோம் யாம்,, எனவரும்.

௪-வது.கருவிகாரகவேது.[வ-று]வெ-"காடத்தான்மாரியுங் கண்ணால்வெயிலும், நிரைவயிரகோட்டானிலவும்-சொரியுமால், நீளார்த்தொடையதுலனேரார்கலிங்கத்து, வாளாற்கவர்ந்தவளம்,, எனவரும். (௩௧)

(௫௬) அவையலபிறவினறிவதுஞாபகம்.

(எ-ன்) ஞாபகவேதுவாமாறுணர்-ற்று. (இ-ள்) அச்சொல்லப் பட்ட ஆறுகாரணமுமன்றிப்பிறகாரணத்தினுலுய்த்துணரத்தோ ன்றுவது ஞாபகவேதுவாம். எ-று. [வ-று.] வெ-"காதலன்மேலூ டல் கரையிறத்தல்காட்டுமால்,மாதர்நுதல்வியர்ப்பவாய்துடிப்ப-மீது,மருங்குவலைவின்முரிய வாளிடுகநீண்ட, கருங்குவளைசேந்த கருத்து,, எனவரும். (௩௨)

(௫௭) அபாவந்தானுமதன்பாற்படுமே.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரத்தைவிரித்துணர்-ற்று. (இ-ள்) அபாவமென்றது, ஒன்றனதின்மை அதுவு மவ்வேதுவின்பாற்ப டும். எ-று. (௩௩)

(௫௮) என்றுமபாவமுமின்மையதபாவமு, மொன்றினொன் றபாவமுமுள்ளதனபாவமு, மழிவுபாட்டபாவமு மெனவைந்த பாவம்.

(எ-ன்) அபாவத்தைவிரித்துணர்-ற்று. (இ-ள்) என்றுமபாவ முதல்.— அழிவுபாட்ட பாவமீறுகச்சொல்லப்பட்ட வைந்துப குதியையுடையதா மவ்வபாவம். எ-று. எனவேயிவ்வைந்தபாவமு மேதுவாகத்தோன்றுவது, அபாவவேது.

அவற்றுள் - க-வது. என்றுமபாவமென்பது. எக்காலத்து மில்லாமை.[வ-று.] வெ-"யாண்டுமொழிதிறம்பார் சான்றவரொம் மருங்கும், ஈண்டுமயில்களினமினமாய்-மூண்டெழுந்த, காலையே கார்முழங்குமென்றயாேற்காதலர்தேர், மாலைப்பநம்பால்வரும்,, எ-து இன்றுகாலையின்கண் இவ்விடத்துமயில்கள் கூட்டங் கூட்ட மாய்ச்சேர்ந்தெழுந்து அகவாநின்றன. அதுபற்றிக்கார்முழங்கா நிற்குமென்று வருந்தாதொழிக. அறிவானிறைந்தோர் எக்காலத்

றும் சொன்னசொற்பிறழார். ஆதலால் அன்னராகிய நமதுகாதலர்தேரானது மாலையிலே நம்மிடத்தில்வரும். எ-று. எனவரும்.

உ-வது இன்மையதபாவமென்பது, இல்லாமையினதில்லாமை. [வ-று] வெ-“காரார்கொடிமுல்லைநின்குழன்மேற்கைபுனைய, வாராமையில்லைவயவேந்தர்- போர்கடந்த, வாளையேர்கண்ணினுதன்மேல்வரும்பசலை, நாளையேநீங்குநமக்கு,, எ-து. கார்காலத்தேதாங்கிய கொடியையுடையமுல்லையினதுபூவினை, நின்னுடையகூந்தலின்கண் அலங்கரிக்கவருகின்றார் வெற்றியையுடைய அரசர். ஆகையால் போர்த்தொழின்முடித்த, வாள்போன்ற கண்களையுடையாய்,உன்னுடையநுதலின்மேலுண்டாகிய பசலைவிடியற்காலத்தேநீங்கும். ஆதலால்நமக்குயாதுகுறை. எ-று. எனவரும்.

கூ-வது ஒன்றினொன்றபாவமென்பது, ஒன்றின்கணொன்றனதில்லாமை [வ-று.] வெ- “பொய்ம்மையுடன்புணரார் மேலானோர் பொய்ம்மையும், மெய்ம்மைசூழ்மேலாரைமேவாவாம்-இம்முறையாற், பூவலர்ந்ததாரார் பிரிந்தாற் பொலன்குழையார், காவலர் சொற்போற்றல் கடன்,,எ-து உலகத்துமேலான அறிவையுடையார் பொய்ம்மையோடுகூடுவாரல்லர். அப்பொய்ம்மையும், மெய்ம்மைதழுவிய மேலான அறிவுடையாரைப்பொருந்தாவாகும். இத்தன்மையாற் பொலிவு விளங்கிய மாலையையுடையதலைவர் பிரிந்தகாலத்துப்பொற்குழையையுடைய மனையறக்கிழத்தியர்க்குக்காவற்கடன்பூண்டதலைவர் குறித்துரைத்த பருவத்தைநோக்குதல்கடனன்றோ.எ-று. எனவரும்.

ச-வது. உள்ளதனபாவமென்பது, ஓரிடத்தும்ஒருகாலத்துமுள்ளபொருள், பிறிதோரிடத்தும் பிறிதொருகாலத்து மில்லாமை. [வ-று.] வெ - “சரவொடுநின்றார்கடிமனையிற்கையேற், றிரவொடுநிற்பித்த தெம்மை - அரவொடு, மோட்டாமைபூண்ட முதல்வனைமுன்வணங்க, மாட்டாமைபூண்டமனம்,, எ-து. எங்களை, இரப்போர்க்குப் பயந்து காவல்கொண் டிருப்பவருடைய வீட்டிற்போய் கையேற்றிரந்து திற்கும்படிசெய்தது,பாம்பையும், பெரிய ஆமையோட்டையும், அணியாகக்கொண்ட பரமசிவனைமுற்பிறப்பில் வணங்கமாட்டாமையைக் கொண்டமனம். எ-று. எனவரும்.

ரு-வது. அழிவுபாட்டபாவமென்பது, முன்புள்ளதுஅழிவுபட்டிலதாதல். [வ-று.] வெ - “கழிந்ததிளமை களியயக்கந்தீர்ந்த, தொழிந்ததுகாதன்மேலூக்கம் - சுழிந்து, கருநெறியுங்கூந்தலார்காதலேனுப்தீர்ந்த, தொருநெறியேசேர்ந்த துளம்,, எ-து. முதுமைப்பருவம்வந்தது. செல்வத்தினால் வருங்களிப்பாகிய அறியாமைநீங்கிற்று. இச்சிக்கப்பட்ட பொருள்களைத் தலைப்படவே

ண்டிஎழாநின்ற உறக்கமு மொழிந்தது. சுருண்டு நெறிப்பையுடைய கரியகூந்தலார்மேல்வைத்த ஆசையாகியநோயுந்தீர்ந்தது. ஒரு நெறித்தாய சித்திலையச் சேர்ந்தது என்னுள்ளம் எ-று. எனவரும். (௫௪)

(௬௧) தூரகாரியமு மொருங்குடன்றோற்றமுங், காரியமுந்துறாஉங்காரணநிலையும், யுத்தமுமயுத்தமு முத்தையோடியவும்.

(எ-ன்) இதுவும்அவ்வேதுவலங்காரத்தினையே பிறிதொருவகையாக வகுத்துணர் - ற்று. (இ-ள்.) தூரகாரியமுதல்— அயுத்தமீறாகச் சொல்லப்பட்ட இவ்வைந்தும் முன்னைய வேதுவலங்காரத்தோடுநடக்கும். எ-று. முந்தையென்பது- முத்தையெனவலிந்துநின்றது.

அவற்றுள்-௧-வது. தூரகாரியமென்பது - ஒருவழிக்காரணநிகழப் பிறிதொருவழிக்காரியநிகழ்வது. [வ-று] வெ-"வேறொருமாதர்மேல்வேந்தனகநுதியால், ஊறுதரவிம்மா உயிர்வாடும்-வேறே, இருவரோமெய்வடிவி னேந்திழைநல்லார், ஒருவரோதம்மினுயிர்,, எ-து. தலைமகளாயினாள் தன்னையொழித்து ஒரு காதலிமார்பகத்தேவேந்தன் நகத்தின் நுனியினாற்குறியிட அதுகண்டு அழுது வருந்துவாள்; ஆதலால் இவ்வேந்திழையார் உருவத்தானிருவரெனினும், உயிரானது இவர்கட்கொன்றேபோலும். எ-று. எனவரும். ஒருமாது-தலைவி. வேறொருமாது-பரத்தை.

௨-வது ஒருங்குடன்றோற்றமென்பது, காரணமுங்காரியமுமொக்கநிகழ்வது, [வ-று] வெ-"விரிந்தமதி நிலவின்மேம்பாடும்வேட்கை, புரிந்தசிலைமதவேள்போரும்- பிரிந்தோர், நிறைதளர்வுமொக்க நிகழ்ந்தனவாலாவி, பொறைதளரும்புன்மாலைப்போழ்து,, எ-து முழுமதியினது நிலவின்மேம்பாடும், வேட்கை மிகுந்த சிலையையுடையனாகிய மதவேள்போரும், பிரிந்தோர்நிறைதளர்வும்ஒருங்குநிகழ்ந்தன வாதலால், தனித்தோருயிராகியபாரத்தைத்தாங்கமாட்டாத தன்மையும், புன்கண்மையுமுடைத்து இம்மாலைப்பொழுது. எ-று. எனவரும். இவையனைத்தும் - மாலைப்பொழுதில் நிகழ்ந்தனவென்க.

௩-வது. காரியமுந்துறாஉங்காரணநிலையென்பது, காரணத்தின்முன்னர்க் காரியநிகழ்வது. [வ-று.] வெ-"தம்புரவுபூண்டோர்பிரியத்தனியிருந்த, வம்புலவுகோதையர்க்குமாரவேள்-அம்பு, பொருமென்றுமெல்லாகம்புண்கூர்ந்தமாலை, வருமென்றிருண்டமனம்,, எ-து. தம்மைக்காக்குந்தொழிலைப்பூண்டதலைவர்பிரியத் தனித்துயிர்கொண்டிருந்தவாசனையுடையகோதையையுடையாருக்கு, மாரன்கணைதைக்குமென்று மெத்தென்ற மார்பகம்பு

னுகாநின்ற. அதுவேயுமன்றி, மாலைப்பொழுது வருமென்றவர்களுடையமனம் இருண்ட. எ-று. எனவரும்.

௪-வது. யுத்தமென்பது, காரணத்திற்கேற்ற காரியநிகழ்வது. [வ-று.] வெ - "பொன்னிவளநாடன் கைவேல்பொழிநிலவால், முன்னரசைந்துமுகுளிக்கும்- தன்னேர், பொரவந்தவேந்தர் புனைகடகச்செங்கை, அரவிந்த நூறுயிரம்,, எ-து. சோழனேந்திய வேலின்கணுண்டாகிய வெண்மைவிளக்கம் பரந்தநிலவினால், முன்னேநடுங்கி மொட்டியாநிற்கும், நேர்நின்றுபொருதற்கெதிர்ந்த வேந்தருடைய புனையப்பட்ட கடகத்தையுடையசிவந்தகையாகிய தாமரைகள்பலவுமுண்டு. எ-று, எனவரும்.

௫-வது. அயுத்தமென்பது, காரணத்திற்கேலாத காரிய நிகழ்வது [வ-று.] வெ- "இகன்மதமால்யானை யநபாயனெங்கோன், முகமதியின்மூரனிலவால்-நகமலர்வ, செங்கயற்கணல்லார்திருமருவுவாள்வதன, பங்கயங்கள்சாலப் பல்,, எ-து. வெற்றியையும், மதத்தையுமுடைய உயர்ந்த யானைகளையுடைய அநபாயனாகிய எம்மரசனுடைய முகமதியினுள்ள முறுவலின் வெண்ணிலவினால் செவ்வரியையுடைய கயல்போன்ற கண்ணினருடையதிருமருவுவாண்முகமாகிய தாமரைகள்பல. விளங்கமலர்கின்றன. எ-று. எனவரும்.

முடியுமென்றநுப்பெறவோதாது இயலுமென்றதனான் பிறவாற்றான் வருவனவுங்கொள்க. [வ-று.] வெ - "மாதருமைவாய்மழலைமொழியாலோ, ஓதுமறையினொலியாலோ - யாதாலோ- கோலமிருதிறனுக்கொண்டான்றிருமிடற்றின், ஆலமமிர்தானவாறு. எ-து. உமையாளுடைய வாயினுள்ள அழகிய மழலைச்சொல்லாகிய அமுதத்தைச்செவியாற் பருகியவதனாலோ, தானோதப்பட்ட வேதமந்திரவோசைத் தழைப்பினாலோ, இவ்விரண்டனுள்ளெதனாலோ, இரண்டு வடிவமாகத் திருமேனியைக்கொண்ட பரமசிவனுடைய சிறந்தமிடற்றிலுள்ள நஞ்சம் அமிர்தமாயவாறு தெரியாது. எ-று. எனவரும். இருதிறம் உருவும்,அருவும். இது- ஐயவேது. (௯௧)

(௯௨) தெரிபுவேறுகிளவாது குறிப்பினுந்தொழிலினு, மரிதுணர்வினைத்திற நுட்பமாகும்.

(எ-ன்) நிறுத்தமுறையானே நுட்பமென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்.) தெரிந்துகொண்டு வேறுபடமொழியாது குறிப்பினானுதல், தொழிலினானுதல்அரிதாகநோக்கி யுணருந்தன்மையையுடையது நுட்பமென்னும் அலங்காரமாம். எ-று.

அவற்றுள்-௧-வது. குறிப்பு. [வ-று] வெ - "காதலன்மெல்லுயிர்க்குக்காவல்புரிந்ததால், பேதையராயம்பிரியாத-மாதர்பு

டரிருள்கால்சீய்க்கும்பகலவனைநோக்கிக்,குடதிசையைநோக்குங்
குறிப்பு,, எ-து. தலைவனுடையமெல்லுயிர்க்குப் பரிகாரஞ்செய்
துபோலும், மடப்பத்தையுடைய ஆயத்தார்பிரியாது சூழப்ப
ட்டமாதர், உலகிற்குப் படர்செய்யுமிருளினதடி யறுக்கின்ற ஆ
தித்தனைப்பார்த்து மேற்றிசையைப் பார்க்குங் கருத்து. எ-று. எ
னவரும். இதிற் போந்தபொருள், மாலைக்காலத்துக்கூட்டநேர்ந்
தவாறு.

உ-வது. தொழில். [வ-று.] வெ-"பாடல்பயிலும்பணிமொ
ழிதன் பணைத்தோட்,கூடலவாவாற்குறிப்புணர்த்தும்- ஆடவற்கு,
மென்றீந்தொடையாழின்மெல்லவேவதைவந்தாள்,இன்றீங்குறிஞ்
சியிசை,, எ-து. பாடுந்தொழிலைப் பயிலும் குளிர்ந்தமொழியா
ள் தனிது பணைத்தோளினாலே தலைவனைத்தழுவவேண்டுமென்னு
மாசையினாலே தலைவற்குத் தன்னுள்ளக்கருத்தை யறிவியா நின்
றாள்,மெல்லிய இனியநரம்பையுடையயாழிலே முறையாகவாக்கி
னாள் தித்தித்தஓசையையுடையகுறிஞ்சியாழ்ப்பண்ணை. எ-று. எ
னவரும். குறிஞ்சிக்குக்காலம் இடையாமமாகலால், இடையாமத்
திற்கூட்டநேர்ந்தவாறு. (௬௪)

(௬௫) குறிப்புவெளிப்படுக்குஞ்சத்துவம்பிறிதின், மறைத்
துரையாடலிலேசமாகும்.

(எ-ன்) நிறுத்தமுறையானே இலேசமென்னு மலங்காரமு
ணர்-ற்று. (இ-ள்.) கருதியதுவெளிப்படுக்குஞ் சத்துவமாகிய கு
ணங்களைப் பிறிதொன்றால்நிகழ்ந்தனவாக மறைத்துச்சொல்லுவ
து இலேசமென்னும் அலங்காரமாம். எ-று. ❁ சத்துவமென்றது
வெண்பளிங்கிற் செந்நூல்கோத்தாற்செம்மை புறம்பொழிந்து
தோன்றுமாறுபோல, உள்ளங்கருதியதுபுலனாக்குங்குணம்.அது,
சொற்றளர்வு, மெய்வியர்ப்பு, கண்ணீர்நிகழ்ச்சி, மெய்விதிர்ப்பு,
மெய்ம்மயிரரும்பன்முதலியன. [வ-று] வெ-"கல்லுயர்தோட்
கிள்ளி பரிதொழுதகண்பனிசோர், மெல்லியலார் தோழியர்மு
ன்வேறென்று - சொல்லுவராற், பொங்கும்படைபரப்பிமீதெ
ழுந்தபூந்துகள்சேர்ந், தெங்கண்கலுழ்ந்தனவா லென்று,, எ-து.
மலைபோன்றதோள்களையுடைய சோழமன்னறிய பரியைத்தொழு
துநீர்வார்ந்த கண்ணையுடைய மென்னடையார் எமதுகண்ணீர்வா
ர்தற்குக்காரணம் சினத்தையுடைய சேனைபரந்து வருதலான் ஆ
காயத்திலெழுந்த பொலிவுடைய தூளியானது உட்புக்குக் கண்
ணீர்வார்ந்ததென்று தோழியர்க்கு வேறோருபாயத்தான் ம
றைத்துச்சொல்லினார். எ-று. எ-ம். வெ-" மதுப்பொழிதார்மன்
னவனை மால்கரிமேற்கண்ட,விதிர்ப்புமயிரரும்புமெய்யும்- புதை
த்தாள்,வளவாரணநெடுங்கை நூண்டுவலைதோய்ந்த, இளவாடைக்கு

ந்ததென்,, எ-து. தேன்பொழி தாரையுடைய சோழனை உயர்ந்தகளிற்றின்மேல்வரக்கண்டு அதனாலுண்டாகியமேனிநடுக்கத்தையும், மெய்ம்மயிரரும்புதலையும்; அவனேறியவளப்பமுடையகளிற்றின் நெடிய கையினுண்டாகிய நுண்ணிய நீர்த்திவலையைக்கொண்டு இளவாடைமிக்குவந்ததனால் நிகழ்ந்ததென்று தோழியர்க்குமறைத்துச்சொல்லினள். எ-று. எ-ம். வரும். (ருஎ)

(கூச) புகழ்வதுபோலப் பழித்திறம்புனைதலும், பழிப்பதுபோலப் புகழ்புலப்படுத்தலு, மவையுமன்னவென் றறைகுநருளரே.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரத்துச்சிலவேறுபாடுணர்-ற்று. (இ-ள்) ஒன்றனைப்புகழ்ந்தாற்போலப்பழித்துரைத்தலும், பழித்தாற்போலப் புகழ்ந்துரைத்தலும்என்னுமிரண்டும்அவ்விலேசத்தின்பாற் படுமென்றுரைப்பாருமுளர். எ-று.

அவற்றுள்-க-வது. புகழ்வதுபோலப்பழித்தல். [வ-று] வெ-"மேயகலவிவிளைபொழுதுநம்மெல்லென், சாயறளராமற்றுங்குமால்-சேயிழாய், போர்வேட்டமேன்மைப் புகழாளன்யாம்விரும்பித், தார்வேட்டதோள்விடலைதான்,, எ-து. தோழீ்கட்பாயாக, எம்மிற்பொருந்திய கலவி நிகழும்பொழுது அக்கலவிக்கண் ணமது மென்மை குன்றாதபடி பரிகரித்தொழுகுவான். எப்பொழுதும்போர்த்தொழிலைவிரும்பிய மேலாய புகழையுடையவன்.யாம்முற்காலத்துக் காதலித்து மாலைபிட்ட தோளையுடைய தலைவன்.எ-று. எனவரும். அக்காலத்தறிவழியாமையிற் பழிப்பாயிற்று.

உ-வது. பழிப்பதுபோலப்புகழ்தல். [வ-று] வெ-"ஆடன்மயிலியலி யன்பனணியாகம், கூடுங்கான் மெல்லென் குறிப்பறியான்-ஊடல், இளிவந்தசெய்கையிரவாளன்யார்க்கும், விளிவந்த வேட்கையிலன்,, எ-து. ஆடாநின்றமயில்போலுஞ்சாயலாய், நம்மீது அன்புவைத்ததலைவனுடைய அலங்கரித்த யார்பகத்தை யாங்கூடுங்கால் நம்மெல்லென்றநலம்பாராட்ட அறியானுதலாலும், ஊடற்கண் தனக்குத்தகாதனசெய்திரக்கப்பட்ட இரவாளனுதலாலும், யாவர்க்கும் வெறுக்கத்தக்கஆசைப்பாடுடையனல்லனுதலாலும், இகழ்தற்கேதுவாயினான். எ-று. எனவரும். அக்காலத்தறிவழிந்தமையாற் புகழாயிற்று. (ருஅ)

(கூரு) நிரனிறுத்தியற்றுத னிரனிறையணியே.

(எ-ன்) நிறுத்தமுறையானே நிரனிறை யென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்.) சொல்லையும் பொருளையும் நிரலேநிறுத்தியந்நிரலே பொருள்கொள்வது நிரனிறையென்னு மலங்காரமாம்—

எ-று. இயற்றுத லென்றமையின் மொழிமாற்றிப்பொருள்கொள் வதூஉமெனக்கொள்க.

அவற்றுள்-க-வது. நிரலேநிறுத்தி நேரேபொருள்கொள்வது. [வ-று] வெ-"காரிகைமென்மொழியாளேக்காற்கதிர்முலையால்,வார்புருவத்தாலிடையால்வாய்த்தளியேன்-நேர்தொலைந்த,கொல்விவடிநெடுவேற் கோங்கரும்புவிற்கரும்பு, வல்லிதமியேன்மனம்,, எனவரும். கொல்லி- பண். தொலைந்ததென்பது தொலைந்த தென ஈறுகெட்டது.

உ-வது. நிரலேநிறுத்திமொழிமாற்றிப்பொருள்கொள்வது [வ-று.] வெ-"ஆடவர்களெவ்வாறகன்றொழிவார்வெஃகாவும்,பாடகமுமூரகமும்பஞ்சரமா- நீடியமால், நின்முனிருந்தான்கிடந்தானிதுவன்றோ, மன்றார்மதிற்கச்சிமாண்பு,,எனவரும். (௫௬)

(௬௬) ஆர்வமொழிமிகுப்ப தார்வமொழியே.

(எ-ன்.) நிறுத்தமுறையானே, ஆர்வமொழியென்னு மலங்காரமுணர்-ற்று (இ-ள்) உண்ணிகழ்ந்தவார்வம்பற்றிநிகழுமொழி மிகத்தோன்றச்சொல்லுவதுஆர்வமொழியென்னுமலங்காரமாம்

[வ-று] வெ-"சொல்லமொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள்,புல்லவிருதோள்புடைபெயரா-மெல்ல, நினைவேமெனினெஞ்சிடம்போதாதெம்பால், வனைதாராய்வந்ததற்குமாறு,,— எ-து. நின்முன்னின்று மறுமொழிதர முயல்வேமாயின், எங்கள் மொழியானது தடுமாறிச் சோர்வுபடாநின்றது. நின்னிணைமலர்த்தோளைத்தழுவமுயல்வேமாயின், எங்களிரண்டுதோள்களும் இடமுண்டாக வளர்வனவல்ல, மெல்ல நின்புகழை நினைப்பேமாயின்,எங்களுள்ளம் இடம்போதாது. அலங்கரிக்கப்பட்டமாலையையுடையானே எம்மிடத்துநீவந்த இதற்குக்கைம்மாறுயாதென்று சொல்லப்படும். எ-று. (௫௭)

(௬௭) உண்ணிகழ்தன்மை புறப்பொழிந்தோங்க, வெண் மெய்ப்பாட்டி னியல்வதுசுவையே.

(எ-ன்) நிறுத்தமுறையானே சுவையென்னுமலங்காரமுணர்-ற்று. (இ-ள்.) உண்ணிகழுந்தன்மை புறத்துப்புலனாய் விளங்க, எட்டுவகைப்பட்ட மெய்ப்பாட்டானு நடப்பது சுவையென்னுமலங்காரமாம். எ-று. (௫௮)

(௬௮) அவைதாம், வீரமச்சமிழிப்பொடுவியப்பே,காமமவல முருத்திர நகையே.

(எ-ன்) இது அவ்வலங்காரத்தை விரித்துணர்-ற்று. (இ-ள்.) மேற்கூறிய எண்வகைப்பட்ட மெய்ப்பாடாவன. வீரமுதல்— நகையீறாகக்கூறியவைகளாம். எ-று.

அவற்றுள்-௧-வது. வீரம். [வ-று] வெ - "சேர்ந்தபுறவினிறைதன் றிருமேனி, யீர்ந்திட்டுயர்துலைதானேறினான் - நேர்ந்த, கொடைவீரமோமெய்ந் நிறைகுறையாவன்கட், படைவீரமோ சென்னிபண்பு,, எனவரும்.

௨-வது. அச்சம். [வ-று] வெ- "கைநெரித்துவெய் துயிர்ப்பக்காறளர்ந்துமெய்பனிப்ப, மையரிக்கணீர்ததும்ப வாய்புலர்ந் தேன்- வெய்ய, சினவேல்விடலையாழ்கையிழந்தசெங்கட், புனவேழமேல்வந்தபோது,, எனவரும்.

௩-வது. இழிப்பு. [வ-று] வெ- "உடைதலையுமூளையுமூன்றடியுமென்பும், குடருங்கொழுங்குருதியீர்ப்ப- மிடைபேய், பெருநடஞ்செய்பெற்றித்தேகொற்றப்போர்க்கிள்ளி, கருநடராச்சீறுங்களம்,, எனவரும்.

௪-வது. வியப்பு. [வ-று] வெ-"முத்தரும்பிச்செம்பொன் மூறிதழைந்து பைந்துகிரின், றொத்தலர்ந்துபல்கலனுஞ் சூழ்ந் தொளிரும்-கொத்தினதாம், பொன்னேர்மணிகொழிக்கும்பூங்காவிரிநாடன், தன்னேர்பொழியுந்தரு,, எனவரும். தரு-கற்பகத்தரு.

௫-வது. காமம். [வ-று] வெ- "திங்கணுதல்வியர்க்கும்வாய்துடிக்குங்கண்சிவக்கும், அங்கைத்தளிர்நடுங்குஞ்சொல்லசையும்- கொங்கை, பொருகாலுமூடிப் புடைபெயருங்காலும், இருகாலுமொக்குமிவர்க்கு,, எனவரும்.

௬-வது. அவலம். [வ-று] வெ-"கழல்சேர்ந்ததாள்விடலைகாதலிமெய்தீண்டும், அழல்சேர்ந்ததன்னெஞ்சயர்ந்தான் - குழல் சேர்ந்த, தாமந்தரியாதசையுந்தளிர்மேனி, யீமந்தரிக்குமோவென்று,, எனவரும்.

௭-வது. உருத்திரம் [வ-று] வெ-"கைபிசைபாவாய்மடியா கண்சிவவாவெய்துயிரா, மெய்குலையாவேரா வெகுண்டெழுந்தான்- வெய்யபோர்த், தார்வேய்ந்ததோளான் மகளைத்தருகென்று, போர்வேந்தன்றூதிசைத்தபோது,, எனவரும்.

௮-வது. நகை. [வ-று] வெ-"நாண்போலுந்தன்மனைக்குத் தான்சேறலிந்நின்ற, பாண்போலும் வெவ்வழலிற் பாய்வதூஉம்- காண்டோழி, கைத்தலங்கண்ணாக்களவு காண்பானொருவன், பொய்த்தலைமுன்னீட்டியற்றம்போந்து,, எனவரும். பாண்- பாணன்.

(௬௬) தான்றற்புகழ்வது தன்மேம்பாட்டுரை.

(எ-ன்) நிறுத்தமுறையானே தன்மேன்பாட்டுரையென்னுமலங்காரமுணர்-த்-று. (இ-ள்) ஒருவன் றன்னைத்தானே புகழ்வது தன்மேம்பாட்டுரையென்னு மலங்காரமாம். ஏ-று. [வ-று.] வெ- "எஞ்சினாரில்லையெனக்கெதிராவின் னுயிர்கொண், டஞ்சினாரஞ்சா

துபோயகல்க-வெஞ்சமத்துப், பேராதவராகத்தன்றிப்பிறர்முது கிற், சாராவென்கையிற்சரம்,, எனவரும். (௬௩)

(௭௰) கருதியது கிளவா தப்பொருடோன்றப், பிறிதொன்று ரைப்பது பரியாயம்மே.

(எ-ன்) நிறுத்தமுறையானே, பரியாயமென்னுமலங்காரமுணர்-ற்று. (இ-ள்) தான்கருதியதனைக்கூறாது அப்பொருடோன்றப்பிறிதொன்றனைக்கூறுவது, பரியாயமென்னு மலங்காரமாம். எ-று. [வ-று] வெ-"மின்னிகராமாதே விளாச்சாந்துடன்புணர்ந்து, நின்னிகராமாதவிக்கணின்றருணீ - தன்னிகராம், செந்தீவரமலருஞ்செங்காந்தட்போதுடனே, இந்தீவரங்கொணர்வல்யான்,, எனவரும். இது குறியிடத்துய்த்து நீங்குவாள் கூறியது. (௬௪)

(௭௧) முந்துதான் முயல்வுறூஉந் தொழிற்பயன் பிறிதொன்று, தந்ததாமுடிப்பது சமாயிதமாகும்.

(எ-ன்) நிறுத்தமுறையானே சமாயிதமென்னுமலங்காரமுணர்-ற்று. (இ-ள்.) முன்புதன்னால்முயலப்பட்டதொழிலினது பயனானது, அத்தொழிலானன்றிப், பிறிதொன்றுநிகழ்ந்ததாகக்கூறிமுடிப்பதுசமாயிதமென்னுமலங்காரமாம். எ-று [வ-று] வெ "அருவியங்குன்றமர்க்கன்பெயர்ப்ப, வெருவிய வெற்பரையன் பாவை-பெருமான், அணியாகமார்த்தழுவினாடான்முன், தணியாதூடறணிந்து,, எ-து. முன்புதீராத ஊடலாயிருக்கின்ற மலையரையன் பாவையாகியவுமையாள், அருவியினையுடைத்தாய், அழகுபொருந்தியிருக்கப்பட்ட கைலைமலையைஇராவணன்குலைப்பவெருவி முக்கட்கடவுளினது அழகியமார்பகத்தைஊடறணிந்துதானேதழுவினாள். எ-று. எனவரும். (௬௫)

(௭௨) வியத்தகுசெல்வமுமேம்படுமுள்ளமு, முயர்ச்சிபுனைத்துரைப்பதுதாத்தமாகும்.

(எ-ன்) நிறுத்தமுறையானே, உதாத்தமென்னுமலங்காரமுணர்-ற்று (இ-ள்) வியக்கத்தக்கசெல்வத்ததும், மேம்பட்டவுள்ளத்ததுமானஉயர்ச்சியை, மிகுத்துச்சொல்லுவதுஉதாத்தமென்னுமலங்காரமாம். எ-று. [வ-று] வெ. "கன்றும்வயவரிணங்கள்பலகவர்ந்தும், என்றுமவநிருபரினங்கவர்ந்தும் - ஒன்றும், அறிவரிதாநிற்குமளவினதாலம்ம, செறிகதிர்வேற்சென்னிதிரு,, எ-ம். —வெ- "மண்ணகன்றுதன்கிளையினீங்கிவனம்புகுந்து, பண்ணுந்தவத்திசைந்தபார்த்தன்முன்-எண்ணிறந்த, மீதண்டர்கோன்குலையும்வெய்யோர்குலந்தொலைத்தான், கோதண்டமேதுணையாக்கொண்டு.,, எ-ம். வரும். இதனுள் செல்வமிகுதியும், உள்ளமிகுதியும் வந்தவாறுகாண்க. (௬௬)

(௭௩) சிறப்பினும் பொருளினுங் குணத்தினுமுண்மை, மறுத்துப்பிறிதுரைப்பதவநுதியாகும்.

(எ-ன்.) நிறுத்தமுறையானே, அவ்நுதியென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்) சிறப்பினதூஉம், பொருளினதூஉம், குணத்தினதூஉமான உண்மையைமறுத்துப் பிறிதொன்றாகவுரைப்பது அவநுதியென்னுமலங்காரமாம். எ-று.

அவற்றுள்-க-வது. சிறப்பவநுதி. [வ-று] வெ- "நறைகமழ்தார்வேட்டார் நலனணியுநாணும், நிறையுநிலைதளரா நீர்மை- அறநெறிசூழ், செங்கோலனல்லன்கொடுங்கோலன்றெவ்வடுபோர், வெங்கோபமால்யானைவேந்து,, எ-து. நறுநாற்றத்தையுடைய மாலையைஆசைப்பட்டமடவாருடைய, அழகும், அணியும், நாணும், நிறையும், நிலைதளராதபடிதாங்கும் அறநெறியினையுடைத்தாகிய செங்கோலையுடையனல்லன், கொடுங்கோன்மையுடையவன்போர்க்களத்துப்பகைவரை அட்டவெஃகிய கோபத்தையுடையபெரியயானையையுடையவேந்தன். எ-று. எனவரும்.

உ-வது. பொருளவநுதி. [வ-று.] வெ-"நிலனும்விசும்பாநீர்காலுந்தீயாம், அலர்கதிராம்வான்மதியாமன்றி - மலர்கொன்றை, ஒண்ணறுந்தாரானொருவனியமானனுமாய், எண்ணிறந்தவெப்பொருளுமாம்,, எ-து விரிந்தகொன்றைப்பூவினாற்செய்தநறுநாற்றத்தையுடைய ஒள்ளிய மாலையை யணிந்தவனும், ஏகனுமாகிய பரமசிவன், நிலனும், ஆகாயமும், உயர்ந்தகாற்றும், நீரும், தீயும், பரந்தகதிரையுடைய இரவியும், வெள்ளிய மதியமுமாகிய ஏழாதலுமன்றி ஆன்மாவுமாய் எண்ணிறந்த எல்லாப்பொருளுமாவான். எ-று. எனவரும்.

௩-வது. குணவவநுதி. [வ-று.] வெ- "மனுப்புவிமேல்வாழுமறைவளர்க்குமார்ப், பனித்தொடையற்பார்த்திபர்கோனெங்கோன்-தனிக்கவிகை, தண்மைநிழற்றன்றுதற்றொழுத பேதையர்க்கு, வெம்மைநிழற்றாய் மிகும்,, எ-து. மாந்தர் பூவுலகினினிது உயிர்வாழ வேதாகமநெறியை வளர்க்கும், தண்ணிய ஆத்திமாலையையுடைய அரசர்க்குக்கோமானாகிய எம்மிறைவனாகியசோழராசனது தனிக்குடையானது தண்ணிய நிழலையுடையதன்று. அவனைக் கண்ட மடவார்க்குமிக்க வெய்யதன்மையைப் பண்ணாநிற்கும். எ-று. எனவரும்.

அவநுதியென்னுதாகுமென்றதனால் இவ்வலங்காரம்பிறவலங்காரங்களோடுகூடியும்வரும். [வ-று.] வெ-"நறவேந்துகோதை நலங்கவர்ந்தூறல்லர், மறவேந்தன்வஞ்சியானல்லன்- துறையின், விலங்காமைநின்றவியன்றமிழ்நாடர்நின், குலங்காவல்கொண்டொழுகுங்கோ,, எனவரும். இதுவினைபற்றியசிலேடையவநுதி.

இதனுள்வஞ்சியானல்லனென்பதற்குக்கருவூராயுடைய சோழனல்லனென்றும், பிறனாவஞ்சியாதொழிவானல்லனென்றும், சிலேடையாகப்பொருள்கொள்க. (௪௭)

(௭௪) ஒருவகைச்சொற்றொடர் பலபொருட்பெற்றி, தெரிவுதரவருவது சிலேடையாகும்.

(எ-ன்.) நிறுத்தமுறையானே சிலேடையென்னு மலங்காரமுணர் - ற்று. (இ-ள்) ஒருவகையாநின்ற தொடர்சொற் பலபொருள்களது தன்மைதெரியவருவது சிலேடையென்னும் அலங்காரமாம். எ-று. (௪௮)

(௭௫) அதுவே, செம்மொழி பிரிமொழி யென விருதிறப்படும்.

(எ-ன்.) இது அவ்வலங்காரத்தை விரித்துணர்-ற்று. (இ-ள்.) அச்சிலேடை செம்மொழிச்சிலேடையும், பிரிமொழிச் சிலேடையுமென இருவகைப்படும். எ-று.

அவற்றுள் - ௧-வது. செம்மொழிச்சிலேடை,ஒருவகையாநின்று பலபொருள் படுவது. [ வ-று. ] வெ - "செங்கரங்களானிரவு நீக்குந்திறம்புரிந்து, பங்கயமாதர் நலம்பயில- பொங்குதயத், தோராழிவெய்யோ னுயர்ந்தநெறியொழுகும், நீராழி நீணிலத்துமேல்,, எ-து. சிவந்தகரங்களான் இருள்கடியுந்திறமைமிக்குத், தாமரை காதலிக்கும் வனப்புடைத்தாக, மேனோக்கியதோற்றத்தையுடைய ஒரு காலூர்திப் பகலோன்வர நெறியொழுகுங் கடல்சூழ்ந்தபுவிமீதெனவும்; சிவந்தகைகளான்உலகினுள்ளோர்மிடிதீர்க்குந்தொழிலேமிக்குதிருமடந்தைசெல்வம்பெருகமேம்பாடாநின்றபொருள்வருவாயுடையானுமாய்த் தனிச்சக்கரத்தையுடையானுமாய்உலகினுள்ளாரால்விரும்பப்படும், விசேடநெறியேயொழுகுவான்கடல்சூழ்ந்த உலகத்தெனவும், வந்தவாறுகாண்க. எனவரும். இது ஆதித்தனுக்குஞ் சோழனுக்குஞ்சிலேடை.

௨-வது பிரிமொழிச்சிலேடைஒருவகையாநின்ற சொல்லைப் பிரித்துத் தொகை வேறுபடுத்துப் பலபொருளாகக் கொள்வது. [வ-று.] வெ - "தள்ளாவிடத்தேர்தடந்தாமரையுடைய, எள்ளாவரிமானிடர்மிகுப்ப - உள்வாழ்தேம், சிந்துந்தகைமைத்தேயெங்கோன்றிருவுள்ளம், நந்துந்தொழில்புரிந்தார்நாடு,, எ-து. அழகுகெடாத நிலங்களிலுண்டாயபகட்டேர் தாமரையைப்புணரவும், இகழப்படாதநெற்சூட்டைஉழவர்திரட்டவும், அத்தாமரைமலரிலுண்டாகியதேன்பொழியும் பெருமையையுடைத்து,எங்கோமானாகியசோழனுடைய, திருவுள்ளம்சிறக்கும் வகையொழுகினோர்நாடெனவும்; அசையாதவிடத்தேரொன்னுமாமுடைத்தாய்ப்,பெரியமலைச்சிகரங்களைத்தாவுமரைகளையுடைத்தாய், இகழப்படாதசி

ங்கப்போத்துகள் துன்பநூறுத்தவும்பட்டுநல்லோ ருள்ளங்களில் வாழுநாடுகளெல்லாம் அழிவுபடுந் தன்மையை யுடைத்தாமெங் கோமானாகியசோழன் திருவுள்ளம்வேறுபடுந்தொழில்பயின்றூர் வாழுநாடெனவும்வந்தவாறுகாண்க.எனவரும்.இதுசோழனுடையமனங்களிக்கும்படிநடந்தோருடைய நாட்டிற்கும், அவன்மனம்வெறுக்கும்படிநடந்தோருடையநாட்டிற்கும்சிலேடை. (௪௯)

(௭௯) ஒருவினைபலவினைமுரண்வினைநியம, நியமவிலக்குவிரோதமவிரோத, மெனவெழுவகையினுமியலுமென்ப.

(எ-ன்) இதுவும் அச்சிலேடையலங்காரத்தை விரித்துணர்-த்று (இ-ள்) ஒருவினைச்சிலேடைமுதல்-அவிரோதச்சிலேடையீருக்கூறிய - எழுவகையானு நடக்குமென்று சொல்லுவர் நூலோர்-எ-று.

அவற்றுள்-க-வது. ஒருவினைச்சிலேடைஎன்பது, ஒருவினையான்வருவது. [வ-று] வெ-"அம்பொற்பணைமுகத்துத்திண்கோட்டணிநாகம், வம்புற்றவோடைமலர்ந்திலங்க-உம்பர், நவம்புரியும்வானதியு நாண்மதியு நண்ணத், தவம்புரிவார்க்கின்பந் தரும்,, எ-து.அழகியபொலிவுடையபருத்தமுகத்தின்கண்ணேதிண்ணியகொட்டையுடைத்தாய் அழகுபெற்றிருந்தயானையானது கச்சோடுகட்டியபட்டம் விரிந்து விளங்கமுடிமீது ஒளிமிக்குப்பெரிதாகியகங்கையும் இளம்பிறையும் பொருந்தவிளங்குவது. தவஞ்செய்வோர்க்கு வேண்டிய இந்திரபதங்கண் முதலாகிய வின்பங்கொடுக்குமெனவும், அழகியபொன்னோடுகூடியவேய்மிடைந்தபக்கமுடைத்தாயத் திண்ணியசிகரங்களையுமுடைத்தாய், அழகுபெற்றமலை விரைகமழுமோடைபூத்து விளங்கவதன்மீது ஒளிமிக்குப்பெரிதாகிய கங்கையும் பிறையு மருவும்படி யுயர்ந்து தவஞ்செய்வோர்க்கு- அவர்வேண்டிய பொருள்களெல்லாங்கொடுக்குமெனவும் வந்தவாறுகாண்க. எனவரும். இதுவிநாயகருக்கும், மலைக்குஞ்சிலேடை.

உ-வது. பலவினைச்சிலேடையென்பது, பலவினையான்வருவது. [வ-று.] வெ-"தவிராமதுவுண்களிதளிர்ப்பநீண்டு, செவிமருவிச்செந்நீர்மை தாங்கி-குயிலிசையும், மின்னுயிரா நுண்ணிடையார்மென்னோக்குமேவலார்,இன்னுயிரையீர்கின்றன,,எ-து. இடைவிடாமல்நறவுண்ணவந்தகளிப்புண்டாகநீண்டுசெவிபுட்புக்கு நிறைந்துகோடாத நீர்மையவாகி யிருக்கப்பட்ட குயிற்குரல் பிரிந்தோருயிர்களை வருத்தஞ்செய்யாநின்றனவெனவும், இடைவிடாத நறவுண்ண வந்தகளிப்புண்டாக நீண்டு செவியளவுஞ்சென்று சிவந்த குளிர்ச்சியினை யுடையவாகிய மின்னையொத்த மருங்குலினையுடையார் மெல்லியவாகியகண்கள் தம்மைப்புணரு

ந்தலைவருடைய இனியவுயிரை நலியாநின்றன வெனவுங்கொள்க. எ-று. எனவரும். இது குயிற்குரலுக்கும், மடவார் கண்ணுக்குஞ் சிலேடை.

௩-வது. முரண்வினைச் சிலேடையென்பது, மாறுபட்டவினையான்வருவது. [வ-று.] வெ-"மாலைமருவி மதிதிரியுமாமணஞ்செய், காலைத்துணைமேவலார்கடிய- வேலைமிசை, மிக்கார்கலியடங்காதார்க்கும்வியன்பொழில்கள், புக்கார்கலியடங்கும்புள்" எ-து. மயக்கத்தைமருவிக்கருத்துவேறுபட மிகவு மணங்கமழுங்காலத்தித்தந் துணைவரைப்பொருந் தாதாரஞ்சக் கரைமீது மிக்குக்கடல்பொங்கியார்க்கும், அகன்ற பொழில்கள்புக்கு ஒலியடங்கும்பறவைகளெனவும், அந்தியம்பொழுது மருவித்திங்களுலாவமிக்கிருந்தகூட்டம் புரியுங்காலத்து தந்துணைவரைப் பொருந்தினர் விளங்கவெனவுங்கொள்க. எ-று. எனவரும். இதுபிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்குஞ்சிலேடை.

௪-வது. நியமச்சிலேடையென்பது, சிலேடித்தவற்றைநியமஞ்செய்வது. [வ-று] வெ-"வெண்ணீர்மைதாங்குவனமுத்தே வெறியவாய்க், கண்ணீர்மைசோர்வகடிபொழிலே-பண்ணீர, மென்கோலியாழேயிரங்குவனவேல்வேந்தே, நின்கோலுலாவு நிலத்து" எ-து. வெற்றியையுடைய வேல்வேந்தனே நின்செங்கோலுலாவப்பட்டவுலகத்து வெண்மைநிறத்தை யுடைத்தாயிருப்பன முத்தெனவும், விரைநாற்றத்தையுடைத்தாய் மதுச்சோரநிற்பன பெரியபொழிலெனவும், குளிர்ந்தவோசையையுடத்தாயழகோடு கூடிமெல்லியதாய்ப்பிறர்க்கு மனக்குழைவு கொடுப்பன யாழெனவுங் கிடந்தமையா லென்னப்பட்ட விவையொழிய அறிவின்மைதாங்குவதும், மிடியையுடைமையாற் கண்ணீர் சொரிவதும், பிறர்மனத்தளர்வது மில்லையெனக் கிடந்தவாறு கண்டுகொள்க. எனவரும்.

௫-வது. நியமவிலக்குச் சிலேடையென்பது, சிலேடித்தபொருளைநியமஞ்செய்து அந்நியமத்தைவிலக்குதல். [வ-று.] வெ-"சிறைபடுவபுட்குலமேதீம்புனலுமன்ன, இறைவநீகாத்தளிக்குமெல்லை - முறையில், கொடியனமாளிகையின் குன்றமேயன்றிக், கடியவிழ்பூங்காவுமுள" எ-து. தலைவனே நீகாத்தளிக்குநிலவரைப்பிற்சிறையுடைத்தாயிருப்பனபுட்சாதியே தீம்புனலுமன்னவென்றதனால் தித்தித்த புனல்களுஞ்சிறையுடைய. கொடியையுடையன குன்றம்போன்ற மாளிகைகளேயன்றிக்கடியவிழ் பூங்காவுமுளவென்றவிதனால்தேன்விரிந்த பூவையுடைத்தாகிய சோலைகளுங்கொடியையுடையன. எ-று. எனவரும். இதனால் சிறைபடு

தீதுங்கொடுமையும் இவன்காக்கு நிலத்தின்கணில்லையெனக் கிடந்தவாறுகண்டுகொள்க. எனவரும்.

ஈ-வது. விரோதச்சிலேடையென்பது - முன்னர்ச்சிலேடித்துஅவற்றைப்பின்னர்விரோதிப்பச்சிலேடிப்பது. [வ-று.] வெ "விச்சாதரனேனு மந்தரத்துமேவானல், அச்சுதனேனுமம்மாயனலன்-நிச்ச, நிறைவான்கலையானகளங்கனீதி, இறையானநகனெங்கோ,, எ-து. விஞ்சையர் ஆகாயத்திலேமேவுவார். சோழன்கேட்டின்கட்செல்லான். திருமால் மாயமுடையாதலால்மாயனெனப்படுவன். இவனம்மாயமிலனாதலால் மாயனென்னப்படான். நாடோறும்நிறைந்தவெண்மையெய்துங்கலைகளையுடையனாகிய சந்திரன் களங்கமுடையவன். நாடோறுங்கலைநூல்களாற்பெருக்கமுடையனேனும் சோழன் அகளங்கனென்னப்பட்டான். முக்கட்கடவுள் பொருப்புடையனாதலால் நகனென்னப் பட்டான். சோழனாகிய எங்கோன் தீவினையின்மையால் அநகனென்னப்பட்டான். எ-று. விச்சாதரன்.எ-து. விஞ்சையனுக்கும், சோழனுக்கும்பெயர். அந்தரமென்பது-ஆகாயத்துக்கும், கேட்டிற்கும்பெயர். அச்சுதனென்பது- திருமாலுக்கும், கேடில்லானுக்கும்பெயர். நிறைவான்கலையானென்பது-சந்திரனுக்கும், கலைகளானிறைந்தவனுக்கும்பெயர். நீதியிறையான் என்பது- முக்கட்கடவுளுக்கும், சோழனுக்கும்பெயர். எனவரும்.

எ-வது. அவிரோதச் சிலேடையென்பது- முன்னர்ச்சிலேடித்தபொருளை பின்னர் விரோதியாமற் சிலேடிப்பது. [வ-று] வெ -"சோதியிரவிகரத்தானிரவொழிக்கும்,மாதிடத்தான்மன்மதனைமாறழிக்கும்-மீதாம், அநகமதிதோற்றிக் குமுதமளிக்கும், தநதனிருநிதிக்கோன்றான்,, எ-து. ஒளியினையுடைத்தாகிய ஆதித்தன் தன்கரங்களாலே யிருளை நீக்குவான். இரவிகுலத்திற் றோன்றியசோழன்கைகளாலே பிறருடைய வறுமையைத்தீர்ப்பான். உமாதேவியையிடப்பாகத்திலுடையான்காமனை மாறுக்கியழிப்பான். இவன் மிகுந்ததிட்பமுடையனாதலால் மன்னவர்வலியினைமாறுகொண்டுகெடுப்பான். ஆகாயத்திற்றோன்றிய குற்றமற்றமதி உதயஞ்செய்து குமுதங்களையலர்த்தும். இவன் குற்றமற்ற அறிவுதோன்றிப்பூதலத்துக்கேற்ற மகிழ்ச்சியைக்கொடுப்பான். குபேரன் தனதனென்னும்பெயரையுடையவனும் இருநிதிக்குந் தலைவனுவான். இவனும் பிறருக்குப்பொருளையளித்து மிக்கபுகழுக்கு முதல்வனெனப்படுவான். எ-று. எனவரும். கு-பூதலம்.முதம்-மகிழ்ச்சி. இயலுமென்றொழியாது என்பவென்றமிகையான், இவ்வாறன்றிப்பிறவேறுபாட்டான்வருவனவுங்கொள்க. (௫௰)

(எஎ) குணந்தொழின்முதலிய குறைபடுதன்மையின், மேம்படவொருபொருள் விளம்புதல்விசேடம்.

(எ-ன்) நிறுத்தமுறையானே விசேடமென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்.) குணமும், தொழிலும், சாதியும், பொருளும், உறுப்புமுதலாயின குறைபடுதல்காரணமாக, ஒருபொருட்குமேம்பாடுதோன்றவுரைப்பது விசேடமென்னுமலங்காரமாம். எ-று

அவற்றுள்-க-வது. குணக்குறைவிசேடம், [வ-று] வெ-"கோட்டந்திருப்புருவங் கொள்ளாவவர்செங்கோல், கோட்டம்புரிந்த கொடைச்சென்னி-நாட்டம், சிவந்தனவில்லை திருந்தார்கலிங்கம், சிவந்தனசெந்தீத்தெற,, எனவரும்.

உ-வது. தொழிற்குறைவிசேடம், [வ-று] வெ-"எங்காமுகில்பொழியா நாளும்புனறேங்கும், பூங்காவிரிநாடன்போர்மதமாநீங்கா, வலைபட்டதாளணிகண்மாறெதிர்ந்ததெவ்வர், தலைபட்டதாட்டாமரை,, எனவரும்.

ங-வது. சாதிக்குறைவிசேடம், [வ-று] வெ - "மேயநிரைபுரந்துவெண்ணெய்தொடுவுண்ட, ஆயனார்மாறேற்றமார்புரிந்தார் தூய, பெருந்தருவும்பின்னுங்கொடுத்துடைந்தார்விண்மேற், புரந்தரனும்வானோரும்போல்.,, எனவரும்.

ச-வது. பொருட்குறைவிசேடம், [வ-று.] வெ -"தொல்லைமறைதேர்துணைவன்பாலிரண்டுவரை, எல்லையிருநாழிநெற்கொண்டோர்-மெல்லியலாள், ஒங்குலகில்வாழுமுயிரனைத்து மூட்டுமால், ஏங்கொலிநீர்க்காஞ்சியிடை,, எனவரும்.

ரு-வது. உறுப்புக்குறைவிசேடம், [வ-று] வெ-"பானையிரதம்பரியாளிவையில்லை, தானுமநங்கன்றனுக்கரும்பு -தேனார், மலர்ந்திரனல்வென்றடிப்படுத்தான்மாரன், உலகங்கண் மூன்றுமொருங்கு,, எனவரும். பிறவும்வந்தவழிக்கண்டுகொள்க. (ருக)

(எஅ) கருதியகுணத்தின் மிகுபொருளுடன்வைத், தொருபொருளுரைப்ப தொப்புமைக்கூட்டம்.

(எ-ன்) நிறுத்தமுறையானே ஒப்புமைக்கூட்டமென்னு மலங்காரமுணர்-ற்று' (இ-ள்) ஒருபொருளைச் சொல்லுமிடத்துத் தான்கருதியகுணமுதலாயினவற்றின்மிக்கபொருளைக்கூடவைத்துச்சொல்லுவதுஒப்புமைக்கூட்டமென்னுமலங்காரமாம. எ-று.

(எகூ) புகழினும்பழிப்பினும் புலப்படுமதுவே.

(எ-ன்) இது அவ்வலங்காரத்தை விரித்துணர்-ற்று. (இ-ள்.) அவ்வொப்புமைக்கூட்டமென்னு மலங்காரம், ஒன்றனைப்புகழ்தற்கண்ணும், பழித்தற்கண்ணுந்தோன்றும். எ-று.

அவற்றுள்-௧-வது. புகழொப்புமைக்கூட்டம், [வ-று.] வெ-"பூண்டாங்குகொங்கைபொரவேகுழைபொருப்பும், தூண்டாத தெய்வச்சுடர்விளக்கும்- நாண்டாங்கு, வண்மைசால்சான்றவருங்காஞ்சிவண்பதியும், உண்மைபாலுண்டிவ்வுலகு,, எனவரும்.

௨-வது. பழிப்பொப்புமைக்கூட்டம், [வ-று] வெ-"வெஃகிக்குடியலைக்கும்வேந்தனுமுள்பொருள், சொல்லாச்சலமொழிமாந்தரும், இல்லிருந்தெல்லைகடப்பாளிம்மூவர், வல்லேமழைமறுக்கும்கோள்,, எனவரும். (௫௩)

(௮௰) மாறுபடுசொற்பொருண் மாறுபட்டியற்கை, விளைதரவுரைப்பது விரோதமாகும்.

(எ-ன்.) நிறுத்தமுறையானே விரோதமென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்) மாறுபட்ட சொல்லானும், பொருளானும், மாறுபட்டுத் தன்மைவிளைவுதோன்ற உரைப்பது விரோதமென்னுமலங்காரமாம். எ-று.

[வ-று] வெ-"சோலைபயிலுங்குயின்மழலை சோர்ந்தடங்க, ஆலுமயிலினங்களார்த்தெழுந்த-ஞாலம், குளிர்ந்தமுகில்கறுத்தங்காபஞ்சிவந்த, விளர்ந்ததுணைபிரிந்தார்மெய்,, எ-ம், வெ-"காலையுமாலையுங் கைகூட்பிக்காரொருழுதான், மேலைவினையெல்லாங்கீழ்வாம்-கோலக், கருமான்றோல்வெண்ணீற்றுச் செம்மேனிப்பைந்தார், பெருமானைச்சிற்றம்பலத்து,, எ-ம், வரும்.

இனி இவ்வலங்காரம் பிறவலங்காரங்களோடு கூடியும்வரும். [வ-று] வெ-"இனமானிகலவெளியவெனினும், வனமேவுபுண்டரிகம்வாட்டும்-வணமார், கரியுருவங்கொண்டுமரிசிதறக்காயும், விரிமலர்மென்கூந்தல்விழி,, எனவரும். இது சிலேடைமுரண். (௫௪)

(௮௧) கருதியபொருடொகுத்தாங்கதுபழித்தற்கு, வேறொன்றுபுகழ்வது மாறுபடுபுகழ்நிலை.

(எ-ன்) நிறுத்தமுறையானே மாறுபடுபுகழ்நிலையென்னுமலங்காரமுணர்-ற்று. (இ-ள்) கவிதான் கருதியபொருளை மறைத்து அதனைப்பழித்தற்கு வேறொன்றனைப் புகழ்வது மாறுபடுபுகழ்நிலையென்னு மலங்காரமாம். எ-று.

[வ-று.] வெ-"இரவறியாயாவரையும்பின்செல்லாநல்ல, திருநிழலுந்தண்ணீரும்புல்லும்-ஒருவர், படைத்தனவுங்கொள்ளாவிப்புள்ளிமான்பார்மேற், றுடைத்தனவேயன்றோதுயர்.,, எ-ம். வெ-"போதுந்தளிரும்புனைந்துமணம்புணர்ந்து, சூதப்பணைதழீஇத்தோன்றுமரில்-மாதே, பலமாதவங்கள்பயின்றதோபண்டிக், குலமாதவியின்கொடி,, எ-ம், வரும். இவ்விரண்டும்யாசகனையும், களவிற்கூடிவந்த தலைவியையும்பழித்ததாம். (௫௫)

(அஉ) பழிப்பதுபோலப் பான்மையின்மேன்மை, புலப்பட மொழிவது புகழாப்புகழ்ச்சி.

(எ-ன்) நிறுத்தமுறையானே புகழாப்புகழ்ச்சியென்னுமலங்காரமுணர்-ற்று. (இ-ள்) பழித்தாற்போலும் பாகுபாட்டானொன்றற்கு மேம்பாடுதோன்ற வுரைப்பது புகழாப்புகழ்ச்சி யென்னுமலங்காரமாம். எ-று.

[வ-று.] வெ - "போர்வேலின் வென்றதூஉம் பல்புகழாற் போர்த்ததூஉம், தார்மேவுதிண்புயத்தாற்றாங்குவதூஉம்-நீர்நாடன், தோரடிக்கூர்வெம்படையாற்காப்பதூஉஞ்செங்கண்மால், ஓரடிக்கீழ்வைத்தவுலகு," எ-ம். வெ- "நினைவரியபல்புகழார் நின்குலத்துத்தொல்லோர், அனைவாயும்புல்லினாளன்றே-மநுநூல், புணர்ந்தநெறியொழுகும் பூழியநீயிந்நாள், மணந்த தடமலர்மேன் மாது," எ-ம், வரும். அஃதேல் மேல் இலேசத்தின்பாற்படுத்துக்கூறியபழிப்பதுபோலும்புகழ்புலப்படுத்தலோடு இதனிடைவேற்றுமையும், புகழ்வதுபோலப்பழித்திறம்புனைதலோடும் மாறுபடுபுகழ்நிலையென்பதனோடும் வேற்றுமையும்யாதோவெனின், மாறுபடுபுகழ்நிலை யென்பது ஒன்றனைப்புகழவொன்றற்குப்பழிப்பாய்த்தோன்றுவது. புகழ்வதுபோலப்பழித்திறம்புனைதல் ஒன்றனைப் புகழ்ந்தாற்போலப்பழிப்பது. அல்லதிவையிரண்டும் ஒருசாராசிரியர்இலேசத்தின்பாற்படுத்துக்கூறினரென்பதறிவித்தற்காண்டுக்கூறப்பட்டது. ஈண்டொருசாராசிரியர் வேறுபடுத்து வேறலங்காரமென்று வேண்டுவரென்பதறிவித்தற்குக் கூறப்பட்டது. (௫௬)

(அங) ஒருவகைநிகழ்வதற் கொத்தபயன்பிறிதிற்குப், புகழ்மைதீமை யென்றிவைபுலப்பட, நிகழ்வதாயினிதரிசனமதுவே.

(எ-ன்) நிறுத்தமுறையானே நிதரிசனமென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்.) ஒருவகையா னிகழ்வதொன்றற்குப் பொருந்தியதொருபயனைப்பிறிதொன்றற்குநன்மைபுலப்படநிகழ்வதாதல், தீமைபுலப்படநிகழ்வதாதல், செய்ததனைச்சொல்லுவதுநிதரிசனமென்னு மலங்காரமாம். எ-று.

க-வது. புகழ்மை. [வ-று] வெ-"பிறர்செல்வங்கண்டாற்பெரியோர்மகிழ்வுஞ்சிறியோர்பொறாததிறமும்-அறிவுறீஇச், செங்கமலமெய்மலர்ந்ததேங்குமுத மெய்யசந்த, பொங்கொளியோன் வீறெய்தும்போது," எனவரும்.

உ-வது. தீமை, வெ - "பெரியோருழையும்பிழைசிறிதுண்டாயில், இருநிலத்துள்யாருமறிதல்-தெரிவிக்கும், தேக்குங்கடலுலகில்யாவர்க்குந்தெள்ளமுதம், வாக்குமதிமேன்மறு," எனவரும்.

(அச) வினைபண்பெனவிவை யிருபொருட்கொன்றே,புண ர்மொழிவது புணர்நிலையாகும்.

(எ-ன்) நிறுத்தமுறையானே புணர்நிலையென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்.) வினையானும், பண்பானும், இரண்டுபொருளுக்கொன்றே பொருந்தச்சொல்லுவது புணர்நிலையென்னுமலங்காரமாம். எ-று.

அவற்றுள்-க-வது. வினைப்புணர்நிலை, [வ-று.]வெ-"வேண்டுருவங்கொண்டுகருகிவெளிபரந்து, நீண்டமுகிலுடனே நீர்பொழிந்த-ஆண்டகையோர், மேவல்விரும்பும்பொருணசையான்மெல்லாவி,காவல்புரிந்திருந்தோர்கண்,, எ-து. தான்வேண்டிய வுருவத்தைக்கொண்டு, கறுத்தநிறத்தையுடையதாய், ஆகாயத்திலேபரந்து பெரிதாயிருக்கப்பட்ட முகிலையொத்து நீர்பொழியாநின்றன. பிறரிச்சிக்குந்தன்மையையுடைத்தாகிய, உருவத்தையுடைத்தாய்அலங்கரித்தெழுதப்பட்ட மையோடுகூடியவெண்மையானீண்டிருக்கப்பட்டகண்கள். எ-று. எனவரும். ஆண்மைத்தன்மையையுடைய தலைவரைச்சேர்தலை விரும்பியிருக்கப்பட்ட காதலாலே தம்முடைய மெல்லிய உயிர்போகாதபடி காக்குந்தொழின்மிக்கிருக்கின்ற மடவார்கண்ணெனக் கூட்டுக. எனவரும்.

உ-வது. பண்புப்புணர்நிலை, [வ-று] வெ - "பூங்காவிற்புள்ளொடுங்கும்புன்மாலைப்போழ்துடனே, நீங்காதவெம்மையவாய் நீண்டனவாற்-றுங்காதல், வைக்குந்துணைவர்வருமவதிபார்த்தாவி, உய்க்குந்தமியாருயிர்,, எ-து. காதலிக்கப்பட்ட துணைவர் வருங்காலம்பார்த்திருந்த மடவாருடைய வுயிரானது, பூம்பொழிற்கண்ணே புட்களெல்லாம் ஒடுங்கப்பட்ட மாலைப்பொழுதுடனே நீங்காதுயரஞ்செய்து தானுங்கழியாதேநின்றது. எ-று. எனவரும். ஒன்றேமொழிவதென்றொழியாது புணரமொழிவதென்றதனான் மூன்றும்வேற்றுமை யதனொடியைந்தவொருவினையெனப்பொருள்படவரினை அவ்வலங்காரமாவதெனக்கொள்க. (ருஅ)

(அகூ) பொருள்பரிமாறுதல் பரிவருத்தனையே.

(எ-ன்) நிறுத்தமுறையானே பரிவருத்தனையென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்.) ஒருபொருள், ஒன்றற்கொன்றுகொடுத்து ஒன்றுகொண்டனவாகச்சொல்லுவது பரிவருத்தனையென்னு மலங்காரமாம். எ-று. [வ-று]வெ-"காமனைவென்றோன்சடைமதியுங்கங்கையும், தாமநிழலோரொன்றுதாங்கொடுத்து - நாமப், பருவாளரவின்பணமணிகடோறும்,உருவாயிரம்பெற்றுள,, எ-து. காமனைவென்ற முக்கட்கடவுளுடைய சடைமீதுண்டாகிய மதியும், கங்கையும், வருத்தஞ்செய்யுந் தன்மையுடைத்தாய்,பெரிதாயிருக்கப்பட்ட ஒளியினையுடைத்தாய், அங்கேயிருந்த அரவின்ப

டங்களிலுண்டாகிய மணிகடோறும் தத்தம் உருவத்தைக்கொடுத்து, ஆயிரமாயிரம் உருவம்பெற்றன. எ-று. எனவரும். (௫௧)

(௮௬) இன்னார்க்கின்ன தியைகவென்றுதா, முன்னிய துவிரித்தல் வாழ்த்தெனமொழிப.

(எ-ன்) நிறுத்தமுறையானே வாழ்த்தென்னு மலங்கார முணர்-ற்று. (இ-ள்) இன்னதன்மையை யுடையார்க்கு இன்னதுநிகழ்கவென்று கவிதாங்கருதியவதனை விரிப்பது வாழ்த்தென்னுமலங்காரமென்றுசொல்லுவர்புலவர். எ-று. [வ-று.] வெ-"மூவாத் தமிழ்பயந்தமுன்னூன்முனிவாழி, ஆவாழிவாழியருமறையோர்- காவிரிநாட்டண்ணலநபாயன்வாழியவன்குடைக்கீழ், மண்ணுலகில்வாழிமழை" எனவரும். (௫௨)

(௮௭) மொழியப்பட்ட வணிபலதம்முட், டழுவவுரைப்பது சங்கீரணமே.

(எ-ன்.) நிறுத்தமுறையானே சங்கீரணமென்னு மலங்கார முணர்-ற்று. (இ-ள்) மேற்சொல்லப்பட்ட வலங்காரங்கள் பலவுந் தம்முட்பொருந்தவுரைப்பது சங்கீரணமென்னு மலங்காரமாம் எ-று. [வ-று] வெ-"தண்டுறைநீர்நின்றதவத்தாலளிமருவு, புண்டரிகநின்வதனம்போன்றதால்-உண்டோ, பயின்றுளம்பருகும்பான்மொழியாய்பார்மேல், முயன்றுமுடியாப்பொருள்." எ-து. குளிர்ந்த துறைநீரிலேதவம்புரிந்தவிதனாலேவண்டுமருவப் பட்டதாமரை நின்முகமண்டலத்தை யொப்பப்பெறுதலால் அணைந்தாருள்ளத்தைவவ்வும் பால்போன்றமொழியினையுடையாய் உலகத்தில்முயற்சியால்முடியாதபொருள்யாதுமில்லை எ-று. உண்டோவென்பதற்கு- இல்லையெனப்பொருள்கொள்க. எனவரும், இதனுள், தண்டுறை நீர்நின்ற தவமென்பது, தற்குறிப்பேற்றம். தவத்தாலென்பது- கருமகாரகவேது. அளிமருவும் என்பது, சிலேடை. புண்டரிகநின்வதனம் போலுமென்பதுஉவமை. முயன்றும்முடியாப்பொருள் என்பது, வேற்றுப்பொருள்வைப்பு. உளம்பருகும்பான்மொழியாயென்பது, சுவை. இப்பாட்டிற்கு இவ்வண்ணமே பலவலங்காரங்களுங்காண்க. இது உறுப்பனைத்துங் கூடியகலவைபோல்வதோர் தன்மைத்தாய் ஒன்றற்கு மிகுதிதோன்றும லுரைப்பதாமெனக்கொள்க. அல்லதூஉம், சந்தனத்தோடு கருப்பூரம்விரவினும், மான்மதத்தோடு கருப்பூரம் விரவினும், சந்தனமும், மான்மதமுமென்பதல்லது, கலவையெனப்படா அவ்வாறே இரண்டலங்காரங்கூடின் இவ்வலங்காரமெனப்படா பலவலங்காரங்களு மீரண்டிறந்தனவேகூடின் இவ்வலங்காரமாவது. இரண்டிறந்தபலவென்பதே ஈண்டாசிரியர்கருத்தெனக்கொள்க.()

(௮௮) ஒப்புமையில்லது மையமுமுவமையிற், செப்பியதி
றமுமுவமவுருவகமு, முருவகத்தடக்கலு முணர்ந்தனர்கொளலே

(எ-ன்) உவமையுருவகங்களைக்குறித்ததோர்புறனடையுண
ர்-ற்று. (இ-ள்.) ஒப்புமையில்லதென்பது, பொதுநீங்குவமை,
[வ-று] தாமேயுவமைதனக்கு எ-ம், ஐயமென்பது. ஐயவுவமை,
[வ-று] தாதளிவண்டு, எ-ம், வரும். இதனுள்-தாமரைகொல், முகங்
கொலென்பது. இவையிரண்டும் முன்னருவமை யனைத்திற்கும்
பொதுவாக ஓதிய சூத்திரத்துட்பண்பு தொழில்பயனென்பன
காரணமாக, ஒன்றாகியும், பலவாகியும், வரும்பொருளோடுபொரு
ளியையவைத்துஒப்பித்தன இல்லையென்றுகுற்றங்கூறப்படாது.
என்னையெனிற்றானே யுவமைதனக்கென்புழிப் பொருளையெடுத்
தேஇவற்றினுஞ் சிறந்ததிஃதென்றுரைத்ததனையே அவற்றதொ
ப்புமைவேண்டியதிலனாயின் முன்னர்க் கூறான் அதனாற்பொரு
ளோடு பொருளியையவைத்தே யவற்றின் ஒப்புமைகருதியே உ
ரைத்தானுமெனக்கொள்க. ஐயவுவமையும். தாமரைகொல்முகங்
கொலென்புழித் தாமரைக்கும், முகத்திற்கும், பொதுவாகியதொ
ருதன்மைகருதியுரைத்தது. அவ்வாறன்றேற்றாமரையோடு முகத்
திடை ஐயந்தோன்ற வுரையானென்பது. இனி உவம வுருவகம்,
"வதனமதியமுதய மதியமே யொக்கும்" என்புழி முன்குணப்
பொருளை முக்கியப்பொருளோடு உருவகஞ்செய்து வதனமதி
யமென்றான், பின்னர் முக்கியப்பொருளோடு உவமித்து உதய
மதியமே யொக்குமென்றான் என்பது. முன்னருருவகஞ்செய்த
வதனைப் பின்னரும் உவமிப்பது புனருத்தமாம் பிறவெனின் ஆ
காது. அஃதோர்சொல்லுதல் வகைமையான், முன்னர்விளக்கமும்,
கிளர்ச்சியுநோக்கிமுக்கியப்பொருளோடுகுணப்பொருளை ஒற்று
மைகொளுத்தி உருவகஞ்செய்து பின்னரும், மதர்ப்புஞ் செம்
மையுநோக்கி மதுநுகர்ந்தான் முகம் உதயமதியம் போலுமெ
ன்று உவமித்தமையின்வேற்றுமையுடைத்தாதலால்உருவகத்துள்
ளேஅடக்கப்பட்டது. உவமைப்பாற்படுத்தினும் இஃதொக்கும்.
ஐயமும். ஒப்புமையில்லதூஉமென்னாது, முறைபிறழக்கூறியவத
னான், இவ்வோத்தின் ஒழிபுள்ளனதழீஇக்கொள்கவென்பது. இவை
இடத்திற்கேற்றவுவமையும், காலத்திற்கேற்றவுவமையும், பொரு
ளிற்கேற்றவுவமையும், பண்பிற்கேற்றவுவமையும், சாதிக்கேற்றவு
வமையும், மரபிற்கேற்றவுவமையும், பிறவாறு பொருத்தமுடைய
னசிறப்புடையவெனக்கொள்க. அவற்றுள், இடத்துக்கேற்றது.
[வ-று] ஆ- "பாற்பகையிழந்த நோயொடுசிவணி, ஆர்பழுத்த
ன்னமறுநீர்மொக்குள்" எ-து. காலத்துக்கேற்றது [வ-று] "நிழற்
கோபமல்க" எ-து. பொருளுக்கேற்றது [வ-று.] "கூடலுமலையும்

போலக்கரியோய்,, எ-து. பண்பிற்கேற்றது [வ-று] "புலிநாவன்ன புல்லிதழ்த்தாமரை,, எ-து. சாதிக்கேற்றது [வ-று] ஆ "சேற்றுவளர்தாமரைபயந்தவொண்கேழ், நூற்றிதழலரினிறைகண்டன்ன, வேற்றுமையில்லாவிழுத்துணைப்பிறந்து, வீற்றிருந்தோரை யெண்ணுங்காலை,, எ-ம். விலங்கொடுமக்களனையர். எ-ம், வரும். மரபிற்கேற்றது. [வ-று.] "கவிர்போலுஞ்செவ்வாய்,, எ-ம். "பவளம்போலுஞ்செவ்வாய்,, எ-ம், வரும். இவைசெம்பருத்தியுங்கரவீரமுமுளாயாமையின். பிறவலங்காரங்கட்கு மிவ்வாறேயேற்புடையன அறிந்துபாடுவன சிறப்புடைத்தெனக்கொள்க. அல்லதூஉம், பண்புதொழில்பயனெனப்பனசொல்லின்றி அவற்றிற்குமுதலாகியபொருள்கூற அவ்வாற்றாற் பெறப்படும் உவமையுமுள. அவைவருமாறு. வெ- "மயில்போன்மடப்பிடிபோன்மான்போன்மழலைக், குயில்போலொளிர்மென்கொடிபோற்-பயிலும், கொலைவாரணத்துங்கன்கோழிக்கோன்கொல்லி, மலைவாணர்காதன்மகள்,, எனவரும். இதனுள் மயில்போலுமியலுடையாளெனவும், பிடிநடைபோலுநடையுடையாளெனவும், மானோக்குப்போலுநோக்குடையாளெனவும், குயின்மொழிபோலு மொழியுடையாளெனவும், கொள்ளக்கிடந்தமையறிந்துகொள்க. கூ "சுட்டிக்கூறுவுவமையாயிற், பொருளொடுபுணர்த்துப்பொருந்துவகொளலே,, என்பவாகலின். ()

(அக) பாவிகமென்பது காப்பியப்பண்பே.

(எ-ன்) திருத்தமுறையானே பாவிகமென்னு மலங்காரமுணர்-ற்று. (இ-ள்) பாவிகமென்றுசொல்லப்படுவதுபொருட்டொடர்நிலைச்செய்யுட்டிறத்துக்கவியாற்கருதிச் சொல்லப்படுவதொருகுணம். எ-று. அஃது அத்தொடர்நிலைச் செய்யுண் முழுவது நோக்கிக்கொள்ளப் படுவதல்லது தனித்தொருபாட்டானுணர்க்கிக்கொள்ளப்புலப்படாதது. [வ-று] ஆ- "பிறனில்விழைவோர் கிளையொடுங்கெடுக, பொறையிற்சிறந்த கவசமில்லை, வாய்மையிற்கடியதோர் வாளியில்லை,, என்பனபோலக்கிடப்பது. அஃதேல், முன்னதிகாரச்சூத்திரத்துப் பிறவலங்காரங்களுடன் வைத்ததனையீண்டுப்புறனடையின் பின்னாகவைத்த தென்னையெனின், பிறவலங்காரங்களொருபாட்டானே யுணரப்புலப்படும். இஃதன்னதன்று. ஆகலானாசிரியன் வாழ்த்தென்னு மலங்காரத்தின்பின்னரே விரவியல்வைத்தது. முன்னரளவே விரவுவனவென்பதறிவித்தற்கு இஃதன்னதன்றென்பது. (கா.)

பொருளணியியல்-முற்றிற்று.

---

ஆக இயல் - உ-க்கு - சூத்திரம் - அக.

உ

முருகன்றுணை

# மூன்றுவது

# சொல்லணியியல்.

(கூய) எழுத்தின்கூட்ட மிடைபிறிதின்றியும், பெயர்த்தும் வேறுபொருடரின் மடக்கெனும்பெயர்த்தே.

என்பது, சூத்திரம். இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின், சொல்லானும்அணிகள தியல்புணர்த்தினமையிற் சொல்லணியியலென்னும் பெயர்த்து. அஃதேற் குற்றமுங் குணமும் ஈண்டேயன்றேகூறியது இதனைச் சொல்லணியியலென்ற தென்னையெனின், அவையுங்கூறினரேனும், அவை சிறுபான்மையவாகலானும், இத்துணைச்சிறப்புடையன வன்மையானும், சொல்லானுமணிகளதுதலைமையும், பன்மையுநோக்கி அப்பெயர்த்தாயிற்றென்பது. -என்னை. “ஒருபெயர்ப்பொதுச்சொ லுளபொருளொழியத், தெரிபுவேறுகிளத்தறலைமையும் பன்மையு, முயர்திணைமருங்கினுமஃறிணைமருங்கினும்,, என்பவாகலின். இவ்வோத்தினுள் இச்சூத்திரமென்னுதலிற்றோவெனின், பொதுவகையான்மடக்கென்னும் அலங்காரமுணர்-ற்று.

(இ-ள்.) எழுத்துகளது தொகுதி, பிறவெழுத்தானும், சொல்லானும், இடையிடாதும், இடையிட்டும்வந்துபெயர்த்தும் வேறுபொருளைவிளைப்பது, மடக்கென்னுமலங்காரமாம். எ-று ❋ எழுத்துகளது தொகுதி எனவே இரண்டுமுதலெனைத்தெழுத்தானும்வருமெனக்கொள்க. பிறிதின்றியுமென்பது எதிரது தழீஇய வெச்சவும்மை. பெயர்த்துமென்பது, இறந்தது தழீஇய வெச்சவும்மை. (க)

(கூக) அதுதான், ஓரடிமுதலா நான்கடிகாறுஞ், சேருமென்ப தெளிந்திசினோரே.

(எ-ன்) இதுவுமதனையே வகுத்துணர்-ற்று. (இ-ள்) அம்மடக்கு, நான்கடிச்செய்யுளுள்ளேமடக்குங்கால் ஓரடிக்கண்ணும், ஈரடிக்கண்ணும், மூன்றடிக்கண்ணும், நான்கடிக்கண்ணு நடக்குமென்று சொல்லுவர் தெளிந்தோர். எ-று. ❋ நான்கடிச்செய்யுளென்பதுஆற்றலாற்போந்தபொருள். ஓரடிக்கண் வருவன-முதலடிக்கண்ணும், இரண்டாமடிக்கண்ணும், மூன்றுமடிக்கண்ணும், நான்காமடிக்கண்ணும் வருவனவாம். அவைமுன்னர்க்காட்டுதும். (உ)

(கூஉ) ஆதியிடைகடை யாதியோடிடைகடை, யிடையொடுகடைமுழு தெனவெழுவகைத்தே.

(எ-ன்.) இதுவுமது. (இ-ள்.) அம்மடக்கு, ஆதிமடக்கும், இடைமடக்கும், கடைமடக்கும், ஆதியோடிடைமடக்கும், ஆதியோடுகடைமடக்கும், இடையோடு கடைமடக்கும், முழுதுமடக்குமென எழுவகைப்படும். எ-று. (௩)

(௯௩) ஓரடியொழிந்தன தேருங்காலை, யிணைமுதல்விகற்ப மேழுநான்கு, மடைவுறும்பெற்றியி னறியத்தோன்றும்.

(எ-ன்.) இதுவுமது. (இ-ள்.) ஓரடிமடக்கொழிந்தனவாராயுங்காலத்துத்தொடையின்இணைமுதலாகியவிகற்பத்தொடையேழும்நான்குமாகியபதினொன்றும்போலவிளங்கித்தோன்றும். எ-று. இஃது அவைமுதலீரடிக்கண்ணுமடக்குதலும், முதலடிக்கண்ணும்மூன்றாமடிக்கண்ணுமடக்குதலும், முதலடிக்கண்ணும் நான்காமடிக்கண்ணுமடக்குதலும், கடையீரடிக்கண்ணுமடக்குதலும், இடையீரடிக்கண்ணுமடக்குதலும், இரண்டாமடிக்கண்ணு நான்காமடிக்கண்ணுமடக்குதலும், என்னும், இரண்டடிமடக்காறும், ஈற்றடியொழித்தேனைமூன்றடிக்கண்ணுமடக்குதலும், முதலடியொழித்தேனை மூன்றடிக்கண்ணு மடக்குதலும், முதலயலடி யொழித்தேனை மூன்றடிக்கண்ணு மடக்குதலும், ஈற்றயலடி யொழித்தேனைமூன்றடிக்கண்ணுமடக்குதலும், என மூன்றடிமடக்கு நான்கும், நான்கடியு மடக்கிய முற்றுமடக்கொன்றுமாகிய பதினொன்றும், யாப்பதிகாரத்துள், தொடைவிகற்பங்கட்குநாற்சீரடியுளோதியவதனை நான்கடிச்செய்யுளுளோதினர், ஒப்பின்முடித்தலென்னுந்தந்திரவுத்தியான். இப்பதினொன்றும், ஓரடிமடக்கு நான்கும், ஆகிய பதினைந்தும், மேற்கூறிய ஏழுகூறுபாட்டோடுகூட்ட, நூற்றைந்துவகைப்படும். அவை, இடையிட்டு வருவனவும், இடையிடாதுவருவனவும், இடையிட்டுமிடையிடாதும்வருவனவுமாகிய மூவகையோடுங்கூட்ட முந்நூற்றொருபத்தைந்துவகைப்படும் அவற்றுட் சில்வருமாறு.

அடிமுதன்மடக்கு.

க-வது. முதலடிமுதன்மடக்கு, [வ-று] வெ-"துறைவா துறைவார்பொழிற்றுணைவர்நீங்க, உறைவார்க்குமுண்டாங்கொல் சேவல்-சிறைவாங்கிப், பேடைக்குருகாரப்புல்லும்பிறங்கிருள்வாய், வாடைக்குருகாமனம்," எ-து. நெய்தனிலத்தலைவனே, துறையின்கண் பெருத்திருக்கப்பட்ட பொழிலிடத்துத் தலைவர்பிரிய தனித்திருப்பார்க்கும் உண்டாகுமோ சேவற்குருகானது தன்சிறகைவளைத்துப் பேடைக்குருகை யிறுகப்புல்லு மிக்கவிருளினையுடைய யாமத்துக்கண் வாடைக்காற்றுவந்தாற் கரையாதமனம். எ-று. எனவரும்.

உ-வது. இரண்டாமடிமுதன்மடக்கு. [வ-று] வெ-"கனிவா

யிவள்புலம்பக்காவலநீநீங்கில்; இனியாரினியா ரெமக்குப்-பனிநாள்,இருவராத்தாங்குமுயிரன்றியெஃகுண்,டொருவராத்தாங்குமுயிர்,,எ-து. கனிபோன்றமொழியினையுடைய இவள்புலம்பும்படி அரசனே,நீபிரிந்தகாலத் தெங்களுக்கினியரா யினிமையானசொற்களைச்சொல்லிக்காக்குந்தலைவரினியாவர்பனிக்காலத்துத்தம்மிற் புணர்ந்துபிரியாதிருந்த இருவருங் கூடித்தாங்காநிற்கு முயிரல்லதொருதிறத்தாராகப்பிரிந்திருந்தமடவார் தாங்குமுயிரொக்காலத்தெவ்விடத்துண்டு சொல்லுவாயாக. எ-று. எனவரும்.

௩-வது மூன்றாமடி முதன்மடக்கு. [வ-று] வெ-"தேங்கானன்முத்தலைக்குந் தில்லைப்பெருந்தகைக்கு, ஓங்காரத்துட்பொருளாமொண்சுடர்க்கு- நீங்கா, மருளாமருளாதரித்துரைக்குமாற்றம், பொருளாம்புனைமாலையாம்,, எ-து. தேனையுடைத்தாகிய கழிக்கானற்கணுண்டாகியமுத்தம்வந்தலைக்கப்படாநின்றதில்லைமூதூர்ப்பெரியோனுக்கு, பிரணவத்தி னுட்பொருளா யிருக்கப்பட்டஒள்ளியசோதிவடிவாகிய கடவுளுக்கு இடையறாத ஆசையாகியமயக்கத்தினை மேற்கொண்டு ஒருவன்சொல்லுகிற அறிவழிந்த சொல் பொருளுமாம். புனைப்பட்ட மாலையுமாம். எ-று எ-றும்.

௪-வது. ஈற்றடிமுதன்மடக்கு. [வ-று] வெ-"இவளளவுந்தியுமிழ்வதென்கொலோதோயும், கவளமதமான்கடத்திற்-றிவளும், மலையார்புனலருவிநீயணுகாநாளின், மலையாமலையாநிலம்,, எ-து. தலைவனே, நீ யிவளைவந்து அணையாதபோது தோயுங் கவளமதமான் கடத்தையொத்துப்புரளும் அருவியையுடைத்தாகியபொதியமலைக்கண்ணேபிறந்து எல்லார்க்குங்குளிர்ச்சியைச்செய்கின்றதென்றல் இவளளவும் அனலைச்சொரிகின்ற காரணமென்சொல்லுவாயாக. எ-று.எனவரும். இவைநான்குமோரடிமுதன்மடக்கு.

௫-வது. முதலடியும்,இரண்டாமடியுமுதன்மடக்கு[வ-று] வெ-"நினையாநினையாநிறைபோயகலா, வினையாவினையாமிலமால்-அனையாள், குரவாருங்கூந்தற்குமுதவாய்க்கொம்பிற், புரவாளநீபிரிந்தபோது,, எ-து. தலைவனே, குரவம்பூவினையுடைத்தாகிய கூந்தலினையும்,அல்லிமலரையொத்த வாயினையுமுடைத்தாயிருப்பதொருவஞ்சிக்கொம்புண்டாயின் அக்கொம்புபோன்றவள் இவளை நீபிரிந்தபொழுதே நின்னையாங்கணினைத்து எங்கணிறையாயினதெங்களைவிட்டுநீங்கிவருந்தி ஒருசெய்தியுமறியோ மாகுதுமாதலால் எங்களைப்பிரியாதொழிவாயாக. எ-று. எனவரும். நின்னையென்பது-நினையெனவிகாரமாயிற்று.

௬-வது. முதலடியுமூன்றாமடியுமுதன்மடக்கு. [வ-று]வெ "அடையாரடையாரரணழித்தற்கின்னல், இடையாடுநெஞ்சமேயேழை-உடையேர், மயிலாமயிலாமதர்நெடுங்கண்மாற்றங், குயி

லாமென்றெண்ணல்குழைந்து,, எ-து. உன்சத்தியின்றெருப்ப இளை யாடுமுள்ளமே நீதலைவியினுடையசாயலை மயிலாமென்றும், அவளதுமதர்த்தநெடியகண்ணை வேலாமென்றும், மொழியானது குயிலாமென்றும், இளகி நினையாதொழிவாயாக. அன்றி நினைத்தியாயின், பகைவரடையும் அரிய அரணையழித்தற்குவருத்தமாம். எ-று.

எ-வது. முதலடியு மீற்றடியு முதன்மடக்கு. [வ-று.] வெ- "மானவாமானவா நோக்கின்மதுகரஞ்சூழ், கானவாங்கூந்தலெங் காரிகைக்குத்-தேனே, பொழியாரந்தார்மேலு நின்புயத்துமேலும், கழியாகழியாதரவு,, எ-து. மநுகுலவேந்தனே, மான்களாகைப்படுநோக்கத்தையும், வண்டுகள் மதுவுண்ணும்படிசூழுங்கூந்தலையுமுடைய எமதுகாரிகையாட்கு, மதுப்பொழியு நினதழகிய ஆத்திந்தார்க்கண்ணும், நினது புயத்தின்கண்ணும், மிக்க ஆசை நீங்காது. எ-று. எனவரும்.

அ-வது. மூன்றாமடியுநான்காமடியுமுதன்மடக்கு. [வ-று] வெ- "மாதருயிர்தாங்கவள்ளல்வருநெறியில், பேதுறவுசெய்யும் பெரும்பாந்தள்-யாதும், வளையாவளையா மெனுமாமதமா, விளையாவிளையாவெழும்,, எ-து. வள்ளலே, இவளுயிரைத்தாங்குதல்காரணமாக நீ வரும்வழியில் நடுக்கஞ்செய்யவற்றாகிய பெரும் பாந்தளானவை யாதொன்றையும் வளையாதே கொல்லவற்றாகிய பெரியமலைபோன்றமதத்தையுடைய யானைகளை யிரையாகநினைந்து இரைந்துகொண்டுவரும். எ-று. எனவரும்.

கூ-வது. இரண்டாமடியுமூன்றாமடியுமுதன்மடக்கு [வ-று] வெ-"குரவார்குழலாள்குவிமென்முலைதாம், விரவாவிரவாமென் றென்றல்-உரவா, வரவாவரவாமெனநினையாவையம், புரவாளர்க்கிதோபுகழ்,, எ-து. குராம்போதினையுடைய குழலாளாகத்துத்திரண்ட மெல்லியமுலையின்மேல் நீ கூடாத இரவின்கண்ணுண்டாகியமெத்தென்றதென்றல்வரவு அதனைப்பாயும்பாம்பாகுமென நினையாதேபிரிகின்றாய் தலைவனே, வையங்காவலைப்புரிந்த தலைவற்கு இதுவோபுகழ். எ-று. எனவரும்.

ய-வது. இரண்டாமடியு மீற்றடியு முதன்மடக்கு. [வ-று] வெ- "மழையார்கொடைத்தடக்கைவாளபயனெங்கோன், விழையார்விழையார்மெல்லாடை -குழையார், தழையாருணவுங்கனியாமினமு, முழையாமுழையாமுறை,, எ-து. மழைபோலு மிகக்கொடுக்கவல்ல பெரியகையினையும், ஒளியினையுமுடைய அபயனாகியவெங்கோனைப்பகைத்தார் விரும்பப்பட்ட அரியமெல்லியவாடைதளிரார்ந்ததழையாம் உணவுங்கனிகளாம் அவர்களுக்குச்சுற்றமும் மான்களாம் இருப்பிடமும் மலைக்குகையாம். எ-று. எனவரும். இவையாறுமீரடிமடக்கு.

௱௩-வது. ஈற்றடியொழித்தேனை மூன்றடியுமுதன்மடக்கு. [வ-று] வெ-“இறைவாவிறைவால்வளைகாத்திருந்தியார், உறைவாருறைவார்புயலால்- நறைவாய், வண்டளவுவண்டளவு நாளின்மயிலாலக், கண்டளவினீர்பொழியுங்கண்,, எ-து. இறைவனே, இறைக்கண் வெள்ளியவளைகள் வீழாதபடி காத்திருந்து யாருயிரோடு வாழ்வார். துவலைமிக்கபுயலினாலே தேனையிடத்திலேயுடையவளப்பத்தையுடையமுல்லைமலரின் மீதே வண்டுகளிருக்கப்பட்டகார்காலத்து மயிலாடக்கண்டு அளவில்லாத நீரைப்பொழியுங்கண்களாதலால். எ-று. எனவரும்.

௱௪-வது. முதலயலடியொழித்தேனை மூன்றடியுமுதன்மடக்கு. [வ-று] வெ-“கொடியார்கொடியார்மதின்மூன்றுங்கொன்ற, படியார்பனைத்தடக்கைநால்வாய்க்- கடியா, ருரியாருரியாமெமையாளவோதற், கரியார்கரியார்களம்.,, எ-து. கொடியராயுள்ளாருடைய கொடிகள்பொருந்திய மூப்புரத்தையுமெரித்ததன்மையினையுடையார் பனைபோன்ற பெரியகையினையுடைய யானையின் அச்சத்தைத்தருந் தோலையுடையார் எம்மை யாண்டுகோடற்குரியார் யாவராலும்புகழ்தற்கரியார் கறுத்தமிடற்றினையுடையார்.— எ-று. எனவரும். மதில்-மூப்புரம்.

௱௫-வது. ஈற்றயலடியொழித்தேனை மூன்றடியு முதன்மடக்கு. [வ-று] வெ-“மலையுமலையுமகிழ்ந் துறையும்வேயும், கலையுங்கலையுங்கடவும்-தொலைவில், அமரியெமக்கரணுமென்னுமவர் முன்னிற், குமரிகுமரிமேற்கொண்டு,, எ-து. பொருப்பின்கண்ணும், கடலின்கண்ணும், மகிழ்ந் துறைபவளும், இளம்பிறையைச்சூடுபவளும், கலையேற்றை யுகைப்பவளும், தொலைவில்லாத அமரினையுடையவளுமாகியாள் எமக்குக்காவலா மென்பார்க்குமுன்னே சிங்கத்தை யுகைத்துத்தோன்றுங் குமரி. எ-று. எனவரும்.

௱௬-வது. முதலடியொழித்தேனை மூன்றடிக்கண்ணுமுதன் மடக்கு. [வ-று] வெ-“பாலையாழ்தன்னிற்பதிற்றிரட்டிவெய்தன்றே, மாலைவாய்மாலைவாயின்னிசை - மேலுளா, மேவலர்மேவலர்மெல்லாவிவாட்டாதோ, காவலர்காவலராங்கால்,, எ-று. பாலையாழ்தன்னிலும், இருபதுமடங்கு வெம்மையை யுடையதன்றே அந்திப்பொழுதின்கண் விறலிபாட்டின்கணுண்டாகிய இன்பத்தையுடைய இசைமேலாயுள்ள புகழ்ச்சியைப் பொருந்தாதார்விரும்பிக்கூறுமலர் எங்களுடைய மெல்லியவுயிரை வாட்டாதொழியுமோ தலைவர் நம்மைக்காவாரான காலத்து. எ-று. எனவரும். இவைநான்கு மூன்றடிமுதன்மடக்கு. மாலை-பாட்டு.

௱௭-வது. முற்றுமடக்கு [வ-று] வெ-“வளையவளையசுரஞ்சென்றார்மாற்றம், புளையபுளையவெனப்பொன்னே-உளையல், நீ

னையநனைய தொடை நம்மைவேய்வர், வினையர்வினையர்விரைந்து,, எ-று. களவொழுக்காகாது வரையவேண்டுமென்னும் ஆசையாற் பிரிந்து மலைகளையுடைய சுரங்கடந்து போயினார் நின்னிற் பிரியேன் பிரியின் ஆற்றேனென்று முற்காலத்து நம்மைத்தேற்றிய வார்த்தை இப்பொழுது நமக்குப்பெரிதாகிய குற்றத்தைப்பயந்தனவென்று பொன்னையொப்பாய் சொல்லற்பாலையல்லை மதுவோடும், குளிர்ச்சியோடுங்கூடிய தொடையலை, நமக்குச்சூட்டுவர் அவர்பலசெய்தியு மறிவினையு முடையராதலால் விரைந்துவந்து எ-று. எனவரும். இவைபதினைந்து மடிமுதன்மடக்கு.

இடைமுற்றுமடக்கு. [வ-று] வெ - "மனமேங்குழையகுழையவாய்மாந்தர், இனநீங்கரியகரிய-புனைவதனத், திள்வாவிவாவிக்கயிலொக்குமென்னுள்ளம், கள்வாளவாளவாங்கண்,, எ-று. மனந்தளர்ந்தமானிநோக்கத்தையுடையவுமாய்க், குழையைத்தொடர்வனவுமாய், இளைஞர் குழாம்விட்டுநீங்குதற் கரியனவுமாய்க், கருமையையுமுடைத்தாயிருப்பன. அலங்கரிக்கப்பட்டமுகத்திலுலாவிப் பொய்கைக்கயல்போலும் என்னுள்ளத்தைகளவுகொண்டவளுடைய அவ்வாளொத்தகண்கள். எ-று. எனவரும். ஒழிந்த,இடைமடக்குவந்தவழிக்கண்டுகொள்க.

இறுதிமுற்றுமடக்கு. [வ-று.] வெ - "மாலையருளாதுவஞ்சியான்வஞ்சியான், மேலையமரர்கடைந்தவேலைவேலை, வளையார்திரைமேல்வருமன்னமன்ன, இளையாளிவளைவளை,, எ-று. வஞ்சிக்காவலன் றன்மார்பின்மாலைகொடாதே வஞ்சனைசெய்து கொள்வானல்லன். மேலாயுள்ளவானவர்கடைந்தகாலத்துக்கரையினையுஞ்சங்குகளையுமுடையகடலிற்றோன்றின, திருமகளாகிய அன்னத்தையொத்த பேதையாகிய இவளுடைய வளைகளை. எ-று. எனவரும். ஒழிந்தவிறுதிமடக்கு வந்தவழிக்கண்டுகொள்க. இவையனைத்துமோரிடத்தேமடக்கின. இவளை என்பது-வேற்றுமைமயக்கு.

முதற்கண்ணுமிடைக்கண்ணு முற்றுமடக்கு. [வ-று.] வி-ம். "கொண்டல்கொண்டலர் பொழிறொறும் பண்ணையாய்ப்பண்ணையாயத்துள்ளார், வண்டல்வண்டலர்தாதுகொண்டியற்றலின்வருமணமணன்முன்றிற், கண்டல்கண்டகமகிழ்செயவோதிமங்கலந்துறைதுறைவெள்ள, மண்டன்மண்டலமுழுதுடன்வளைதருவளைதருமணிவேலை,, எ-று. கீழ்காற்றுமோதஅலர்கின்றசோலைதோறும், இசையை ஆராயும், விளையாடற்கூட்டமகளிர்சிற்றிலைவண்டுகளாற்றிய தாதுக்களைக்கொண்டுசெய்தலால், மணம்வீசு மணல்முற்றமாகிய கைதைமீதேகண்டார்கண்களிகூரும்படி அன்னங்கள்கூடியிருக்குந்துறையில் வெள்ளத்தைக்கொண்டு எறுதொழிவாயாக. நிலவலய முழுதையுஞ்சூழும் சங்குகளரற்றப்பட்டமு

தீதுகளையுடையகடலே. எ-று. எனவரும். ஒழிந்தவாதியோடிடை மடக்குவந்தவழிக்கண்டுகொள்க.

முதற்கண்ணு மிறுதிக்கண்ணு முற்றுமடக்கு. [வ-று]— வி-ம்- "நிரையாநிரையாமணிபோனிறைகோடல்கோடல், வரையாவரையாமிருண்முன்வருமாலைமாலை, விரையாவிரையாவெழுமின்னொளிமேகமேகம், உரையாவுரையாரினுமொல்லனமுல்லைமுல்லை,, எ-து. ஆனிரைகளின் ஒழுங்காமணியோசைபோல எங்கள் நிறையைக்கவராதேகாந்தளே, அளவிடவரிய அரையாமிருளுக்கு முன்னேவரும் மயக்கத்தைச்செய்யுமாலையானது, கடுகியிரைந்து மின்னொளியையு முடைத்தாய்ச்செல்லு மேகங்களும், ஒன்றுஞ் சொல்லாத புகழையுடைய தலைவரினும் பகையாயின முல்லைநிலத்துள்ள முல்லைக்கொடிகளும். எ-று. எனவரும்.

இடைக்கண்ணு மிறுதிக்கண்ணு முற்றுமடக்கு. [வ-று]— வி-ம்- "வருகம்புளினம்புளினம்பயில்வேலைவேலை, ஒருகாலுலவாவுலவாவருமோதமோத, வருகேதகைகேதகைசேர்தருமன்னமன்ன, பெருகாதனவேதனவேரசைமாதர்மாதர்,, எ-து. வாராநின்ற கம்புட்குழாங்கள் மணற்குன்றுகளிலேயிருக்குங்காலத்தில், கடலானது ஒருகாலுங்குறையாது உலாவிக்கரையை மோதவரும். அருகேநின்று தடுக்கப்பட்டதாழைமீதே அன்னங்கள்சேருமாதலால் தலைவனே, பெருகாதொழியுமோ முலைகளினழகழியு மடவாருடையகாதல். எ-று. எனவரும்.

அடிதோறு மூன்றிடத்துமடக்கு.—[வ-று.] வி-ம்- "களைகளையமுளரியருகடைகடையமகளிர்கதிர்மணியுமணியும், வளைவளையகரதலமுமடைமடையமதுமலருமலையமலைய, இளையிளைஞர்கிளைவிரவியரியரியின்மிசைகுவளைமலருமலரும், கிளைகிளைகொளிசையளிகண்மகிழ்மகிழ்செய்கெழுதகைய மருதமருதம்,, எ-து. களைகளைவாங்கத் தாமரையருகேயடைந்த, கடைசியருடைய, ஒளியினையுடையமணிகளும், இடப்பட்டவளைசூழ்ந்தகையும், அடைத்தமடையிலுள்ள தேனையுடையபூவும், மிகவுமாறுபடாநிற்க, இளங்குறுமாக்கள் சுற்றங்கூடி, அறுத்திடப்பட்ட அரியின் மீதேகுவளைப்பூவுமலரும், இனத்துடனேகிளையென்னுநரம்பினின்றுமெழுமோசைபோலப் பாடாநின்ற வளிக்குலங்கள் மகிழ மலரினுண்டுமகிழ்செய்யும்விளக்கமுடையமருதமரத்தினையுடைய மருதநிலமானது. எ-று. எனவரும். ஒழிந்தமுழுதுமடக்குவந்த வழிக்கண்டுகொள்க.

இனியிடையிட்டுவந்தமடக்கும் இடையிட்டும் இடையிடாதும்வந்தமடக்குமிவ்வாறேகண்டுகொள்க. அவற்றுள் சிலவருமாறு

இடையிட்டுவந்தமுதன்முற்றுமடக்கு. [வ-று] வி-ம்-"தோடுகொண்டளிமுரன்றெழக்குடைபவர்குழல்சோர்ந்த, தோடுகொண்டதேமலர்சுமந்தகில்கமழ்ந்தவர்தந், தோடுறைந்தசெஞ்சாந்தணிதிரண்முலையிடைதோயத், தோடுதண்புன னித்திலந்துறைதொறுஞ்சொரியும்,, எ-து. கூட்டங்கொண்டு வண்டுகளொலித்தெழப்புனலாடுவார் குழலிற்சோர்ந்த இதழ்கொண்டதேனோடுகூடிய மலரைச்சுமந்து அகிலுறைப்பட்ட மாதருடையதோளைச்செறிந்தசெஞ்சந்தனம் அணியப்பட்ட திரண்டமுலையிடை ஒழுகியோடாநின்றகுளிர்ந்த புனலானது முத்துக்களைத்துறைகடோறுங்குவியாநிற்கும். எ-று. எனவரும்.

இடையிட்டுவந்த இடைமுற்றுமடக்கு. [வ-று] வி-ம்-"பாவிநாடொறும்படியவாம்பல்புகழ்ப்பாப்பின், இரவிசீறியபடியவாம்பரியெரிகவர, விர்விமான்பயில்படியவாம்வேய்தலைபிணங்கும், அருவிவாரணம்படியவாம்புலர்பணைமருதம்,, எ-து. வழுத்திநாடோறும் உயர்ந்தோர் விரும்பும் பலபுகழையுடைத்தாகிய நாடுகேளுடனேசெம்பியன்சிறியவூர்கள்வாவித்தெறும் எரியாற்கொள்ளப்பட்ட மானினந்திரண்டு சஞ்சரிக்குந்தன்மையவாம். வேய்தலைபிணங்கும். அந்தச்செம்பியன் யானைபுகுந்து கலக்கநீர் புலருந்தடங்களையுடையவவயல் மருதம். எ-று. எனவரும். செம்பியன் சீறியவூர் மான்பயிலுங் காடாகவும், மருதம் மூங்கில்செறியுங் குறிஞ்சியாகவும், மாறுமென்பதாம்.

இடையிட்டுவந்தஇறுதிமுற்றுமடக்கு. [வ-று] வி-ம்-"சொன்னநாளிதுசுரும்பிமிரிதழிபொன்கால, மின்னுவாள்விடவில்வளைத்துன்றியகால, இன்னகார்முகிலினமிருண்டெழுதருகால, மன்னர்வாரலர்தான்வருமயின்மருங்கால,, எ-து. தாம் வருதுமென்றுசொன்னநாளிதுவாயிருந்தது, சுரும்புகள் பாடாநின்றகொன்றைகளெல்லாம் பொன்பொழிய மின்னுனது ஒளியையுமிழ இந்திரதனுவைவளைத்துவீழ்ந்த மழைத்துளிகளையுடைத்தாயிப்படிவந்தபருவமுகில் இனமாயிருண்டெழுதரும்பொழுதும், தலைவர்வந்திலர் பருவந்தான் வாராநின்றது. பக்கமெல்லாமயில்கள் ஆட. எ-று. எனவரும். இவைமூன்றும் இடையிட்டு வந்தன. இனியிடையிட்டும் இடையிடாதும் வருவன.

இடையிட்டும் இடையிடாதும்வந்த இடையும் இறுதியுமுற்றுமடக்கு. [வ-று.] வி-ம்-"வாமான்மானமழைபோன்மதமானமான, நாமானமானகமுற்றுழகமர்ன்மான, தீமானமானவர்புகாத்திறமானமான, காமானமானகல்சுரங்கனன்மானமான,, எ-து. தாவுமான்களையுடையன. பெரியமுகில்போன்று மதமமைந்த யானைகளையுடையன. அச்சமான புலியுகிருறுதலால் தாழ்ந்தமனத்

னைத்துண்டவிலங்குகளையுடையன. தீமையையுடையன. மக்களு
டாடாததிறமான தன்மையையுடையன. சோலைகளையொப்பவ
லியகற்களையுடையன. இத்தன்மையையுடையவழிகள் நெருப்பி
னனவாயுள்ளன. எ-று. எனவரும். தீமை-தீமென ஈற்றுயிர்கெட்
டது. கல்ல-கல்லென ஈறுகுறைந்தது.

வி-ம். "வருமறைபலமுறைவசையறப்பணிந்தே-மதியொ
டுசடைமுடிமருவுமப்பணிந்தே, அருநட நவில்வது மழகுபெற்
றமன்றே-யருளொடுகடவுவதணிகொள்பெற்றமன்றே, திருவடி
மலரனதிகழொளிச்சிலம்பே-தெளிவுடனுறைவது திருமறைச்சி
லம்பே, இருவினைகளைபவரடைபதத்தனன்றே-யிமையவர்புகலி
றையெனநினைத்தனன்றே,, எ-து. வேதங்கள்பலகாலுந்தங்குற்றம
றத்தொழுதுபோற்றச், சடையையுடைய முடியில் பிறையோடு
சேர்ப்பட்ட கங்கையைத்தரித்து, அரியநடமாடுவது அழகுடை
யதிருவம்பலத்தே, பிரியத்துடன் ஏறுவது அலங்காரத்தையுடைய
விடையே, திருவடித்தாமரையிற் கிடப்பன விளங்காநின்ற ஒளி
யையுடையசிலம்பே, விளக்கத்துடனேயெழுந்தருளியிருப்பது
அழகிய வேதரூபமான கைலைமலையே, இருவினையுங் கடிந்தார
டையும்பாதத்தன் அநாதியேவானவர்க்குப்புகலாகியமுதல்வனெ
ன்று தியானித்தல் அழகு- எ-று. ஏ-ம். வி-ம்-"அனையகாவலர்கா
வலர்காவலர், இனையமாலையமாலையமாலைய, எனையவாவியவாவிய
வாவிய, விணையமாதரமாதரமாதரம்.,, எ-து. அத்தன்மையாகிய
சோலையின்மலராகிய காமன்கணைகளை நமதுதலைவர்காத்தலிலர்,
இத்தன்மைமயக்கத்தைத் தருகிறமாலைப்பொழுது அத்தன்மைய
என்னை நீங்காது காதலித்த உயிர்போன்ற அறிவையுடையதோழி
யரத்தினையொத்தாள். ஆசையானது மிகுதியாம். எ-று. எ-ம், வரு
பவைகளின்வேறுபாடுங்கண்டுகொள்க. சொன்மடக்குமுற்றும்.()

(௯௪) அடிமுழுதுமடக்கலு மாங்கதன்சிறப்பே.

(எ-ன்) ஈண்டு அம்மடக்கென்னுமலங்காரத்தையேவேறுப
டுத்துக்கூறுகின்றது. (இ-ள்.) அடிகண்முழுதுமடக்கிவருதலும்,
அம்மடக்கிற்குச்சிறப்புடைத்து. எ-று. ❁ அவை-ஈரடிமடக்கும்,
மூவடிமடக்கும், நான்கடிமடக்குமென மூன்றுவகைப்படும்.

க-வது. முதலீரடியுமடக்கு. [வ-று.] வி-ம்-"விரைமேவுமத
துமாயவிடர்கூடுகடுநாக, விரைமேவுமதமாயவிடர்கூடுகடுநாக, வ
ரைமேவுநெறிபூடுதனிவாரன்மலைநாட, நிரைமேவுவளைசோரவிவ
ளாவிநிலைசோரும்,, எ-து. கமழுங்கடமுடைய துன்பமுறுங்கடி
யயானைகளையிரையாகவிரும்பும் வலியமுழையுள்ளுறையும் நஞ்
சையுடைய பாந்தளையுடைய மலைபொருந்திய வழியினூடு தமி
யையாய்வாராதொழிவாயாக. குறிஞ்சிநிலத் தலைவனே, வருவை

யாயின் நிரைபொருந்தியவளைசரிய இவளாவியு நிலையினின்றுநீங்கும்-எ-று. எனவரும்.

௨-வது. முதலடியும், மூன்றாமடியுமடக்கு. [வ-று] வி-ம்- "கடன்மேவுகழிகாதன்மிகநாளுமகிழ்வார்கள், உடன்மேவு நிறைசோரமெலிவாடலுயிர்நோவு, கடன்மேவுகழிகாதன்மிகநாளுமகிழ்வார்கள், உடன்மேவுபெடைகூடுமறுகாலுமுரையாகொல்." எ-து. முறையாகப்புணருமிக்ககாதல்வளரநாள்கடோறும்,மகிழ்வார்களுடனேகூடிக்கொண்டு, பொருந்திய ஒழுக்கங்குன்றவருந்துவாளது உயிர்வருத்தத்தைக்,கடலிற்பொருந்தியகழிக்கண் காதன்மிக்க காலைதோறுங்களிப்புமிக்க மலர்க்கள்ளை விரும்பும் பெடையோடுகூடிய வண்டுகளுந் தலைவற்குச் சொல்லாபோலும்—எ-று. எனவரும்.

௩-வது. இடையீரடியுமடக்கு.[வ-று]வி-ம்-"கருமாலைதொறுகாதல்கழியாதுதொழுதாலு, முருமாயமதனாகமடுமாறுபுரிவார்முன், னுருமாயமதனாகமடுமாறுபுரிவார்முன்,வருமாயவினைதீரவொருநாளுமருளார்கொல்," எ-து. பிறவித்தொடர்ச்சிதோறும் அன்புநீங்காது தம்மைவணங்கினாலும், வடிவழியும்படி காமனுடலைக்கெடுக்குந் தன்மையைச்செய்வார்,முன்னேஉருமுப்போல வந்த கடாத்தையுடைய யானையைக்கொல்லும் இயல்பினையுடையார், தொல்லையாய்வரும்வஞ்சவினைநீங்க ஒருகாலமும் எமக்கருளார்போலும்-எ-று. எனவரும்.

௪-வது. முதலடியுமீற்றடியுமடக்கு. [வ-று.]வி-ம்-"மறைநுவல்கங்கைதாங்கினார், நிறைதவமங்கைதாங்கினார்,குறையெனவண்டர்வேண்டவே, மறைநுவல்கங்கைதாங்கினார்," எ-து. வேதம்புகழுங்கங்காநதியைத்தரித்தார். மிக்கதவத்தையுடைய உமாதேவியையிடப்பாகத்திற்றாங்கினார். எமக்குக் குறையிதுவென்று வானவர்தொழுதிரப்ப அற்றங்களைப்பிறர்க்கு உபதேசிக்கும் பிரமன்றலையைக்கையிலேதாங்கினார்-எ-று. எ-ரும். அற்றம்- இரகசியம்.

௫-வது. கடையீரடியுமடக்கு. [வ-று.] வி-ம்- "கொல்லியம்பொருப்பனைமேவார்கோநகர், இல்லரிமேவுவதியம்பவேண்டுமோ,வல்லியந்தாமரைவனங்களாயின,வல்லியந்தாமரைவனங்களாயின," எ-து. கொல்லிமலையையுடையசெம்பியனைமேவாராகிய அரசர்நகரத்துமாளிகைகளையெரிகவருதல் சொல்லவேண்டுமோ,வல்லியோடுகூடிய அழகிய தாமரைகளையுடைய நீர்த்தடங்களாயினவெல்லாம், புலியையும், தாவுமரைகளையுமுடைய காடாயின. எ-று. எனவரும்.

௬-வது. இரண்டாமடியுமீற்றடியுமடக்கு.[வ-று]வி-ம்-"நலத்தகைபெறவிருசரணமோதுநம், குலத்தகைபணிகொளேகா

ம்பரத்தனே,நலத்தகைமகளொருபாகதன்னுமேல்,குலத்தகைபணிகொளேகாம்பரத்தனே.,, எ-து. நலமிகுதிபெறவேண்டி யிரண்டுசீர்பாதத்தையுமேத்துநமதுகுலத்துள்ளார்கைகளைத்தொழில்கொள்ளும் ஏகாம்பரத்தையுடையான்,நன்மைமிக்கதலைமகளை ஒருபாகத்திலேசேர்க்கும்,குலத்தான்மிக்கபாம்பாற்புனையப்பட்ட ஒற்றையாடையையுடையான்-எ-று. எனவரும். ஏகாம்பரன்-தனிமாவையுடையான். இவையாறும் ஈரடிமடக்கு.

௧-வது. ஈற்றடியொழித்தேனை மூன்றடியுமடக்கு. [வ-று.] வி-ம்-"காமரம்பயினீரமதுகரம்,காமரம்பயினீரமதுகரம், காமரம்பயினீரமதுகரம், நாமரந்தையுறநினையார்நமர்,, எ-து. சோலையின்மரந்தோறும் நெருங்கின வண்டினமானவை,காமரமென்னுமிசையைப் பாடாநின்றன. தேன்பொழியும் மதவேளம்புவேற்செய்தியையுடையவாயின. வேனிற்காலத்தெதிர்ப்பட்ட நாம்துயருழப்பவும் தினையாதொழிந்தார் நமதுகாதலர்-எ-று. எனவரும். மது-வேனிற்காலம். கரம்-எதிர்ப்படல்.

௨-வது. முதலடியொழித்தேனை மூன்றடியுமடக்கு. [வ-று] வி-ம்-"வரியவாங்குழன்மாதரிளங்கொடி, அரியவாங்கயதானவனங்களே, அரியவாங்கயதானவளங்களே, அரியவாங்கயதானவனங்களே,, எ-து. வண்டுகள் விரும்பப்படும் அளகத்தையுடைய காதலிளங்கொடியே, அடைதற்கரிய அவ்விடத்துப்பள்ளத்திலுண்டான புனல்களாவன வண்டுகள் தாவப்படாநின்ற யானையினதுமதசலங்களே,சிங்கங்கள் உலாவப்படும் பெரிய இடத்தோடுகூடியிருந்தகாடுகள்-எ-று. எனவரும். அயம்-பள்ளம். கய-பெரிய.

௩-வது. இரண்டாமடியொழித்தேனை மூன்றடியுமடக்கு. [வ-று.] வி-ம் - "கடியவாயினகாமருவண்டினம், அடியவாவகன்றுருழைவாரலர், கடியவாயினகாமருவண்டினம், கடியவாயினகாமருவண்டினம்,, எ-து. விளக்கமுடையவாய அழகுபெற்றவளை படியிலேவீழக்கண்டும் நம்மைப்பிரிந்தவர்நம்மிடத்துவந்திலர். நறுநாற்றத்தைவிரும்பாநின்றன சோலைகளிற் பயிலுகிற வண்டின்கூட்டம்-அஞ்சத்தகாநின்றன அழகுடன் புணர்ந்தவள்வியனுட்கள்-எ-று. எனவரும்.

௪-வது. மூன்றாமடியொழித்தேனை மூன்றடியுமடக்கு. — [வ-று.] வி-ம் - "கோவளர்ப்பனகோநகரங்களே,கோவளர்ப்பனகோநகரங்களே, மேவளக்கர்வியன்றிரைவேலைசூழ், கோவளர்ப்பனகோநகரங்களே,, எ-து. ஒளியைமிகுப்பன தலைமையையுடைய நகரங்கள்-செம்பியன்பெருக்குவனவேற்றரசருடையதிறைகளை. பொருந்தியகடலானது பெரிய திரையோடுங்கரையோடுஞ்சூழப்பட்ட நிலவலயத்தைக்காப்பன இச்செம்பியனுடையகைகள்.

எ-று எனவரும். இவை நான்கு மூன்றடிமடக்குக. ௩ம்-இறை. கோ சோழன்.

நான்கடியுமடக்கு: [வ-று.] வி-ம்-"வானகந்தருமிசையவாயின, வானகந்தருமிசையவாயின, வானகந்தருமிசையவாயின, வானகந்தருமிசையவாயின," எ-து. மேகங்கட்கு இனிடத்திற் கொடுக்கும் ஓசையோடுகூடியிருந்தன. ஆகாயத்தைவவ்விக்கொள்ளும் எழுச்சியை யுடையவாயின. விண்ணுலகத்தை யொக்கும் புகழையுடையன. மரங்களையுச்சியிலேயுடையன பெரியமலைகள். எ-று. எனவரும். இது ஏகபாதருமாம்.

ஒருசொல்லானே நான்கடியுமடக்குவதனை, இயமாவியமக மென்ப. [வ-று.] வ-றை - "உமாதரனுமாதரனுமாதரனுமாதரனுமாதரனு மாதரனுமாதரனு மாதரதன்," எ-து. உமையைத்தரித்தவனும், ஆதரிக்கின்றவனும், மானைத்தரித்தவனும், திருவைத்தரித்தவனும், ஆனிரையைக்காத்தவனும், யானைத்தோலைத்தரித்தவனும், இடபத்தைநடத்துவானும், பெருமையைத்தரித்த முக்கட்கடவுள்-எ-று. எ-ரும் இதனை அளவடிச்செய்யுளாக்கிற் செந்துறையுமாம்.

இரண்டடிப்பாட்டிற்கு. [வ-று.] வி-ம்- "பணிபவநந்தனதாகமன்னுவார், பணிபவநந்தனதாகமன்னுவார், அணியெனமெய்துமன்பராகமே, அணியெனமெய்துமன்பராகமே," எ-து பாம்புகளுக்கு இடம் தனது மார்பகமாகநிற்பார். பிறப்பிறப்பு இல்லையாகநிலைபெறுவார். அழகென்றுசொல்லஉறைவதும்அன்பருடையஉள்ளமே. அலங்காரமென்றுசொல்ல விரும்புவதும்என்றுமுள்ளதிருவெண்ணீற்றை. எ-று பவனம்-இடம்-பணிபவம்-தாழ்ந்தபிறப்பு-நதாக-இல்லையாக-எ-ம். வி-ம். "கோடாராவிப்பாற்குருகே-கோடாராவிப்பாற்குருகே, கொண்டற்போதுமருங்கடலே கொண்டற்போதுமருங்கடலே---வீடாவிருப்புக்காப்புள்ளே-வீடாவிருப்புக்காப்புள்ளே, வீயுந்துயரமுண்டகமே- வீயுந்துயரமுண்டகமே—நாடாமேகாம்பரத்தருவி-நாடாமேகாம்பரத்தருவி, நற்காஞ்சிவனத்தானத்தான்- நற்காஞ்சிவனத்தானத்தான்.—சூடாமலர்க்கண்டலந்தேனே- சூடாமலர்க்கண்டலந்தேனே, சுற்றமலைவாய்த்தவராலே - சுற்றமலைவாய்த்தவராலே.— எ-து. கரைபொருந்தியதடத்தின்கட்குருகுகாள், கொள்ளக்கொடாரா இப்புறம்வளைகள், மேகமுகக்குமரியகடலே, கீழ்காற்றே யமையும்பக்கத்துநின்று அன்புறுத்தற்கு காவேவீடாகவிருக்கும்புட்குலமே, நெகிழாதாசைக்கட்டுமனத்தின்கண். மதுகரம்லைக்குமுயர்ந்து அழகியதாமரையே - சாதற்றுயரமுண்டு மனையிலுள்ளோரால்-உடுக்குலத்தாவுமாகாயத்துலவுமுகிலாலுண்டான அருவியையுடைய

நாட்டினுண்டாமொரு மாமரத்தினையுடைய, அழகியகாஞ்சிவ
னத்தினையுடையான். நன்மையுண்டாகுஞ்சிவன் நந்தேத்திக்கு அத்
தான். வளையாததாழைமலரின்கணுள்ளதேனீகாள், சூடுதலையொத்
த அயலார் அலர் தூற்றுதலைக்கேட்டெய்த்தேன் - சூழநீர்த்தாங்க
த்திலுள்ளவரால்மீன்களே, உறவுபகையாகத்தந்ததலைவரால் எ-று.
எ-ம். வி-ம் - "கலைநிலாவருமாலைமணங்கொள்வான், மலையமாரு
த மாறலமாதர்கண், கலைநிலாவருமாலைமணங்கொள்வான், மலைய
மாருதமாறலமாதர்கண்,, எ-து. கலைநில்லா அரிய அந்திப்பொழு
திற் புணர்ச்சியைவேண்டிக்காதலரோடுகூடிய கண் மிகவுமழுகை
நீங்காது. மதியின்கணுண்டாகிய நீலவெழும் தொடையலின்
வாசங்கொள்ளவேண்டித் தென்றலானது நீங்காது - இவளுலை.
எ-று. எ-ம், வி-ம்-"ஓதநின்றுலவாவரும்வேலைவாய், மாதரங்கம
லைக்குநிகரவே, ஓதநின்றுலவாவரும்வேலைவாய், மாதரங்கமலைக்கு
நிகரவே,, எ-து. நின்றுசொல்ல முடிவில்லாத அரியகாலத்தின்க
ண் இவளுடைய அவயவங்களை யழிக்குமாறுபட்டன நீர்நிலைபெ
ற்று உலவிவருகின்றகடலிற் பெரியதிரைகள் மலைக்கொப்பாக வி
ருக்கும். எ-று. எ-ம், வரும்.

அந்தாதிமடக்கு. [வ-று.] வி-ம்-"மாலையாகவெய்யனங்கவே
ள் பயிறருமாலை, மாலைவேட்டவர்மனங்கொலோவவன்றுழாய்மா
லை, மாலையேநவுடைத்ததுநினைந்தெழுதருமாலை, மாலையாவுடைய
வளைவந்திடர்செயுமாலை,, எ-து. ஒழுங்காகவெய்து மாரனும்புதம்
பயிலுமிடம் அரியைக்காதலித்தவருடைய வுள்ளம்போலும் அவ
னுடைய துளவமாலை சேர்தற்கு அருமையுடைத்து. அதனைநினை
ந்தெழுமுள்ள மயக்கத்தை யியல்பாகவுடையவளைவந்து துயர
முறுக்கும் அந்தியம்பொழுது. எ-று. இதனைச்சந்தட்டமடக்
குமென்ப. அல்லது இடையிட்டுமுதலும் இறுதியுமடக்கிமு
ற்றுமடக்கெனவுமாம். வி-ம்-"கயலேர்தரவருங்கடிபுனற்காவிரி,
காவிரிமலருகக்கரைபொருமரவம், மரவம்பூஞ்சினைவண்டொடுஞ்
சிலம்பும், சிலம்புசூழ்தளிரடித்திருமணைக்கயலே,, எ-து. கயல்களழ
குபெறவரும்விளைந்தபுனலையுடையகாவிரியாறு சோலையில்விரி
ந்தமலர்களுகும்படி கரையைப்பொரும் அரவமானது. பிடாமா
த்திலுண்டான பூங்கொம்புகள் வண்டோடுகூடி ஆர்ப்பெடுக்கும்.
சிலம்பாற்சூழப்பட்ட தளிர்போலு மடியினையுடையாள்செல்வ
மணைக்கருகு. எ-று. எனவரும். இது அந்தாதிமடக்கு. .(௫)

(௯௪) ஓரெழுத்துமடக்கலு முரித்தெனமொழிப.

(எ-ன்.) இன்னும் மடக்கிற்கெய்தியதோர்வேறுபாடுணர்-தி
று. (இ-ள்) மேல்"எழுத்தின்கூட்ட மிடைபிறிதின்றியும், பெயர்
த்தும்வேறுபொருடரின் மடக்கெனும்பெயர்த்தே,, என்றாயி

ளும், ஓரெழுத்தேபெயர்த்து மடக்குதலும் அம்மடக்கணியென்
பர். எ-று. [வ-று] வி-ம்- "நாநாநாதங்கூடிசைநாடுந்தொழிலோ
வா, தாதாதாரமாகவிரைத்தண்மலர்மீதே, வாவாவார் தண்சோலை
யில்வாழும்வரிவண்டே, யாயாயாளிற்சேர்த்துவதன்பங்கிசையா
யால்,, எ-து. நாநாவிதமான ஓசையோடுகூடியிசைகளை யாராயுந்
தொழினீங்காது தாதேயாதாரமாக வாசனையையுடைய குளிர்ந்
தமலர்மீதேதாவி நீட்சியையுடைய குளிர்ந்தசோலையின்மீதுவா
ழும் பாடலையுடையவண்டே அன்னையாயுள்ளாள் இற்செறித்தலை
த்தலைவற்குச்சொல்லுவாயாக. எ-று. எனவரும் ❁ மடக்கலுமெ
ன்ற உம்மையால், ஓரெழுத்தும், ஈரெழுத்தும், மூன்றெழுத்தும்,
நான்கெழுத்தும், ஐந்தெழுத்தும், மெய்யெழுத்தும், உயிரெழு
த்துமடங்கும். உயிருமெய்யுமடங்குங்கால் உயிர்மெய்யாய்வரும்.
இவையெல்லாமொருசெய்யுண்முழுதுமடங்கலும், ஓரடிமுழுது
மடங்கலும் உரியவெனக்கொள்க.

அவற்றுள்-ஓருயிர்மடக்கு [வ-று] க-ளை- "அமலலகலமகல
லபய, கமலபவனமவள, வமலமடரவளகவதனமடரமதன,, எ-து.
சேராதொழிவாயாக எங்கண்மார்பினையகல் இரவின்கண் அபய
னே தாமரையே யிடமாகவுடைய தேவியையனைய இவளுடைய
குற்றமற்ற செறிந்திருக்கப்பட்டகுழலினையுடைய முகத்தையழி
வுசெய்யாதொழிவாயாக காமனையொத்தாய். எ-று. எனவரும். அ
மல்-சேருதல். அல்-ஒழிதல். அடரல்-என்பது-அடர-எனக்கடை
குறைந்துநின்றது. எனவரும். இது குற்றுயிரான்வந்தமடக்கு.

இ-பா- "தாயாயானாராயாடாமாறுதாராயா, யாமாராவா
ளுடாமாதாமாதாவாவா, யாவாகாலாறுகாவாகாளுதாமா, மாலா
றுமாநாதாவா,, எ-து. தாயாயுள்ளவளிவளதுவிதனத்தை யறியா
ளாதலால், வருத்தமாறுது இதனையாராய், அங்ஙனமாராயாதநினக்
கறிவுணர்த்தயாங்களாராக, வானநாட்டையொத்த நாட்டையுடை
யவனே, மாதானவள் பெரியவருத்தமுறுவள்வருவாயாக, வந்தால்
வாயாததெது. வரும்பொழுதுங்காலாறிவருவாயாக, எங்களைக்கா
ப்பாயுமாக, இவையாகாதனகாண். அயலவர்நாவால் எங்களுக்கு அ
ச்சமுண்டாகாநின்றது மயக்கமுமாறுது பெருமையையுடையக
த்தாவேவருவாயாக. எ-று. எனவரும். இது நெட்டுயிரான்வந்த
மடக்கு.

சி-பா- "காக்கைக்காகாகூகைகூகைக்காகாக்கை, கோக்குக்கூ
காக்கைக்குக்கொக்கொக்கக்-கைக்கைக்குக், காக்கைக்குக்கைக்கை
க்காகா,, எ-து. காக்கைக்குலங்கட்காற்று கூகைக்குலம். கூகைக்குல
ங்கட்காற்றுகாக்கைக்குலம். காலவசத்தராதலால், அரசர்க்குப்பூ
மியைக்காத்தற்கும், கொக்கினையொத்துப்பகையையழித்தற்கும்

காலவாய்ப்புவேண்டும். அக்காலவாய்ப்பின்றேல் இந்திரற்கும் பகையழித்தற்குக்கூடாது. எ-று. காலம்- பகையென்னுஞ்சொற்களெஞ்சிநின்றன. இதுககரவிகற்பத்தான்வந்தது.

இ-பா- "தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி, துத்தித் துதைதி துதைத்ததா தூததி, தித்தித்ததித்தித்ததாதெது தித்தித்த, தெத்தாதோ தித்தித்த தாது" எ-து. பாய்ந்து தாதுக்களையுடைய பூக்களின்மதுவை யுண்ணாநிற்றி அங்ஙனமுண்டு மீண்டும் வேறொரு பூவிற்பாயாநிற்றி அங்ஙனமுண்டுபாய்ந்துசெறியாநிற்றி மீண்டும் வேறொருசெறிந்த பூவின் றாதுக்களைக்கோதாநிற்றி இப்பூக்களிற்றித்தித்தின்பந்தரும் பூவெது தித்தித்த தாதுக்களையுடையபூவெது இதழழகியபூவெது எமக்குச்சொல்லுவாயாக எ-று. இதில் வண்டென்னுஞ்சொல் லெஞ்சிநின்றது. தலைவியவயவங்களை வியந்ததலைவன் தலைவிகேட்ப வண்டினைநோக்கிக்கூறியது. இதுதகரவிகற்பத்தான்வந்தது.

வெ- "மன்னுமான்மான்முன்னமானமுமீனமா, மின்னமானேமுன்னுமானினி - மென்மென, மின்னுமாமென்னிறமன்னமுமாமென்மனமே, மன்னுமாமானுமான்மான்." எ-து. உண்டாகாநின்றது மயக்கம்மூன்றுறவேமான மூங்குறையாநின்றது. இத்தன்மையான எம்மானினையப்படுமாதினை மெல்லென மின்னையுமொப்பாளென்பேமாயின் அன்னமுமாமெனலாய்நிற்பள்- என்னுள்ளத்துள்ளே தங்குவதுஞ் செய்யாநிற்பள்·மாமநிறத்தையுடையமானையொக்குங் கண்ணினையுடைய அம்மாது. எ-று. இதுஈரெழுத்தான் வந்தது.

வெ- "மின்னுவான்முன்னுமெனினுமினிவேனின், மன்னுவினைவேனென்னைவினவா - முன்னுன, வானவனைமீனவனைமானவினைவென்வேன், மானவனைமானுமோவான்." எ-து. மின்னியுருமேற்றினைத்தோற்றிவிக்குமாயினும் பின்பு வேனிற்காலத்துநிலைபெற்றுவருந்துமென்னை யாராயாத, எவர்க்குமுதலாயுள்ள சேரனை மீனவனைமிக்க வினைகளோடுகூடவென்ற வேலையுடையனாகிய மனுகுலங்காவலனை ஒக்கவல்லதோ இத்தன்மைத்தாகிய மேகம்— எ-று. என்னையாராயாத மனுகுலங்காவலனையெனக்கூட்டுக. இதுமூன்றெழுத்தால்வந்தது. வான்-உருமேறு. வென்ற என்பது-ஈறுகுறைந்தது.

வெ- "யானகவென்னேயினையனவாக்கின, கானகயானையனையானைக்-கோனவனைத், கொன்னயனவேனக்ககோகனகக்கைக்கன்னிக், கன்னிக்கனியனையவாய்." எ-து. எத்துணையுஞ்சிறியயான்பழிக்கக்காட்டி யானையையொத்த நமதுதலைவனை இத்தன்மையாகப்பண்ணினவை கன்னியுடைய கொல்லுந்தன்மையையுடைய வேலை

பெர்க்குநயனமும், மலர்ந்த தாமரைபோன்றகையும், ஒருவராற் றீண்டாதகொவ்வைக்கனிபோலும் வாயுமாயிருந்தது ஈதோராச் சரியமாயிருந்தது எ-று. இது நான்கெழுத்தால்வந்தது.

வெ-“நமதுபுனலிலளியிவரிவை, யமுதவிதழினிகலு-குமு தமருவிநறவுபருகவளரு, முருவமுடையதுரை,, எ-து. வண்டே நீயயிலும் பூந்தடங்களில் இம்மடந்தையுடைய அமுதம்பொதியு மதரமொக்குங் குமுதமலர்களிற் பல்காலும்பயின்று தேனைப்ப ருகப் பின்புந் தேனுண்டாகும்படியை யுடையது உண்டாயிற் சொல்லுவாயாக. எ-று. இது ஒற்றெழுத்தின்றிவந்தது.

வெ - “துடித்துத்தடித்துத்துடுப்பெடுத்தகோட, றொடுத் ததொடைகடுக்கைபொற்போற்-பொடித்துத், தொடிபடைத்த தோடுடித்ததோகைகூத்தாடக், கடிபடைத்துக்காட்டித்துக்காடு, எ-து. மின்னனது நடுங்கித்தோன்றக் காந்தள்கள் பூத்துக் குலைக ளைத்தாங்காநின்றன. கொன்றைகள் பொன்போன்ற நிறத்தையு டைத்தாகிய பூக்களைமாலையாகத்தொடுத்துத் தூக்காநின்றன. எல் லாருக்குந்தோன்றவளையையுடையதோளும்இடப்பக்கந் துடியா நின்றது. மயில்கள்களித்தாடப் புதுமையை விளைத்துக்காட்டா நின்றதுகாடு. எ-று. இதுவல்லினத்தால்வந்தது.

வெ- “மானமேநண்ணுமனமென்மனமென்னு, ஞானமான் மன்னுநனிநாணு -மீனமா, மானுமினன்மின்னிமுன்முன்னேந ண்ணினு, மானுமணிமேனிமான்,, எ-து. மானம்யாதுமேவாதவு ள்ளமென துள்ளமென்னும், பெரியயானைகளையுடையவேந்தனை மிகவுநாணுங்குறைபடாநிற்கும், நீங்காது மின்னனதுவிளங்கி மு ன்னேமுன்னேதோற்றினும், ஒவ்வாத அழகிய உருவத்தையுடை ய மானையொப்பாள். எ-று. இதுமெல்லினத்தால்வந்தது.

வெ - “யாழியல்வாயவியலளவாயவொலி, யேழியலொல்லா வாலேலைழபுனா - வாழி, யுழையேயியலாவயில்விழியையோ, வி ழையேயொளிபாலிருள்,, எ-து. யாழினியற்றப்படாநின்ற இசை நூல்சொல்லிய அளவையுடைய இசையேழுங்கூடி இப்பேதை யுடைய மொழியுடனே நிகர்க்கமாட்டா. மானின்விழியும் இவள் வேல்போலும் விழியையொக்கமாட்டா. வியக்கத்தக்க ஆபரண ங்களினதொளியும் இப்பேதையுடைய ஒளியாலே நிறங்கெட்டி ருளாம். எ-று. இது இடையினத்தால்வந்தது, பிறவும் வந்தவழி க்கண்டுகொள்க.

(௫)

மடக்குமூற்றிற்று.

## சித்திரகவிவருமாறு.

(௯௫) கோமூத்திரியே கூடசதுக்க, மாலைமாற்றே யெழுத்துவருத்தன, நாகபந்தம் வினாவுத்தரமே, காதைகரப்பே கரந்துறைச்செய்யுள், சக்கரஞ்சுழிகுளஞ் சருப்பதோபத்திர, மக்கரச்சுதகமு மவற்றின்பால.

(எ-ன்) இன்னுமவ்வெழுத்து மடக்கலங்காரத்துட் படுவனவான சிலமிறைக்கவியாமா றுணர்-ற்று. (இ-ள்.) கோமூத்திரிமுதல்—அக்கரச்சுதகமீறாகக்கூறிய பன்னிரண்டும், அவ்வெழுத்து மடக்கலங்காரத்தின்பாலவாய்வரும். எ-று. ✽அக்கரச்சுதகமுமெ ன்னு மும்மையால், திரோட்டம், ஒற்றுப்பெயர்த்தல், மாத்திரைச்சுருக்கம், மாத்திரைவருத்தனை, முரசபந்தம், திரிபாதி, திரிபங்கி, பிறிதுபடுபாட்டுமுதலிய சித்திரகவிகளெல்லாங்கொள்க.

அவற்றுள்-க-வது. கோமூத்திரியாவது- இரண்டிரண்டுவரியாக ஒருசெய்யுளையெழுதி மேலுங்கீழு மொன்றிடையிட்டுவாசித்தாலும் அச்செய்யுளேயாவது. [வ-று] வி-ம்-"பருவமாகவிதோகணமாலையே, மருவுமாசை விடாகணமாலையே, பொருவிலாவுழைமேவனகானமே, வெருவலாயிழைபூவணிகாலமே,, எ-து அவர் குறித்த காலமிதுவாதல்வேண்டும் மேகவொழுங்கானது திசைகளெல்லாம் பொருந்தும், அதுவுமன்றி மாலைப்பொழுதின்கண் மழையை விடாதபொழியும், ஒப்பில்லாத மான்கள் பொருந்தாநின்றன காட்டின்கண்-ஆதலாற்குற்றமற்ற ஆபரணங்களையுடையாய் அஞ்சாதொழிவாயாக, தலைவர்நம்மைப்பூவால் அலங்கரிக்குங்காலமிது. எ-று. இதனுள்வேண்டுமென்னுஞ்சொல்வருவிக்கப்பட்டது. மேவின-என்பது-மேவனவெனத்திரிந்துநின்றது. எ-ம்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | ரு | வ | மா | க | வி | தோ | க | ண | மா | லை | யே |
| பொ | ரு | வி | லா | வு | ழை | மே | வ | ன | கா | ன | மே |
| ம | ரு | வு | மா | சை | வி | டா | க | ண | மா | லை | யே |
| வெ | ரு | வ | லா | யி | ழை | பூ | வ | ணி | கா | ல | மே |

உ-வது. கூடசதுக்கமாவது, ஈற்றடியெழுத்துகள் ஏனைமூன்றடியுள்ளுங்கரந்துநிற்கப்பாடுவது. [வ-று] க-றை "புகைத்தகைச்சொற்படைக்கைக்கதக்கட்பிறைப் பற்கறுத்த, பகைத்திறச்சொற்கெடச்செற்றகச்சிப்பதித் தூர்க்கைபொற்புத், தகைத்ததித்தித்தறுத்தத்தசொற்றத்தைப்பத்திதிறத்தே, திகைத்தசித்தத்தைத் துடைத்தபிற்பற்றுக்கெடக்கற்பதே,, எ-து. நெருப்பின்றன்மையையுடைய சொற்களையும், ஆயுதங்களோடுகூடிய கைகளையும், வெகுளியோடுகூடிய பார்வையையும், பிறைபோன்ற கோரப்ப

ற்களையும், கரிய நிறத்தையுமுடைய பகைஞராகிய அவுணசாதியென்னும் வார்த்தை மாளச்செறுத்த காஞ்சீபுரப்பெரும்பதியிலுள்ள கொற்றவை பழகுதங்கிய இன்பந்தராநின்ற யாழினிசைபோன்றசொல்லையுடைய கிள்ளையையொப்பாளிடத் தன்புசெய்யாது அறிவழிந்தவுள்ளத்தை நீக்கியகாலத் திருபற்றுங் கெடுதற்கேதுவாகிய ஞானத்தையறிவது. எ-று. கிள்ளைமொழியினையொத்த மொழியையுடைய துர்க்கையெனக்கூட்டுக. எனவரும்.

ந-வது. மாலைமாற்றுவது, ஒருசெய்யுளை யீறுமுதலாகவாசித்தாலும் அச்செய்யுளேயாவது. [வ-று] வெ-"நீவாதமாதவாதாமோகராகமோ, தாவாதமாதவாநீ" எ-து. நீங்காதபெரியதவத்தையுடையாய் மிக்கமயக்க வேட்கைகெடாது- ஆதலால், அழகியமாதினுடைய ஆசையை நீக்குவாயாக.— எ-று. எ-ம். வெ-"வாயாயாநீகாவாயாதாமாதாமாதா, யாவாகாநீயாயாவா" எ-து. எங்கட்குக்கிடையாதனயாவை நீயருள்புரிவாயாக என்னும் இவள் மிக்க வருத்தமாவள்யாவைநினக்காகாதன ஆயனேநீவருவாயாக. எ-று. எ-ம், வெ-"பூவாளை நாறுநீபூமேகலோகமே, பூநீறுநாளைவாபூ" எ-து. இயல்பாய்ப் பூப்பிலாதாளைக்கலந்து புலால்கமழும் நீயெமக்குப்பூமழையும், பொன்மழையும், பொழியுமேகமோ பூவுந்திருநீறும்புனைந்து நாளைவா இவளிப்பொழுது பூப்பினளாயிருக்கின்றாள். எ-று. பூப்புனைதல்-புலால்நாற்றநீங்க. திருநீறுபுனைதல்-குற்றநீங்க. எ-ம், வரு-ம்.

ச-வது. எழுத்துவருத்தனமாவது, ஓரெழுத்தாலொருமொழியாய்ப் பொருள்பயந்து, பின்னோரெழுத்தேற்றப் பிறிதொருமொழியாய்ப் பொருள்பயந்து அவ்வாறே முறைமுறையானேற்ற ஒவ்வொருமொழியாய்ப்பொருள் பயப்பது. [வ-று] வெ-"ஏந்தியவெண்படையு முன்னெடுத்ததுவும், பூந்துகிலுமாலுந்திபூத்ததுவும்-வாய்ந்த, உலைவிலெழுத்தடைவேயோரொன்றாச்சேர்க்கத், தலைமலைபொன்றாமரையென்றாம்" (இ-ள்) திருமாலேந்திய-கம்புவும், அவனெடுத்த-நகமும், அவனதாடையாகிய-கநகமும், அவனுந்திமலர்ந்த-கோகநகமும், என்னப்பட்ட-விவற்றிற்கேடில்லாதஎழுத்தினடைவேயொன்றொன்றினோரெழுத்தாகவெடுத்துச்சேர்க்கப்பின்பு அதுதலையென்றும், மலையென்றும், பொன்னென்றும், தாமரையென்றுமாம். அவ்வாறுசேர்த்தலெங்ஙனமெனின். கம்புஎன்பதில் கம்-என்கிறஎழுத்தைப்பிரித்துத்தலையெனவும், நகம்-என்பதில், ந-என்கிற எழுத்தைப்பிரித்துமுன் கம்-என்பதிற்குமுன்கூட்டி-நகம்-ஆக்கிமலையெனவும், கநகம்-என்பதில், க-என்கிறஎழுத்தைப்பிரித்துமுன் நகம்என்பதற்குமுன்கூட்டிக் கநகம்-ஆக்கிப்பொன்னெனவும், கோகநகம்-என்பதில், கோ- என்

னுமெழுத்தைப் பிரித்துமூன் கநகம் - என்பதற்கு மூன்கூட்டிக் கோகநகம் ஆக்கித்தாமரையெனவுங்கொள்க.

ரு-வது. நாகபந்தமாவது, இரண்டுபாம்பு தம்முளிணைவன வாக உபதேசமுறைமையானெழுதி, ஒருநேரிசைவெண்பாவும், ஒரு இன்னிசைவெண்பாவுமெழுதிச் சந்திகளினின்றஎழுத்தேமற்றையிடங்களினுமுறுப்பாய்நிற்கப்பாடுவது. மேற்சுற்றுச்சந்தி நான்கினு நான்கெழுத்தும், கீழ்ச்சுற்றுச்சந்தி நான்கினு நான்கெழுத்தும், இரண்டுபாம்பிற்கு நடுச்சந்தி நான்கினும் இரண்டுபாட்டிற்கும்பொருந்தநான்கெழுத்துமாகச்சித்திரத்திலடைப்பது

[வ-று] வெ-"அருளின்திருவுருவேயம்பலத்தாயும்பர், தெருளின்மருவருசிர்ச்சீரோ - பொருவிலா, வொன்றேயுமையாளுடனேயுருத்தரு, குன்றேதெருளவருள்.,, எ-து. அறத்தினது அழகியமேனியாய், திருச்சிற்றம்பலத்தினையுடையாய், தேவர்கள் அறிவிற்கும்எட்டாதாய், அழகியபுகழையுடையாய், குற்றமில்லாதஏகரூபத்தையுடையாய், உமையோடுபொருந்தினமலைபோல்வாய், யாங்கள்தெளியஅறிவைஅருள்வாயாக.எ-று. அறிவென்னுஞ்சொல்வருவிக்கப்பட்டது. எ-ம். வெ-"மருவினவருள்ளத்தேவாழ்சுடரே நஞ்சு, பெருகொளியான்றேய்பெருஞ்சோதி - திருநிலா, வாணஞ்சுருங்கமிகுசுடரோசித்த, மயருமளவையொழி,, எ-து. அடைந்தவருள்ளத்தே கெடாதவிளக்கமாயுள்ளாய், நஞ்சின்கணுண்டாகியபெருமையநிறநிறைந்துபொருந்தினதிருமிடற்றையுடையபெரியசோதியாயுள்ளாய், அழகியமதியையுடையஆகாயமானதுசிறுகப்பெருகியவொளியே திருமேனியாயுள்ளாய், எனதுள்ளம்தினடிமைமறக்குமெல்லையையொழிப்பாயாக-எ-று. எ-ம்-வரும்.


சு-வது. வினவுத்தரமாவது, வினவினதொருசொற்றொடரைப்பிரித்து, அப்பதந்தோறும் வினயதற்குஉத்தரமாகப்பதப்பொருளுரைத்துக் கடைக்கால் அவ்வினயதற்குத்திரமான அச்சொற்றொடர்முழுவதுமொருபொருளாக்கியுரைப்பது. அப்பதம்விரிக்குங்காற் செவ்வன்விரியாது அருமைதோன்றவிரித்துக்காட்டுவது. [வ-று] வெ-"பூமகள்யார்போவானையேவுவானேதுரைக்கு, நாமம்பொருசரத்திற்கேதென்பர் - தாமழகின், பேரொன்பிறைகுடும்பெம்மானுவந்துறையுஞ், சேர்வென்திருவேகம்பம்.இதனுள்பூமகள்யார்-திரு-எனவும். போவானைஏவுவானேதுரைக்கும்-ஏகு-எனவும். நாமம்பொருசரத்திற்கேதென்பர் அம்பு-எனவும். அழகின்பேரொன்-அம்-எனவுங்கூட்டித்திருவேகம்பமெனக்கண்டுகொள்க. எ-ம்.வெ-"நீத்தொழிந்தவாலறந்தடக்கிப்பின்னிச்சயமே, வாய்த்தமைந்தவாயில்பெண்ணுனேயே-கூர்த்தகு, வாளேருரேடோசைவிளைதிலமிவ்வல்லாத், கேளாயுடன்வருவதில்,, இதனு

ள்நீத்தொழிந்தஆறு-நிலை-எனவும்ஐந்தடக்கி-ஆமை-எனவும்,வாயில்-கடை-எனவும்,பெண்ணானை-பிடி-எனவும், வாளேறு-புண்-எனவும்.ஓசை-இயம்-எனவும்,விளைநிலம்-செய்-எனவும், கூட்டி, நிலையாமைகடைப்பிடி, புண்ணியஞ்செய்யெனக் கண்டுகொள்க. எ-ம். வெ-"நல்வினைநாற்கால் விலங்குநவைசேரும், கொல்வினையஞ்சி குயக்கல-மெல்ல, வுறுதியுமல்லவு நாட்பேர்மரப்பே, ரிறுதியிலின்பநெறி.,, இதனுள்-நல்வினையையுடையநாற்கால்விலங்குயாது-முயல் - எனவும்,நவைசேருங்கொல் வினையஞ்சியாது ஆமை-எனவும்,குயக்கலம்யாது-அகல்-எனவும், மெல்லஉறுதியையும்,உறுதியல்லனவற்றையுஞ் சொல்லுநாட்பெயர்யாது-சோதி-எனவும்,மரப்பெயர்யாது- தேறு-எனவும்கூட்டி முயலாமையகல். சோதி.தேறு-எனக்கூட்டுக. இறுதியிலின்பநெறி-எனவும்-வரும்.


எ-வது. காதைகரப்பாவது, ஒருசெய்யுள்முடியவெழுதி அதனீற்றுமொழிக்கு முதலெழுத்துத்தொடங்கி- ஒவ்வோரெழுத்திடையிட்டுவாசிக்கப்பிறிதொருசெய்யுட்போதுவது. [வ-று] வெ-"தாயேயாநோவவாவிருவெமதுநீ, பின்னைவெருவாவருவதொரத்தப, வெம்புகல்வேறிருத்திவைத்திசினிச்சைகவர், தாவாவருங்கலநீயே,, எ-து. தாயாயுள்ளாய் யாங்கள்வருந்தும் அவாவினைநீக்கு எமதுசார்வாயுள்ளாய்நீ பின்புஅச்சமாகவருவது ஆராய்அதுகெடவெமக்குப் புகலாயுள்ளவிடம் வேறாகச் சமைத்து வைப்பாய் ஆசைப்பாடுகைக்கொள் எங்கட்கு கேடில்லாத அரிய ஆபரணமாயுள்ளகடவுளே - எ-று. எனவரும். இதனுட்போந்தசெய்யுள்-வஞ்சித்துறை - "கருவார்கச்சித், திருவேகம்பத், தொருவாவென்னீ, மருவாநோயே,, எ-து. மனமேநீகச்சித்திருவேகம்பத்துறையும் ஒப்பில்லாதவனேயென்றுசொல்லக்கருவார்நோய்மருவா.— எ-று. வருங்கல நீயே என்பதில் லகரமொழிக்கு முதலாகாமையின் அதனை நீக்கிக் ககரமுதலாகக்கொள்க.

அ-வது. கரந்துறைப்பாட்டாவது, ஒருசெய்யுட் பிறிதொருசெய்யுட் சொற்புகாது எழுத்துப்பொறுக்கிக்கொள்ளலாம் படிபாடுவது. [வ-று] வெ-"அகலல்குற்றேரேயதரமமுதம், பகர்தற்கரிதிடையும்பார்க்கின் - முகமதிய, முத்தென்னலாமுறுவன் மாதர்முழுநீல, மைத்தடங்கண்வெவ்வேறுவாள்,, எ - து. நண்பனே நான்கண்டமாதருடைய உருவத்தன்மைகேட்பாயாக. அல்குலானது தேரினதுதட்டாயும், அதரமானது அமுதமாயும், இடையானது விசாரித்துச்சொல்லுவதற்கு அரிதாயும், முகமானதுமதியமாயும், முறுவலானது முத்தமாயும், மைத்தடங்கண்ணானது நீலப்பூவாயும், வேறுபடவைத்தவாளாயுமிருக்கும் - எ-று.


நான்காரைச்சக்கரம்.



ஆருரைச்சக்கரம்.



எட்டாரைச்சக்கரம்.



இதனுட்போந்தசெய்யுள்-"அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவன்முதற்றேயுலகு,, என்பதாம்.

௯-வது. சக்கரமாவது, நான்காரைச்சக்கரமும், ஆறாரைச்சக்கரமும், எட்டாரைச்சக்கரமுமென மூன்றுவகைப்படும். அவற்றுள், நான்காரைச்சக்கரமாவது [வ-று] வ-ம். "மேருசாபமுமேவுமே, மேவுமேயுணவாலமே, மேலவாமவருயமே, மேயவுணடிசாருமே,, எ-து. மேருவைவில்லாகக்கொள்ளுவனவாயும், நஞ்சையுணவாகவிரும்புவனவாயும், உயர்ந்தவுருவத்தை யுடையனவாயுமிருக்கும், அவன்விளையாடுதற்கினமாயுள்ளகூளியாகலான், அத்தன்மையானடிகளைப்பொருந்துவீராக-எ-று. இதுநான்காராய், நடுவேமேயென்னுமெழுத்துநின்று, ஆர்மேலொவ்வோரெழுத்துநின்று சூட்டின்மேற்பன்னிரண் டெழுத்துநின்று முற்றுப்பெற்றது.

ஆறாரைச்சக்கரமாவது, [வ-று] க-றை-"தண்மலர்வில்லிதன்போனதஞ்சநமக்களித்த, கண்மலர்க்காவிக்கெதிர்வனவன்றாகரமளந்த, பண்மலர்யாழ்பயில்வாரன்புசூழ்பதிநாகைமிக்க, தண்மைபகத்துப்பதுமத்தமாதர்த்தடங்கண்களே.,, எ-து. கைகளாற்றைவந்தவிரிந்தபண்ணையுடையயாழ்வல்லோர், அன்புமேவிய நாகபட்டணத்தில், காமனுடையபோரில் நமக்கபயங்கொடுத்த கண்ணாகியநீலப்பூவுக்கு ஒப்பாவனவல்ல மிகக்குளிர்ச்சியையுடையதாமரைமலரிலுறைவோர்க்கொத்தபெண்களின் அகன்றகண்கள்.எ-று. இதுஆறாராய், நடுவேரகாரநின்று, ஆர்மேல் ஒன்பதொன்பதெழுத்தாய்க், குறட்டின்மேற்போதிவானவனென்னும்பெயர்நின்று, சூட்டின்மேலிருபத்துநான்கெழுத்துநின்றுமுற்றுப்பெற்றது.

எட்டாரைச்சக்கரமாவது, [வ-று] ஆ-"மலர்மலிசோலையகநலங்கதிர்க்க, மடமயிலியற்றக மாதிரம்புதைத்து, வளைந்துபுகன்மேகவல்லிருண்மூழ்க, வரியளிதுதைந்த கதுப்பிணிதடைச்சி, மன்னுமாமடமொழி வடிவாள்வளவன், கன்னித்துறைவன் கனகச்சிலம்பே,, எ-து. மலர்மிக்கிருந்த சோலையுண்ணலம்விளங்க, மடப்பத்தோடுகூடியிருந்த மயிலியலுக்கொக்கும்படியாகத் திசைகளைமறைத்துச்சூழ்ந்து மிக்கமேகங்களென்றுநின்ற வலிய இருளினாலேமுழுகுந்தன்மைத்தாய், இசைமருவியவண்டுகள்குடையத்தகாநின்றமலர்களைக்குழலின்மீதே அழகுபெறவணிந்துபொருந்துமாமடப்பத்தோடுகூடாநின்ற மொழியையுடையாள் கூரியவாள்வளவனாகியகன்னித்துறைவனது கனகமலையின்கண்.எ-று. இமயமலையின்கண் திசைகளைமறைத்தமேகஞ்சூழ்ந்து மலர்மலிந்துசோலைக்கழகுண்டாகத் தன்குழலை யலங்கரித்து மயிலியலொப்பஅழகுபெற்ற மடப்பத்தோடுகூடியமொழியாள் திற்பளெனக்கூட்டுக. இது எட்டாராய், ஆர்மேலவ்வாறெழுத்தாய், நடுவேககாரநின்று

குறட்டின்மேல் அறமேதனமாவது என்னுஞ்சொன்னின்று கூட்டின்மேன் மூப்பத்திரண் டெழுத்துநின்று முற்றுப்பெற்றது.

இதுவும் ஒருவகை நான்காரைச்சக்கரம். [வ-று.] வெ "மாதவாபோதிவரதாவருளமலா, பாதமேயோதசுரரைநீ-தீதகல, மாயாநெறியளிப்பாயின்றன்பகலாச்சீர்த், தாயேயலகில்லாடாய்," எ-து. புத்ததேவா, குற்றமில்லாதாய்,உன்னுடையபாதத்தை வழுத்தாநிற்கும் அசுரருக்கு நீபாவங்கெட மோக்ஷமளிப்பாய், அன்புநீங்காத அழகிய தாய்போல்வாய், எல்லையில்லாதமிக்கவலிதாகிய தவத்தையுடையாய்.எ-று.இன்று அருள்வாயாக. இதுவநான்காரரை, நடுவே ரகரநின்று, குறட்டின்மேல்வசுதாரையென்னும்பெயர் நின்று,ஆர்மேல், நந்நான்கெழுத்துநின்று, சூட்டின்மேலிருபத்தெட்டெழுத்துநின்று முற்றுப்பெற்றது. ஆ-வலி.


ய-வது. சுழிகுளமாவது, ஒருசெய்யுளை எவ்வெட்டெழுத்தாய்நான்குவரியாக எழுதி,மேனின்று கீழிழிந்தும், கீழ்நின்று மேலேறியும், புறநின்றுவந்துண்முடியவுச்சரித்தாலும், அவ்வரிநான்குமேயாகி அச்செய்யுளாயே முற்றுப்பெறுவது.[வ-று] வ-றை- "கவிமுதியார்பாவே, விலையருமாநற்பா, முயல்வதுறுநர், திருவழிந்துமாயா," எ-து. கவிகளால்முதிர்ந்தார்செய்யுங்கவியே விலையிடுதற்கரிய கவியெனவும், இடைவிடாது முயல்வார்செல்வமழிந்துகெடாதெனவுமாம். எ-து. எனவரும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | வி | மு | தி | யா | ர் | பா | வே |
| வி | லை | ய | ரு | மா | ந | ற் | பா |
| மு | ய | ல் | வ | தி | று | ந | ர் |
| தி | ரு | வ | ழி | ந் | து | மா | யா |

இதுவுமது. [வ-று.]வ-ம்-"மதநவிராகாவாமா,தநதசகாவேநீவா, நததநதாதாவேகா, விசதவிரோதாகாரா," எ-து. மதனு-ஆசையில்லாதவனே,ஒளியையுடையானே,குபேரனுக்குத் தோழனுயுள்ளானே மேகத்தினு மதனமானவள்ளலே, பணிப்பூணுல் விரோதமான தோற்றத்தையுடையானே எங்கள் விதனங்களை நீக்கிக்காப்பாயாக.எ-று. நீக்கப்பொருண்மையின்கண் வந்த ஐந்தனுருபு ஆறனுருபாய்மயங்கின.இதனுள் நீக்கியென்பது வருவித்துரைக்கப்பட்டது. எனவரும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | த | ந | வி | ரா | கா | வா | மா |
| த | ந | த | ச | கா | வே | நீ | வா |
| ந | த | த | ந | தா | தா | வே | கா |
| வி | ச | ந | வி | ரோ | தா | கா | ரா |

நான்காளைச்சக்கரம்.



௰௧-வது. சருப்பதோபத்திரமாவது, ஒருநிலைவட்டரகஅறுபத்துநான்கறைகீறி, ஒருசெய்யுள் எவ்வெட்டெழுத்தால் ஓரடியாகநான்கடிபாடி, மேனின்றுகீழிழியவும் நான்கடியுமெழுதி, கீழ்நின்றுமேலேறவும்நான்கடியுமெழுதி, மேனின்றுங்கீழிழியவும், கீழ்நின்றுமேலேறவும், முதற்றொடங்கி யிறுதியாகவும், இறுதிதொடங்கி முதலாகவும், மாலைமாற்றாக நான்குமுகத்தினும்வாசித்தாலும் அச்செய்யுளேயாவது. [வ-று.] வ-ம்-"மாவாநீதாதாநீவாமா, வாயாவாமேமேவாயாவா, நீவாராமாமாராவாநீ, தாமேமாராராமாமேதா,, எ-து. பெரியோனே நீதியுடையோனே மிக்கநீங்காத செல்வத்தையுடையோனே என்னுக்கடவது, பொருந்துவாயாக, இப்படியென்னைச்சேர்ந்தால் - வாயாதனயாவை. நீவருவாயாக. இராமனையொப்பாய் காமனுமாயுள்ளாய்மழையையொப்பாய்நீயாதலால் பெரியமேம்பாட்டையுடைய நின்மார்பினிறைந்திருக்கப்பட்ட ஆராகியதாரினைத்தருவாயாக. எ-று. எனவரும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | வா | நீ | தா | தா | நீ | வா | மா |
| வா | யா | வா | மே | மே | வா | யா | வா |
| நீ | வா | ரா | மா | மா | ரா | வா | நீ |
| தா | மே | மா | ரா | ரா | மா | மே | தா |
| தா | மே | மா | ரா | ரா | மா | மே | தா |
| நீ | வா | ரா | மா | மா | ரா | வா | நீ |
| வா | யா | வா | மே | மே | வா | யா | வா |
| மா | வா | நீ | தா | தா | நீ | வா | மா |

௰௨-வது. அக்கரச்சுதகமாவது, ஒருபொருள்பயப்பதொருசொற்கூறி அதனில் ஒவ்வொரு எழுத்தாகநீக்க, வெவ்வேறு பொருள்பயக்கப்பாடுவது. [வ-று.] க-றை-"பொற்றூணில்வந்தசுடர் பொய்கைபயந்தவண்ணல், சிற்றாயன்முன்வனிதையாகியளித்த செம்மல், மற்றியார்கொல்லென் னின்மலர்தூவிவணங்கிநாளும், கற்றோர்பரவுங்கநகாரிநகாரிகாரி,, எ-து. பொன்னாகிய தூணிலேதோற்றியசோதியாயுள்ளான்யார். பொய்கையானது பெற்ற தலைமையுடையவன்யார். சிற்றாயனாகியமால் முன்னாண் மோகினி வடிவுகொண்டபோது பெற்றபிள்ளையாரென்று கேட்பீராயின் கற்றோரால்மலர்தூவி நாடோறும்வணங்கப்பட்ட, கநகாரி-என்றும், நகாரி என்றும், காரி என்றுங்கொள்க-எ-று. எனவரும். கநகாரி-திருமால். நகாரி-முருகவேள், காரி-மாசாத்தன்.

௰௩-வது. நிரோட்டமாவது. இதழ்குவிக்கும்மிருமெய்புந்திண்டாமற்பாடுவது. [வ-று] வெ"சீலத்தான்ஞானத்தாற்றேற்றத்தா

ற்சென்றகன்ற, காலத்தாலாராதகாதலான்-ஞாலத்தார், இச்சிக்கச்சாலச்சிறந்தடியேற்கினிதாங், கச்சிக்கச்சாலைக்கனி,, எ-து. தொழிலாலும், அறிவாலும், மனத்தெளிவாலும், தன்னிடனாகச் செலுத்தின காலத்தின் பெருமையாலும், ஒப்பில்லாத ஆசையாலுமுயர்ந்தோராயினார் நினைப்பவும், எத்தனையுந்தாழ்ந்த எனக்கு, மிகவுஞ்சிறந்தினிதாகாநிற்குங் கச்சிப்பதியிலுண்டாகிய திருக்கச்சாலையிற்றோற்றிய கனியையொப்பான். எ-று. எனவரும். என்னை-சூ-“உஊஒஓஔபமவவிவற்றியைபு, சேராநிரோட்டத்திறத்து,, என்றாராகலின்.

௰௪-வது. ஒற்றுப்பெயர்த்தலாவது, ஒருமொழியுந்தொடர்மொழியுமாய்ப்பொருள்படுமவற்றை அப்பொருளொழியவேறுபொருள்படவைப்பது. [வ-று.] வெ-“வண்புயலைக்கீழ்ப்படுத்துவானத்தருமலைந்து, மண்குளிரச்சாயல்வளர்க்குமாந்-தண்கவிகைக், கொங்காரலங்கலநபாயன்கொய்பொழில்சூழ், கங்காபுரமாளிகை,, எ-து. வளப்பத்தையுடையமேகங்கள் கீழாகமேலோங்கி, வானகத்தின்கணுண்டாகிய கற்பகப்பூக்களை உச்சிமீ துடைத்தாய், உலகெல்லாம் தன்னுருவச்சாயையாகிய நிழலைப் பெருக்கும், குளிர்ச்சிபொருந்தியகுடையினையும், மதுநிறைந்த மாலையையுமுடைய அநபாயனது கங்காபுரத்தின்மாளிகை-எ-ம், வளப்பத்தையுடையமேகத்தைப்பழிக்குந்தன்மையையுடையதாய், வானகத்தினுண்டாகிய கற்பகத்தோடு பகைகொண்டுகொடுத்து உலகத்துள்ளாருடைய உள்ளங் குளிரும்வண்ணம் காவல்புரியுங் கங்காபுரத்தையாளும், குளிர்ந்தகுடையினையுடைய அநபாயனது கை-எ-ம், வந்தவாறுகாண்க. கங்காபுரம்- கங்கைகொண்டசோழபுரம். வெ-“பொற்புடையமாதர்புலவாரோபொய்ம்மருவாச், சொற்பயிலும்பாணசுடர்மணித்தேர்-கற்புடைய, வஞ்சிநகர்சேரினறமாமருதாராய்மகிழா, நஞ்சனையநல்வயலூரற்கு,, எ-து. பொய்யோடுகூடாதசொற்களைப் பலகாலுஞ்சொல்லாநின்றபாணா, அவரது சுடர்மணித்தேர்மதுகற்புடையமனைவிமனையிலேம்சருமாயிற்பொலிவினையுடைய பரத்தையர்முனியாரோ, தேனால்வண்டுமருவப்பட்ட தாராயாமின்புறந் தலைகயமல்ல, நல்வயலூரனாகியதலைவற்கு நாங்கள் நஞ்சோடொவ்வோமோ நீண்டுமிடத்து. எ-று. இப்பாட்டினோரடியில். வஞ்சி- நகர்- சேர்- இல்-நறவு-மா-மருது- ஆர்-ஆல்-மகிழ்-என்னும்பத்துமரம்வந்தன. என்னை-வெ-ஓரடியுட்பத்துமாமுடனொற்றுப்பெயர்த்துத், தேர்மருவிநூடற்றிறம்புனைந்து-நீர்மை, மருதம் புணர்ந்ததுவும் வெண்பாவாய்வையம், கருதப்பகர்வான்கவி,, என்றாராகலின். ஆல்-கலைசக்கும், ஓர்மரத்துக்கும்பெயர்.

௰௫-வது மாத்திரைச்சுருக்கமாவது, ஒருபொருள்பயந்துநிற்பதொருசொல், ஒருமாத்திரையைக்குறைப்பப்பிறிதொருபொருள்பயக்குஞ்சொல்லாய்நிற்பது. [வ-று] வெ-"நேரிழையார்கூந்தலினோர்புள்ளிபெறநீண்மரமாம், நீர்நிலையோர்புள்ளிபெறநெருப்பாம்-சீரளவும், காட்டொன்றொழிப்ப விசையாமதனளவில், மீட்டொன்றொழிப்பமிடறு,, எ-து. நேரிழையார்கூந்தல்-ஓதி-இதில்ஒருமாத்திரையைச்சுருக்க ஒதி என்னுமரமாம். நீர்நிலை-ஏரி-இதில்ஒருமாத்திரையைச்சுருக்க எரியாகியநெருப்பாம். காடு-காந்தாரம்-இதில் ஒருமாத்திரையைச்சுருக்கக்கந்தாரம் என்னும் பண்ணாம். இதில்மீட்டும் ஒருமாத்திரையைச் சுருக்கக், கந்தரம். எ-று. எ-ம். இதில் புள்ளிபெறுவதைப்பிரித்து விந்துமதியெனவுமமையும்.

௰௬-வது. மாத்திரைவருத்தனமாவது, இதனை மறுதலைப்படப்பாடுவது. [வ-று.] க-ம் - "அளபொன்றேறியவண்டதினோர்பினால், அளபொன்றேறியமன்னதிர்ந்துக்குமால், அளபொன்றேறியபாடலருஞ்சுனை, அளபொன்றேறழகூடலைந்தாடுமால்,,-- எ-து. வண்டு-அளி-அளபேறியவண்டு-ஆளி-எ-ம், மன்-தனை-அளபேறியமன்-தானை-எ-ம், பாடல்-கவி-அளபேறியபாடல்-காவி எ-ம், அழகு-வனப்பு-அளபேறிய அழகு- வானப்பு-எ-ம், காண்க.

௰௭-வது. முரசபந்தமாவது, ஓரடி ஒருவரியாக நான்குவரியெழுதி, மேலிரண்டுவரியும் தம்முட் கோமூத்திரியாகவும், கீழிரண்டுவரியுந்தம்முட்கோமூத்திரியாகவுஞ்சிறுவார்போக்கி, மேல்வரியிரண்டாம்வரியினும், மூன்றாம்வரியினும், நான்காம்வரியினுங்கீழூற்றுமீண்டுமேனோக்கவும், கீழ்வரியினும், அவ்வாறேமேலூற்றுமீண்டுகீழ்நோக்கவும்பெருவார்போக்கி, இந்தவார் நான்கும்நான்குவரியாகவும்பாடுவது. [வ-று] க-ம்-"கானவாரணமரியவாயினனே, தானவாரணமரியவாயினனே, மானவாரணமரியவாயினனே, கானவாரணமரியவாயினனே,, எ-து. சோழன்வலியமிக்க போர்செய்த இடமானவை, இசையோடு கூடியவேதம் அரியவாய்க், கூட்டம்பொருந்தியமதயானையரியவாய்க், காட்டுக்கோழியையும், சிங்கங்களையுமுடையவாயின. எ-று. சோழன் போர்செய்யாதமுன்னர் மறைமுழக்கமும், யானைகளுமுடைய இடங்கள் போர்செய்தபின்னர்காட்டுக்கோழிமுழக்கமும், யானையைக்கொல்லவல்லசிங்கங்களுமுடையவாயினவெனக்கொள்க.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கா | ன | வா | ர | ண | ம | ரி | ய | வா | யி | ன | னே |
| தா | ன | வா | ர | ண | ம | ரி | ய | வா | யி | ன | னே |
| மா | ன | வா | ர | ண | ம | ரி | ய | வா | யி | ன | னே |
| கா | ன | வா | ர | ண | ம | ரி | ய | வா | யி | ன | னே |

௰௮-வது. திரிபாகியாவது, மூன்றெழுத்துங்கூட ஒருமொழியாகியும், அதில்முதலெழுத்துங்கடையெழுத்துங்கூட வேறொருமொழியாகியும், இடையெழுத்துங் கடையெழுத்துங்கூட மற்றொருமொழியாகியும்வருவது. [வ-று] வெ-"மூன்றெழுத்துமெங்காமுதலீரொருவள்ளல், என்றுலகங்காப்பதிடைகடை-யான்றுணைப்பிற், பூமாரிபெய்துலகம்போற்றிப்புகழ்ந்தேத்தும், காமாரிகாரிமாரி" எ-து. இதனுள் மூன்றெழுத்து மெம்முடையகோவாகிய காமாரியெனவும், இதன்முதலெழுத்துங்கடையெழுத்துங்கூடக்காரியென்றொருவள்ளல் எனவும், இதனிடையெழுத்துங்கடையெழுத்துங்கூட மாரியென்றுலகங்காக்குமழை எனவும், வந்தவாறுகண்டுகொள்க.

௰௯-வது. திரிபங்கியாவது, ஒருசெய்யுளாய் உறுப்பமைந்து ஒருபொருள்பயப்பதனை மூன்றாகப்பிரித்து எழுத வெவ்வேறுசெய்யுளாய்த் தனித்தனியே பொருள்பயந்து தொடையுங்கிரியையும்தனித்தனியேகாணவருவது. [வ-று] க-றை-"ஆதரந்தீரன்னைபோலினியாயம்பிகாபதியே, மாதுபங்காவன்னிசேர்சடையாய்வம்புநீண்முடியாய், ஏதமுய்ந்தாரின்னல்சூழ்வினைதீரெம்பிரானினியார், ஓதுமொன்றேயுன்னுவாரமுதேயும்பர்நாயகனே" என வரும். இதனுள்-ஆதரந்தீர், மாதுபங்கா, ஏதமுய்ந்தார், ஓதுமொன்றே. எ-ம், அன்னைபோலினியாய், வன்னிசேர்சடையாய், இன்னல்சூழ்வினைதீர், உன்னுவாரமுதே. எ-ம், அம்பிகாபதியே, வம்புநீண்முடியாய், எம்பிரானினியார், உம்பர்நாயகனே. எ-ம், மூன்றுவஞ்சித்துறைவந்தவாறுகாண்க. இதுவுமது. [வ-று] வெ-"சங்கந்தாபூணாரந்தாமேகலைதாநற், புங்கவன்மால்காணாப்புலவுடைய-சங்கரா, கோணாகலாமதிசேர் கோடீரசங்கரா, சோணாசலா சலமேதோ" என்னும் வெண்பாவே- பூணாரந்தாமேகலைதாநற்புங்கவன்மால், காணாப்புலவுடையசங்கரா-கோணா, கலாமதிசேர்கோடீரசங்கராசோணா, சலாசலமேதோசங்கந்தா" எ-ம். சலமேதோசங்கந்தாபூணாரந்தாமே, கலைதாநற்புங்கவன்மால்காணாப்-புலவுடைய, சங்கராகோணாகலாமதிசேர்கோடீர, சங்கராசோணாசலா" எ-ம், மூன்றுவெண்பாவாய்த்திரிபங்கியானதுகாண்க.

௨௰-வது. பிறிதுபடுபாட்டாவது, ஒருசெய்யுளை அடியுந்தொடையும் வேறுபடுப்பச் சொல்லும்பொருளும், வேறுபடாதுவேறொருசெய்யுளாய்முடிவது. [வ-று] க-றை-"தெரிவருங்காதலிற்சேர்ந்தோர்விழையும்பரிசுகொண்டு, வரியளியாட மருவருவல்லியிடையுடைத்தாய்த், திரிதருங்காமர்மயிலியலாயநண்ணாத்தேமொழி, பரிவைதன்னேனலாகுமெம்மையயாமாடிடமே" இது-தெரிவருங்காதலிற்சேர்ந்தோர்விழையும், பரிசுகொண்டுவரியளிபாட

மருவளுவல்லியிடையுடைத்தாய்த், திரிதருங்காமர்மயிலியலாயநண்ணுத், தேமொழிபரிவைதன்னேயொன, லாருமையயாமாடிடமே,, என ஆறடியாய் ஈற்றயலடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் வந்துநேரிசையாசிரியப்பா வாமாறுகாண்க இவித்திரிபங்கிக்குச் சொன்னபாட்டையே, இரண்டுபாட்டாகக்கூட்டி அடிதொடை பேதித்துச்சொல்லலுமாம். (எ)

## சித்திரகவி-முற்றிற்று.

(கூசு) பிரிபொருட்சொற்றொடர் மாறுபடுபொருண்மொழி,மொழிந்ததுமொழிவே கவர்படுபொருண்மொழி, நிரனிறைவழுவே சொல்வழுயதிவழுச், செய்யுள்வழுவொடு சந்திவழுவென,வெய்தியவொன்பது மிடனேகாலங், கலையேயுலக நியாயமாகம,மலைவுமுள்ளுறுத்தவும் வரைந்தனர்புலவர்.

(எ-ன்.) முன்னோதப்பட்ட அணிபெறுஞ் செய்யுள்கட்குப் பொருந்தாத வழுவாவன இவையென்று தொகுத்துணர்-ற்று.— (இ-ள்) அவை பிரிபொருட்சொற்றொடரும், மாறுபடுபொருண்மொழியும், மொழிந்ததுமொழிதலும், கவர்படுபொருண்மொழியும், நிரனிறைவழுவும், சொல்வழுவும், யதிவழுவும், செய்புள்வழுவும், சந்திவழுவுமென்னும் ஒன்பதுவழுவும், இடமலைவும், காலமலைவும், கலைமலைவும், உலகமலைவும், நியாயமலைவும், ஆகமமலைவுமென்னும் ஆறுமலைவும் உள்ளிட்ட பதினைந்துஞ்செய்யுளிடத்துவரைந்தனர்புலவர். எ-று. ❁ முன்னொன்பதுவழுவுங் குற்றமாதல் பெரும்பான்மைய,குணமாதல் சிறுபான்மையவென்றற்கும்பின்னைராறுமலைவும்,ஒருதலையாகவே குற்றமாய்ப் புகழ்ச்சியிடத்துப் புனைந்துரையாகப்புணர்க்கத்தக்கபுலவரான் மொழியப்படும்சிறுபான்மையவென்றற்கும் இவ்வாறுவைத்ததென்றறிக. அஃதேல், குற்றஞ்செய்யுளுக்கிவருவனவல்லவோ ஆதலாற்செய்யுட்கிலக்கணங்கூறும் யாப்புநூலு ளன்றேயுணர்த்துவது ஈண்டுணர்த்ததென்னையெனின், செய்யுளென்பதுசட்டகம், அலங்காரமென்பதுஅச்சட்டகத்தைப்பொலிவுசெய்வது ஆதலாற் செய்யுட்குப்பொலிவு ஈண்டுணர்க்கப்பட்டது. இக்குற்றம் அச்செய்யுட்குப் பொலிவழிவு செய்வன ஆதலால் அச்செய்யுட்குப்பொலிவழிவுவாராமற்புணர்க்கவேண்டுமென ஈண்டேயுணர்த்தப்படுமாதலாற் பிறிதெடுத்தலன்றென்க அஃதேல், இச்சூத்திரத்துட்செய்யுளென்பது பெற்றிலமாலெனின்,மேற்பொதுவியலுள் அதிகரித்தசெய்யுட்கண்ணே அலங்காரமுணர்த்தியதாதலால் இக்குற்றமும் அச்செய்யுட்கண்வாராமற்புணர்க்கவேண்டுமென்றே கொள்ளப்படும். அல்லதூஉம், இச்சூத்திரத்துட் சொற்றொடரென்றது அச்செய்யுளையேயன்றோ வென்க. (அ)

(௯௭) மேற்கோளேதுவெடுத்துக்காட்டெனவாற்றுளிகளைக்குமவற்றதுவழுநிலை, நிரம்பவுணர்த்தவரம்பிலவென்ப.

(எ-ன்.) பிறன்கோட்கூறிமறுக்கின்றது. (இ-ள்) மேற்கோளும், ஏதுவும், எடுத்துக்காட்டுமென முறையாற்சொல்லப்படும். அவற்றதுவழுநிலையை ஈண்டுமுற்றவுணர்த்த அளவிலவாதலாற்கூற்றிலவென்றுசொல்லுவார். எ-று. ✿ மேற்கோண்முதன் மூன்றும்நியாயநூலுட்சொல்லப்படும். அவைதாமும் மதங்கடோறும் வேறுபட்டுவருவனவாதலால் இன்பந்தரவுரைக்கு மலங்காரவிலக்கணத்தின்கண்மொழியின்பமழிந்து பிறிதெடுத்துவிரித்தலென்பதாமாதலால் ஈண்டுவேண்டிற்றிலர். (௯)

(௯௮) அவற்றுள், பிரிபொருட்சொற்றொடர் செய்யுண்முழுவதுமொருபொருள்பயவா தொரீஇத்தோன்றும்.

(எ-ன்.) நிறுத்தமுறையானே பிரிபொருட் சொற்றொடரொன்றும்வழுவாமாறுணர்-ற்று. (இ-ள்) பிரிபொருளென்பது- ஒன்றாதபொருள். சொற்றொடரென்பது-செய்யுள் ஆதலால் ஒன்றாப்பொருளுடைச்செய்யுள். எ-று ✿ அஃதாவது - வாக்கியங்களைவெவ்வேறுநோக்கப் பொருளுடையவாய்க் கூட்டிநோக்க ஒருபொருளாக வுணரப்படாததாய்வருவது. [வ-று] வெ - "கொண்டன்மிசைமுழங்கக்கோபம்பரந்தனவாற், றெண்டிரைநீரெல்லாந் திருமுநியேயுண்டுமிழ்ந்தான், வஞ்சியார்கோமான் வரவொழிக மற்றிவளோர், பஞ்சியார்செஞ்சீறடி,, என்பதனுள்- வானின்கண் மேகங்கண்முழங்க நிலத்தின்கண்கோபம்பரந்தன. எ-ம், தெளிந்த அலைகளையுடைய கடனீரையெல்லாம் அகத்தியமுனியே யுண்டுமிழ்ந்தான். எ-ம், கருவூராருக்குக்கோமானாகிய சோழனே வருதலையொழிவாயாக. எ-ம், இவள் செம்பஞ்சியை யூட்டிய சிவந்தசிற்றடியாள். எ-ம், தனித்தனிநோக்கப்பொருள்பயந்து, கூட்டிநோக்கப்பொருள்பயவாமையின் அப்பெயராயினவாறுகாண்க. (௰)

(௯௯) களியினும்பித்தினுங் கடிவரையின்றே.

(எ-ன்.) எய்தியதிகந்துபடாமற் காத்தலுணர்-ற்று. (இ-ள்.) மேன்மொழிந்த பிரிபொருட்சொற்றொடர், கள்ளுண்டுகளித்தாற்கூற்றின்கண்ணும், பித்தினன்மயங்கினாற்கூற்றின்கண்ணும், நீக்கப்படாது. எ-று. அவற்றுட் களியான்மொழிந்தது. [வ-று] வெ- "காமருருவங்கலந்தேன்யான்காங்கேயன், வீமனெதிர்நின்றுவிலக்குமோ -தாமரைமேல், மால்பொழியவந்தாரருகர்மதுவுடனே, பால்பொழியுமிவ்வூர்ப்பனை,, என்றதனுள் அழகியவுருவங்களிலே யான்புக்குக்கலந்தேன். எ-ம், காங்கேயனாகிய அரசன், வீமனெதிர்நின்று போரைவிலக்குமோ. எ-ம், தாமரைமலர்மேலருகர் மால்பொழியவந்தார். எ-ம், இவ்வூர்ப்பனை மதுவுடனே பாலைப்

பொழியும். எ-ம், வரும். இவ்வாறு சொல்லப்பட்டமையான் நீக்க
ப்பட்டது. வளையின்றென்றது கடிவளையின்றென்றதனாற் பின்
ளைகளிளமைத்தன்மையான் மொழியுங்காலும் வளையப்படாவெ
ன்றறிக. அதுவும்பித்தின்மயங்கியகூற்றும்வந்துழிக்காண்க. (௰௧)

(௱) மாறுபடுபொருண்மொழி முன்மொழிந்ததற்கு, மாறு
படத்தோன்றி வருமொழித்தாகும்.

(எ-ன்.) நிறுத்தமுறையானே மாறுபடு பொருண்மொழி
யென்னும்வழுவாமாறுணர்-ற்று. (இ-ள்.) மாறுபடுபொருண்
மொழியாவது, முன்மொழிந்தசொற்பொருளோடு, மாறுபட்ட
பொருடோன்றிவருமொழியுடைத்து. எ-று. ❁ வருமொழியென்
றது அதன்பொருளை. [வ-று] வெ- "மின்னார்மணிப்பைம்பூண்
வேந்தேநினக்குலகில், இன்னாதவர்யாருமில்லையால்-ஒன்னார், குல
முழுதுங்கூற்றங் கொளவெகுண்டுநீயே, தலமுழுதுந்தாங்கறகு
ம்,, எனவரும். இதனுள்-ஒளியினையுடைய மணிகளிழைத்த பசும்
பொன்னாற்செய்த ஆபரணங்களையுடையவேந்தனே நினக்கின்னா
தவர் உலகில்யாவருமில்லையென்று, பின்புநின்பகைவருயிரையெ
ல்லாங் கூற்றுவன் குலத்தோடு கொள்ளும்படியாக வெகுண்டுநீ
யேயித்தலமுழுவதுந் தாங்குதல் நினக்குத்தக்கதென்றமையின்
மாறுபடுபொருண்மொழியாயிற்று. (௰௨)

(௱௧) காமமுமச்சமுங் கைம்மிகினுரித்தே.

(எ-ன்.) மேலதற்கோர் சிறப்புவிதியுணர்-ற்று. (இ-ள்) காம
ங்கைம்மிகினும், அச்சங்கைம்மிகினும், அவ்வாறுரைக்கப்படும்.-
எ-று. [வ-று] வெ- "என்னோடிகல்புரியப்பஞ்சவர்களஞ்சாரோ,
மின்னனையபாஞ்சாலியைவிடேன்- அன்னோ, மிகல்புரியுங்கூற்ற
னையவீமனெதிர்நின்; றிகல்புரியவாற்றுவலோயான்,, எனவரும்.
இதனுள்- என்னோடுமாறுபட்டெதிர்த்தற்குப் பஞ்சபாண்டவர்அ
ஞ்சாரோ-என்றும், மின்னனையபாஞ்சாலியைவிடேன்- என்றும்,
மேம்பாட்டினையுடைய கூற்றத்தையொத்தவீமனுக்கெதிரேநின்
றுமாறுபடுதற்குயான்வல்லனோவென்றுஞ்சொன்னமையால் அவ்
வாறுதல்காண்க. இது-அச்சம். மிகல்-மேம்பாடு. புரிதல்-செய்தல்

(௱௨) மொழிந்ததுமொழிவேகூறியதுகூறி, வேறுபடவொ
ருபொருள் விளங்காதாகும்.

(எ-ன்.) நிறுத்தமுறையானே மொழிந்ததுமொழிவென்னு
ம்வழுவாமாறுணர்-ற்று. (இ-ள்.) மொழிந்ததுமொழிதலாவது,
முன்னைகூறியவதனையே மீண்டுங்கூறி அதனால்வேறுபட வொ
ருபொருள்விளங்காதது. எ-று. [வ-று] வெ- "அங்கமிலாதவனங்க
ன்றலம்புரியும், வெங்கணையுங்காக்குங்கோல்வேந்தர்-தங்கோ,

ன், நிலைபார்த்தொடைய துலனேரிழைக்காய்முன்னோர், மலைபாத் கடல்கடைந்தான்மால்,, எனவரும். இதனுள்- அங்கமிலாதவனென்றும், பின்னு மவனையே அனங்கனென்றுஞ் சொன்னமையான் மொழிந்தது மொழிவாய்க் குற்றமாயிற்று ❀ அஃதேல் சொற்பின்வருநிலையும், பொருட்பின்வருநிலையும், சொற்பொருட்பின்வருநிலையும், அவ்வாறன்றோவெனின், அற்றன்று. சொற்பின்வருநிலையாவது-மொழிந்தசொல்லேமொழியினும் பொருள்வேறுபடும். அது- மால்கரிகாத்தளித்தமால். எ-து. பொருட்பின்வருநிலையாவது-மொழிந்தபொருளையேமொழியினுஞ்சொல்வேறுபடப்பொருடோறும்வருவதோ ரலங்காரமுண்டாம். அது-அவிழ்ந்தனதோன்றி அலர்ந்தனகாயா. எ-து. சொற்பொருட்பின்வருநிலையாவது-சொல்லும்பொருளு மதுவேயெனினும் அவற்றின் வெவ்வேறு பொருள்படுதல். அது-வைகலும்வைகல். எ-து. (யசு)

(௱௩) விரைவினுஞ்சிறப்பினும் வரைவின்றதுவே.

(எ-ன்.) மேலதற்கோர் சிறப்புவிதியுணர்-ற்று. (இ-ள்.) மேல் ஒருசொற்பொருண்மேற் பலசொல்வருத லன்றேவழுவென்பது அதுவே விரைவின்கண்ணும், சிறப்பின்கண்ணுமாயிற்குற்றமன்று. எ-று. [வ-று] வெ-"ஒருவரொருவர்மேல்வீழ்ந்துவடநாட,ரருவரருவரெனவஞ்சி - வெருவந்து, தீத்தீத்தீயென்றயர்வர்சென்னிபடைவீரர்,போர்க்கலிங்கமீதெழுந்தபோது,,எனவரும். இது-விரைவு. பிறவுமன்ன. (யரு)

(௱௪) ஒருபொருணிய வுரைக்குற்றசொல், விருபொருட்கிையவது கவர்படுபொருண்மொழி.

(எ-ன்) திறத்தமுறையாற் கவர்படுபொருண்மொழியென்னும்வழுவாமாறுணர்-ற்று. (இ-ள்.) ஒருபொருளைத்தெரிவுறஉணர்த்தற்குவந்தசொல் அதனையே ஐயுறும்படி பலபொருண்மேனிற்பது, கவர்படு பொருண்மொழியென்னுங்குற்றமாம். —எ-று. [வ-று] வெ-"புயலேபுறம்பொதிந்துபூந்தாதொழுக்கி, மயலேகடவுளர்க்குவாய்த்துச்-செயலை, எரிமருவுபூந்துணர்த்தாய்யாவருமூடாடார், அரிமருவுசோலையகத்து,,எனவரும். இதனுள்-அரிமருவுசோலையகத்து. என்றவழி, அரியென்பது-வண்டு, சிங்கம், நெருப்புமுதலிய பலபொருள்களுக்கும்பொதுவாதலான் ஒன்றுதுணியப்படாமையின் வழுவாயிற்று. (யசு)

(௱௫) வழுஉப்படலில்வழி வரைவின்றதுவே.

(எ-ன்.) இதுமேலதற்கோர் சிறப்புவிதியுணர்-ற்று. (இ-ள்.) அக்கவர்படுபொருண்மொழி வழுவில்லாதவிடத்துப்பொதுப்படவுரைப்பினுங்குற்றமன்று.எ-று. என்னை கு-"வினைவேறுபடாஅ

ப் பலபொருளொருசொன், னிணையுங்காலைக் கிளந்தாங்கியலும்,, என்பவாகலின். [ வ-று. ] வெ- "வானவர்கடாழ்ந்துபணிகேட்பமாழுய, தானவர்கள்சுற்றந்தடிந்தொழித்த- மேன்மை, அரியேயனைத்துலகுங்காக்குங்கடவுள், எரியேமறையோர்க்கிறை,, எ-து.— தேவர்கள்பணிந்து ஏவல்கேட்ப, பகையான அசுரருடைய குலத்தைச்சேதித்துக்களைந்த, மேன்மைபொருந்திய அரியேயனைத்துலகுங்காக்குங்கடவுள். அக்கினியே வேதியருக்கு இறை. எ-று. ❀ இதனுள்- இத்தொழில் திருமாலுக்குமுக்கியம். இந்திரனெனினுமாம். அரியென்பது இந்திரனுக்குந்திருமாலுக்கும்பொதுப்பெயராதலின், காவற்றொழில், யாவர்மேனிற்பினுங்குற்றமன்றென்க.

(௱௬) ஒருநிரன்முன்வைத் ததன்பின்வைக்கு, நிரனிறைபிறழ்வது நிரனிறைவழுவே.

(எ-ன்) திருத்தமுறையானே நிரனிறைவழுவாமாறுணர்-த்று. (இ-ள்) ஒருநிரன்முன்னெண்ணிவைத்துப் பின்மொழிமாற்றிக்கொள்ளுநிரலைப்பிறழவைப்பது நிரனிறைவழுவாம் எ-று [வ-று] வெ- "தெற்குக்குடக்குவடக்குக்குணக்குமேல், நிற்குந்திறத்துலகைநீடளிக்கும்- பொற்பினார், ஈரொண்கலையோன் வருணனிரவியமன், பாரும்புகழியல்பினார்,, என்பதனுள் தென்றிசைமுதற்குணதிசையீறாக அடைவேயெண்ணி அத்திசைகளினின்றும் உலகங்காப்பவர்- இயமன்- வருணன், சந்திரன், சூரியனெனமுறையேவையாது, சந்திரன், வருணன், சூரியன், இயமனென முறைபிறழ வைத்தமையின் வழுவாயிற்று. (௰௮)

(௱௭) உய்த்துணரவரும்வழி யவ்வாறுமுரித்தே.

(எ-ன்) இதுமேலதற்கோர்சிறப்புவிதியுணர்-த்று. (இ-ள்) அந்நிரனிறை உய்த்துக்கொண்டுணர்வதாகத்தோன்றுவதாயிற் பிறழினும்பிறழ்வன்று. எ-று. [வ-று] வெ- "குடபால்வடபால்குணபாறென்பாலென், றடைவேதிசைநான்கவற்றுள்- இடையிரண்டு, நன்மைபுரிவோர்பயந்துநோக்குபவேனைய, வன்மைபுரிவோர்க்கேயாம்,, எ-து. நன்மைக்குமறுதலை- அன்மை. இதனுள் உய்த்துணர்ந்துகொள்ளப் பிறழாதெனவைத்தவாறுவது, மேற்றிசைமுதலாகத்தென்றிசையீறாக அடைவேயெண்ணி நடுக்கிடந்த வடதிசையும், குணதிசையும், நற்கருமஞ்செய்வோர்நோக்கற்பாலவென்றும், மேற்குந்தெற்குந் தீக்கருமஞ்செய்வோர் நோக்கற்பாலவென்றும் உய்த்துணரவைத்தவாறுகாண்க. (௰௯)

(௱௮) சொல்வழுவென்பது சொல்லிலக்கணத்தொடு, புல்லாதாகிய புகர்படுமொழியே.

(எ-ன்) திருத்தமுறையானேசொல்வழுவாமாறுணர்-த்று—

(இ-ள்) சொல்வழுவாவது, சொல்லதிகாரத்திற்சொல்லிய, இலக்கணத்தோடு, மாறுபட்டுவருஞ்சொற்புணர்க்கப்படுவது. எ-று.— [வ-று] வெ-"யாவகையதாயர்க்குமெங்களுக்குமெந்தையர்க்கும் ஆவியிவளேயனையவர்க்கும்- கோவே, நுனக்கபயமிந்தநுண்மருங்குன்மாது,தனக்கிடரொன்றில்லாமற்றுங்கு,, எனவரும். இதுவகையடைகொடுத்தல். இதனுள் - எங்களுக்கு. எ-ம், நுனக்கு. எ-ம், வழூஉச்சொற்புணர்க்கப்பட்டனவாதலாற்சொல்வழுவாயிற்று.()

(௱௯) வழக்காறுயின் வழுவின்றதுவே.

(எ-ன்) இதுமேலதற்கோர் சிறப்புவிதியுணர்-ற்று-(இ-ள்.) அச்சொற்கள் வழக்காறுபடிப்பட்டசான்றோரால்வழங்குவனவாயின்,வரையப்படாவழக்காறென்றுதழுவப்படும்.எ-று. ❀ மரூஉக்கட்டுரைக்கண் இலக்கணமின்றியும், வரப்பெறுமென்க [வ-று.] வெ-"பாவரறிவாரிவரொருவரிக்குறிஞ்சிக், காவலரோவிஞ்சையர்தங்காவலரோ-பாவாய்,அருமந்தன்னார் நம்மகன்புனம்விட்டேகார்,தெருமந்துழலுந்திறம்.,, எனவரும். இதனுள் அருமருந்தன்னானெனற்பாலது, அருமந்தன்னானென அடிப்பட்டுவந்து, வழக்காறாயிற்று. அல்லதூஉம், மலையமானாடு-மலாடு-எ-ம், பாண்டியனாடு-பாண்டிநாடு-எ-ம், வருவனவும் அவ்வழக்காறேயெனக்கொள்க.()

(௱௰) யதிவழுவென்ப தோசையறுவழி, நெறிப்படவாராநிலைமையதென்ப.

(எ-ன்.) நிறுத்தமுறையானேயதிவழுவாமாறுணர்-ற்று.— (இ-ள்) யதிவழுவாவது,ஓசைகொண்டு சீரறுக்கும்வழி, அறுத்தற்கரிதாய் வேறுபட்டுவருந்தன்மையதாம். எ-று. [வ-று] வெ-"மாபெயினும்வளையாளிமால்யானைக்,கோடுபுயத்துணடுழலுங்கொள்கைத்தாம்-காடு, அரிதாமிபல்பிற்றனாயிருட்கண்வாரல், பெரிதாகுமையமிழை, இதனுட்காடரிதாமெனற்பாலது- காடுவரிதாமென்று,அச்சொற்கூடாது அறுத்திசைத்து யதிவழுவாயிற்று.(௨௨)

(௱௰௧) வகையுளியுளைப்புழி வரைவின்றதுவே.

(எ-ன்) நிறுத்தமுறையானே வகையுளியாமாறுணர்-ற்று— (இ-ள்) அச்சீரறற்பாலவழியறுதுநின்றதெனினும், வகையுளிசேர்த்துக்கொள்ளாமெனிற் குற்றமன்று. எ-று. [வ-று] வெ-"மேவிவாழ்வார்மேலிருணீக்கியாருமலர்த், தேவிநீங்காள் செம்பொற்றேளிணைகள்-கோவினணி,சென்னிவிடாமாவினடிவேவினுதிநீலநிறச்,கன்னிவிடாளிகைவிடாகை,, எனவரும். இதனுள்- வகையுளிசேர்த்துக்கொள்ளக் குற்றமன்றாயிற்று. (௨௩)

(௱௰௨) செய்யுள்வழுவே யாப்பிலக்கணத்தோ, டெய்தலில்லா வியல்பிற்றாகும்.

(எ-ன்) நிறுத்தமுறையானே செய்யுள்வழுவாமாறுணர்-ற்று. (இ-ள்) செய்யுள்வழுவாவது யாப்பிலக்கணத்தோடுபொருந்தாத இயல்பினையுடைத்து. எ-று. [வ-று.] "ஆதரந்துயர்தரவயர்தருங்கொடிக்குப், பூதலம்புனைபுகழ்வளவன்- தாதரூத், தாங்கரும்பாலன்றித்தணியுமோதாரணங்கன், பூங்கரும்பால் வந்தடுத்தபோர்,, எனவரும். இது-முன்ன ராசிரியம்வந்து பின்னர் வெண்பாவாய் முடிந்தது. இங்ஙனமுடிதற் கிலக்கணமின்மையால் யாப்பு வழுவாயிற்று. (௨௪)

(௱௰௩) ஆசிடத்துள்ளு மவைபோல்பவற்று, நேருமென்ப நெறியுணர்ந்தோரே.

(எ-ன்) இதுமேலதற்கோர் சிறப்புவிதியுணர்-ற்று. (இ-ள்.) செய்யுள்வழு ஆசிடத்துள்ளும், ஆசிடப்போலியுள்ளும், சிறுபான்மைவரையப்படா. எ-று. [வ-று.] வெ-"கண்டகம்பற்றிக்கடகமணிதுளங்க, ஒண்செங்குருதியுளோஒகிடப்பதே- கெண்டிக், கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப்பன்னாள், அழுதகண்ணீர்துடைத்தகை,,எனவரும். இது-பதினறுசீர் வெண்பாவாய் யாப்பிலக்கணத்தோடு பொருந்தாதுவந்தது. ஆசிடமாவன, இருடிகளாற் சொல்லப்படுவன. ஆசிடப்போலியாவன-சாவவும், கெடவும், வாழவும், முனைத்துபாடவும்வல்ல புலவராற்சொல்லப்படுவனவாம்.

(௱௰௪) சந்திவழுவே யெழுத்திலக்கணத்துச், சந்தியொடு முடியாத் தன்மைத்தாகும்.

(எ-ன்.) நிறுத்தமுறையானே சந்திவழுவாமாறுணர்- ற்று. (இ-ள்) சந்திவழுவாவது- எழுத்ததிகாரத்தோதப்பட்ட புணர்ச்சியிலக்கணத்தோடு பொருந்தாதுவருவது. எ-று [வ-று] வெ-"எண்பூநிருகவிணைவேன்மனங்கலக்கும், பொன்பூண்சுமந்த புணர்முலையீர்-மின்போல், நுடங்கிடைக்குங்காவலாய்நோக்கக்கவரும், படங்கிடைக்குமல்குற்பரப்பு.,,எனவரும் இதனுட் பொற்பூணென்பது - பொன்பூணெனவந்தமையிற் சந்திவழுவாயிற்று.(௨௬)

(௱௰௫) இரண்டாம்வேற்றுமைக் கெதிர்மறுத்தும்வருமே.

(எ-ன்) அச்சந்திவழுச் சிறுபான்மை ஆமிடமுணர்-ற்று.— (இ-ள்) இரண்டாம்வேற்றுமைப் புணர்ச்சியாயின் வல்லெழுத்து மொழிக்குமுதலாய்வீற்றுழி எனவேற்றுமையோடு மாறுபட்டு முடியவும்பெறும். எ-று. [வ-று.] வெ - "இரவிதுணைத்தாளிகல் வேந்தர்சென்னி, விரவுமலர்பொழியுமேவா- ஆசிரிய, மின்பொழியுஞ்செவ்வேல்வெதிபோரிலங்கவரப், பொன்பொழியுஞ்செங் கைப்புயல்,, எனவரும். இதனுள்-மலர்பொழியும், மின்பொழியும், பொன்பொழியுமென இயல்பாய்முடிந்தன.என்னை. சூ-"இய

ந்கைமருங்கி னியற்கைதோன்றலும், மெய்ப்பிறிதாகிடத் தியற்கை யாதலும்.,, என்பவாகலின் என்றூர்க்குமிதுவு மிலக்கணமன்றே எழுத்ததிகாரத்தோடுமேற்றுபட்டுவந்த தூண்டோவெனின், மாறுப ட்டுவருமென்றதன்று, ஐகாரவேற்றுமை பொதுவகையா னோதி யமுடிவோடுபொருந்தாது இவ்வாறு சிறுபான்மைவருமென்றே நிறுரென்றறிக. பிரிபொருட்சொற்றொடர் முதலாகவோதிய ஒ ன்பதும் இவ்வாறுவரின் வழுவெனப்பொதுவிலக்கணங் கூறிச் சி றப்புவகையா னிவ்வாறுவரின் வழுவன்றெனக்கூறியதல்லது வே றெனவிதிக்கப்படாதெனக்கொள்க. (௨௭)

(௱௰௬) இடமெனப்படுபவை மலைநாடியாறே.

(எ-ன்) நிறுத்தமுறையானே இடமுதலியமலைவுணர்த்துவா ன்றொடங்கியவ்வாறனுள் இடமாவன விவையெனவுணர்-ற்று — (இ-ள்) இடமென்றுகூறப்படுவன மலையும், நாடும், யாறும். எ-று. ❁ மலையாவன, இமயமலைமுதலியன. நாடாவன, பதினெண்மொ ழிவழங்குநிலங்கள். யாறுவன, கங்கைமுதலியன இவற்றின்மலைவா வது, ஒன்றினுள்ளபொருள் ஒன்றினுளதாகச்சொல்லுதல். [வ-று] வெ-"தென்மலையின்மான்மதமுஞ்சாமரையுந்தேமருசீர்ப், பொ ன்மலையின் சந்தனமுமாரமும்-பன்முறையும், பொன்னிவளநாட ன்முன்றிற்பெர் துளுமே, மன்னர்திறைகொணரவந்து,, எ-ம், த ண்பொருநைச்செங்கனகமாதங்கிரித்தரளம், வண்கலிங்கர்தந்தவ யப்புரவி-பண்பு, மருவும்யவனத்துமால்யானைசென்னி, பொருந ர்க்குவீசும்பொருள்,, எ-ம், வரும். இவற்றுள் - இமயத்திலுள்ளன பொதியத்திற்குரியவாகவும், பொதியத்திலுள்ளன இமயத்திற்கு ரியவாகவும்கூறினமையின் மலையிடமலைவாயிற்று. பொருநைக்கு ரியதாளத்தை மாதங்கிரியோடுபுணர்த்தும், மாதங்கிரிக்குரியகநக த்தைப்பொருநையோடு புணர்த்துங்கூறினமையின் யாறிடமலை வாயிற்று. யவனத்திற்குரிய புரவியைகலிங்கத்தோடுபுணர்த்தும், கலிங்கத்துக்குரியயானையை யவனத்தோடுபுணர்த்துங்கூறினமை யின்நாடிடமலைவாயிற்று. (௨௮)

(௱௰௭) காலம்பொழுதொடு பருவமென்றிரண்டே.

(எ-ன்.) காலமாமாறுணர்த்து - ற்று. (இ-ள்.) காலமாவது- பொழுதும், பருவமுமெனவிரண்டாம். எ-று. ❁ அவற்றுள், பொ ழுதாவன-விடியல்- உச்சி-எற்பாடு- மாலை-யாமம் -வைகறை என விவை. இவற்றுளொரோவொன்றுக்கு நாழிகைபப்பத்தாக ஆறு பொழுதிற்குநாழிகை அறுபதாம். இவை தமிழ்நூன்முடிபு. ம லைவாவது, ஒன்றற்குரியபூவும்-புள்ளும்- தொழிலும்- பிறிதொன் றற்குரியவாகவுரைப்பது. [வ-று] வெ-"செங்கமலம்வாய்குவியத் தேங்குமுதங்கண்மலர, எங்குதேடுவானின்மீனிமைப்பப்-பொங்

குதபத், தேரோழிவெய்யோ னுகந்தான்மலர்ந்ததே, நீராழிசூழ்ந்ததிலம்,, எனவரும். இதனுள்-மாலைக்குரியன, காலையோடு புணர்த்தனுற் பொழுதுமலைவாயிற்று. பிறவுமன்ன. பருவமென்பன, கார்-கூதிர்-முன்பனி-பின்பனி- இளவேனில்- முதுவேனில் எனவிவை ஆவணிமுத லிவ்விரண்டுதிங்கள் ஒவ்வொன்றாக அறுவகைப்படும். இவை வடநூற்குமொக்கும். அவற்றின் மலைவாவது, ஓர்பருவத்திற்குரியன பிறிதோர்பருவத்திற் றோன்றினவாகக்கூறல். [வ-று] வெ- "காதலர்வாரார்களிக்குமயிலகவத், தாதவிழ்பூங்குருந்தின் றன்பணையின் - மீதே, தளவேர்முகைநெகிழத்தண்கொன்றைபூப்ப, இளவேனில்வந்ததிதோ,, எனவரும். இதனுட் கார்ப்பருவத்திற்குரியன, இளவேனிற்பருவத்திற் றோன்றினவாகப் புணர்த்தமையின் பருவமலைவாயிற்று. பிறவுமன்ன. (௨௯)

(௱௰௮) கலையெனப்படுபவை காண்டகவிரிப்பிற், காமமும்பொருளு மேமுறத்தழுவி, மறுவறக்கிளந்த வறுபத்துநான்கே.

(எ-ன்) கலைகளாவன,இன்னதற்கும் இன்னதற்குங்கருவியாகத்தோன்றுமெனவும், அவற்றதுதொகையுமுணர்-த்று.(இ-ள்)கலையென்றுசொல்லப்படுவனவற்றை விளங்கவிரித்துரைப்பின், இன்பமும்,பொருளும்அழிவுபடாமற்றழுவிக்குற்றமறச்சொல்லப்படுவன அறுபத்துநான்கு எ-று. அவற்றின் மலைவாவது, அவ்வவ்நூலிற்கூறியபடிகூறாது,பிறழக்கூறுவது. [வ-று] வெ-"ஐந்தாநரம்பாம்பகைவிரவாதாக, வந்தகிளைகொள்ளநான்காய-மூன்றை, இணைகொண்டயாழியற்றுமேற்றிறைதன்னுவித், துணைவன்புகழேதொடுத்து,, எனவரும். இதனுள் -நின்றநரம்பிற்கைந்தாவது கிளையாகலான் அதனைப்பகையென்றும்,ஆறாவதுபகையாகலான் அதனைக்கிளையென்றும், நான்காவது நட்பாகலான் அதனை இணையென்றெட்டாவதன்பெயர்கொடுத்துஞ் சொன்னமையின் கலைகளிற்சங்கீதநூன்மலைவாயிற்று. பிறவுமன்ன. (௩௰)

(௱௰௯) உலகெனப்படுவதின் னொழுக்கின்மேற்றே.

(எ-ன்) உலகமாமாறுணர்-த்று. (இ-ள்) உலகென்றுசொல்லப்படுவது,ஈண்டு ஒழுக்கத்தின்மேலது.எ-று. ✽ உலகென்றால்-மக்கண்மேலும்,நிலத்தின்மேலும், ஒழுக்கத்தின்மேலும் நிற்கும்பலபொருளொருசொல்லாகலின்,இவ்விடத்தொழுக்கத்தையேகோடற்கீண்டென்றுரைக்கப்பட்டது; அவ்வொழுக்கம் எல்லாருமறியக்கிடந்தமையான் இன்னதென்று பகுத்தெடுத்துரைக்கவேண்டுவதில்லை. அதன்மலைவாவது- உலகத்தொழுகலாற்றோடுமாறுபட்டஒழுக்கநிகழ்ந்தனவாகக்கூறுதல். [வ-று] வெ - "அலைகடல்களேழுந்தூர்த்தந்தாத்தினூடே, மலைபனையமால்யானைபோட்டிக்-கலவாளை, நீறுக்கிவையநெடுங்குடையின்கீழ்வைத்தான், மாறுச்சேர்

மாநிலத்தார்மன்,,எனவரும். இதனுள்- ஒருநிலவேந்தனை எழுகடலுந்தூர்த்தானாகவும், ஆகாயத்தே தன் யானையைச்செலுத்திப்பகைவரைவென்றானாகவும், உலகொழுக்கோடுமாறுபடக்கூறினமையின், உலகமலைவாயிற்று. (௫௧)

(௱௨௰) நியாயமென்பது நெறியுறக்கிளக்கி, னளவையிற்றெளிக்கும் விளைபொருட்டிறமே.

(எ-ன்) நியாயமாமாறுணர்-ற்று. (இ-ள்.) நியாயமென்பதனை யிலக்கண வகையாற் கூறுங்காற் காண்டன்முதலிய அளவையாற்பொருள்விளைதிறத்தைத்தெளிவிப்பது. எ-று ❁ அது - அறுவகைப்பட்ட சமயத்தோரு மூலகத்திற்பொருள்களது, தோற்றமும், நிலையும், அழிவும் இன்னவகையவென்றுகூறுதல். அவற்றின் மலைவாவது- அவ்வவர்கூறியவாறுகூறாதுமாறுபடக்கூறல் [வ-று] வெ- "ஆயபொருள்கள் கணந்தோறழியுமெனத், தூயவசோகின் முனியுரைத்த-தாய்வன்றே, காதலர்நீங்கவெழுங்காமவெங்கனல்வாய், மாதருயிர்தாங்குமாறு,,எனவரும். இதனுள் - தோன்றும்பொருள்களெல்லாங் கணந்தோறுமழியுமெனப்போதிமுனியுரைத்தானெனற்பாலதனை, அசோகின்முனி யுரைத்தானென்றமையால் நியாயமலைவாயிற்று. போதிமுனி-புத்தன் அசோகின்முனி- அருகன். பிறவுமன்ன. (௫௨)

(௱௨௧) ஆகமமென்பன மறைமுதலாகிய, வறனெறிபுணர்ந்த திறனறி நூலே.

(எ-ன்) ஆகமமாமாறுணர்-ற்று. (இ-ள்) ஆகமமென்று சொல்லப்படுவன, மறைமுதலாகப் பதினெண்வகையவாய் அறத்தொடுபொருந்திய திறத்தையறிவிக்குநூல்கள். எ-று. அவற்றின் மலைவாவது- இந்நூலின்னதுசெய்த லறமென்றுவிதிக்கப்பட்டவிதியிற்பிறழவருவது. [வ-று] வெ-"தெய்வம்விருந்தொக்க றென்புலத்தார்தாமென்னும், ஐவகையுந்தம்பொருள்கொண்டாற்றுவார்- மையிலா, மூக்கோலுங்கற்றூய்முழுமடியுந்தாங்கியே, தக்கோரெனப்படுவோர்தாம்,, எனவரும். இதனுள்-இல்வாழ்வார்க்குரிய தொழிலைத்துறவுபுரிந்தோரோடுபுணர்த்தமையின் ஆகமமலைவாயிற்று

(௱௨௨) கூறியநெறியி னறுவகைமலைவு, நாடகவழக்கி னூட்டேற்குரிய.

(எ-ன்) இதுமேற்கூறிய அறுவகைமலைவிற்குமாவதோரமைதிகூறுகின்றது. (இ-ள்) மேற்கூறியவழுவொன்பதும், இவ்வகையாற்புணர்ப்பின் ஆமென்றமையான்,, அதுபோல, இச்சொல்லப்பட்ட அறுவகைமலைவும், நாடகவழக்கிற் சொல்லுதற்குரிய. எ-று. ❁ நாடகவழக்கும், உலகியல்வழக்கும், பாடல்சான்ற புலனெறிவழக்குமென்னும் மூன்றுவழக்கினுள், நாடகவழக்காவது, இல்

பொருளாய்ப்புகழ்ச்சியிடத்துப் புணர்ந்துரையாகத் தோன்றுவது.எனவே அவ்வாறுமலைவும்புகழ்ச்சியிடத்துநீக்கப்படாதுஅலங்காரமாகியேவருமென்பதாம்.

க-வது. இடமலைவமைதி, [வ-று] வெ-"மாகதச்சோதியுடன் மாணிக்கச்சோதி,இருமருங்குஞ்சேர்ந்தரிவைபாகன்-உருவ,மலைக்குமகில்சமந்தாரத்துவான்கோ, டலைத்துவரும்பொன்னியாறு.,, எனவரும். இதனுட் காவிரியுட், பிறமலைக்கும், பிறநாட்டிற்குமுரியமரகதமும்,மாணிக்கமும்,சந்தனமும் அலைத்துவருகின்றதென்றமையான்,இடமலைவாய்ப் புகழ்ச்சியிடத்துப்பொருந்துவதால் அலங்காரமாயிற்று.

உ-வது. காலமலைவமைதி, [வ-று] வெ-"மண்டபத்துமாணிக்கச்சோதியான்வாவிவாய், புண்டரிகமாலைப்பொழுதலரும்-தண்டரளத், தாமஞ்சொரியுத்தகைநிலவான்மெல்லாம்பல், பூவலருங்காலைப்பொழுது,,எனவரும். இதனுட் காலைமலருங்கமலம் மாலைமலர்ந்ததாகவும், மாலைமலருமாம்பல் - காலைமலர்ந்ததாகவும் கூறினமையின் காலமலைவாய்ப்புணர்ந்துரையிடத்துப்பொருந்துவதால் அலங்காரமாயிற்று.

௩-வது· கலைமலைவமைதி, [வ-று] வெ-"கூடம்விரவிக்குறைநிலத்தானத்தியன்ற, பாடலமுதம்பருகினன்- ஆடுகின்ற, ஊசலயற்றேன்றியொளியிழைக்குதாணளித்த, ஆசில்வடிவேல்வன்,, எனவரும். இதனுள்-ஆறுதாம்பாகிய பகைபதனோடுகூடிக்குறைநிலத்தானத்தாலியன்றதனைப் பாடலமுதமென்றமையின்கலைமலைவாய்ப்புணர்ந்துரைத்தமையின் அலங்காரமாயிற்று.

௪-வது. உலகமலைவமைதி, [வ-று] வெ-"கடனுன்கும்வந்தலைக்குங்காலாளுந்தேரும், அடல்செய்திருதுணியாயிற்றே - உடலொன்றி, அந்தரமேபேகுவனகாண்மினோயானியற்றும்,இந்திரசாலமிது,, எனவரும். இதனுள்-உலகமலைவாய்ப் பொருள்வந்து இந்திரசாலமென்றதனால் அலங்காரமாயிற்று.

௫-வது. நியாயமலைவமைதி, [வ-று] வெ- "வானுகிமண்ணுய்மறிகடலாய்மாருதமாய்,தேனுகிப்பாலாந்திருமாலே-ஆனபா, வெண்ணெய்விழுங்கநிறையுமோமேலொருநாள், மண்ணையுமிழ்ந்தவயிறு.,,எனவரும். இதனுள்- அனைத்துப்பொருளுமானுயென்றும், வெண்ணெயைவிழுங்கினுயென்றும், மண்ணையுமிழ்ந்தாயென்றும், மாறுபடக்கூறினமையின் நியாயமலைவாய்ப்புணர்ந்துரையால் அலங்காரமாயிற்று.

௬-வது. ஆகமமலைவமைதி, [வ-று] வெ-"காய்கதிரோனுக்குக்கன்னனையீன்றுங்கன்னி, ஆகிப்பின்மூவரையுமீன்றளித்த-தேச

கை, தலைமைசேர்கற்பினாடான்வணங்குமுன்னாள், மலையெடுத்துக் கார்காத்தமால்.,, எனவரும். இதனுள் - சூரியனுக்குக் கன்னனைப் பெற்றுப், பின்னருங்கன்னியாயினாளென்றும், அதன்பின்மூவரை யும்பெற்றாளென்றும், இவள் கற்புடைமையாற்றிருமால் வணங்கி னானென்றும் கூறினமையின் ஆகமவழுவாய் அவ்வாறு சொல்லு தல் தகுதியாகலின் அலங்காரமாயிற்று. (௯௪)

(௱௨௫) மெய்பெறவிரித்த செய்யுட்டிறனும், மெய்தியநெறி யுமீரைங்குணனும், மையெழுவகையி னறிவுறுமணியும், மடியினுஞ் சொல்லினு மெழுத்தினுமியன்று, முடியவந்தமூவகைமடக்குங், கோமூத்திரிமுதற் குன்றாமரபி, னேமுறமொழிமிறைக்கவியீரா று, மிவ்வகையியற்றுதல் குற்றமிவ்வகை, யெய்தவியம்புத லியல் பெனமொழிந்த, வவ்வகைமூத்திறத்தாங்கவையுளப்பட, மொழிந் தநெறியினொழிந்தவுங்கோடலான்றகாட்சிச் சான்றோர்கடனே.

(எ-ன்) இந்நூலுளாக்கப்பட்ட இலக்கணமனைத்துந்தொகு த்து இவ்வாறன்றிப்பிறவாறுவருவனவுளவெனினுந்தழீஇக்கொள் கவெனப்புறனடையுணர்-ற்று. (இ-ள்.) பொருள்பெறவிரித்தமு த்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலையெனக் கூறப்பட்டசெ ய்யுண்மரபும், அச்செய்யுட்குக் கௌடம், வைதருப்பமெனப் பொருந்தியநெறியும், அவற்றொடுதொடர்ந்த, செறிவு-தெளிவு-ச மனிலை- இன்பம்-ஒழுகிசை- உதாரம்- உய்த்தலில்பொருண்மை- காந்தம்-வலி-சமாதியென்று கூறப்பட்ட பத்துவகைக்குணமும், தன்மைமுதல் - பாவிகமீறாகக்கிடந்த முப்பத்தைந்தலங்காரமு ம், அடியினானும், சொல்லினானும், எழுத்தினானுங்கூறி முற்றுப் பெறவந்த மூவகைமடக்கலங்காரமும், கோமூத்திரிமுதலாகக்கு றைபாடில்லா இலக்கணத்திற்பிழைப்பின்றிவந்தமிறைக்கவிபன் னிரண்டும், இவ்வாறுகூறுதல் வழுவென்றும், அவற்றையேயிவ்வா றுகூறுதல் வழக்கென்றுஞ் சொல்லப்பட்ட பதினைந்துவேறுபா டும் உள்ளிட்டுக்கூறப்பட்ட இலக்கணங்களொழிந்துவருவன வுள வெனினுந்தழீஇக்கோடல், அமைந்த அறிவுடையோராகிய மே லோரதுகடன். எ-று. ❀ அஃதேல், மேற்கூறியவற்றையே மீண் டுங்கூறியது புனருத்தமாம் பிறவெனிற்றொகுத்துமுடித்தலென் பது தந்திரவுத்தியாகலான் இவ்வாறுணாக்கப்பட்டதென்க. அஃ தேல், எழுத்தின்கூட்டமிடையிறிதின்றியுமென எழுத்துமடக்கே யன்றேமுன்சொன்னது, ஈண்டடியினுஞ்சொல்லினுமென்றுமு றைபிறழக்கூறிய தென்னையோவெனின், இதுவும் தலைதடுமாற்ற மென்னு முத்திவகையானுணாக்கப்பட்டது. அல்லதூஉம் அடிம டக்கென்பனவும், சொன்மடக்கென்பனவும், எழுத்தின்கூட்டமெ ன்ப தறிவித்தற்கும், ஓரெழுத்தானும் ஓரினத்தானும்வருவனவும

ப்பாற்படுமென்றற்கும், கோமூத்திரிமுதலாகக் கூறப்பட்ட மிறைக்கவியைநோக்கி ஆராயுங்காற் பெரும்பான்மையு மெழுத்தின்மடக்கின்பாற் படுமாயினும் இவைவெவ்வேறு சிறப்புப்பெயருடையவாய் உலகினுண்டாகின்றனவாதலாற் சொல்லின்முடியுமிலக்கணத்தா னவ்வாறு சொல்லப்பட்டதென்றற்குஞ் சொல்லப்பட்டதெனினுமமையும். சொல்லின்முடியுமிலக்கணமாண்டியாதோவெனின், ஒப்பினானாகியபெயரும், குணங்காரணமாகியபெயரும் குறித்துரைக்கப்படுதலா னப்பொருளே யுணர்ந்துகொள்ளப்பட்டது. அஃதேல், மாலைமாற்றும், சுழிகுளமும், கோமூத்திரியும், சருப்பதோபத்திரமுமென நான்குமேயன்றே ஆண்டாசிரியனால்வடநூலினுரைக்கப்பட்டன. ஈண்டுரைத்தனவாகிய ஒழிந்த மிறைக்கவியிலகைப்படக்கூறிற்றும்பிறவெனின், ஆகா-ஒழிந்தன ஒன்றின முடித்தறன்னின முடித்தலென்னுந் தந்திரவுத்தியானுரைக்கப்பட்டன. அல்லதூஉம், இது வடநூலுக்குவழிநூலாதலாற் றனதுவிகற்பம்படவுரைத்தானெனினுமமையும். என்னை-கூ-"முன்னோர் நூலின்முடிபொருங்கொத்துப், பின்னோன் வேண்டும்விகற்பங்கூறி, யழியாமரபினது வழிநூலாகும்," என்றாராகலின். ()

சொல்லணியியல்-முற்றிற்று.

தண்டியலங்காரமூலமும் உரையும்முற்றுப்பெற்றன.

ஆ- இயல்-௩-இ-சூத்திரம்-௱௨௫.

---

அட்டநாகபந்தத்தின்விதி.

ஒருநான்கக்கரத்தொடுநாற்பத்தொன்றுமா *
றுடனாற்பத்தைந்தாமெட்டுடனந்நான்காம் *
இருளறுபன்னிரண்டுடனேபதினெட்டாகு *
மிருபத்திரண்டுடனேநாற்பத்தேழாம் *
பரவுமிருபத்துநான்குடன்முப்பத்தொன் *
பானுமுப்பான்மூன்றுடைம்பத்தொன்றும் *
அருமுப்பத்தேழுடனேநாற்பத்தொன்பா *
னுமட்டநாகபந்தமாஞ்செய்யுட்கே *

(இ-ள்.) நான்காமெழுத்து நாற்பத்தோராமெழுத்தாகவும், ஆறாமெழுத்து நாற்பத்தைந்தா மெழுத்தாகவும், எட்டாமெழுத்து இருபதாமெழுத்தாகவும், பன்னிரண்டாமெழுத்துப் பதினெட்டாமெழுத்தாகவும், இருபத்திரண்டாமெழுத்து நாற்பத்தேழாமெழுத்தாகவும், இருபத்துநான்காமெழுத்து முப்பத்தொன்பதாமெழுத்தாகவும், முப்பத்துமூன்றாமெழுத்து ஐம்பத்தோராமெழுத்தாகவும், முப்பத்தேழாமெழுத்து நாற்பத்தொன்பதாமெழுத்தாகவும்,வரும்படி ஒற்றுள்பட ஐம்பத்தோரெழுத்தினாலொருசெய்யுட்செய்துஉபமேதசமுறைமையால்அட்டநாகம்வரைந்து அதிலடைத்துக்கொள்வது அட்டநாகபந்தத்தின்விதியாம்.

# அலங்கார அகராதி.


அக்கரச்சுதகம். ௱௫
அதிசயம். ௩௬
அவநுதி. ௬௯
ஆகமம் ௱௰௬
ஆரிடம். ௱௰௫
ஆர்வமொழி. ௬௬
இலேசம். ௬௪
இன்பம். ௮
உதாத்தம். ௬௮
உதாரம். ௰
உய்த்தலில்பொருண்மை. ௰௧
உருவகம். ௫௨
உவமை. ௰௮
எழுத்துவருத்தனம். ௯௮
ஏது. ௩௯
ஒட்டு. ௩௩
ஒப்புமைக்கூட்டம். ௭௪
ஒழிந்திசை. ௯
ஒற்றுப்பெயர்த்தல். ௱௪
கரந்துறைசெய்யுள். ௱
கலை. ௱௰௩
காதைகரப்பு. ௱
காந்தம். ௰௧
காப்பியம். ௩
குளகம். ௨
கூடசதுக்கம். ௯௭
கோமூத்திரி. ௯௭
கௌடம். ௬
சக்கரம். ௱௧
சங்கிரமம். ௩௮
சமநிலை. ௭
சமாதி. ௰௫
சமாயிதம். ௬௮
சருப்பதோபத்திரம். ௱௯
சிலேடை. ௭௰
சுழிகுளம். ௱௨
சுவை. ௬௬
செறிவு. ௬
தற்குறிப்பேற்றம். ௩௮
தன்மேம்பாட்டுரை. ௬௭
தன்மை. ௰௬
திரிபங்கி. ௱௬
திரிபாகி. ௱௬
தீவகம். ௪௰
தெளிவு. ௭
தொகைநிலை. ௨
தொடர்நிலை. ௫
நாகபந்தம். ௯௯
நிதரிசனம். ௭௬
நியாயம். ௱௰௬
நிரனிறை. ௬௩
நிரோட்டம். ௱௫
நுட்பம். ௬௫
பரியாயம். ௬௮
பரிவருத்தனை. ௭௭
பாவிகம். ௮௰
பிறிதுபடுபாட்டு. ௱௬
பின்வருநிலை. ௪௫
புகழாப்புகழ்ச்சி. ௭௬
புணர்நிலை. ௭௭
பெருங்காப்பியம். ௫
மடக்கு. ௮௧
மாத்திரைச்சுருக்கம். ௱௩
மாத்திரைவருத்தனை. ௱௩
மாலைமாற்று. ௯௮
மாறுபடுபுகழ்நிலை. ௭௩
முத்தகம். ௧
முரசபந்தம். ௱௩
முன்னவிலக்கு. ௪௫
வலி. ௰௨
வாழ்த்து. ௭௮
விசேடம். ௭௪
விபாவனை. ௩௪
விரோதம். ௭௩
வினாவுத்தரம். ௯௯
வேற்றுப்பொருள். ௩௰
வேற்றுமை. ௩௧
வைதருப்பம். ௬

# பிழை திருத்தல்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| ௧ | ௨௭ | பட்டன | படும் |
| ௨ | ௮ | தோளானது | தோளாணவை |
| ௩ | ௯ | கூறியஉறுப்பி | கூறியவுறுப்பி |
| ௨௰ | ௨௮ | வருத்தந்தானோ | வருத்தத்தானோ |
| ௨௧ | ௰௯ | மேய்க்குங் | மேய்க்குந் |
| ,, | ௨௩ | டல்லக்கருத்து | டல்லகருத்து |
| ,, | ௨௮ | டல்லக்கறு | டல்லகறு |
| ௨௫ | ௨௭ | முகமொய்ப்பது | முகமொப்பது |
| ௨௪ | ௨௯ | சேலைவும் | சேலையும் |
| ,, | ௨௮ | விகாரம்படு | விகாரப்படு |
| ,, | ௫௫ | முகத்தினை | முகத்தினை |
| ௨௭ | ௨ | வீறுக | யீறுக |
| ௫௫ | ௰௧ | சூட்டினன் | சூட்டுவன் |
| ௫௯ | ௫௫ | முருவலிப்ப | முறுவலிப்ப |
| ௫௮ | ௰௨ | கண்ணைகள் | கண்கள் |
| ,, | ௰௭ | ணளிகுழ் | ணளிசூழ் |
| ,, | ௨௧ | வண்டுக்கள் | வண்டுகள் |
| ௫௬ | ௨௬ | ஞளிச்சினை | ணளிச்சினை |
| ௬௩ | ௰௫ | முறுவலறி | முறுவலறி |
| ௬௯ | ௫௩ | சிறிகி | சிறுகி |
| ௬௭ | ௫௮ | உடையயிவள் | உடையவிவள் |
| ௩௨ | ௨௮ | ராழித்ன் | ராழித்தின் |
| ௩௭ | ௰ | யான்தெளி | யாற்றெளி |
| ,, | ௨௯ | போதற்குதெரு | போதற்குத்தெரு |
| ௯௯ | ௬ | தெனவீறு | எனவீறு |
| ௯௮ | ௬௨ | என்றுமவறிரு | என்றும்வறிரு |
| ௭௰ | ௰௮ | பயிலபொ | பயிலப்பொ |
| ௭௧ | ௨௪ | முடைத்தயத் | முடைத்தாய்த் |
| ௭௨ | ௰௫ | காலத்துதந் | காலத்துத்தந் |
| ,, | ௨௫ | யுடத்தா | யுடைத்தா |
| ௭௫ | ௨௫ | பொருளையின்னரி | பொருளைப்பின்னரீ |
| ௭௪ | ௨௭ | ஙருகு | ருங்கு |
| ௮௯ | ௰௭ | என்னுள்ளத்தைகளவு | என்னுள்ளத்தைக்களவு |
| ௮௮ | ௰௭ | சிறியவூர்கள் | சீறியவூர்கள் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| ௯௨ | ௨ | மடக்குத-ரம் | மடக்கு-கரம் |
| ,, | ௰௩ | உமாதரதன் | உமாதரன் |
| ,, | ௩௩ | தற்குகாவே | தற்குக்காவே |
| ௯௪ | ௩௫ | கூகைக்காகாக்கை | கூகைக்காகாகாக்கை |
| ௯௫ | ௨௨ | மாமதிறம் | மாமைதிறம் |
| ௯௯ | ௰௨ | சிர்ச்சிரே | சீர்ச்சிரே |
| ௱௪ | ௰௫ | கவிகைகக் | கவிகைக் |

௱௨-வது- பக்கம் - ௰-ம் - வரியில்

வலிதாகிய தவத்தையுடையாய் இன்று அருள்வாயாக-எ-று.

என்றிருக்கவேண்டுவது,

வலிதாகிய தவத்தையுடையாய்-எ-று. இன்று அருவ்வாயாக

என மாறி யிருக்கின்றது.

# பிரசித்தபத்திரிகை.

## இதுவரையில் அச்சிற்பதிப்பித்துமுடிந்த புத்தகங்கள்.

நன்னூல்விருத்தியுரை.

காரிகையுரை.

வெண்பாப்பாட்டியலுரை.

செய்யுட்கோவை.

பழமொழித்திரட்டு.

## இப்போது அச்சிற்பதிப்பித்துவருகிற புத்தகங்கள்.

திருக்கோவையாருரை.

அகப்பொருளுரை.

புறப்பொருளுரை.

சேனாவரையம்.

பிரயோகவிவேகவுரை.

தொல்காப்பியச்சூத்திரவிருத்தி

இலக்கணவிளக்கச்சூறாவளி.